
# தமிழரசு



ஏப்ரல் 1-15, 1998 ரூ.3







# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

# அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்...

புத்தாண்டில் புகழ் தொடுப்போம் - கலைஞர் .... 2

1997-98ஆம் ஆண்டிற்குத் துணை மானியம்:
சட்டப் பேரவையில் முதலமைச்சர் கலைஞர் .... 3

விவசாயிகளுக்கு நடப்பாண்டில் நிலவரி ரத்து:
நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப்
பதிலளித்து முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு .... 4

ஆவண மகாத்மியம் - எம்.எஸ்.பாண்டியன் .... 10

நாம் என்னும் அறம் - கவிஞர். எழிற்பித்தன் .... 16

முரசொலி - பி.எல்.ராஜேந்திரன் .... 18

தொழில் முனைவோர் திட்டம் - ந.முருகன், இ.ஆ.ப., .... 24

பொருளாதாரப் பின்னணியில் பெண்கள் ..... 27

நூலகமும் எழுத்துலகமும் - மூவேந்தர் முத்து ..... 33

எங்கள் ஊர்ப் பிரச்சினை ..... 36

தொழுநோயற்ற உலகை உருவாக்குவோம் ..... 39

அமானுடன் - பிரபஞ்சன் ..... 43

**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2029
பங்குனி - சித்திரை
ஏப்ரல் 1-15, 1998
மலர் - 28, இதழ் 19
விலை ரூ.3.



## திருக்குறள் - 1

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

- அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை; ஆதிபகவன், உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை.

(கலைஞர் உரையிலிருந்து)

சமதர்மச் சமுதாயம் தழைத்திட

# இந்தத் தமிழ்ப் புத்தாண்டு இனிய துணையாக இலங்கட்டும்

## முதலமைச்சர் கலைஞர் வாழ்த்து



14.4.98 தமிழ்ப்புத்தாண்டு திருநாள். உற்றார் உறவினர் சூழ - உவகை மிகுதியுடன் - தமிழ்ச் சமுதாய மக்கள் அனைவரும் இணைந்து கொண்டாடி மகிழும் இனிய திருநாள், இந்நாள். இந்நன்னாளில் - பரிதியொளி போலப் பார்முழுதும் பரவி வாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும், தமிழக அரசின் சார்பில் என் இதயங்கனிந்த தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகிறேன்.

புத்தாண்டு பிறக்கிறது என்றால், அத் திருநாளில், கடந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகளை நினைத்துப் பார்த்துக் கணக்கிட்டு - அடைந்த வளர்ச்சியை மதிப்பிட்டு - பிறக்கும் புத்தாண்டில் அடையவேண்டிய இலக்குகளைக் கருதி ஆற்ற வேண்டிய பணிகளைத் திட்டமிடுவது - குடி மக்களின் நலன்நாடும் அரசுக்கு உரிய இன்றியமையாத கடமைஆகும்.

அந்த வகையில், தமிழ்நாடு அரசு தமிழகத்தின் மேம் பாட்டிற்காக முந்தைய ஆண்டுகளைப் போலவே பலரும் பாராட்டும் வகையில், இந்த ஆண்டிலும் பல்வேறு திட்டங்களை வகுத்து, அவற்றைத் தீவிரமாகச் செயல்படுத்திட முனைந்துள்ளது. அத்திட்டங்கள் அனைத்தும், கடந்த ஆண்டுகளைப் போல இயற்கைச் சீற்றங்களால் இன்னல் படாமல் - சூதுமதியாளர்கள் உருவாக்கும் செயற்கைச் சீற்றங்களால் சிதைவுபடாமல் - எண்ணிய எண்ணியாங்கு இயற்றப்படுவதன் மூலம் - இலக்குகள் முழுவதுமாய் எய்திடப் பெற்று -

தமிழக மக்கள் மேன்மை பெற,

தமிழகம் இந்திய மாநிலங்களில் முதன்மைபெற

சாதி, மத, மொழி, இன வேறுபாடுகளின்றி - குறிப்பாக மதவெறி உணர்வுகள் மங்கி - சமத்துவ நெறிகள் தழைத்து - சமதர்மச் சமுதாயம் மலர்ந்திட - தமிழக மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கும் உன்னத நிலை தொடர்ந்திட இந்தத் தமிழ்ப் புத்தாண்டு - இனிய துணைவனாய் நமக்கு இலங்குவதாகுக!

### முதலாம் பக்க அட்டையில் ...

மத்தியில் புதிய அரசு அமைந்தபின் - மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களையும் மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்களையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 7.4.98 அன்று நேரில் சந்தித்து உரையாடினார்.

புதுடில்லியில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது -

- காவிரிப் பிரச்சினை குறித்து மத்திய அரசு தயாரித்த செயல் திட்டத்தை அரசிதழில் வெளியிட்டு, நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த வகை செய்ய வேண்டும்.
- தமிழகத்தில் அமலில் உள்ள 69 சதவிகித இடஒதுக்கீட்டிற்குக் குடியரசுத் தலைவரும் ஒப்புதல் அளித்திருந்தும் - அதை எதிர்த்துத் தாக்கல் செய்யப் பட்டுள்ள வழக்குகளில் மத்திய அரசு தீவிரமாக வாதிட வேண்டும்.
- கச்சத்தீவு விவகாரத்தில் இந்திய மீனவர்களுக்கு இருந்த பாரம்பரிய உரிமையைக் காக்கவேண்டும்.
- தமிழகத்தில் கூடுதலாக 2,307 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய உதவ வேண்டும். சென்னையை அடுத்த செய்யூரில் தொடங்கப்பட உள்ள மின் உற்பத்தி நிலையத்தை நிறுவ உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். கிழக்கு மின் தொகுப்பிலிருந்து உபரி மின்சாரத்தைக் கடப்பை வழியே திருப்பெரும்புதூருக்குக் கொண்டு போக உதவ வேண்டும்.
- சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். - என்றெல்லாம் பிரதமரிடம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

### கடைசிப்பக்க அட்டையில் ...

நாட்டு நலப் பணிகளில் கலைஞர் அரசுக்குள்ள அக்கறையைச் சித்தரிக்கும் படம்.



# 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.1242.71 கோடிக்குத் துணை மானியம்: சட்டப்பேரவையில் முதலமைச்சர் தாக்கல் செய்தார்

1997-98ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையை ரூ.1242 கோடியே 71 இலட்சத்துக்குச் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.3.98 அன்று தாக்கல் செய்து உரையாற்றினார்.

1997 98ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளைச் சட்டப் பேரவையில் நேற்றுத் தாக்கல் செய்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:-

''1997-98ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 1242 கோடியே 71 இலட்சம் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில், ரூபாய் 913 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ329 கோடியே 71 இலட்சம் மூலதனம் மற்றும் கடன் கணக்குகளில் அடங்கும்.

இந்த மானியக் கோரிக்கைகளில் இடம்பெறுகின்ற சில முக்கியமான திட்டங்கள், திட்டப்பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

"மானியக் கோரிக்கை 8 - தேர்தல்கள்" என்பதன் கீழ் நாடாளுமன்றத் தேர்தல் குறித்த செலவுக்குக் கூடுதலாக ரூபாய் 51 கோடியே 60 இலட்சம் இந்தத்துண்ண மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

**காவல்துறைக்குக் கூடுதல் நிதி**

"மானியக் கோரிக்கை 15-காவல் துறை" என்பதன் கீழ் சிவகாசியில் தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் புதிய பிரிவை ஏற்படுத்தவும், 12 புறக்காவல் நிலையங்களை, முழுநிலைக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தவும் ரூபாய் 16 கோடியே 81 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

"மானியக்கோரிக்கை 18-மருத்துவம்" என்பதன் கீழ் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் வரும் அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனத்தின் மூலம் மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சைப் பொருட்கள் வழங்க ரூபாய் 7 கோடியே 1 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சில அரசு மருத்துவ மனைகளில் "கோபால்ட்" முறை மருத்துவப் பிரிவு சாதனங்கள் வாங்குவதற்காக ரூபாய் 3 கோடியே 49 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

*(தொடர்ச்சி 42ம் பக்கம்)*



# விவசாயிகளுக்கு நடப்பாண்டில் நிலவரி ரத்து செய்யப்படுகிறது

## நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

சட்டப்பேரவையில் 6.4.98 அன்று நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் உரை நிகழ்த்தினார். கலைஞர் அவர்கள் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி வருமாறு :-

சமூகநீதி - இந்த ஆண்டு சுதந்திரப் பொன்விழா ஆண்டு என்ற காரணத்தினாலும் மொழிக் காவலர்கள் - தேசத் தியாகிகள் இவர்களையெல்லாம் கௌரவிப்பதற்காக அவர்களுக்கு ஒய்வூதியத் தொகையை ரூ.3,000 என்றும் அவர்களுடைய வாரிசுகளுக்கு ரூ.1,500 என்றும் ஆக்கியுள்ளதையொட்டி - சமூக நீதிக்காகப் போராடியவர்களுக்கும் அவர்களுக்குரிய மரியாதையை சமூகநீதி அரசான திராவிட முன்னேற்றக் கழக அரசு தரும் என்பதற்கு அடையாளமாகத்தான் அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தேன்.

**சமூகநீதிக் காவலர்களுக்கான தொகை உயர்வு**

1987ஆம் ஆண்டு அவர்கள் இந்தப் போராட்டத்திலே தங்களுடைய உயிரைத் தந்தார்கள். அதற்குப்பிறகு அவர்களுக்கு அந்தத் தொகை கிடைக்காத காரணத்தால் அந்தத் தொகை வரவேண்டும் என்பதற்காக ஒரு சிலர் வழக்குப் போட்டிருக்கிறார்கள். நான் இதை இங்கே அறிவிக்கும்போது எனக்கே அந்தத் தகவல் தெரியாது. அந்த வழக்கு நீதிமன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது வேறு விவகாரம். இருந்தாலும் நான் அறிவித்தபிறகு அதிகாரிகளைக் கூப்பிட்டு உடனடியாக ஆணை




பிறப்பித்து அந்தத் தொகையை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது ஒரு கோப்பு வந்தது.

அந்தக் கோப்பில், அந்த வழக்கு விவரங்கள் எல்லாம் இருந்தன. "அவர்கள் வழக்குப் போட்டுத்தானா பணம் பெறவேண்டும்? அந்த வழக்கை எதிர்த்து இன்னொரு வழக்காடுவதா?" என்றெல்லாம் கேட்டுவிட்டு, அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் என்று இருப்பதை - இதுவரையில் எனக்குக் கிடைத்த பட்டியலில் ஒரு இருபது பேர்களுடைய பெயர்கள்தான் வந்திருக்கிறது. மற்ற பெயர்களையெல்லாம் நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய எம்.எல்.ஏ.க்கள் - I, II இரு எம்.எல்.ஏ.க்களும் இதில் ஒன்றாக இருந்து - இரண்டும் ஒன்றாக இருந்து அந்தப் பெயர்களையெல்லாம் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, மொழிக் காவலர்கள் - தேசத் தியாகிகள் என்ற பட்டியலில் இந்த சமூகநீதிக் காவலர்களும் சேர்க்கப்பட்டு அவர்களுடைய குடும்பத்திற்குத் தலா 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துக்கொள்கிறேன்.



அது மாத்திரமல்ல; இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு இன்னுயிர் ஈந்த தியாகிகளின் வாரிசுதாரர்களுக்குச் சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போலவும், மொழிப்போர்த் தியாகிகளைப் போலவும், சமநிலையிலே கருதி குடும்ப ஓய்வு நிதியாக மாதம் ரூ.1,500 வழங்குவதென்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகை - 98-99ஆம் ஆண்டில் முதன்முதல் இந்தத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காகச் சட்டமன்ற உறுப்பினர்

தொகுதிகளுக்கு ரூ.25 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்ட தொகை 58.75 கோடி ரூபாயாகும். நிதிநிலை அறிக்கையின்பொழுது இத் தொகையினைப் பல உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க தொகுதிக்கு 25 இலட்சம் என்பதை 30 இலட்ச ரூபாயாக உயர்த்தி அறிவித்தேன். ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே 526 கோடி ரூபாய் இறுதிப் பற்றாக்குறையாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

### சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுக்கான நிதி உயர்வு

"இவ்வளவு பற்றாக்குறை; இவ்வளவு பற்றாக்குறை" என்று திருநாவுக்கரசிலிருந்து, சுப்பராயனிலிருந்து, பழனிச்சாமியிலிருந்து, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரிலிருந்து அவ்வளவு பேரும் பற்றாக்குறை; பற்றாக்குறை என்று தங்களுடைய கவலையைத் தெரிவித்திருக்கின்றீர்கள். ஆனால் உங்களுக்கு வேண்டுமென்கிறபோது மாத்திரம் எல்லோரும் சேர்ந்து கைதட்டுகிறீர்கள்.


இதிலே, "சென்னையிலே தொகுதிக்கு நான் 36 இலட்சம் ரூபாய் கொடுக்கிறேன். நான் 36 இலட்சம் கொடுத்தால் முதலமைச்சர் எவ்வளவு கொடுக்க வேண்டும்?" என்று மேயர் ஸ்டாலின் கேட்டார்.


ஏற்கெனவே நாடாளுமன்றத்திற்கு 1 கோடி ரூபாய் தரப்படுகிறது. அஃதன்னியில், சட்டமன்றம் சார்பாக நாம் தருகிறோம். இரண்டையும் நீங்கள் கூட்டிப் பார்க்கவேண்டும். சென்னைக்கு இவ்வளவு கொடுப்பதால் சென்னைக்கு நாம் தொகையை ஒதுக்கலாமா - வேண்டாமா? என்கிற எண்ணம்கூட எனக்கு ஏற்பட்டிருக்கிறது, சென்னைக்குத் தாராளமாக வழங்கப்படுகிற காரணத்தால்!


இருந்தாலும்கூட அதை மன்னித்து வேறு வழியில்லாத காரணத்தால் - நீங்களும் கேட்டுவிட்ட காரணத்தால் - 30 இலட்ச ரூபாய் என்பதை 35 இலட்ச ரூபாய் என்று வழங்குகிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

என் நிலைக்கு இறங்கி - கருணாநிதி நிலைக்கு இறங்கி அல்ல; நிதிநிலைக்காக இறங்கி இதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

வரிகள் குறைக்கப்பட்டிருப்பது பற்றியும் - வரிகள் விலக்கப்பட்டதைப் பற்றியும் அனைவரும் பேசியிருக்கிறீர்கள். நம்முடைய சி.பி.எம்.கட்சியினுடைய உறுப்பினர் மணி அவர்கள் அதைப் பெரிதும் பாராட்டிவிட்டு - ஏழை எளிய மக்களுக்காகச் செய்த நல்ல காரியங்களையெல்லாம் பாராட்டிவிட்டு ஆக்கபூர்வமான பல கருத்துக்களை எடுத்துவைத்தார். அவரைப்போலவே இங்கு







உரையாற்றிய அத்தனைப் பேரும் - தங்களுடைய தொகுதிகளின் குறைகளை அக்காள் (உறுப்பினர் ஏ.எஸ்.பொன்னம்மாள்) போன்றவர்கள் எடுத்துக்காட்டினாலும்கூட, அதே நேரத்தில் அவ்வளவு பேரும் இன்னும் சில வரிகளைக் குறைக்க வேண்டும் என்ற கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

### செயற்கை இழை நூலுக்கான விற்பனைவரி குறைப்பு

அதிலும் குறிப்பாக, நிதிநிலை அறிக்கையிலே செயற்கை இழை நூலுக்கும் மற்றும் செயற்கை இழைக்கும் (Manmade fibre and yarn) விற்பனை வரி எட்டு சதவிகிதத்திலிருந்து இரண்டு சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது என்றும், ஆனால் கடந்த ஆண்டு எதிர்பார்த்ததற்கு மாறாக வரி வசூல் குறைந்துவிட்ட காரணத்தால் - விற்பனை வரி மீண்டும் 8 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது என்றும் அறிவித்தேன்.

இதை அறிவித்த உடனேயே நம்முடைய சொக்கர் அவர்கள் அவை முடிந்து வெளியே செல்லும் நேரத்திலேயே - நீங்கள் சரியாகக் கணக்குப் பார்க்கவில்லை என்று தெரிகிறது. சரியாகப் பேசுங்கள் என்றார்: தொடர்ந்து சுதர்சனம் எம்.எல்.ஏ. பேசும்போதும் - ஜி.பழனிச்சாமி பேசும்போதும் . ஐ.கணேசன் பேசும்போதும் - சுப்புலட்சுமி ஜெகதீசன் ஒரு கடிதம் மூலமாகவும் இந்த விவரங்களை எனக்குத் தெரிவித்து அதனடிப்படையில் இதை ஆராய்ந்த வகையில் இந்த விளக்கத்தைத் தர விரும்புகின்றேன்.

1997-98ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம் ஆகிய இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது - இதில் முந்தைய ஆண்டைவிட, ஐம்பது இலட்சம் ரூபாய் குறைவாக இருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

ஆனால் - மாநிலங்களுக்கிடையேயான விற்பனைத் தொகை கணிசமாக உயர்ந்துள்ளது.

இந்தப் பிரிவிலே அதிகமாக வரி செலுத்தும் நிறுவனமாகிய - சவுத் இந்தியா விஸ்கோஸ் - 97-98ஆம் ஆண்டில் பெரும்பகுதி உற்பத்தி மேற்கொள்ளாத காரணத்தால் - விற்பனை வரியில் முழு அளவு எய்தவில்லை என்றும் அறியப்படுகிறது.

மேலும் இந்த ஆண்டு உற்பத்தி தொடர்பாக உச்சநீதி மன்றம் அனுமதி அளித்துள்ள காரணத்தினால், இந்தப் பிரிவில் கூடுதல் வரி வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே, முன்னர் இருந்த வருவாய் நிலையை எட்ட இந்த ஆண்டு வாய்ப்பு இருப்பதால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இரண்டு சதவிகித

வரியையே மேலும் ஒரு ஆண்டிற்குத் தொடர்ந்து அமல் செய்ய இந்த அரசு முடிவு எடுத்துள்ளது.

**கொப்பரையுடன் தேங்காய்க்கும் வரிக்குறைப்பு!**

தேங்காய் - கொப்பரை இதிலே ஒரு குழப்பம். தேங்காய்க்கும், கொப்பரைக்கும் இரண்டுக்குமா? அல்லது கொப்பரைக்கு மாத்திரமா என்று. ஆங்கிலத்திலே கொப்பரை என்று மாத்திரம் அச்சடித்துவிட்டார்கள். ஆனால் தேங்காய் இல்லையா என்று ஒரு சந்தேகம் வந்தது. எனவே தேங்காய்க்கும் உண்டு - கொப்பரைக்கும் உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே தேங்காய் என்பதற்கு பக்கத்திலே 'கமா' இல்லாததாலும் நான் சொன்னதுபோலவே ஆங்கிலத்திலேயே கொப்பரை என்று மாத்திரம் இருந்ததாலும் இந்த வரிக் குறைப்பு கொப்பரைக்கு மட்டுமா? தேங்காய்க்கும் பொருந்துமா? என்ற சந்தேகத்தைப் போக்கும் வகையில், இந்த வரிக்குறைப்பு கொப்பரைக்கு மட்டுமல்லாமல், தேங்காய்க்கும் உண்டு என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

மேலும் நிதிநிலை அறிக்கையிலே - நம் மாநிலத்திலேயே விற்பனை செய்யும் தேங்காய் மற்றும் கொப்பரைக்குத்தான் வணிக வரி 1 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து - தேங்காய் வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் வெளிமாநிலங்களுக்கு விற்கப்படும் தேங்காய் கொப்பரை வரி விகிதமும் 2 சதவிகிதத்திலிருந்து ஒரு சதவிகிதமாகக் குறைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவரும் மற்றவர்களும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கும் எண்ணெயோடு பருத்தி எண்ணெய்யும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.சம்பத், சொக்கர், ராஜ்குமார் மன்றாடியார் போன்றவர்களெல்லாம் இதை வலியுறுத்தி எனக்குக் கடிதங்கள்கூடக் கொடுத்திருக்கிறார்கள்.

**பாமாயிலுக்கும் வரிவிலக்கு**

சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் இதோடு பாமாயிலும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இதை அரசாணையில் விட்டுவிட்டதாக எனக்குத் தகவல். பாமாயிலும் சேர்த்துக் கொள்ளப்படலாம்; மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்








அனைத்திற்கும் வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருந்தேன்.

இந்த வரி விலக்கானது இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இதுவரை அளிக்கப்படாத சலுகையாகும்.

இதைக் கண்டித்துத்தான் தாமரைக்கனி போன்றவர்கள் பட்ஜெட் கண்டனக் கூட்டம் நடத்தப்போகிறார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் - சமையல் எண்ணெய்க்குக் கர்நாடகாவில் 5 சதவிகித வரியும், கேரளாவிலும் ஆந்திராவிலும் 9 சதவிகித வரியும் தற்போது வசூலிக்கப்படுகிறது.

பருத்திக் கொட்டையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய், அரிசி தவிட்டிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் ஆகியவைகளுக்கும் வரி விலக்கு அளிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, அந்த இரண்டு எண்ணெய்களுக்கும் முழுவிலக்கு அளிக்கப்படுகிறது.

நிதிநிலை அறிக்கையில் - வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு வரி 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும் - முத்திரைச் சின்னம் இடப்பட்ட பிற மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதத்திலிருந்து 11 சதவிகிதமாகவும் வரி குறைக்கப்படும் என்று அறிவித்திருந்தேன்.

மசாலாப் பொடிகள் சிறு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் வெளியிட்ட விளம்பரத்தில் - சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலே 91ஆம் ஆண்டிலிருந்து தாங்கள் வரி கட்டவில்லை என்று குறிப்பிட்டு இருக்கின்றார்கள்.

இதற்குப் பரிந்துரை செய்தவர்கள் - டி.சுதர்சனம், ஆர்.ஆர்.சேகரன், எஸ்.என்.பாலசுப்பிரமணியம், ஞானசேகரன், ராஜ்குமார் மன்றாடியார், ஈஸ்வரன் மற்றும் பேராசிரியர் தீரன் ஆகியோர்களெல்லாம் பரிந்துரை செய்து பேசியிருக்கிறார்கள்.

ஆனால், கடந்த 97ஆம் ஆண்டு உயர்நீதி மன்றம் பிறப்பித்திருக்கின்ற ஆணையில் முத்திரைச் சின்னம் உள்ள மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதம் வரி செலுத்த வேண்டுமென்று தெரிவித்து இருக்கின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த 16 சதவிகித வரியைத்தான் நிதிநிலை அறிக்கையிலே 11 சதவிகிதமாகக் குறைத்து நான் அறிவித்திருந்தேன்.

**மசாலாப் பொடிகளுக்கு வரிக்குறைப்பு**

எனினும், இந்த மசாலாப் பொடிகளுக்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் பலரும், அதன் உற்பத்தியாளர்களும், பொதுமக்களும் வைத்த கோரிக்கையை ஏற்று - வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடிகளுக்கு 4 சதவிகிதம் என்றும் - வணிகச் சின்னம் இல்லா மசாலாப் பொடிகளுக்கு 2 சதவிகிதம் என்றும் வரிக் குறைப்பு செய்யப்படுகின்றது.

**சொட்டு நீலம் - சலவை வெளுப்பான்: வரிக்குறைப்பு**

சலவைக்குப் பயன்படுத்தப்படும் - கையினால் செய்யப்படும் சொட்டு நீலத்திற்கும், வணிகச் சின்னம் கொண்டுள்ள பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சொட்டு நீலத்திற்கும் ஒரே விற்பனை வரி விதிக்கப்படுகிறது.


இதுகுறித்து பேராசிரியர் தீரன், செங்கை சிவம் ஆகியோர் இந்த அவையிலே கோரிக்கை எழுப்பினார்கள். கோரிக்கையை ஏற்று சலவைத் தொழிலாளர்கள் பயன்படுத்தும், கையினால் செய்யப்படும் சொட்டு நீலம் உட்பட சலவை வெளுப்பானுக்கு (Handmade Laundry Brightner) வரி 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


அடுத்து பொட்டு விஷயம் -

நிதிநிலை அறிக்கை வெளியிட்ட பிறகு பொதுவாக விமர்சித்த கட்சிகளின் தலைவர்கள் சிலரும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும் விவசாயிகள் பிரச்சினை பற்றிச் சொல்லவேயில்லை என்றார்கள். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. இந்த 49 பக்க நிதிநிலை அறிக்கையில் ஏறத்தாழ 25 பக்கங்களாவது விவசாயிகளை அடிப்படையாகக் கொண்டுதான் பல திட்டங்கள் தீட்டப் பட்டிருக்கின்றன.

**விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்**
**வழங்கியது கழக ஆட்சி**

இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே முதன்முதலாக இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்குகின்ற ஒரேயொரு ஆட்சி - அதை அறிமுகம் செய்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அதையெல்லாம் சொல்லிவிட்டு - இதையெல்லாம் செய்யவில்லையே என்று சொல்லியிருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு - விவசாயிகளுக்கு ஒன்றுமே இல்லை.



விவசாயிகளைக் கைவிட்டுவிட்டீர்கள் என்று சிலர் பேசியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. வேதனையாகவும் இருந்தது.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள நெல்விலைக்கு மேல் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35 இடைநிகழ் செலவுத் தொகையாக விவசாயிகளுக்குத் தமிழகத்திலே வழங்கப்படுகின்றது. அந்தக் காலத்தில் இதைப் போனசாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள் - அப்போது ஜெகஜீவன்ராம் மத்திய உணவு அமைச்சராக இருந்தபோது - நான் அவரிடம் சென்று கேட்டேன் - "அதிக விலை கொடுக்க வேண்டும்" என்று, அதற்கு அவர் "அப்படி கொடுக்க இடமில்லை" என்று கண்டிப்பாகத் தெரிவித்தார். பிறகு நான் அவரிடம் கட்டாயமாகத் தமிழகத்திற்கு தந்துதான் ஆகவேண்டும் என்று வலியுறுத்தியபோதுதான், அவர் எனக்கு வழிசொல்லிக் கொடுத்தார். அந்த வழிதான் இது. "நீ போனஸ் என்று கொடுக்காதே; வண்டி சத்தம், வாடகை என்று சொல்லி கொஞ்சம் அதிகத் தொகையை உயர்த்திக் கொடு பிரச்சினை வராது" என்று சொன்னார். அப்போது ஆரம்பித்ததுதான் இது - திமுக.ஆட்சியில்.

அந்த அடிப்படையில் இன்றைக்கு குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் வழங்கப்படுகிறது.

விவசாயிகளின் நலன் கருதி நெல்லைக் கொள்முதல் செய்யும்போது - தரக்கட்டுப்பாடு 15 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக - குவிண்டால் ஒன்றுக்குக்குறைக்கப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

**நெல் கொள்முதலிலும் சிறப்புச் சலுகை**

நெல்லைக் கொள்முதல் செய்யும்போது இதுவரை 18 சதவிகிதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லை மட்டுமே கொள்முதல் செய்யலாம் என்று இருந்தது. விவசாயிகளின் நெல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு 20 சதவிகிதம் ஈரப்பதம் இருந்தாலும் அதனைக் கொள்முதல் செய்யலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

விவசாயிகள் விளைபொருளை விற்பனை செய்வதில் பாதிப்புக்கு ஆளாகாமல் இருக்க வேண்டுமென்பதற்காக 926 நேரடி கொள்முதல் நிலையங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தினோம். எந்த ஆண்டுமே இவ்வளவு கிடையாது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

உலக வங்கி நிதிஉதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு வரும் ஆண்டில் ரூ.82 கோடியும், வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.9.85 கோடியும் வரும் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

டிசம்பர் 96-இல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது 10,05,166 விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, 47 கோடியே 98 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் விளைபொருள் இழப்பீட்டுத் தொகையாகத் தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

நவம்பர் 1997-இல் ஏற்பட்ட வெள்ளச் சேதாரங்களுக்கான நிவாரண நிதியாக 58.95 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.


இரண்டரை இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடையும் வகையில், குறைந்தபட்ச விலையாக ஒரு டன் கரும்பிற்கு ரூ.660 எனவும், சர்க்கரை ஆலைகளால் வழங்கப்படும் ரகமானியம், வாகன வாடகை மானியம் ரூபாய் 35யையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்குக் குறைந்தபட்சம் ரூ.695-ம், அதிகபட்சம் ரூ.881-ம் ஆக சராசரியாக ரூ.765-ம் கிடைத்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

ஆயிரம் ரூபாய் என்று சொன்னீர்களே என்று கேட்டால், ஐந்து ஆண்டுகள் இன்னும் முடியவில்லையே! தி.மு.க.ஆட்சியில் கரும்புக்கு விலை ஆயிரம் ரூபாய் தருவோம் என்று சொன்னோம். ஆயிரம் ரூபாய் வேண்டுமென்றால் ஐந்து ஆண்டுகள் முடியட்டும். முடிய விடுங்கள்.

காவிரி டெல்டா பகுதிகளில் - குறிப்பாக தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் பாசன வாய்க்கால்களில் நீர்ப்போக்கிற்கு இடையூறாக உள்ள காட்டாமணிச் செடியினை அகற்ற 2,384 ஹெக்டேர் பரப்பில் களைக்கொல்லி தெளித்து காய்ந்த இலைகளை அகற்றி எரிக்கப்பட்டது. இதற்காக ரூ.102.13 இலட்சம் செலவிடப்பட்டது.

## காவிரிப் பாசன வாய்க்கால்களைத் தூர்வார 20 கோடி ரூபாய்

நீண்ட காலமாகக் கிடப்பிலே போடப்பட்டிருந்த காவிரி பாசன வாய்க்கால்கள் தூர் வாரும் பணிகள் நடப்பாண்டில் பத்து கோடி







ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் மிக நேர்த்தியாக நடைபெற்றுள்ளன. வரும் ஆண்டிலும் அதற்காக இருபது கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்துவிடப்படுவதற்கு முன்னர் பணிகள் முடிக்கப்படவுள்ளன. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

சென்னை, மதுரை, பொள்ளாச்சி மற்றும் திருச்சி ஆகிய நான்கு மண்டலங்களிலுள்ள 200 ஏரிகளில் தூர்வார 19.91 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் ஆண்டாண்டுகளாக வறண்டு கிடந்த 22 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற ரூ.7½ கோடி நிதி ஒதுக்கி ஆணையிடப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

## விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலி அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

சரி - போதாது பழனிச்சாமி அவர்களுக்கு - இன்னும் என்ன என்று கேட்கிறார்கள். அது தெரிந்துதான் இதைச் சொல்ல விரும்புகிறேன், இருக்கின்ற கஷ்டங்களுக்கிடையே!

கடந்த பருவகாலத்தில் பெருமழை பெய்ததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனைக் கருத்திலே கொண்டு - அவர்களுக்கு நிவாரணமாக இந்த ஆண்டுக்கான நிலவரி முழுவதும் ரத்து செய்யப்படுகின்றது. இது தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்குப் பொருந்தும்.

இதனால் இந்த ஆண்டு அரசுக்கு இழப்பு 43 கோடியே 33 இலட்சம் ரூபாய். சிலபேர் ஏமாந்துபோய் நிலவரியைச் செலுத்தியிருக்கிறார்கள்.

அப்படி ஏற்கெனவே இந்த ஆண்டுக்குரிய நிலவரியைச் செலுத்தியவர்களுக்கு - அவர்கள் செலுத்திய தொகை பற்றுவைக்கப்பட்டு, அவர்கள் அடுத்த ஆண்டு செலுத்த வேண்டிய நிலவரிக்காக ஈடுசெய்யப்படும்.

## நபார்டு வங்கியுடன் முந்தைய அரசு செய்த ஒப்பந்தம்

இதைத்தவிர, கூட்டுறவு வங்கிக்கடன் - (எதிர்பார்க்க வேண்டாம். இயலாமையைச் சொல்லப்போகிறேன்) விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் தாங்கள் பெற்றுள்ள கடன்களின் மீதான இந்த ஆண்டுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதனை அரசு பரிசீலித்தது.

1994-ஆம் ஆண்டு - கடந்த ஆட்சியிலே மாநில அரசு நபார்டு வங்கியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி இத்தகைய வட்டியைத் தள்ளுபடி செய்ய வழியில்லை. அப்படி 94-ல் நபார்டு வங்கியுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.


அப்படி நபார்டு வங்கியின் ஒப்பந்தத்தை மீறி வட்டியை நாம் தள்ளுபடி செய்தால், நபார்டு வங்கி வரும் ஆண்டிலிருந்து எந்த நிதி உதவியையும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் அளிக்காது. இதுதான் ஒப்பந்த ஷரத்து.

நான் நேற்று முன்தினம் இங்கே முதலமைச்சர் அறையிலே உட்கார்ந்து கொண்டு இங்கிருந்து நபார்டு நிறுவனத்திற்குப் பலமுறை அதிகாரிகள் மூலமாக போன் செய்து தொடர்பு கொண்டோம். அமைச்சர்கள் எல்லாம் உட்கார்ந்து - நான், தலைமைச் செயலாளர், உணவுத்துறை செயலாளர், வேளாண்மைத்துறை அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர், உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் இவ்வளவு பேரும் உட்கார்ந்துகொண்டு பலமுறை போன்செய்து அவர்களிடம் தொடர்பு கொண்டபோது நிச்சயமாக முடியாது என்று அவர்கள் மறுத்துவிட்டார்கள். அதை மீறி வட்டியைத் தள்ளுபடி செய்தால் நபார்டு வங்கி வரும் ஆண்டிலே எந்த நிதி உதவியும் மாநில கூட்டுறவு வங்கிகளுக்குத் தராது. இது 94ஆம் ஆண்டு போட்ட ஒப்பந்தத்தின் ஷரத்து.

## குறுகியகாலக் கடன்கள் மத்தியகாலக் கடன்களாகிறது

இந்த ஆண்டு வட்டியை மாத்திரம் தள்ளுபடி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று வங்கித் தலைவருடன் தமிழக அரசின் மூத்த அதிகாரிகளை விட்டுப் பேசச் செய்தேன். எனினும் அவர்கள் ஏற்கவில்லை. எனவே, வேறுவழியின்றி - தமிழக அரசின் சக்திக்கேற்ற வகையில் விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக்







கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றி அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

நீண்டகாலக் கடன்களுக்கும் இதுபோன்ற கால நீட்டிப்பு வழங்கப்படும். இதனால் விவசாயிகள் அபராத வட்டி சுமார் ஐம்பது கோடி ரூபாய் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்படாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று - அன்றைக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.திருவேங்கடம் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்; சர்க்கரை ஆலைகள் விவசாயிகளிடம் இருந்து கரும்பை எடுக்காத காலகட்டத்தில் - விவசாயிகளே தாங்கள் விளைவித்த கரும்பினை அரவை செய்வதற்கு - தங்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பினைப் பயன்படுத்துகிறார்கள். இதற்காக மின் இணைப்பு வைப்புத் தொகையாக ரூபாய் ஐந்தாயிரமும் - ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஐந்து ரூபாய் என்றும், கரும்பு விவசாயிகளிடம் தற்போது வசூலிக்கப்பட்டு வருவதாக அவையிலே உறுப்பினர் கலசப்பாக்கம் பெ.சு.திருவேங்கடம் தெரிவித்தார். இந்தக் கோரிக்கை மேலும் பல விவசாயிகளிடம் இருந்து அரசுக்கு வந்துள்ளது.

## மின் இணைப்பு வைப்புத்தொகை குறைப்பு

இந்தக் கோரிக்கையினை ஏற்று - கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, இனி இதற்கான மின் இணைப்பு வைப்புத் தொகையை ரூபாய் ஐந்தாயிரத்தில் இருந்து ஐநூறு ரூபாயாகக் குறைத்து - ஒரு யூனிட் மின்சாரத்திற்குத் தற்போது வசூலிக்கப்படும் ஐந்து ரூபாய் என்பதை 1.25 ரூபாய் என்றும் குறைத்து வசூலிக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாதவரம் தொழிலாளர் பிரச்சினைபற்றி சுப்பராயன் இங்கே கேட்கிறார். அதைப்பற்றிப் பேசிவிட்டால் தொழிலாளர் மானியத்திலே பேச பிரச்சினை எதுவும் இல்லாமல் போய்விடும். எனவே, அப்போது இதைப்பற்றி அனைவரும் மகிழத்தக்க முடிவை அறிவிப்பேன் என்று கூறி, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

- இவ்வாறு, **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளித்துச் சட்டமன்றப் பேரவையில் உரை நிகழ்த்தினார்.

★★★

# ஆவணக்களஞ்சியம்

## எம். எஸ். பாண்டியன்

உலகெங்கும் சிற்சில ஆவணங்கள் குறித்த உண்மைகள் பேசப்படுவதைக் காணலாம். ஆவணங்கள் என்றால் என்ன ? அவை எவ்வாறு உருவாகின்றன.? அதன் பழமை, வளர்ச்சி, தன்மை, பயன்பாடு பற்றி ஆய்வதேயாகும். டாக்டர். பாலிகா என்பவர், 'கடந்த காலம் என்று ஒன்று இருந்ததை ஆதாரபூர்வமாகக் காட்டவல்லதுதான் ஆவணங்கள்' என்றார். இதையே ஆங்கிலத்தில் —

**``It is an undeniable fact that the archives of a Government Constitute the authentic Survival of past Administration. It is equally an undeniable fact that a proper study of these archives alone can enable us to comprehend and assess correctly the motives and secrets of past action and policy that without such a proper study all criticisms are bound to create nothing but confusion and misrepresentation''** என்று கூறினார்.

### ஆவண வகைகள்:

ஆவணங்களுக்கு ஒரு மேலான சக்தி இருப்பதாகவே நம்பப்படுகிறது. அப்படிப்பட்ட சக்தி அதற்குண்டாக வேண்டுமெனில் அவைகள், உருவாகும் உலைக்கூடம் எங்குள்ளது என்பதை ஒரு வினாவாகப் போட்டுக் கேட்டால், அதற்குப் பதிலாக வருபவை :


1) அரசினால் உருவாக்கப்படுபவை - அரசு ஆவணங்கள்; அதாவது பொது ஆவணங்கள்.

2) தனியாரிடம் உள்ளவைகள் - இது தனி நபர்கள் மீதான ஆவணம் - அல்லது அவர்கள் உருவாக்கிய ஆவணங்கள். தனியார் நிறுவனங்கள் பற்றியோ அவற்றைச் சார்ந்தவைகளைப் பற்றியோ உள்ளவைகூட இதில் அடங்கும்.

### ஆவணங்களின் பரிணாமம் - பொது ஆவணம்:

அரசு ஆவணங்களைப் பொது ஆவணங்கள் என்று அழைப்பதன் தாத்பரியம் என்ன ? நவீன யுகத்தில் பொது நல அரசுகள் ஏற்பட்ட பிறகு உருவாக்கப்பட்டவைகள், அத்தகைய பெயரைச் சூடிக் கொள்கின்றன. இந்தப் பொது ஆவணங்கள் எப்படி பரிணாமம் பெறுகின்றன. தற்கால ஆவணங்கள் அதாவது அரசு சார்பானவைகள் யாவும் எங்காவது உள்ள ஒரு குட்டி அலுவலகம் முதல் அரசு தலைமைச் செயலகத்தில் உள்ள உயர்மட்ட அலுவலர் மற்றும் அமைச்சர் பெருமக்கள்வரை - அவர்களால் அவைகள் உருவாக்கப்படுகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. எப்படி ?

ஒரு அரைத்தாளில் அமைச்சர் சிறுகுறிப்பு ஒன்றை எழுதி, தமது செயலரிடம் கொடுக்கிறார் - அதைச் செயலர் உரிய துறைக்கு அனுப்புகிறார். துறைசார்ந்த அலுவலர் அந்தக் குறிப்பில் உள்ளவற்றை வைத்துக் காரியமாக்குகின்றார். அதன்படி ஒரு பூதாகரமான தொழிற்கூடம் ஏற்பட்டுவிடுகிறது. அதில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைக்குச் சேர்கிறார்கள். இது ஒரு துண்டுக் கடிதாசியின் வேலை என்பதை நீங்கள் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும். இவ்வளவு பெரிய காரியங்களைச் செயல்படுத்திய அந்தச் சிறு குறிப்பு ஒரு கோப்பில் (File)


Fort St. George 24th October, 1836

| | | | | |
|---|---|---|---|---|
| 12.40 | 4 | 4 | 3500 | |
| 12.42 | 11 | 4 | 4701 | |
| 12.44 | 4 | 4 | 7100 | |
| Total | 12 | 12 | 15,301 | |

இராமேசுவரம் பகுதி மீனவர்கள் எத்தனைப் படகு வைத்துக் கொள்ளலாம் - எப்படி மீன் பிடிக்கலாம் என 1836ல் வெளியிடப்பட்ட அரசு ஆணை.

இணைக்கப்பட்டு, ஆவணக்காப்பகத்துக்குப் போய் அடைக்கலமாகிறது. அதுவே ஒரு தலைமுறை கழிந்து ஆராய்ச்சிக்குரிய கோப்பாகிறது. அதற்கு நூற்றுக்கணக்கான துணைக்கோப்புகள் உருவாகிவிடுகின்றன. இதுதான் ஒரு பொது ஆவணத்தின் பரிணாமம்.


டாக்டர் பி.எஸ். பாலிகா

இரண்டாவதாக, தனியார் ஆவணங்கள் என்பன ஒரு தனி நபரால் உருவாக்கப்பட்டவைகளாக இருக்கும் அல்லது அவர் தம் குடும்பம், அவர் தம் தொழில், அவர் தம் திறமை, அவர் தம் புலமை, அவர் தம் தொண்டு, அவர் தம் பொதுச்சேவை இவைகளைப் பற்றியெல்லாம் குறிப்புகள் எழுதி வைத்திருந்து மாண்டுவிட்டாலோ, அல்லது தம் காலத்திலேயே அது குறித்து பிரச்சினைகள் உருவானாலோ அவர் தமது ஆவணங்களை வெளிப்படுத்துவார். அப்போது அந்த ஆவணங்கள் காலூன்றி நடக்கத் தொடங்கிவிடும். இத்தகைய ஆவணங்கள் உலகெங்கும் பல்வேறு நூலகங்களிலும், ஆவணக் காப்பகங்களிலும், பொருட்காட்சியகங்களிலும் இடம் பெற்றுவிடுகின்றன.

**பத்திரிகைகள் - ஆவணங்களாகும் பரிணாமம் :**

பத்திரிகைகள் யாவும் (News Paper) பொது ஆவணக்காப்பகம் அல்லது நூலகங்களில் ஆவணங்களாகக் கருதப்பட மாட்டா. அவைகள் பத்திரிகை அலுவலகத்தின் ஆவணங்கள்தாம் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஒரு பத்திரிக்கைச் செய்தி பொது ஆவணமாகி விடுவதுண்டு.

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் திடீரென்று காலைப் பத்திரிகை ஒன்றில் சிறையில் பெரியாரின் எடை 14 பவுண்டுகள் குறைந்துவிட்டது என்று செய்திகள் வெளியாயின. இதைப் பார்த்த அன்றைய முதலமைச்சர் இராஜாஜி அச்செய்தியின் பத்திரிக்கைத் துணுக்கை உள்துறை அதிகாரிகளுக்கு அனுப்பி, அதுகுறித்து ஆய்ந்து அறிக்கை தரவேண்டும் என்று ஆணையிட்டார். ஒரு பத்திரிகையின் துண்டு வெளியீடு இப்போது பொது ஆவணமாகிவிட்டது. இப்படிப் பத்திரிகைச் செய்திகளும் பொது ஆவணமாகிவிடுவது ஒரு வாலாயமான உண்மை.

**பயணச்சீட்டும் ஒரு ஆவணமே!**

ஆவணங்கள் இன்றியமையாதன என்பதை நாம் அறிவோம்; ஆனால் அது பற்றி நாம் அடிக்கடி சிந்திப்பதில்லை. ஆவணங்கள் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இடம் பெறுகின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இரயிலிலோ, பேருந்துகளிலோ, விமானத்திலோ பயணம் செய்யும் ஒரு நபர் அந்தப் பயணத்தை அவர் தொடர்ந்து நீடிக்கவும், தாம் போய்ச் சேரவேண்டிய இடத்தை அடையவும், அவரால் பெறப்பட்ட பயணச்சீட்டைக் கட்டாயமாக வைத்திருக்கவேண்டும். பயணச்சீட்டும் ஒரு ஆவணமே.


அழகுமுத்து சேர்வைக்குப் பாண்டிய மன்னன் கொடுத்த பட்டயம் பற்றிய கல்வெட்டு

**வழக்குகளும் ஆவணங்களும்:**

நீதி மன்றங்களில் வழக்குகள் உருவாகின்றன என்றால், அவைகளுக்குக் காரணம் பொது மக்களோ அல்லது அதிகாரிகளோ காரணமாவார். அவர்கள் தொடுக்கும் வழக்குகளுக்கும், போலீஸ் தொடரும் பொதுநலம் சார்ந்த வழக்குகளுக்கும் அடிப்படைத் தேவை ஆவணங்களே.

பல்வேறு வழக்குகளுக்கு முதல் தகவல் அறிக்கை (FIR) என்பது எவ்வளவு முக்கியம் என்பதை நாம் அறிவோம். அதுவே வழக்கின் அடிப்படை ஆவணமாகிறது. சில வழக்குகள் தொடர ஆவணங்கள் கிடைக்காமல், நீதியைப் பெறமுடியாமல் வக்கீல்களும் பொதுமக்களும்- ஏன் நீதிபதிகளும் ஆதங்கப்படும் நிலைகளும் உண்டு.

ஒரு சில நேரங்களில் நீதிபதிகள் அதிர்ச்சி அடையும் வகையில் முக்கிய வழக்குகளில் திடீரென ஆவணங்கள் கிடைத்து, வழக்கின் உச்சகட்டத்தை ஏற்படுத்துகின்றன. அல்லது யாராவது ஒருவர் வந்து தன்னிடம் ஆதாரம் இருப்பதாகக் கூறி ஆவணங்கள் சிலவற்றை நேரிலோ, வக்கீல் மூலமாகவோ அளித்து வழக்கைத் திசைதிருப்பி எல்லோரையும் பிரமிக்கச் செய்து விடுவதும் உண்டு. சில நேரங்களில் நீதிபதிகளுக்கு அஞ்சலில் ஒரு தகவல் வந்ததாகத் தெரிவித்து, அதை ஒரு ஆவணமாக்கக் கருதி அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு அதன் மூலம் தீர்ப்புகள் உருவாவதும் உண்டு. இப்படி உருவாகும் பல்வேறு நீதிமன்ற ஆவணங்கள் அந்தந்தக் காலகட்டங்களில் உள்ள மக்களின் சமூக வாழ்க்கையினைப் பிரதிபலிக்கின்றன.

**ஆவணங்களில் இந்தியக் கலாசார அடிப்படைகள்:**

இந்தியக் கலாச்சாரத் தொன்மைபற்றிய ஆய்வுகள் யாவும் இன்னும் நடந்துகொண்டே இருக்கின்றன. அதற்கான ஆவணங்கள்/தகவல்கள் யாவும் புதை பொருட்களிலிருந்தும், கல்வெட்டுகளிலிருந்தும், பழங்காலக் குகை ஓவியங்கள், நாணயங்கள் போன்றவற்றிலிருந்தும் ஆதாரங்களைச் சேகரித்த வண்ணமாகவே இருக்கிறோம். இது முடிவடையாத ஒன்று. நமது இந்தியக் கலாச்சாரம் சிந்து சமவெளி



சென்னையில் இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைந்துள்ள இடம் (1822) பற்றிய புகைப்பட ஆவணம்

நாகரீகத்தை மையமாக வைத்தே பேசப்படுகின்றது. அதையே ஆதாரமாக வைத்து எழுதிவருகிறோம். வரலாற்று அறிஞர்கள் இதற்கான ஆவணங்களை வடஇந்திய நகரங்களிலிருந்து இன்னும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இங்கே தெற்கேயிருந்து மனித இன வரலாறு தொடங்கியுள்ளது என்பதை யாரும் சிந்திக்கவில்லை. லெமூரியாதான் (நாவலந் தீவு) உலக நாகரீகத் தொட்டில் என்று கூறத்தக்க அளவில் பல அறிஞர்கள் எழுதியும் கூட, முறையான ஆவணங்கள் தேடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. நமது பண்டைய வரலாற்றை அறிய இன்னும் எத்தனையோ மைல்கற்கள் பயணம் செய்தாக வேண்டும். ஆயினும் தற்கால வரலாறு பற்றிய விழிப்புணர்வு கொள்ள, அது பற்றிய உண்மைகளை நாம் அறியவேண்டியது நமது கடமையாகும்.

**ஐரோப்பியரும் - தற்கால ஆவணங்களும்:**

இந்தியாவில் ஐரோப்பியர் வியாபார ரீதியில் இடம் பிடித்துத் தொழில் துவங்கி ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் நடத்தி, அவர்கள் தங்களது நாட்டுக்கும் இந்தியாவுக்கும் பூகோள ரீதியாகவும், வர்த்தக ரீதியாகவும், ஆக்கப்பணிகள் நிறையவே செய்தனர். இத்தொடர்பும் பிற்காலத்தில் அரசியல் தொடர்பாக மாறி நாம் அரசியலில் வீழ்ச்சியடைந்தோம். அவர்களே ஆட்சியாளர்களாகி அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்டனர். நாம் சுயாதீனம் இழந்தோம். இதில் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற தனியார் அமைப்பு மிகமுக்கியப் பங்கு வகித்தது. அவர்கள் தங்கள் நிர்வாகத்தை நடத்த உருவாக்கிய ஆவணங்களே ஏராளம்! அவைகளே நமது நாட்டில் உள்ள முக்கிய ஆவணக் காப்பகங்களில் நிறைந்து கிடக்கின்றன.

குறிப்பாகச் சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய தலைநகர்களில் ஐரோப்பியர்கள் காலூன்றிய 15-16 ஆம் நூற்றாண்டு தொடங்கி, அவர்கள் இந்தியாவை விடுத்துச் சென்ற அண்மைக் காலம் வரையிலான ஆவணங்கள் அந்தந்த மாகாணங்களில் அவர்கள் கண்ட நிர்வாகம், சமுதாய வாழ்க்கை முதலிய பல்வேறு அம்சங்களையும் விளக்கக்கூடிய வகையில் உள்ளன. **சென்னை-எழும்பூரில்** உள்ள ஆவணக் காப்பகத்தை **ஆவணச் சுரங்கம்** என்பார்கள். இதுவே இந்தியாவில் உள்ள ஏனைய ஆவணக்காப்பகங்களுக்கு முன்னோடியானது.

ஆவணங்கள் என்பதைப் பகுத்துணர்ந்தால், கல்வெட்டுகளும், தாள் ஆவணங்களும், தோல் ஆவணங்களும், மரத்தில் செதுக்கியவைகளும், செப்புப் பட்டயங்களும், நாணயங்களும் ஓலைச் சுவடிகளும், ஆவணங்களின் பல்வேறு வடிவங்களே. இவைகள் எல்லாவற்றிற்கும் இருப்பிடங்கள் எங்கே? தனித்தனி அமைப்புகளாக உள்ளன. அவை ஆவணக் காப்பகங்கள், பொருட்காட்சியகங்கள், தொல்பொருள் கூடங்கள், நூலகங்கள், ஆய்வகங்கள் என்று பல்வேறு பீடங்களில் இவைகள் வைக்கப்பட்டுள்ளன.

இது சரியா? ஆவணக் காப்பகத்தில் செப்புப் பட்டயமும், நாணயங்களும், அரும்பொருட்காட்சியகத்தில் பாரதியார் கவிதைகளும், நூலகத்தில் ஓலைச் சுவடிகளும், ஓரியண்டல் நூலகத்தில் ஏட்டுச் சுவடிகளுடன், தாள் மூலகங்களும் வைக்கப்பட்டுள்ளன. இது முரண்பாடாகத் தோன்றலாம். இந்தப் பழைய ஏற்பாடுகளைச் சீர்திருத்தம் செய்யாமல் அப்படியே விட்டுவிட்டார்கள். இதனால், பின் வந்த நிர்வாகிகள் தங்களின் உடைமைகள் மீது ஆர்வம் மீதூற, அந்தந்த ஆவணங்கள் தங்கள் பீடத்திலேயே இருக்கவேண்டும் என்று கூறி, எந்த ஒரு மாற்றத்தையும் விரும்பாமல் பண்டைய அமைப்பாய் அப்படியே உள்ளன.

பழங்காலக் கல்வெட்டுகளில் காணும் செய்திகளுக்கும், தற்காலத் தாள் மற்றும் ஓலைச் சுவடிகளில் காணும் செய்திகளுக்கும் பொருளார்ந்த தொடர்பு உண்டா? அவ்வாறு தொடர்பு உண்டு என்பதை நாம் ஆய்ந்தால், புலனாகும். நிலமான்யங்கள் மற்றும் சமூகப் பழக்கவழக்கங்கள் பற்றிய கலாச்சாரக் குறிப்புகள் இவை இரண்டிலும் சிதைவின்றி இருக்க வாய்ப்புண்டு.

கடல்வழிப்போக்குவரத்து மற்றும் தரைவழி மார்க்கங்கள் குறித்து, பண்டைய குறிப்புகளுக்கும் தற்காலத்தில் ஐரோப்பியர்களால் கைக்கொள்ளப்பட்ட மார்க்கங்களுக்கும் ஆவண ரீதியான தொடர்புகள் இருந்துள்ளன. பண்டைய துறைமுகங்கள் பலவற்றை வெள்ளையர் ஆட்சியில் பயன்படுத்தினார்கள். ஆனால் அவைகளில் பல இன்று காணாமல் போய்விட்டன. நம் பண்டைய இசைக் கலை பற்றிய தொடர் ஆய்வுகள் செய்வதென்றால் இசை மூவரில் ஒருவரான தியாகய்யர் கீர்த்தனைகளின் மூலச் சுவடிகள் உள்ளனவா என்ற கேள்விக்கு உரிய விடை கிடைக்க மதுரையிலுள்ள சௌராஷ்டிர நூலகத்திற்குச் செல்லவேண்டும்.

இலண்டனில் காமன்வெல்த் ஆவணத் தொகுப்பில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆவணங்கள் உள்ளன. அவைகளை இந்திய ஆபீஸ் ரெக்கார்ட் இந்திய ஆபீஸ் நூலகம் என்று இன்றும் அழைக்கிறோம்.

**வரலாற்று நோக்கில் ஆவணங்கள் :**

பொது ஆவணங்கள் மட்டுமல்ல, தனியார் ஆவணங்களும் ஒரு நாட்டின் சமூக வாழ்க்கை மற்றும் பொருளாதாரம், அரசியல் போன்ற பல்வேறு அம்சங்களையும் எடுத்துக்காட்டுவன. அவைகளைக் கொண்டே வரலாறு எழுதலாம். ஆவணங்களில் கண்டுள்ளவைகள் எல்லாம் உண்மையான செய்திகளா என்ற ஐயம் எழுகிறது. குறிப்பாக நெப்போலியன் போரில் தோற்றதை - தாம் வெற்றி பெற்றதாக எழுதிப் பாரிசுக்குச் செய்தி அனுப்பிவிட்டான். இதை எப்படி எடுத்துக் கொள்வது?

1857இல் நடந்ததை இந்திய சுதந்திரப் போரே அல்ல. இது வெறும் இராணுவ எழுச்சியே என்று வெள்ளையர்கள் குறிப்பிட்டனர். இது சரியா? நம் தமிழக ஆவணங்களில் ஒரு சமூகத்தினரை ஆங்கிலேயர்கள் 'கிரிமினல்ஸ்' என்று குறிப்பிட்டார்கள். இது சரியா? இவைகளுக்கு எல்லாம் உண்மை கண்டு தெளிதல்வேண்டும். அதற்கு ஆவணங்களே உதவ முடியும். இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பார்கள். இன்றைய செய்திகள் நாளைய வராலாறு ஆகலாம். ஆவணக் காப்பகத்தில் ஏட்டுச் செய்திகளை வைத்து ஆய்வுகள் நடத்தி புதிய வரலாறுகளையும் புதிய ஆவணங்களையும் உருவாக்கலாம்.

ரஷ்ய ஆவணக்காப்பக ஆய்வு முறைகள் இதை மெய்ப்பிக்கின்றன. எங்கோ சைபீரியாவின் பனிப்பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குழந்தை ஒன்று பிறந்த குறிப்பை வைத்துக்கொண்டு அந்தக் குழந்தை எங்கே எப்படி வளர்ந்தது, வாழ்ந்தது என்ற வினாக்கள் தொடுத்து அந்தக் குழந்தையின் பிற்காலத்திய தனி மனித வாழ்க்கையை அப்படியே படம் பிடித்தாற்போல எழுதி ஆவணமாக்கி விடுகிறார்கள். இது எப்படி என்றால் ஒரு ஆவணம் பிறிதொரு ஆவணத்தை உருவாக்கி அதன் வழியாகத் தனி மனித வரலாற்றையும் சமுதாய உடைமையாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது எனலாம். 1783 இல் பிரஞ்சுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் கடலூரில் நடந்த சண்டையில் பங்கேற்ற ஒரு சாதாரண சிப்பாய் பர்னதத்தா (Bernadatta) தாம் இந்நாளைய சுவீடனின் அரசாட்சி மரபை ஏற்படுத்தினான் என்ற செய்தி கிழக்கிந்தியக் கம்பெனி ஆவணங்களில் கிடைத்தன. இது ஒரு மரபியல் வரலாற்றின் மூலத்தை அல்லவா கண்டு தந்துள்ளது!

**நிர்வாக நோக்கில் ஆவணங்கள்**

தற்காலத்தில் நமது பொது நல அரசுகள் - குறிப்பாகத் தமிழ்நாடு அரசு பழைய ஆவணங்களைக் கையாளுகின்றனரா? அவற்றை அன்றாட நிர்வாகத்திற்கு அரசினர் பயன்படுத்துகிறார்களா? இது சரியான கேள்விதான். 50களிலும் அதற்கு முன்பும் ஆண்டுக்குச் சராசரி 4000 ஆவணங்களை ஆவணக் காப்பகத்திலிருந்து அரசு பெற்றுள்ளது.


ஆனால், இன்றைய காலக்கட்டங்களில் ஆண்டுக்கு 400 பழைய கோப்புகள்கூட கேட்டுப் பெறுவதில்லை. இது எவ்வளவு பிற்போக்கு என்பதைக் காட்டுகிறது. ஆவணங்கள் காலத்தின் கண்ணாடி என்றால் மிகையாகாது. நிர்வாகிகள் ஒரு விஷயத்தைப் பற்றிய தீர்மானம் எடுக்கும் முன்பு, அது போன்ற பழைய தகவல்கள் இருந்துள்ளனவா என்பதை அறிய முயற்சிகள் கொள்ளாதது அந்த விஷயத்தின் உண்மை நிலைகளை மறைத்து விடுவதற்கு ஒப்பாகும்.

அதிகாரிகள் தங்களுக்கு அது பற்றிய முழு தெளிந்த அறிவும் இருப்பதாகக் கருதிக்கொள்ளக் கூடாது. மாறாக, இது குறித்துக் கேள்விகள் எழுப்பவேண்டும். நாம் புதிதாகத் தொடங்கும் திட்டங்கள் பற்றிய முன் தகவல்கள் உள்ளனவா என்று கேட்டு, அதன் முன்தகவல்கள் பெறுவதில் அக்கறை காட்ட வேண்டும். இதனால் திட்டம் நிறைவேற்றுவதில் உள்ள அடிப்படைக் கூறுகள் எளிதில் புலப்படும். ஆங்கிலேயர்கள் 'ஆக்ட்' மற்றும் 'ரெகுலேஷன்ஸ்' என்பவைகளை உருவாக்கி ஆட்சி நடத்திய காலத்தில், சட்டத்திற்குக் கட்டுப்படாத பயங்கரவாதிகள் அக்காலத்தில் இருந்திருக்கிறார்கள். அவர்கள் இன்றைய பயங்கரவாதிகளைவிட மோசமானவர்களா? இல்லையா? அவர்களை எப்படி நிர்வாகம் சமாளித்தது என்பதையெல்லாம் கண்ணாடி போல் காட்டப் பழைய ஆவணம் இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொன்னால், 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ஒரு ஜமீன்தார் வெள்ளையரின் போலீஸ், கோர்ட்டுகள், கஜனாக்கள் எதையுமே நடைபெறவிடாமல் பயங்கரவாதம் செய்துகொண்டிருந்தார். அவரையே கூட கைது செய்ய அஞ்சினார்கள். குற்றவாளிகளாகக் கருதப்பட்டவர்கள் எல்லாம் அவரது ஜமீனில் அடைக்கலம் தேடிக்கொண்டனர். இவரை எப்படி நிர்வாகம் சமாளித்தது போன்ற தகவல்கள் ஆவணங்களில் உள்ளன.

தற்காலத்தில் தொழில் பயிற்சிக்கு Apprentice Act என்று போட்டு, அதன்மூலம் செயல்படுத்தினார்கள். இதை எந்தச் சட்டமும் போடாமல் 1854ல் ஒவ்வொரு மாவட்ட சிவில் என்ஜினியர்களிடமும் 6 அப்பரண்டிஸ் வீதம் நியமித்து, மாதம் தலா ரூ.7/- ஊதியம் தந்து பயிற்சி கொடுத்துள்ளார்கள். இதற்கெல்லாம் சாதாரண விதிமுறைகளே போதும். சட்டம் இயற்றித்தான் செயல்பட வேண்டுமா?

காவிரி நீர் பற்றித் தமிழகத்தின் ஆதிபத்ய உரிமையை மறுக்கின்ற, மறைக்கின்ற நிலையில், இன்றைய சிந்தனைகளும், எண்ணங்களும், சூழ்ச்சியின்பாலும், சுயநல எண்ணங்களுக்கும் அடிமையாகிவிட்டதையே ஆங்காங்கே காண்கின்றோம். இவைகள்


Fort Saint George 3rd May 1854 -
stated, and Mr Franz informed through the Authorities at Madras that his appeal against the Amount Recommended cannot be considered -
Bombay ) I have the honor to be, &c
(Signed) G. F. Jameson, Lieut Col.
19th April 1854 ) Military Auditor General
(True Copy)
(Signed) J. Maughan, Lieut Colonel
Secretary to Government
No 6
Resolution
No 118 -
Ordered that Mr Franz be informed that the Government of Bombay have decided that his appeal against the amount allowed him as Donation Batta for Burmah cannot be considered.
From J. T. Franklin Esqr
Secretary Marine Board, late in Charge of Manaar Survey
To Sir H. C. Montgomery Bart
Chief Secretary to Government
Fort Saint George
Sir,
I have the honor to ack...

பாம்பன் கால்வாய் பற்றிய அரசு ஆவணம் (1854).

தேசதுரோகக் குற்றமாகும். நீர்ப்பங்கீட்டுக் கோளாறுகள் பண்டைக் காலத்திலும் வெள்ளையர் ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து இருந்திருக்கின்றன.

உதாரணமாகப் பேரணை சூட் (Peranai Dam Suit), வம்சதாரா நதி (Vamsadhara-Urlam) ஊரளம் தீர்மானம் இவைகள் அன்றைய ஜமீன்தார்களுக்கும் ஆங்கில ஆட்சிக்கும் நடைபெற்ற தாவாக்களே. அவற்றில் ஆதிபத்ய உரிமைகளின் விளக்கங்கள், கொள்கைகள், பங்கு, உரிமை புற்றித்தெரிந்த கருத்துக்கள், நதிகள் அரசுக்குச் சொந்தமல்ல என்பது போன்ற சட்ட ரீதியான உண்மை நிலை விளக்கங்கள் - இன்றைய அரசின் உரிமை குறித்து வாதிட வல்ல கருத்துக்கள் - பல்வேறு பழைய தீர்ப்புகள் ஆவணங்களில் உள்ளன. இவைகளை இன்றைய உயர் அதிகாரிகள் படித்துப் பார்த்துச் செயல்படலாம்.

**பயனற்ற ஆவணங்களும் - சில உண்மைகளும்:**

நாளுக்கு நாள் ஆவணங்கள் பெருகிக்கொண்டே போகின்றன. ஆயினும் நாம் ஆவணங்களை ஓரளவுக்குத்தான் பாதுகாத்து வைக்கமுடியும். அளவுக்கு மீறி ஆவணங்களைச்சேகரித்து வைக்கமுடியாது. அன்றாட அரசு நிருவாகத்தில் உருவாக்கப்பட்ட அனைத்துமே ஆவணக் காப்பகங்களுக்கு வந்துவிடாது. முக்கிய ஆவணங்களே வருகின்றன. அவற்றையும் உரசிப் பார்த்து அழிப்பனவற்றை அழிக்கவும், காப்பாற்றுவனவற்றைக் காப்பாற்றவும் வேண்டும்.

அமெரிக்கா, பிரிட்டிஷ், பிரான்ஸ், ஜெர்மன் போன்ற நாடுகளில் நூற்றுக்கணக்கான மைல் நீளக் கணக்கில் ஆவணங்கள் உருவாக்கப்பட்டு, காப்பற்றப்பட்டு வருகின்றன. ஆவணக்காப்பகங்களில் பொதுநல அரசு ஆவணங்களை மதிப்பீடு செய்யும் பணிகள் நாளாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணி மிகவும் முக்கியமான பணி என்று நிர்வாகிகளும், வரலாற்று ஆசிரியர்களும், ஆவணக்காப்பியல் வல்லுனர்களும் கூறிவருகின்றனர். வரலாற்று நோக்கு, நிர்வாக நோக்கு, ஆவணக்காப்பியல் நோக்கு என்ற முக்கோணப்பரிமாணத்தில் ஆவணங்களை மதிப்பீடு செய்தல் வேண்டும். கொஞ்சம் சிரமமான காரியம்.

ஆனந்தரங்கபிள்ளை நாட்குறிப்பு



ஒரு நிர்வாகி வேண்டாம் என்று ஒதுக்கிய ஆவணங்கள் ஒரு வரலாற்று ஆசிரியனுக்கு தேவைப்படலாம். அல்லது வரலாற்றுக்காரர் வேண்டாதவை என்றதை நிர்வகிக்கும், ஆவணக்காப்பியலார்க்கும் தேவை என்று தோன்றலாம். எனவே, எடுக்கும்முடிவு ஆவணச் சிதைவைத் தடுத்தாக வேண்டும். இதை அறிஞர் பாலிகா ``It is fundamental principle in archivism that the authenticity of a document depends solely upon unbroken official custody'' என்று கூறினார்.

**ஆவணக் காப்பகச் சட்டம்:**

ஆட்சிமொழி தமிழ் என்று 1956-இல் தமிழ்நாட்டரசு ஒரு சட்டமே இயற்றியிருக்கிறது. ஆனால், ஆட்சிமொழித் தமிழில் சில அரசு அதிகாரிகள் ஏனோ இன்னும் தங்கள் கோப்புகளை எழுதுவதில்லை. அந்தச் சட்டத்தினால் யாரையும் தண்டிக்கும் விதிகள் இல்லை என்றே கருதவேண்டும். தண்டிக்கவேண்டுமானால் சில சட்டத் திருத்தங்கள் அரசினால் கொண்டுவரப்பட வேண்டும். அந்தத் துறை அதிகாரிகள் எச்சரிக்கைகள் மட்டும் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், 19-ஆம் நூற்றாண்டில் தமிழில் கடிதப் போக்குவரத்து நடத்தப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக உத்தரவுகள் கண்டிப்புடன் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த நாட்களில் பொதுப்பணித் துறையினால் அனுப்பப்படும் வேலை மதிப்பீடுகள் (Work Estimates) யாவும் ''தமிழ் மதிப்பீடு'' என்றே அனுப்பப்பட்டிருக்கிறது. அன்று கலெக்டர்களும், சிவில் பொறியாளர்களும், சர்வேயர்களும் ஆங்கிலேயர்களாக இருந்தும் கூட, தமிழில்தான் மதிப்பீடுகள் தயாரித்து அனுப்பப்பட்டு, சென்னை ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளித்தபிறகு, மராமத்துப் பணிகள் நடத்தப்பட்டுள்ளன என்பதற்குப் பழைய ஆவணங்களே சாட்சி. மேற்குறிப்பிட்ட அந்தச் 'சில அதிகாரிகள்' இதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆவணக் காப்பகங்கள் அல்லது ஆவணச்சட்டம் இயற்ற இந்திய அரசு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து முயன்று வந்தது - ஆயினும் 80-களில்தான் சட்டம் இயற்றுவதற்கு முன்னோடியாக Archival Policy Resolution என்ற போர்வையில் இந்திய ஆவணக்காப்பகங்கள் இயக்கப்பட்டு வந்தன. கடைசியில் 1993இல் தாம் இந்திய ஆவணக் காப்பகச் சட்டம் ஒன்றை இந்திய யூனியனின் இரு சபைகளும் நிறைவேற்றின. அவற்றில் பல ஷரத்துக்கள் உள்ளன. ஆவணங்கள் கடத்தப்படுவதும், வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்வதும் தடை செய்யப்பட்டு, தண்டனைகளுக்கும் வழிவகை கண்டுள்ளனர்.

டெல்லி தேசீய ஆவணக்காப்பகம் இச்சட்டத்தினை நிறைவேற்றும் அதிகார்ம் கொண்டுள்ளது. ஆயினும், தமிழ்நாடு அரசு அத்தகைய சட்டத்தை இதுவரை இயற்றவில்லை. 1993-ஆம் ஆண்டைய இந்திய அரசின் ஆவணச் சட்டத்தைத் தமிழக அரசும் நிறைவேற்றலாம். இதனால் ஆவணப் பாதுகாப்புக்கு மிகுந்த பயனுடையதாக இருக்கும்.

வான மண்டலத்துக்குக் கீழே நடக்கும் அனைத்துக் காரியங்கள் குறித்தும் ஆவணக்காப்பகத்தில் செய்திகள் உள்ளன. எனவே, யாரும் இத்துறைப் பணியினை மிகச் சாரணமாகக் கருதிவிடக் கூடாது.

# விஞ்ஞான விஷம்

கவிமாமணி
மதிவண்ணன்



ஒருகணம் எண்ணிப் பார்மனிதா! - நீ
உள்ளே இழுக்கும் ஒவ்வொரு மூச்சும்
உண்மையில் மாசு! அணுக்கதிர் வீச்சு!


சுற்றுப் புறத்தைச் சற்றுப் பார்நீ!
தூய்மைக் கேட்டை உற்றுப் பார்நீ!
கட்டிட மாகவே நிலங்கள் ஆனால்
காற்றுத் தேவன் எப்படி வருவான்?

மரங்களை அழித்தோம்! மனிதம் மரித்தது!
மகத்துவ மான மழையும் குறைந்தது!
உரங்களை வேண்டிப் பயிர்களை இழந்தால்
உலகம் நம்மைக் கேலிசெய் யாதா!

அறிவியல் என்னும் அதிசயச் சிறகால்
ஆகா யத்தில் நாம்பறக் கின்றோம்!
ஆனால் தினமும் அழுக்குகள் நிறையும்
அசிங்கத்தி லன்றோ குடியிருக் கின்றோம்!

ஆலைப் புகையும் வாகனப் புகையும்
அணுஅணு வாக உள்ளே சென்றால்
நாளை புகையும் நம்நுரை யீரல்!
நச்சு விதைகளா நாகரீ கங்கள்!

'போபால் சம்பவம்' பொழுதெலாம் நடக்கும்
போக்கை இன்றே நீக்கிட முயல்வோம்!
'ஓசோன் படல' மாசை அகற்றுவோம்!
உன்னதக் காற்றை ஊட்டப் படுத்துவோம்!



# 'நாம்' என்னும் அறம்

- கவிஞர் எழிற்பித்தன்

- 'நான்' என்றுமே ஒட்டாது
'நாம்' என்றாலே ஒட்டும்.
உதடுகளும் உண்மையினை
உரைப்பதனால் "நாமா"வோம்!

- நான் என்ற தன்னலத்தால்
நடப்பதில்லை இவ்வுலகம்
நாம் என்ற பொதுநலத்தால்
வருவதில்லை ஒருகேடும்!

- ஒப்புரவினால் தானேஇவ்
உலகம் நடக்கிறது
ஒத்தது அறியாமல்
உயிரெங்கே இருக்கிறது?

- உப்பான ஆழ்கடலும்
ஒப்பில்லா ஆதவனும்
தப்பாமல் உணவளிக்கும்
ஒப்புரவை உச்சரிக்கும்!


- உச்சத்து அறிவாலே
உருவாகும் புதுமைகளை
அச்சாக வார்த்தெடுக்க
அமைந்ததிந்த 'நாம்' ஆகும்!

- கச்சிதமாய் நாமிங்கே
கலக்காமல் ஒருபோதும்
மெச்சுகின்ற 'நான்' இல்லை
மேன்மையறம் 'நாம்'
ஆவோம்!



# மூலிகை மருத்துவம்

மூலிகை மருத்துவர், தேவூர் மணிவாசகன்



### ஞாபகசக்தி பெருக

அரசமரக் காற்றை சுவாசிக்க, மூளை செல்கள் வலுப்பெற்று ஞாபகசக்தி பெருகும்.



### சொறி சிரங்குக்கு

பூவரசு பழுப்பு இலைகள் ஐந்துடன், வசம்பு ஒரு துண்டு சேர்த்து, அரைத்து சொறி, சிரங்கு, படையில் தடவி பதினைந்து நிமிடங்கள் சென்றதும் அரப்புத் தூள் போட்டுக் கழுவ, படை குணமாகும்.

### சளி இழுப்புக்கு

வெற்றிலை இரண்டுடன் ஆடாதொடைக் கொழுந்து ஐந்து, மிளகு ஒன்று சேர்த்து மென்று காலை, மாலை வெறும் வயிற்றில் தொடர்ந்து சாப்பிட சளி, இழுப்பு சரியாகும். ஆடுதீண்டாப் பாளையால் கரும்படை அழியும். ஆடாதொடை யால் சளி இழுப்பு ஒழியும்.

### தும்மலுக்கு

முள் நீக்கிய தூதுவளை இலைகள் ஐந்துடன் மிளகு ஒன்று சேர்த்து மென்று, காலை, மாலை வெறும் வயிற்றில் தொடர்ந்து சாப்பிட தும்மல் குணமாகும். அடங்கா பொடுகுக்கு, பொடுதலை, அடுக்குத் தும்மலுக்கு தூதுவளை ஆகும்.

# சிலுவை
## சுமக்கும் சிற்றெறும்புகள்!

- இந்தியத்
  திருநாட்டின்
  இதோ சில
  தொழிலாளர்கள் !

- இச் சிறார்கள்
  சிறகொடிந்த
  சின்னப் பறவைகள் !

- வீட்டின்
  சுமையைத் தாங்கும்
  வித்தியாசமான
  சுமை தாங்கிகள் !

- அன்னைத் தமிழின்
  அமுதத்தைப்
  பருக வேண்டிய
  இவர்கள்
  அதன்
  அறிமுகத்தை
  அறியக்கூட
  ஆர்வப்படவில்லையே !

- அறிவியலைப் பற்றி
  ஆராய வேண்டிய
  இவர்கள்
  அடுத்த வேளை
  ஆகாரத்திற்கு
  அல்லவா
  அல்லல்பட
  நேர்கிறது !


- வாய்ப்பாட்டை
  மனனம்
  செய்யவேண்டிய
  இவர்கள்
  மனமோ,
  தங்கள்
  வயிற்றுப்பாட்டை
  நினைத்தே
  வற்றிப்போய்
  விடுகிறது !

- வரலாற்றைப்
  புரட்டவேண்டிய
  கைகள்
  வாரச்சம்பளத்தை
  மட்டுமே
  புரட்டிப் பார்க்கிறது !

- புத்தகப் பை
  சுமக்க வேண்டிய
  இவர்கள்
  தோள்கள்
  சுமப்பதோ
  வாழ்க்கைச் சிலுவை !

- ஆம் !
  இந்தச் சிறார்த்
  தொழிலாளர்கள்
  இந்தியத்
  திருநாட்டில்
  சிலுவை
  சுமக்கும்
  சிற்றெறும்புகள் !

- புலவர்
செ.கிருஷ்ணமூர்த்தி



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறை, டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம் ஆகியவை இணைந்து நடத்திய 'திராவிட இயக்க ஏடுகள்' கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை; சென்ற இதழ்த் தொடர்ச்சி.




'தள்ளாடும் - தத்தி நடக்கும் - தணலை மிதிக்கும் - விழும், எழும்! ஆனாலும் எந்த நிலையிலும் கொண்ட கொள்கையை மண்டியிட வைத்ததில்லை; முன்வைத்த காலைப் பின்வைக்க நினைத்தது மில்லை!

'முரசொலி நான் பெற்ற முதல் குழந்தை! ஆம்; அந்த முதற் பிள்ளைதான் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியனைப் போலக் கிண்கிணி அணிந்த கால்களுடன், பகைவர்கள் பலரைக் களத்தில் சந்திக்கச் 'சென்று வா மகனே, செருமுனை நோக்கி!' என அனுப்பிவைக்கப்பட்ட அன்புப் பிள்ளை!'

- முரசொலி 11.3.1984 ஏட்டில், மரியாதைக்குரிய கலைஞர் அவர்களே தமது ஏடுபற்றி இவ்வாறு மிகவும் பெருமிதத்தோடு குறிப்பிட்டிருக்கிறார். இத்தகைய சிறப்பினுக்குரிய 'முரசொலி'யின் தொடக்ககாலத் தோற்றமான வார ஏடு பற்றித்தான். ஆம்; 'இன்றைய செய்தி நாளைய வரலாறு' என்கிற முத்தாய்ப்போடு வெளிவரும் 'முரசொலி' பற்றித்தான். இங்கே அந்த வரலாறு தொடர்கிறது!

**கவிதையும், கடிதங்களும்**

முரசொலி வார ஏட்டின் 4வது வாரம் (4.2.1948). அதன் முதல் பக்கம் - மேலே பாரதிதாசன் படம். அதன் கீழே, முரசு, ஒலி, நான், ஆண்டு இத்யாதி. அதன் கீழே, கும்பிட்டுக்கொண்டிருக்கும் காந்தியார் படம் - அதற்கும் கீழே - காந்தியடிகளைக் கொன்றவனைப் பற்றிய விளக்கம், திருக்குறளைப் போல இரண்டு மூன்று வரிகளில் - முழுப்பக்கமுமே இதுதான் சங்கதி.

அந்த இதழில், 6ஆம் பக்கம் இடம் பெற்றுள்ள ஒரு புதிய பகுதி - இப்போதெல்லாம் 'வாசகர் இதயம்', 'ஆசிரியருக்குக் கடிதம்' என்றெல்லாம் போடுகிறோமே, அந்தப் பகுதி - அவ்விதழில் 'வெற்றி எட்டுத் திக்குமெட்ட கொட்டு முரசே!' என்ற தலைப்பில் போடப்பட்டுள்ளது. அதில் - மூவலூர் ஆ.இராமாமிர்தத்தம்மாள், 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியன், புதுவை சு.மன்னர் மன்னன், இராம.அரங்கண்ணல், 'அறம்' புலவர் மணியம், குளிக்கரை கே.எஸ். பிச்சையப்பா, புலவர் குழந்தையா ஆகியோர் எழுதிய கடிதங்கள் இடம் பெற்றுள்ளன.

'முரசொலிட முரசொலிட முரசொலி' - என்ற தலைப்பில் கவி.கா.மு.ஷெரீப் எழுதிய கவிதையொன்று,

*'அரசனென்றும் ஆண்டியென்றும்*
*அவதியுறும் மக்களை*
*அல்லல் நீக்கி ஒன்று சேர்க்க*
*ஆர்த்தெழுந்தே முரசொலிட'*

- என்ற ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டாக எழுதப்பட்டிருக்கிறது.

அப்போது 'விடுதலை' துணை ஆசிரியராக இருந்த இராம. அரங்கண்ணல் (ஆரூரன்), டிகே.சீனிவாசன் முதல் - என்.எஸ். இளங்கோ, தில்லைவில்லாளன், நா.பாண்டுரங்கன், நாராநாச்சியப்பன், வா.கோ.சண்முகம்(மாவெண்கோ), எம்.சிங்காரவேலு, கரந்தை என்.எஸ்.சண்முக வடிவேலு ஆகியவர்களும் மணியொலி, ரவி, மன்னன், தில்லை குழுக்கோ போன்றவர்களும், 'முரசொலி' வார ஏட்டில் எழுதிவந்துள்ளனர்.

'குடியரசு' ஏட்டில், அப்போதே 'விமானி' என்கிற பெயரில் தொடர்ந்து கலைஞர் அவர்கள் பல கட்டுரைகளும் எழுதி வந்தார். அப்படி அவர் அதில் எழுதிய - 'அண்ணாமலைக்கு அரோகரா', 'ஏகாதசி', 'தீட்டாயிடுத்து', 'மானங்காக்க', 'துடிக்கும் இளமை', 'கங்கையின் காதல்' போன்ற எழுத்தோவியங்கள் கலைஞரின் எழுச்சிமிகு எழுத்தாற்றலை உணர்த்து பவைகளாக இருந்தன.

13ஆம் வாரம் 'முரசொலி'யிலிருந்து ஒரு இதழின் விலை 1½ அணாவாகவும், ஆண்டுத்தொகை ரூ.5 என்றும் ஆக்கப்பட்டிருக்கிறது. 2 பக்கம் கூட்டப்பட்டு 10 பக்கம் ஆகியிருக்கிறது. ஓவியங்கள், புகைப்படமெல்லாம் இடம்பெறத் தொடங்கியிருக்கிறது.

**வைர வரிகள்**

''ஏம்பா, மழையில்லாதபோது வர்ணஜபம் செய்தார்களே. அப்பொழுது மழை பெய்யாமல் பிறகு இரண்டு மாதம் கழித்து மழை கொட்டுச்சே? ஏன்?''

''அதுவா... பூலோகத்திலிருந்து செய்த ஜெபம், வருணலோகத்துக்கு எட்ட அவ்வளவு நாட்களாயிற்றுப் போலும்!''

- எழில்

- என்பது போன்ற துணுக்குச் செய்திகளும் 'முரசொலி' வார ஏட்டில் அவ்வப்போது இடம் பெற்றிருக்கின்றன.

'விற்பனையாளர் இல்லாத ஊருக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை'.

'பட்டியல் கிடைத்த ஒரு வாரத்திற்குள் பணம் அனுப்பாவிடில் பத்திரிக்கை அனுப்புவது நிறுத்தப்படும்'

- என்பது போன்ற அறிவிப்புகள்.

"நேற்று வரையில்" என்கிற தலைப்பில், உலக நாடுகளின் நிகழ்வுகள் குறித்த செய்தித் துணுக்குகள் - எல்லாம் ஒரு நாளேட்டுக்கு உரியது போல, அப்போதே அந்த வார ஏட்டில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன.

வாரந்தோறும் 'புதன்கிழமை' வெளிவந்த 'முரசொலி'யின் 17.3.48ஆம் தேதிய இதழில் ஒரு புதுமை; ஒவ்வொரு பக்கத்தின் முடிவிலும், நறுக்குத் தெறித்தாற்போன்ற வைர வரிகள்- 'எறும்புகளுக்குக் கூட இன உணர்ச்சி உண்டு! ஆனால்...!' 'திரு இடமே திராவிடம்', 'திராவிடம் தமிழ்ச் சொல்லே!', 'ஏர் ஓட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே, தேரோட்டம் ஏன் உனக்கு தியாகராசா!', 'கறுப்புச் சட்டையே நமது களங்கம் போக்கும்' - என்பது போலக் காணப்படுகின்றன.

★ பாரதிதாசன் 'குயில்' - கவிதை இதழ், மாத வெளியீடு.

கவிஞரின் தேனூறும் கவிதைகள்-இனிய உரைநடைகள்!

இளம் எழுத்தாளர்க்கு-இலக்கியப் போட்டிப் பரிசு.

இன்ன பிற சுவைமிகு பகுதிகள் உண்டு.

விலை 6 அணா.

குயில், பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.

★ சிதம்பரம் ஜெயராம் 1.நல்லதம்பி, 2.கிருஷ்ணவிஜயம், 3.விஜயகுமார், 4.அந்தமான் கைதி, 5.கிருஷ்ணபக்தி, 6.வேலைக்காரியில்(சில பகுதி), 7.முள்ளில் ரோஜா-ஆகிய படங்களின் இசையமைப்பில் (மியூஸிக் டைரக்ஷன்) வெகுமும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

★ பகுத்தறிவுப் புயல் ஆண்டவனைப் பற்றிய வாதங்களுக்கு ஆராய்ச்சி பூர்வமாக, தர்க்க ரீதியாகத் தணலன் எழுதிய நூல், 'கடவுள் முளைத்தார்!'. விலை அனா14, வியாபாரிகட்கு 25%கழிவு உண்டு. எரிமலைப் பதிப்பகம், துறையூர், திருச்சி.



★ விதவைப்பெண் தேவை. ஆயிரம் ரூபாய் சொத்துடையவரும், மாதம் ரூ.50 வருமானம் உடையவரும், 25 வயதும் உடைய மருத்துவ வகுப்புத் தோழருக்கு விதவைப் பெண் தேவை. விவரத்திற்கு: - ச.பரசுராமன், பார்பர் ஷாப், விஜயபுரம்.

★ 1.3.48 திங்கட்கிழமை முதல் திருவாரூர் பிரபாத்தில், 'கன்னிகா'.

★ 'பொன்னி' - மே 1 முதல் மாதம் இருமுறை - விலை அணா 5.

★ சுவைமிகு சிற்றுண்டிகளுக்கு விஜயபுரம் பீமவிலாஸ்.

- என்பனபோன்ற விளம்பரங்களும் அவ்வப்போது 'முரசொலி' வார ஏடுகளில் இடம் பெற்றிருக்கின்றன.

'முரசொலி' பற்றிய விளம்பரம் புரட்சிக் கவிஞரின் 'குயில்' ஏட்டில் 1.4.1948ல் இவ்வாறு இடம் பெற்றிருந்தது :

★ முன்னேறும் திராவிடத்தின்
வெற்றி முழக்கம்
'முரசொலி'!
ஆசிரியர்: மு.கருணாநிதி
அச்சமற்ற கண்டனங்கள்..
ஆணித்தரமான கட்டுரைகள்..
அறிவு நல்கும் கற்பனைகள்..
தனிப்பிரதி அணா ஒன்று
ஆண்டுக் கட்டணம் ரூ.3-4-0
விவரங்கட்கு:
நிர்வாகி - முரசொலி - திருவாரூர்.

- இதே வகையில் நாவலர் நடத்திய மன்றம் (1.3.1948), பேராசிரியர் நடத்திய 'புதுவாழ்வு' (15.2.1948) ஆகியவற்றில் மதிப்புரைகளும் 'முரசொலி' பற்றி வெளிவந்தன.

''சுவைத்ததில்!...'' என்பது முரசொலி வார ஏட்டில் இடம்பெற்ற புத்தக விமர்சனப் பகுதியாகும். இதில், ஏவிபிஆசைத்தம்பி அவர்கள் விருதுநகரிலிருந்து நடத்திய 'தனி அரசு', இரா.நெடுஞ்செழியன் அவர்கள் சென்னையிலிருந்து நடத்திய 'மன்றம்', க.அன்பழகன் அவர்களின் 'புது வாழ்வு', டி.நாராயணனின் 'வாழ்வு', டி.எஸ்.இராசலட்சுமியின் 'வெண்மதி', கே.ஏ.புன்னைமுத்துவின் 'வழிகாட்டி', ஆ.இரத்தினத்தின் 'உரிமை', ஏ.கே.வேலனின் 'இராவணன்', நாக.முத்தையாவின் 'மீண்ட இன்பம்', குமாபாலசுப்பிரமணியத்தின் 'இன்பத்துளி' போன்ற ஏடுகளும், நூல்களும் சில வரிகளில் இப்பகுதியில் சுவைபட விமர்சிக்கப்பட்டிருக்கின்றன.

'மு.கருணாநிதி' என்ற பெயரை 'ஆசிரியர்' என்கிற சொல்லுக்குப் பின், முதல் பக்கத்திலும்-'ஆசிரியரும் வெளியிடுபவரும்' என்ற கடைசிப் பக்க வரிகளின் பின்னும்தான் இவ்விதழில் காணமுடிகிறது. எனினும்-'முரசொலி' வார ஏடுகளின் தலையங்கங்களை எல்லாம், தனக்கே உரிய தனி நடையில் எழுதியுள்ளார் கலைஞர் அவர்கள்.

### இரத்தக்கறை படிந்த நாள்

உதாரணத்திற்கு இதோ ஒன்று - 4.2.48ஆம் நாள் வெளியான 'முரசொலி' வார ஏட்டின் தலையங்கத்தின் தலைப்பு '30.1.1948' என்பது மட்டுமே! இதோ, அதில் சில வரிகள்:

*'இந்திய உபகண்டத்தின் வரலாற்றில் இரத்தக்கறை படிந்த நாள். மக்கள் உகுத்த இரத்தக் கண்ணீர் அருவியென ஓடி அரபிக்கடலிலே கலந்து... வங்காளக்குடாக் கடலில் வழிந்தோட... "காந்தி மாண்டாரா?" என்ற கேள்விக்கு முன் கிளம்பிய பெருமுச்சு இமயத்தை அசைக்க - இப்படி ஒரு சோக பூகம்பம் 30.1.48ல்!*

*'திரு. காந்தியார் சுடப்பட்டார்! மும்முறை சுடப்பட்டார்! ஐயகோ! சுடப்பட்டர்! பிரார்த்தனைக்குத் தான் வந்தாராம்... வேலும் வாளும் ஏந்தி 'வேற்றார் படை எங்கே?' என்று அவர் அதட்டலாகக் கேட்ட நேரத்திலே அல்ல; அன்பு தவழும் மொழிகளில் "பிரார்த்தனைக்கு மக்கள் வந்துவிட்டனரா" என்று வினவிய நேரத்தில்... சுடப்பட்டார்! கனல் கக்கும் கண்களோடு 'கட்டாரியை எரிந்து காட்டானையைப் போல் எதிரியின் மேல் மோதிய வேளையில் அல்ல; கருணை பொங்கும் கண்களால் தன் உபதேசம் கேட்க வந்திருந்த மக்களைக் கண்டானந்தித்த வேளையில் சுடப்பட்டார்! சுடப்பட்டார்! சுக்கு நூறாக்கப்பட்டார்!...'*

- என்று தொடங்கி ஒன்றரைப்பக்க அளவில் - *'30.1.1948!... ஆமாம்.. வரலாற்றை வீணாக்கிய நாள்!'* என்று முடிகிறது அந்தத் தலையங்கம்.

இதற்கு முந்திய இதழில், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் எழுதியிருந்த வாழ்த்துக் கவிதை இது:

'திரைகடல் மீது
பரிதி எழுந்தே
அரசுவீற் றிருந்தான்
அழகொளி வீசி!
வாழிய பரிதி,
வண்மைத் திருநாள்!

இந்நாள் பொங்கல்
இட்டு மகிழும்
தென்னாட்டு மக்களின்
திருவென ஓங்கி
'முரசொலி' நாளும்
முன்னேற்றம் எய்திட

என்மன மார
யான்வாழ்த்து கின்றேன்;
என்றும் முரசொலி
இனிது வாழியவே!

வீழிய பகைவர்!
நாளும்
வாழிய திராவிட
மக்கள் நன்றே!'

- பாரதிதாசன்

இவ்வாறு திருவாரூரிலிருந்து 1948களில் வெளிவந்த 'முரசொலி' வார இதழ்களிலே இடம்பெற்ற தலையங்கங்களிலே மட்டுமல்ல; இட நிரப்புச் செய்திகளிலே (Space Filler) கூட கலைஞரின் கனல் தெரிப்பது போன்ற சூடான, கட்டிவெல்லம் போன்ற இனிப்பான, தென்றல் தவழ்வது போன்று இதமான, புயல் வீசுவது போன்று வேகமான தமிழ் நடையினை நம்மால் காணமுடிகிறது.

**கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய அவசியமெல்லாம், ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்திரததோடு வாழ்வதற்கு அவனைத் தகுதிப்படுத்துவது என்பதேயாகும்.**

**- தந்தை பெரியார்**

ஆனால் - காகிதம் வாங்க, அச்சிட, 'பார்சல்' அனுப்ப, அஞ்சல் தலை ஒட்ட என்று எல்லாவற்றுக்கும் பணம் அவ்வப்போது திரட்டவேண்டிய நிலை. இந்தச் சிரமம் தொடர்ந்து இருந்துகொண்டே இருந்தது; இதன் காரணமாகக் கலைஞரின் வீட்டிலிருந்த நகை, பாத்திர மெல்லாம் கூட அடகுக்கும் விலைக்கும் போக வேண்டிய சிரமம்; *படமுடியாதினித்துயரம் பட்டதெல்லாம் போதும்* என்கிற வடலூராரின் நிலைக்கே வரச் செய்தது கலைஞரை.

அச்சான 'முரசொலி'யை மடிப்பதில், கட்டிய பார்சலைத் தலையில் சுமந்து கொண்டு திருவாரூர் ஓடம்போக்கி ஆற்று மூங்கில் பாலத்தின் வழியே அஞ்சலகம் செல்லுவதில் எல்லாம் கலைஞர் அவர்கள் அயராது பாடுபட்டார்.

வெறுங்கையாலா முழம் போடமுடியும்? "அந்த 'முரசொலி' வார இதழும், ஏறத்தாழ 25 இதழ்கள் வெளிவந்ததோடு திராவிட இயக்க இளைஞர்களிடையே எழுச்சியூட்டி வந்த தன் பயணத்தை நிறுத்திக்கொண்டது" என்கிறார், கலைஞரின் நிழல்போலிருந்த செயலாளர் திரு கு.தென்னன் அவர்கள்.

பள்ளி மாணவப் பருவந்தொட்டே இவ்வாறு கலைஞர் அவர்களுக்கு ஏற்பட்ட தமிழ்க்காதல்தான், இன்றைக்கு அவரை இந்த அளவிற்கு, உயர்த்தி தமிழ்ச் சமுதாயத்தின் உதயசூரியனாக ஒளிமுகம் காட்டச் செய்திருக்கிறது; குன்றின் மேலிட்ட விளக்காக்கி சுடர்விடச் செய்திருக்கிறது என்பதே உண்மை.

**கலையுலகில் கலைஞர்**

திருவாரூரிலிருந்த கலைஞர் அவர்கள், கலைத்தாயின் கடைக்கண் பார்வைக்கு ஆளாகி - திரையுலகினரால் அழைக்கப்படவே, சேலம் மாடர்ன் தியேட்டர்சில் சில காலம் பணியாற்றிவிட்டுச் சென்னைக்கு வந்து சேர்ந்தார். 8.3.1954ல் கலைஞரின் கனல் தெறிக்கும் வசனத்தோடு *'மனோகரா'* திரைப்படம் வெளிவந்தது.

இதற்குச் சற்று முன்னாலிருந்தே-சென்னையிலிருந்து 'முரசொலி' வார ஏடு வெளியிடும் எண்ணம் வலுப் பெற்றிருந்தது. *2.4.1954ல் அந்த எண்ணம் ஒரு வழியாக*

ஈடேறி-சென்னையிலிருந்து முதலாவது 'முரசொலி' வார ஏடு அச்சில் வெளிவந்தது - 8 பக்கங்கள்.

பெரும் சிக்கலுக்குப் பின், சென்னை-சூளையில் உள்ள பாரதி அச்சகத்தில்தான் முதல் இதழ் அச்சிடப்பட்டது.


'மனோகரா' திரைப்படக் கதை-வசனத்தைப் புத்தகமாக வெளியிட விரும்பினார் கலைஞர்; அண்ணா சாலையில் இருந்த பாரத தேவி அச்சகத்தில் அச்சிட்டு அது வெளியிடப்பட்டது; பல்லாயிரக் கணக்கில் விற்பனையான அந்தப் புத்தகத்தால் வந்த பணமும் 'முரசொலி' வார வெளியீடு தடையின்றி வெளிவரத் தக்க பலம் சேர்ந்தது.

சென்னை-இராயப்பட்டை பகுதியில் சீனிவாசப் பெருமாள் சந்நிதி தெருவில் 'முரசொலி' அலுவலகம் அமைந்தது; ரூ.35 வாடகை; சி.டி.எம். (C.D.M.) எனச் சுருக்கமாகக் கூறப்படும் சி.தெட்சணாமூர்த்தி என்கிற கலைஞரின் நண்பர்தான் அலுவலக நிர்வாகியாக அப்போதிருந்தார்.


## சொந்தக் கட்டடம்

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பார்களே? அதைப்போல-முதல் முரசொலி இதழே 3000 படிகள் அச்சிடப்பட்டன. இரண்டாவது இதழ் 10,000, மூன்றாவது இதழ் 20,000, நான்காவது இதழ் 25,000 என்று 'முரசொலி'யின் விற்பனை எண்ணிக்கை நாளொருமேனி பொழுதொரு வண்ணம் உயர்ந்துகொண்டே சென்றது. சில மாதங்களிலேயே அந்த எண்ணிக்கை 40,000-த்தைத் தாண்டியபோது, இந்த அலுவலகம் போதாது என்கிற நிலையிலேதான் ஆயிரம் விளக்குப் பகுதியில் அண்ணா சாலையிலேயே, அப்துல் காதர் என்பாரின் கட்டிடமொன்று 'முரசொலி' அலுவலகத்திற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டது. பெருமுயற்சிக்குப்பின், நாளடைவில் அது சொந்தக் கட்டடம் ஆகியது. சொந்தமாக மிஷின் வாங்கப்பட்டது. ஆயிரம் விளக்கில் இப்போது 'ஸ்டேட் பேங்க்'கின் கிளை அலுவலகம் இருக்கிறதே? அதே இடத்தில்தான் அந்தக் கட்டிடம் அமைந்திருந்தது.

1942ல் கலைஞரின் கையெழுத்து



1962ல் கலைஞரின் கையெழுத்து



சென்னையிலிருந்து 2.4.1954 வெள்ளியன்று வெளியிடப்பட்ட முதல் 'முரசொலி' வார ஏட்டின் முன் பக்கம் தலைப்பில், *'முரசொலி' வார இதழ் - 2 அணா - ஆசிரியர் மு.கருணாநிதி - முரசு 1 - ஒலி 1* என்ற விவரங்கள் இடம் பெற்றிருந்தன.

தாம் சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கு முன்பே - 6.4.1956ல், சென்னை ராஜ்யத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிடவேண்டும் என்று 'முரசொலி' வார ஏட்டில் எழுதிய தனிச்சிறப்பும் கலைஞருக்கு உண்டு.

திருவாரூரிலிருந்து வெளியான 'முரசொலி' துண்டுப் பிரசுரத்தின் அளவு 1/8 டெம்மி அளவு; சென்னையிலிருந்து அச்சியற்றி வெளியிடப்பட்ட முரசொலி வார ஏட்டின் அளவு 'கிரவுன்' சைஸ் ஆகும்.

*'கடமை தீர்த்தது வங்கம் - காத்திருக்கிறது திராவிடம்'* - என்பதே அந்த முதல் ஏட்டின் முதல் பக்கக் கட்டுரை. எழுதியவர் ஆசிரியரே. *'மு.க.'* என்று மட்டும் பெயர் போடப்பட்டிருந்தது.

*'மூனா கானா', 'மாலுமி', 'எழுத்தாணி', 'மூக்காஜி'* - போன்ற பெயர்களிலும் அவர் சிறுகதை, தொடர்கதை, கட்டுரை, கவிதை, நாடகம், இலக்கியத் தொடர்களையெல்லாம் எழுதி வந்தார். *'கடைசிப் பக்கம்', 'சுழல் விளக்கு', 'பொன்முடிக்குக் கடிதம்'* ஆகிய சிறப்புப் பகுதிகளில் கலைஞரின் கைவண்ணங்கள் இடம் பெற்றன. அதைத்தொடர்ந்து 'நீட்டோலை', 'உடன்பிறப்பே' கடிதங்கள் வெளிவரலாயின.

(1976ல் முரசொலி நாளேட்டில், கரிகாலன் பதில்கள்• வினா-விடைப் பகுதி தொடங்கப்பட்டது).

அறிஞர் அண்ணா அவர்களும் மற்ற கழகத் தலைவர்களும் அறிவகத்தை அடுத்து அடிக்கடி வந்து செல்ல ஏற்ற இடமாகியது 'முரசொலி' வார ஏட்டு அலுவலகம். 1960 ஜூலை வரை இந்த வார ஏட்டின் பயணம் தொடர்ந்தது.

'முரசொலி' வார ஏட்டிலேதான் கலைஞர் தமது **புதையல், வெள்ளிக்கிழமை, [illegible]ளிமலை, ரோமாபுரிப் பாண்டியன்** ஆகிய தொடரோவியங்களை எழுதினார்.

இப்படியெல்லாம் அரும்பாடுபட்டுத் தொடங்கி நடத்தப்பட்ட முரசொலி, பின்னர் ***17.09.1960 முதல் நாள் ஏடாகவும்*** வளர்ச்சி பெற்றதை நாடறியும். இவ்வாறெல்லாம் வளர்ந்த 'முரசொலி'தான் - திருவாளர்கள் மாறன், கவிஞர் கருணானந்தம், கே.சொர்ணம், அமிர்தம், பி.சி.கணேசன், அடியார், ஏ.கே.வில்வம், சிவ.இளங்கோ, எஸ்.எஸ்.தென்னரசு, நாஞ்சில் மனோகரன், செல்வம், பா.ஜெயப்பிரகாசம், மாமூலன், பி.எல்.ராஜேந்திரன், என்.வி.கலைமணி, மா.பாண்டியன், கோ.தினகரன், விசுவலிங்கம், பெரியவர் அ.சங்கரையா, அதியமான், இருகூரான், மணிமொழி, சீனிவாச மூர்த்தி, நா.கிருஷ்ணமூர்த்தி, ஓவியர் செல்லப்பன், முருகேசன் ஆகியவர்களையெல்லாம் அரசியல் விற்பன்னர்களாக, திரைப்படத்துறை வசனகர்த்தாக்களாக, கதாசிரியர்களாக, எழுத்தாளர்களாக, கட்டுரையாளர்களாக, ஓவியர்களாக, பத்திரிகையாளர்களாகவெல்லாம் தமிழகத்திலே நிலையுயர்த்தி நிமிர்ந்து நடைபோடச் செய்தது.

கனகசுந்தரம், சி.டி.எம்., கரந்தை சண்முக வடிவேலு, 'பாப்' எனச் செல்லமாக அழைக்கப்பட்ட மோகன்தாஸ், மல்லிகார்ஜுனன், செல்வம் போன்ற நல்ல பத்திரிகை அலுவலக நிர்வாகிகள் உருவாகச் செய்தது.

**மகிழ்ச்சி இல்லாத இல்லம் ஓர் இருண்ட வீடு.**

**அங்கே இடரும் இன்னலுமே அதிகரிக்கும்.**

**தந்தி தளர்ந்த வீணையிலிருந்து**

**இனிய நாதம் எங்ஙனம் கிளம்ப முடியும் ?**

**- அறிஞர் அண்ணா**

### 'முரசொலி' மாறன்

'முரசொலி' வார ஏட்டிலும், நாள் ஏட்டிலும் கலைஞர் எழுதிய கடிதங்களை வகையுறத் தொகுத்து, திரு.பனையப்பன் என்பாரின் 'அபிராமி பதிப்பகம்' மூலம் புத்தகங்களாகப் பத்துத் தொகுதிகள் வெளியிடச் செய்த சிறப்பு, என்னுடைய கரங்களுக்கு உண்டு.

'முரசொலி' வார ஏட்டில் கார்ட்டூன்களும், நகைச்சுவைத் துணுக்குகளும் தொடர்ந்து வெளிவரலாயின.

'மயிலே மயிலே சிறகு போடு' என்றால் போடாது; எப்போதாவதுதான் போடும்' என்று உவமைக் கவிஞர் *சுரதா* பற்றி, அறிஞர் அண்ணா கூறியதுண்டு; அப்படிப்பட்ட சுரதாவிடமிருந்தே 'முரசொலி' வார ஏடு தொடர்ந்து கவிதைகளை எழுதி வாங்கி வெளியிட்டு வந்தது.

வார ஏடான 'முரசொலி' ஆசிரியராக இருந்து, பிற்காலத்தில் மத்திய தொழிலமைச்சராகப் புகழ்பெற்றுத் திகழ்ந்த திரு.முரசொலி மாறன் அவர்கள், தமது முதல் சிறுகதையான 'காட்டுப்பூனை'யை அந்த ஏட்டில்தான் எழுதினார். 'கிரேக்கப் புராணம்', 'கலைத்தோட்டம்' ஆகிய தொடர் கட்டுரைகளையும், வேறுபல எழுத்தோவியங்களையும் தம் திறம் பளிச்சிடுமாறு தொடர்ந்து எழுதிடலானார்; பெரும்பாலானவற்றில் அவர் ஏனோ தமது பெயர் போட்டுக்கொண்டதில்லை!

'பிறைவானம்' என்ற சிறுவர் பகுதியைத் திரு.கே.சொர்ணம் தொடர்ந்து எழுதிவந்தார்.

வாசகர் கடிதங்கள் ***'உங்கள் பார்வை'*** என்ற பெயரிலும், கலையுலகச் செய்திகள் 'இயல் இசை கூத்து'ப் பகுதியிலும் இடம்பெற்றன. *'நில் நண்பா! எங்கே ஓடுகிறாய்?'*, 'அந்துமணி' ஆகிய பகுதிகளும் இடம்பெறலாயின.

'முரசொலி' வாரஏட்டைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் என்னவென்றால் 1948 தூத்துக்குடி மாநாட்டில், அண்ணாவைப் பற்றி எம்.ஆர்.ராதா அவதூறாகப் பேசிவிட்டார். அதைக் கண்டித்து-**'நடிகவேள் மாநாட்டில் நஞ்சு கலந்தார்'** என்று கலைஞர் எழுதி, தடம்புரளும் தன்மை அண்ணாவுக்கில்லை என்பதை விளக்கி எழுதினார். அதன் மூலம் அண்ணா பெற்ற மக்கள்சக்தி அளவற்றதாகும்.

இன்னொரு முக்கியச் சிறப்பு 'கலைஞரின் குறளோவியம்' முதன்முதல் வார ஏடு முரசொலியின்தான் இடம் பெற்றது.

'முரசொலி' பத்திரிகை வாரஏடாக இருந்த போதும் சரி: நாளேடான பிறகும் சரி: குறித்த நேரத்திற்கு வந்தாக வேண்டும். வெளியூரிலெல்லாம் குறித்த காலத்தில் கிடைத்தாக வேண்டும். பிழையின்றி வந்தாக வேண்டும் என்பது கலைஞர் அவர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது; இருந்துவருகிறது.

இதழனாது ஏதாவது பிழையோடு வந்துவிட்டால் - அல்லது காலம் கடந்து வந்துவிட்டால் - அதன் காரணமாக நாங்களெல்லாம் வாங்கிக் கட்டிகொண்டதை இங்கே எழுதிக் காட்டமுடியாது. அப்படியெல்லாம் 'திமிசு' போடப்பட்டதாலேதான், இன்றைக்கும் பொது வாழ்வில் ஓரளவிற்கேனும் திடகாத்திரமாக நாங்களெல்லாம் இருக்கிறோம் என்பது முழுக்க முழுக்க உண்மை.

## கலைஞரின் கண்டிப்பு

கலைஞருக்கு அவ்வாறு வரும் கோபத்தால் சில நேரங்களில் அலுவலகத்தையே இழுத்துப் பூட்டிவிட்டு, அவரே சாவியை எடுத்துக் கொண்டு போய்விட்டதும் உண்டு; அவரோடு வெளியே வந்தவர்கள் வந்தவர்கள்தான்; உள்ளே சிக்கியோர் சிக்கியோர்தான்! பிறகு யாராவது போய், பாட்டியாரிடம் (கலைஞரின் தாயார் அஞ்சுகத்தம்மையார்) அழுது புலம்பி சாவியை வாங்கிவருவோம்.

கழகப் பணி காரணமாக எந்த ஊருக்குச் சென்றாலும் சரி; எதிர்ப்படும் தோழர்களிடம் *'முரசொலி குறித்த நாளில் வருகிறதா ?... படிக்கிறீர்களா ?... எப்படியிருக்கிறது ?'* என்றெல்லாம் கேட்பது கலைஞர் வழக்கம். முதலமைச்சராக உள்ள இப்போதும்கூட அப்படித்தான் - 'முரசொலி' மீது தனிக்கவனம்! ஆசிரியர் கலைஞரை அன்றும் சரி; இன்றும் சரி; - ஆசிரியர் என்றுதான் நாங்கள் குறிப்பிடுவோம்.

1962ஆம் ஆண்டில், 'முரசொலி' தினசரியான பிறகு ஒருமுறை, தம் சொந்த ஊரான திருவாரூருக்குச் சென்றிருந்த அவர், அதேபோல் ஒரு தோழரிடம் விசாரிக்கப்போய், விஷயம் விபரீதமாகிவிட்டது. வந்த மனிதர், "நேற்றைய முரசொலிதான் இன்று வந்தது" என்று கூறிவிட்டார்; போதாக்குறைக்குத் தம் கையிலிருந்த அந்த ஏட்டினையும் அவரிடம் கொடுத்து விட்டிருக்கிறார்.

அவ்வளவுதான், அஞ்சலட்டை ஒன்று வாங்கி, உடனே 'முரசொலி' நிர்வாகியாக அப்போது இருந்த திரு.மல்லிகார்ஜுனனுக்கு, ஒரு கடிதத்தைக் கோபமும், கிண்டலும் குழைத்து எழுதிப்போட்டுவிட்டார் கலைஞர்.

அந்தக் கடித நகல் நமக்குக் கிடைத்தது; 'யாம் பெற்ற இன்பம், மற்றவருக்குத் துன்பம் என்றால் நமக்கு இன்பம்தானே?' அந்த வகையில், இதோ அந்தக் கடிதத்தைக் காட்டுகிறேன்.

'மு. கருணாநிதி

திருவாரூர்
25.8.62

அன்புள்ள மல்லிகார்ச்சுனன் அவர்கட்கு,

நேற்று 24ந் தேதி முரசொலி வரவில்லை. இன்றுதான் வந்தது. இன்று வரவேண்டிய 25ந்தேதி முரசொலி நாளைக்கு வரும் போலும்! இப்படி மானக்கேடாக, பொறுப்பற்ற முறையில் பத்திரிகை நடத்துவதைவிட, உங்கள் அபாரத் திறமையைப் பயன்படுத்தி அலுவலகத்தை இழுத்து மூடிவிடுங்கள்; பலரது குறிக்கோள் உங்கள் மூலம் நிறைவேறட்டும்.

- மு.கருணாநிதி'

– இதுதான் அந்தக் கடிதம்!

எதிலும் ஒழுங்குமுறை வேண்டும் என்ற அவருடைய அழுத்தமான அக்கறைதான் இதற்கெல்லாம் காரணமே தவிர வேறல்ல என்பதனை நீங்கள் உணரவேண்டும். இக்கடிதத்தின் கடைசியில்தான் எவ்வளவு கேலியும் கிண்டலும் தொனிக்கிறது பார்த்தீர்களா ?

## பெரியார், அண்ணா, கலைஞர்

அயராத அரசியல் பணி, கலையுலகத் தொண்டு, முதலமைச்சர் பொறுப்பு போன்ற ஒப்பற்ற பலவித உழைப்புகளுக்கு நடுவே இன்றைக்கும் கலைஞர் அவர்கள் 'முரசொலி'யின் ஒலி ஓங்கி ஒலிக்கச் செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்; இதற்கு முழுமுதல் காரணமே அவர் அதைத் தன் முதல் ஏடாக மட்டுமல்ல - முதல் குழந்தைபோலவே கருதிப் பேணிக் காத்துப் பராமரித்து வருகிறார் என்பதை முன்னரே பார்த்தோம்!

அந்தக் காலத்தில் - அதாவது 1930-40ஆம் ஆண்டுகளில், தந்தை பெரியார் அவர்களின் பச்சை அட்டைக் 'குடிஅரசு' ஏடும், 1940-50களில் அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு'ம் எப்படி இளைஞர்தம் உள்ளங்களில் தனியாட்சி நடத்தி வந்தனவோ, அதைப்போலவே 'முரசொலி'யும் இளைஞர்தம் உள்ளத்தையெல்லாம் உணர்ச்சி ததும்பும் நடையில், கிளர்ச்சியூட்டும் கருத்துக்களை மாற்றுக் கட்சியினரின் நெஞ்சங்களிலும் பண்படுத்தி விதைக்கும் அளவில் தாங்கி விளங்கிய—விளங்கி வருகிற தன்னிகரற்ற ஏடுதான் முரசொலி! இதில் இரண்டு விதக் கருத்துகளுக்கு இடமே இல்லை; இதை யாராலும் மறக்கவும் முடியாது—மறுக்கவும் இயலாது.

ககலைஞரின் 'சிங்க நடையும் சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், புரட்சிக் கவிநடையும்' இப்போதும் அதில் இடம் பெறுகிறது.

எனவே, முரசொலியின் வளர்ச்சி தமிழின் வளர்ச்சி; தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சி நமது இன மான முன்னேற்றத்திற்கான மைல் கல்; முரசொலியின் பணி, தமிழ் அன்னைக்குப் புதிய பல அணிமணிகளைப் பூட்டி மகிழ்ந்திடச் செய்த பெரும் பணி-அரும்பணி; கண்மூடிக் கருத்துக்களெல்லாம் மண்மூடச் செய்து, மூடநம்பிக்கையாம் முடைநாற்றம் வீசும் சூழலிலிருந்து கைதூக்கிவிட்டு நமக்கெல்லாம் நிம்மதியும், நீங்கா மகிழ்ச்சியும், எழுச்சியும் தரும்பணியாகும் என்பது உண்மை, வெறும் புகழ்ச்சியல்ல! ●

---

**ஒருவன் தவறு செய்திருந்தால்,
மற்றவன் அதைப் படிப்பினையாக
எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர,
'நீ தவறு செய்தாய், ஆகவே நானும்
அதைச் செய்கிறேன்' என்று
சொல்லுவது அதற்குப் பரிகாரம் ஆகாது.**

**- கலைஞர்**

# தொழில் முனைவோர் திட்டம் மகளிர் முன்னேற்றத்திற்கொரு கலங்கரை விளக்கம்



மகளிர் தினமாக மார்ச் மாதம் 8 ஆம் நாள் உலகமெங்கும் கொண்டாடப்பட்டது. ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மகளிர் முன்னேற்றத்தைப் பொறுத்து அமைகிறது. இருளை, விலக்க வெளிச்சம் தேவைப்படுவது போல் சமுதாயத்திலுள்ள வறுமையைப்போக்க, பொருளாதார முன்னேற்றம் அவசியமாகிறது. தமிழ்நாடு அரசு தொழில் வணிகத் துறை இதனை உணர்ந்து, பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்காகத் திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டு வருகிறது.

## மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்

மகளிர் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தொழில் தொடங்குவதற்குரிய ஓர் பயிற்சித் திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. அத்திட்டம் பெண்களின் சமூகப் பொருளாதாரத் தரத்தினை மேம்படுத்தப் பெரிதும் பயன்படுகிறது.

ஆண்டுக்கு ஆயிரம் பெண்களுக்குத் தொழில் முனைவோர்களுக்கான பயிற்சி அளிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், இத்திட்டம் 1990ஆம் ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டு, 1991ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உணவு பக்குவப்படுத்துதல், ஆயத்த ஆடைகள் தயாரித்தல்,தோல் ஆடைகள் தயாரித்தல், பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்தல், அழகுப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் தயாரித்தல் போன்ற தொழில்களை வகைப்படுத்தி, இதுபோன்ற தொழிலில் உற்சாகமுள்ள மகளிர் தொழில் முனைவோர் களைக் கண்டறிந்து, தக்க பயிற்சி அளிக்கப்படுகிறது.

## அடிப்படைத் தகுதிகள்

தொழில் முனைய விருப்பமுள்ள பெண்கள், குறைந்தபட்சம் 10 - வது வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். 18 வயது நிறைவடைந்திருக்கவேண்டும். தொழிலைத் தொடங்கி அதனைத் திறம்பட





நடத்துவதற்கான தன்னம்பிக்கை இருக்கப்பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்களாக வரவேற்கப்படுகிறார்கள்.

## உதவி செய்யும் அலுவலகம்


தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மையங்கள் உள்ளன. மகளிர் தொழில் முனைவோர் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவரோ, அந்த மாவட்டத்திலுள்ள மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளரை அணுகி, தொழில் முனைவோர்களுக்கான விதிமுறைகளைக் கண்டறிந்து மேற்கொள்ளலாம். சென்னை மாநகரத்தைச் சேர்ந்த தொழில் முனைவோர், அண்ணா சாலையிலுள்ள மண்டலத் தொழில் வணிக இணை இயக்குநர் அலுவலகத்தை அணுகிப் பயன் பெறலாம். மேற்கண்ட மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் சென்னையிலுள்ள மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், மகளிர் தொழில் முனைவோர் எந்தத் தொழிலில் அதிக ஈடுபாடு காட்டுகிறாரோ அதனைக் கண்டறிந்து அதற்குரிய பயிற்சிகளை வழங்குவது மற்றும் அந்தத் தொழில் தொடங்குவதற்குரிய உதவிகள் போன்றவற்றை அளிக்கின்றன. மகளிர் தொழில் முனைவோர்கள் தேர்வு செய்யப்பட்டவுடன் அவர்களுக்கு ஒரு மாதம் மேலாண்மைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து, பல்வேறு தொழிற்சாலைகளைக் கண்டறிந்து அவர் தாம் உற்பத்தி செய்யும் பொருட்கள் எந்த அளவுக்கு விற்பனை ஆகும் என்பதை அறியும் சந்தை ஆய்வு மற்றும் திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் போன்றவைகளில் தக்க நிபுணர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சிபெறும் பயிற்சியாளருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும் இத்திட்டதின் கீழ் பயிற்சி பெற்ற மகளிர் தொழில் முனைவோர்களுக்குத் தொழில் தொடங்குவதற்குத் தேவைப்படும் மூலதன விளிம்புத் தொகையைத் (Marginal Money) திரட்ட முடியமால் பல பெண்கள் அல்லல் படுவதைக் கண்டறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பயிற்சி பெற்ற அந்தப் பெண்களுக்குத் தேவைப்படும் மூலதன விளிம்புத் தொகையினை மானியமாகவே மூலதனத்தில் 10 விழுக்காடு தொகையை அரசே வழங்கும் என்று அறிவித்துள்ளார். இத்தொகையின் அதிகபட்ச அளவு 50,000 ரூபாய் வரை இருக்கிறது. இந்த உதவி உண்மையிலேயே தொழில் முனைவோருக்கொரு புதுத் தெம்பினை உண்டாக்கி யிருக்கிறது.

| ஆண்டு | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றவர்களில் தொழில் தொடங்கியோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1991 - 92 | 765 | 519 |
| 1992 - 93 | 700 | 667 |
| 1993 - 94 | 745 | 531 |
| 1994 - 95 | 986 | 681 |
| 1995 - 96 | 1000 | 546 |
| 1996 - 97 | 1250 | 397 |
| 1997 - 98 | 1250 | ★ |

★ 1997 - 98ல் அனைத்து மாவட்டத் தொழில் மையங்களிலும் பயிற்சி முடிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்றவர்களுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி கிடைப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழில் தொடங்குவதற்குத் தேவையான முதலீட்டைப் பெறுவற்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து குறைந்த வட்டியில் கடன் பெறுவதற்கு உதவியளிக்கப் படுகிறது. இதைத் தவிர உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்யவும், மற்றும் மூலப் பொருள்களைத் தட்டுப்பாடின்றிப் பெறுவதற்கும் அரசு தக்க



ஆலோசனைகளும் உதவிகளும் அளிக்கிறது. எனவே, ஊரகப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் படித்து வேலைதேடி அலைகின்ற பெண்கள், தாங்களாகவே சொந்தமாக ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்து தொழிலதிபர்கள் ஆவதற்கும், மேலும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் மகளிர் தொழில் முனைவோர் திட்டம் மிகவும் உதவியாக இருக்கின்றதென்றால் அது மிகையாகாது.

### தொழில் முனைவோர் பயிற்சி மையம்

நடப்பாண்டில் அரசு தொழில் முனைவோர் பயிற்சி மையம் ஒன்றைச் சென்னை கிண்டியில் ரூபாய் 5 இலட்சம் செலவில் அமைத்து வருகிறது. இதில் பெண்களுக்காக வாரத்தில் 2 நாட்களுக்குத் தொழில் ப்யிற்சி உதவித் தொகையான 500 ரூபாயும் அவர்கள் வேலை செய்யும் நிறுவனத்திடமிருந்து 500 ரூபாயும் ஆக மொத்தம் மாதம் ஒன்றுக்கு 1000 ரூபாய் பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 30 விழுக்காட்டிற்கு மேல் பெண் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ள தொழில் நிறுவனங்களுக்கு முதலீட்டு மானியத்தில் கூடுதலாக 5 விழுக்காடு சலுகை வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

பெண்களை உயர்த்தும் தொழில் முனைவோர் திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டம் பொருளாதார முன்னேற்றத்தை அளிப்பதோடு நிறைய வேலைவாய்ப்பையும் உருவாக்குகிறது. எனவே, படித்த கிராமப்புறப் பெண்கள் இத்திட்டத்தைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளத் தொழில் வணிகத் துறை இருகரம் கூப்பி அழைக்கிறது.

ந. முருகன் இ.ஆ.ப.,
தொழில் ஆணையர் மற்றும்
தொழில் வணிக இயக்குநர்.

---



## முகங்களைத் தேடுகிறேன்!

முகங்களைத் தேடுகிறேன்
வார்த்தைகளைவிடவும் உண்மையான -
ரசிக்கத்தக்கதில்லையெனினும் சொரூபமான -
வேஷங்களைக் கலைத்துவிடும் நிர்பந்தங்கொண்ட
மாறும் பாவங்களில் நேர்மை நிறைந்த
யதார்த்தங்களுடனான
அன்பின் குளுமையை உணர வைக்கிற
முகங்களைத் தேடுகிறேன்;
என் முகத்தையும் அவ்வப்போது
கண்ணாடியில் பார்த்துக் கொண்டே !....

- ரவி சுப்பிரமணியன்

# பொருளாதாரப் பின்னணியில் பெண்

வாழ்க்கை இயற்கையைப் போலச் சிக்கலானது. அதுவும் பிற விலங்குகளின் வாழ்க்கையில் இல்லாத புதிய ஒரு பரிமாணத்தோடு கூடிய சிக்கல் வாய்ந்தது. இந்த மனித விலங்கு வாழ்க்கை; அதுதான் ஆண் / பெண் உறவு; மானுடப் பிரச்சினை வரலாற்றின் அடிப்படை அலகாகக் கொள்ளத்தக்கது இந்த ஆண்/பெண் உறவுமுறைதான், மற்ற விலங்குகளின் வாழ்வில் இந்த ஆண்/ பெண் உறவுமுறை மறு உற்பத்திக்கான இயற்கையின் தேவையை நிறைவேற்று வதாக மட்டுமே அமைந்திருக்கிறது. குறிப்பிடப்பட்ட பருவ எல்லைக்குள் இயங்குவதாக மட்டுமே அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், மனித வாழ்வில் அமைந்துள்ளது போல, இந்த அளவிற்கு, ஆண்/பெண் என்ற மனோபாவம் கூட அமைந்திருக்குமா என்பது சந்தேகமே. இவ்வாறு மனிதனின் ஆண் / பெண் உறவுமுறை சிக்கலாக அமைவதற்குக் காரணம், இவன் இயற்கையை எதிர்கொள்ள அமைத்துக் கொண்ட மொழிவழிப்பட்ட சமூகப் பண்பாடு என்கிற கட்டுமானமே ஆகும். இந்தச் சமூகப் பண்பாட்டை வடிவமைப்பதில் பொருளாதாரச் சூழல் எத்தகைய செல்வாக்குச் செலுத்துகிறது. குறிப்பாக ஆண் / பெண் உறவில் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குவதற்கு இக்கட்டுரையில் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மனிதனது அனைத்து முயற்சிகளுக்கும் முதன்மையான காரணம், அவனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதே ஆகும். ஆனால் மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் முதலியவை திரும்பத் திரும்ப ஏற்படக் கூடியவை! எல்லைக்குள் அடங்காதவை! ஆனால் இவனுடைய உழைப்புச் சக்தியும், உற்பத்திக்கான காரணிகளும் எல்லைக்கு உட்பட்டவை! மேலும் இக்காரணிகள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களின் உற்பத்திக்கு பயன்படக்கூடியவை! அன்றியும், ஒரு காரணியை ஒரு பொருளின் உற்பத்திக்குப் பயன்படுத்தினால், வேறொன்றுக்கு அது பயன்படாமல் போய்விடும். இத்தகைய நெருக்கடியான சூழலில், மனிதன்பால் "தேர்ந்தெடுத்தல்" என்ற கடினமான பணிவந்து விழுகிறது! இவ்வாறு காரணிகள் குறைவாக இருப்பதால், (எல்லைக்கு உட்பட்டதாக இருப்பதால்) எந்தெந்த தேவைகளுக்கு முதலிடம் அளிப்பது, அதையும் எதுவரையில் பூர்த்தி செய்து கொள்ள முடியும்? காரணிகளின் தன்மை என்ன என்றெல்லாம் தீர்மானித்தே ஆகவேண்டிய நெருக்கடிக்குள் மனிதன் தள்ளப்படுகிறான். இத்தகைய சிக்கலான தேர்வுகளை மேற்கொள்ள மனிதன் எடுக்கின்ற நடவடிக்கையைப் பற்றிப் படிப்பதே "பொருளாதாரயியல்" எனப்படுகிறது.

மேற்கண்ட "தேர்வுகளை" நிர்ணயிப்பதில் 'பண்பாடு' எனப்படும் மனித வாழ்வின் மற்றொரு பரிணாம வளர்ச்சி பெரும்பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு பண்பாடும் பொதுவான சில கருத்தாக்கங்களை, மதிப்பீடுகளைக் கொண்டு விளங்குகின்றது! இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில்தான் ஒவ்வொரு மனிதனும் தன் தேவைகளைத் தீர்மானிக்கிறான்! எனவே, பண்பாடு என்பது மேற்கண்ட பொருளாதார நடவடிக்கையில் பெரும்பங்கு வகிக்கிறது என்பது தெரிகிறது! அதே நேரத்தில் இந்தப் பண்பாட்டை வடிவமைப்பதில் பெரிதும் ஆதிக்கம் செலுத்துவது, அடிப்படையில் ஆண்/பெண் உறவு முறையாக இருக்கிறது! ஆக, இறுதியில் அப்படியும் இப்படியுமாகப் பொருளாதாரக் காரணிகளில் செல்வாக்குக்கு உட்படுகிற ஒரு கூறாக ஆண்/பெண் உறவுமுறை வந்து சேர்கிறது! எனவேதான் சுதந்திர இந்தியாவில் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார மாற்றங்கள், எந்த அளவிற்குப் பெண்களின் வாழ்நிலையில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன. அவற்றின் தன்மை என்ன என்பதை விளக்குவதன் மூலம் ஒரு தந்தை வழிச் சமூகத்தில் பெண்ணின் நிலை என்ன என்பதை மேலும் ஆழமாக அறிந்து கொள்ளலாம் என நம்பப்படுகிறது!

**பொருளாதார வளர்ச்சியும் பெண்கள் மேம்பாடும்:**

ஒரு நாட்டின் வளர்ச்சி நிலையைக் கணிக்கும் போது, பொதுவாக அந்நாட்டின் தனிநபர் வருமானத்தின் அளவு ஒரு குறியீடாக எடுத்துக் கொள்ளப்படும்! மேலும், ஒரு சமூகத்தில் நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் கணிப்பதற்கும், பல புதிய விவர உத்திகள் பொருளாதார நிபுணர்களால் வெற்றிகரமாகக் கையாளப்பட்டு வருகின்றன; ஆனால் சமூகப் பண்பாட்டு மாற்றங்களையும் வளர்ச்சிகளையும், கணிப்பதற்குச் சரியான புள்ளிவிவர முறைகள் திருப்திகரமாக இதுவரை அமையவில்லை; என்றாலும், பண்பாட்டு மாற்றத்தின் குறியீடாகப் பெண்களின் சமூக நிலையை எடுத்துக்கொண்டு ஆராய்ந்தால், பொருளாதார மாற்றத்திற்கும், பண்பாட்டு மாற்றத்திற்கும் இருக்கும் நெருங்கிய உறவை நன்கு வெளிக்கொணர முடியும்.

கிருஷ்ணா அஹூஜா படேல் உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெண்களின் மேம்பாட்டுக்கும் உள்ள உறவை ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். இவ்வாராய்ச்சிக்காகப் "பெண்கள் முன்னேற்றக் குறியீடு" என்றொரு புள்ளியியல் அட்டவணையைத் தயார் செய்துள்ளார். இப்புள்ளியியல் குறியீடு (1) பிரசவத்தின் போது இறந்து போகும் தாய்மார்களின் விகிதம் (2) பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் (3) பெண்களின் வாழ்நாள் விகிதம் (4) பெண்களின் உயர்கல்வி விகிதம் (5) பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம் (6) பெண்களின் அரசியல் பங்கேற்பு விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது; இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள இப்புள்ளியியல் குறியீடு பெண்களின் உண்மை நிலையை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லைதான் என்று ஏற்றுக்கொள்ளும் படேல், மேலும் செம்மையாகக் கணக்கிட்டுத் தயாரிக்கப்படும் புள்ளியியல் குறியீடு வரும்வரை தன்னுடைய இந்தக் குறியீட்டு அட்டவணையைத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளலாம் என்றார்.

இந்தப் புள்ளியியல் ஆராய்ச்சியின்படி, இந்தியா பொருளாதார வளர்ச்சியில்

உலக நாடுகளின் 63-வது நாடாகவும், பெண்களின் முன்னேற்றக் குறியீட்டின்படி 76-வது நாடாகவும் உள்ளது என்கிறார் பட்டேல், மேலும் தன் ஆய்வில் கீழ்க்காணும் முடிவுகளையும் தருகிறார். அவற்றுள் குறிப்பிடத்தக்க சில வருமாறு:-

1. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அந்நாட்டுப் பெண்களின்



சமூகக் காரணங்கள் உள்ளன.

3. பெண்களுக்கெனத் தனியாகச் சமூகப் பொருளாதாரத் திட்டங்களை வகுத்துச் செம்மையாகச் செயல்படுத்தும் பின்தங்கிய நாடுகளில் முன்னேறிய நாடுகளின் நிலையை விடப் பெண்களின் நிலை மேம்பாடான முறையில் அமைந்துள்ளது.

பெண்களின் பின்தங்கிய நிலைக்கு முக்கியமான இரண்டு காரணங்களைப் படேல் முன் வைக்கிறார். (1) பொருளாதார வாழ்வில் பெண்கள் ஆண்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை. (2) இப்பொருளாதாரச் சார்பு அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ள பண்பாட்டுச் சூழல்! மேலும், ஒரு கருத்தைப் படேல் வலியுறுத்துகிறார். பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம் கிடைத்தாலும் கூட, பழைய பண்பாட்டுச் சூழல் உடனடியாக மாற்றங்களுக்கு உட்படுவதில்லை, இந்நிலையில் பெண்களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில், நேரடியான பொருளாதாரக் காரணிகளைவிட அக்காரணிகளால் உருவாகிய பண்பாட்டுச் சூழல் பெரும்பங்கு வகிக்கிறது! எனவே பெண்கள் பொருளாதாரத்தில் சார்பற்ற நிலையை அடைவதுடன், ஆண்/பெண் சமத்துவத்திற்கு மனத்தைப் பக்குவப்படுத்தும் பண்பாட்டுச் சூழலையும் ஏற்படுத்த வேண்டும்! இதற்குப் பெண்களுக்கான பண்பாட்டுச் சூழல் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைச் சரியாகக் கணித்துக்கொள்வது நலம் பயக்கும்!

## பெண்ணும் சமயமும்:

இந்தியா மதச்சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதால், இன்று உலகிலுள்ள பெரும்பாலான மதங்களும் இந்தியாவில் செழிப்புடன் - உரிமையுடன் - செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன! ஆனாலும் இந்திய மக்கள் தொகையில் 82% மக்கள் இந்துக்கள் ஆவர்! எனவே, பெரும்பான்மையான இந்திய மக்களின் மனோபாவத்தை வடிவமைப்பது இந்து சமயப் பண்புகளும் பழக்கவழக்கங்களுமே! பொதுவாகவே மானுடனின் மொழிக்குள் பெரும்பகுதியை மதக்கருத்துக்களே ஆக்ரமித்துள்ளதால், ஒவ்வொரு மனிதனும் மதத்தின் செல்வாக்கிற்கு அவனறியாமலேயே உள்ளாகி ஒரு மதவாதியாகவே வடிவமைக்கப்படுகிறான்! அதுவும் பெண்களைப் பொறுத்தவரை, அவர்களின் உளவியலை உருவாக்குவதில் மத நிறுவனங்களின் செல்வாக்கு அதிகமாகவே இருந்துவந்திருக்கிறது.

இந்து மதத்தில் பெண் தெய்வங்கள் மிகவும் சக்தி வாய்ந்ததாகக் காட்டப்படுகின்றன. 'சக்தி வழிபாடு' இந்து மதத்தின் பெரும்பிரிவாக விளங்குகிறது. துர்க்கை, ஆண் கடவுளால் அழிக்க முடியாத தீய சக்திகளை அழித்ததாகச் சமய நூல்கள் பலவாறு புனைந்து அவளைக் கொண்டாடுகின்றன. இவ்வாறு புராணங்களில் பெண் ஒருபக்கம் கொண்டாடப்பட்டாலும், மறுபக்கம், அவள் ஆணுக்கு அடங்கியிருக்கும் போதுதான் அவளது நற்குணங்களும் சக்தியும் அதிகரிப்பதாகவும் கூறப்படுகிறது. பெண், ஆணின் ஒரு பாதி என்கிறது இந்துமதத் தத்துவம்! அதே நேரத்தில் ஆண்-பெண் நிலைப்பாட்டை விளக்கும்போது, ஆண் 'விதை' என்றும், பெண் அதை ஏற்று விளைய வைக்கும் 'நிலம்' என்றும் அடையாளப்படுத்தப்படுகிறாள்! இத்தகைய அடையாளப்படுத்தல் மூலம், 'விதையே' விளைச்சலுக்கு மூலம் என்று ஆணாதிக்கத்தை நியாயப்படுத்த முயல்கிறது இந்துமதம்! மேலும், பல இந்து மதப் புராணங்களும், சடங்குகளும் ஆணுக்கு பெண் அடிமை என்ற கருத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன. (துபே,1988) இந்தக் கருத்தைத்தான் இன்றும் இந்தியத் தகவல் தொடர்புக் கருவிகள் மின்னணுவின் உதவியால் பல கோடி மடங்கு பெருகி விதைத்துக்கொண்டிருக்கின்றன.

## பெண்ணும் சமூகமும்!

இந்தியச் சமூகத்தில் பெண் என்பவள்; 'தாய்' (அ) 'மனைவி' என்ற நிலையில்தான் பெரும்பாலும் அடையாளப்படுத்தப் படுகிறாள்; எனவே, 'குடும்பம்' என்ற நிறுவனத்திலிருந்து பிரித்தறிய முடியாத ஒரு நிலையில்தான் அவளது வாழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது; மேற்கத்திய நாடுகளில் கடந்த சில நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்படும் முதலாளித்துவப் பொருளாதார அரசியல் காரணமாக, அங்கே பெண்ணைத் 'தனியாக' ஒரு நபராகப் பார்க்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது; இன்று மேற்கத்திய நாடுகளில் பெண்களுக்கான விடுதலைக்குரல் ஓங்கி ஒலிப்பதற்கு இது ஓர் அடிப்படைக் காரணமாகும்!

இந்தியச் சமூகத்தில் 'பெண்' குழந்தை பிறந்த உடனேயே, 'வரப்போகிற ஒரு கணவனுக்காக வாழப்போகிற ஓர் அடிமை! அதற்காகத் தான் நாம் தயாரிக்கப்படுகிறோம்' என்ற மனோபாவத்தை அப்பெண் சிறுமியாக இருக்கும்போதே அடையும்படியாகக் குடும்பத்தின் நிர்வாக அமைப்புக்கள் அமைந்துள்ளன. எனவே, ஓர் இந்தியப் பெண் முன்பின் பழக்கமில்லா ஏதோ ஒரு ஆடவனுடன், திருமணத்தன்றே மனைவியாக, அடிமை வேலை செய்யத் தயாராகிவிடுகிறாள்! இந்த அடிமைப் பதவியும் அவளுக்குச் சாதாரணமாகக் கிடைத்துவிடுவதில்லை; 'வரதட்சணை' என்கிற கொடுமையை அவள் கடந்து வரவேண்டியுள்ளது. வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகும் இந்தியப் பெண்களின் நிலைபற்றி அதிகம் கூறத்தேவையில்லை.

அண்மைக் காலங்களில், சேலத்தை அடுத்துள்ள கிராமங்களில் நடந்த பெண் சிசுக்கொலைகளைப் போன்ற நெஞ்சைப்பிளக்கும் சம்பவங்கள், இதற்கு ஓர் முக்கிய உதாரணம்.

இந்திய சமூகத்தில், பெரும் பகுதிகளில் தந்தைவழிச் சமூக அமைப்பே பின்பற்றப்படுகிறது. இத்தகைய குடும்ப அமைப்பில் பாலின வேறுபாட்டின் அடிப்படையில் வேலைப் பிரிவினைகள் அமைந்துள்ளன. வீட்டு வேலைக்குப் பெண்; வெளியில் வேலை செய்து பொருளைத் தேடுபவன் ஆண்! இதன் மூலம் ஆண் குடும்பத் தலைவன் என்றும், பெண் அவனைச் சார்ந்து அடங்கி நடக்க வேண்டியவள் என்றும், சமூகச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தாய்வழிக் குடும்ப அமைப்பு நிலவும் சமூகங்களில் (கேரளாவில் நாயர் முதலிய சில சாதிகள், வடகிழக்கு மாநிலங்களில் வாழும் சில மலைச்சாதியினர்) பெண்களின் நிலை உயர்ந்துள்ளது என்று பல ஆய்வுகள் நிரூபிக்கின்றன. (கணேஷ் கமலா லார்லா ரிசிவோவ், 1993) எனவே, குடும்பத்தின் அதிகார அமைப்பு முறைக்கும், பெண் விடுலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரிகிறது; ஆகையால், பெண் விடுதலை என்பது குடும்பத்திலிருந்தே தொடங்கப்பட வேண்டிய ஒன்றாக நிலவுகிறது!



ஆண்-பெண் சமத்துவத்தை இந்திய அரசியல் சட்டம் வலியுறுத்துகிறது. பெண்களுக்கான உரிமையை வழங்க, பழைய பெண்ணடிமை முறையை ஒழிக்க (1) சதி ஒழிப்புச் சட்டம் (2) சிசுக்கொலைத் தடுப்புச் சட்டம் (3) தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் (4) விவாகரத்துச் சட்டம் (5) வரதட்சணைக்கு எதிரான சட்டம் (6) கருக்கலைப்புச் சட்டம் (7) சொத்துரிமைச் சட்டம் (8) பாலியல் வன்முறைக்கு எதிரான சட்டம் (9) பால்ய விவாக ஒழிப்புச்சட்டம் எனப் பலவிதமான சட்டங்களை இந்திய அரசாங்கம் இயற்றியுள்ளது. ஆனால் எளிதில் மாற மறுக்கும் பண்பாட்டுச் சூழலினால், இச்சட்டங்கள் எதிர்பார்த்த பயனைத் தரவில்லை.

இந்நிலையில் பெண்களுக்கான விடுதலையை வழங்குவதற்கேற்ற பண்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்த சிறந்த வழிமுறைகள் என்ன? பெண் கல்வியும், பெண்ணின் பொருளாதார விடுலையும்தான் என்று பலரும் ஒப்புக்கொள்கின்றனர். எனவே இவ்விரண்டிலும் சமகாலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இனிக் காணலாம்.

## பெண்ணும் கல்வியும்

கல்வி, கண்ணைத் திறக்கும் என்பது உண்மை! ஆனால் இந்தியாவின் கல்வி முறையும் பெண்ணை அடிமைப்படுத்தும் தந்தை வழியிலான சமூகப் போக்கை முன்னிலும் பல மடங்கு வலியுறுத்திப் போதிப்பதாகவே அமைந்துள்ளது; இந்தியாவில் இதுவரை கல்விக்காக அமைக்கப்பட்ட குழுக்கள் பலவும் இதே கருத்தை வலியுறுத்துகின்றன. சான்றாக-டாக்டர் இராதாகிருஷ்ணன் தலைமையிலான கல்விக்குழு தயாரித்து அளித்த அறிக்கையில், பெண்கல்வி, பெண்கள் வீட்டு வேலை செய்வதற்கான திறமைகளை வளர்க்கத் துணை செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறது. ஆனாலும் இத்தகைய இடர்ப்பாடுகளுக்கிடையிலேயும் பெண்கல்வி இந்தியாவில் ஓரளவிற்கு ஒப்பீட்டளவில் உயர்ந்துள்ளது எனலாம். அதனால் கல்வி தொடர்பான தேர்வுகளில் பெண்களின் தேர்வு விகிதம் அதிகரித்து வருவதைச் சான்றாகச் சொல்லலாம்; ஆனால் ஆண்களுடன் ஒப்பு நோக்கும்போது பெண் கல்வி போதுமானதாக இல்லை. மக்கள் தொகையில் 46.5% ஆக இருக்கும். பெண்களின் படிப்பறிவு விகிதம் 39.42% ஆகவும், ஆண்களின் படிப்பறிவு விகிதம் 63.38% ஆகவும் இருப்பதாக 1991-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு கூறுகிறது; பள்ளியில் இருந்து நின்றுவிடும் பெண்களின் விகிதம் 67.55%ஆகவும், ஆண்களின் விகிதம் 58.80% ஆகவும் இருப்பதாக 1987-88ஆம் ஆண்டு எடுத்த புள்ளிவிவரம் கூறுகிறது! கடந்த எண்பது ஆண்டுகளில் பெண்களின் கல்வி வளர்ச்சி 24% ஆகவும், ஆண்களின் கல்வி வளர்ச்சி 37% ஆகவும் இருக்கிறது.

பெண்களின் கல்வி வளர்ச்சியில் இந்நிலை நிலவுவதற்குப் பல காரணங்கள் உள! அவற்றில் பெரும்பங்கு வகிப்பது பண்பாட்டுக் காரணிகளே ஆகும்! ஆண் படித்தால் போதும் என்ற மனப்பான்மை, இளமைத் திருமணம் முதலியவை பெண் கல்வியின் தேக்க நிலைக்கு முக்கியக் காரணங்கள் ஆகும்! உண்மையில் உலக வங்கியின் ஓர் அறிக்கையின்படி, ஆண் கல்வியால் ஏற்படும் பொருளாதார விளைவுகளைவிடப் பெண் கல்வியினால் ஏற்படும் பொருளாதார விளைவு அதிகம் என்று தெரிய வருகிறது; ஒன்று, பெண்களின் வருவாய் ஈட்டும் திறன் அதிகரிக்கிறது; இரண்டு, கல்வியினால் ஏற்படும் சமூக நன்மையின் சான்றாகப் படித்த பெண்களிடையே அதிகரிக்கும் திருமண வயது; கருத்தடை, சிறிய குடும்பம் பற்றிய அறிவு முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே, பெண் விடுலைக்கான பெண் கல்வியின் வளர்ச்சி அளவு சார்ந்ததாகவும், பண்பு சார்ந்ததாகவும் இருக்கவேண்டும்; மேலும் பாலின

வேறுபாடு அற்ற, பொருளாதார மேம்பாட்டிற்கான கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும்; இத்தகைய கல்வி முறையினால் பண்பாடு மாற்றங்களை எளிதாக நடத்திக்காட்ட முடியும்.

### பெண்ணும் பொருளாதார நிலையும்

பெண்ணின் சார்பு நிலையை விளக்க எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிக முக்கியமான அடையாளக் குறியீடு அவளது பொருளாதார நிலையாகும்! பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு ஒன்று தயாரித்த அறிக்கை, உலகத் தொழிலாளர் தொகையில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் என்றும், பெரும்பாலான சம்பளமில்லா வேலைகளைச் செய்பவர்கள் பெண்களே என்றும் கூறுகிறது. உலகில் இருபாலரும் செய்யும் சம்பளமில்லா வேலையின் அளவு 16 ட்ரில்லியன் டாலர். இதில் 11 ட்ரில்லியன் டாலர் அளவு பெண்ணினால் மட்டுமே செய்யப்படுகிறது. மேலும் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் பெண்களுக்கு உலக வருமானத்தில் 10% தான் போய்ச்சேருகிறது; உலகச் சொத்தில் 1% தான் அவர்களுக்கு உரிமையாய் இருக்கிறது என்றும் கூறுகிறது. (படேல் 1993) அன்றியும் உலகில் வறுமையில் வாடும் 13 மில்லியன் மக்களில் 70% பேர் பெண்களே.

இந்தியா போன்ற ஒரத்து நாடுகளோடு ஒப்பிடும்போது, வளர்ச்சியடைந்த நாட்டிலுள்ள பெண்கள் உயர்ந்த நிலையில் விளங்கினாலும், தங்கள் நாட்டிலுள்ள ஆண்களோடு ஒப்பிடும்போது தாழ்ந்த நிலையில்தான் காணப்படுகிறார்கள்.

இந்திய மக்கள் தொகையில் 46.5% ஆக இருக்கும் பெண்கள், தொழிலாளர் தொகையில் 25% தான் உள்ளனர். இந்தப் பெண் தொழிலாளர்களின் பொருளாதார நிலையினை அறிந்துகொள்ளப் பயன்படும் முக்கியக் குறியீடு, அவர்களின் 'வேலைப் பங்கேற்பு விகிதம்' ('வேலை பங்கேற்பு விகிதம்' என்பது மொத்த மக்கள் தொகையில் வேலை செய்யும் பெரியவர்கள் (15-60 வயது) எவ்வளவு சதவிகிதம் உள்ளனர் என்பதைக் குறிக்கும்.) பற்றிய அட்டவணை ஆகும். இக்குறியீட்டில் 'வேலை' என்பது வெளிப்படையாக வருவாயைத்தரும் வேலையை மட்டும் குறிக்கும்; அதாவது பெண்களின் வருவாய் இல்லாத வீட்டு வேலை கணக்கில் சேராது! இந்த அடிப்படையில் வேலைப் பங்கேற்பு விகிதம் பற்றிய புள்ளிவிவர அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவில் வேலைப்பங்கேற்பு விகிதம் (1971-91)

| வருடம் | பிரிவு | நபர் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|
| 1971 | மொத்தம் | 34.2 | 52.7 | 14.2 |
| | கிராமம் | 35.3 | 53.8 | 15.9 |
| | நகரம் | 29.6 | 48.9 | 7.2 |
| 1981 | மொத்தம் | 36.7 | 52.6 | 19.67 |
| | கிராமம் | 38.8 | 53.8 | 23.1 |
| | நகரம் | 30.0 | 49.1 | 8.3 |
| 1991 | மொத்தம் | 37.7 | 51.6 | 22.7 |
| | கிராமம் | 40.2 | 52.5 | 27.2 |
| | நகரம் | 30.4 | 49.0 | 9.7 |

*மூலம்: டாத் ருட்தார் & கே.பி.எம்.சுந்தரம் (1994)*

இப்புள்ளி விவரப்படிப் பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம் 1971-இல் இருந்து அதிகரித்து வருகிறது; இது அண்மைக் காலத்தில் பெண்கள், ஆணாதிக்கத்தில் இருந்து வந்த தொழிலாளர் உலகில் தங்களுக்கான ஒரு இடத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்பதைக் காட்டுகிறது. இவ்வட்டவணைப்படி, கிராமப்புறங்களில் பெண்களின் வேலைப்பங்கேற்பு விகிதம் அதிகரித்த அளவு, நகர்ப்புறங்களில் அதிகரிக்கவில்லை! காரணம், நவீன தொழில்நுட்பம் இயந்திரங்களைக் கொண்டு வேலை வாங்கிக் கொள்ளுகிறது: வேலைப் பங்கேற்பு விகிதம் கிராமங்களில் அதிகமாக இருந்தாலும், கிராமியப் பொருளாதாரம் சட்ட ஒழுங்குகளுக்கு உட்படாது இருப்பதால், பெண் தொழிலாளர்கள் அதிகமான சுரண்டலுக்கு உள்ளாகின்றனர்; இத்தகைய தடைகளை எல்லாம் தாண்டி, இதற்கு முந்திய காலங்களில் பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம் அதிகரித்துள்ள அளவிற்கு, வருங்காலத்தில் அதிகரிக்குமா என்பது சந்தேகத்திற்குரியது; ஏனெனில் 1985ல் இருந்து இந்தியா பின்பற்றிவரும் தாராளமயப் பொருளாதாரம், தனியார் மயம், இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்தோடு இணைத்தல் போன்ற கொள்கைகளினால் வேலை வாய்ப்புகள் குறைந்துகொண்டே வருகின்றன. இவ்வாறு வேலை வாய்ப்புகள் குறையும் போது, பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே! ஏனென்றால், பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடையவேண்டும் என்றால், நாட்டில் வேலை வாய்ப்புகள் குறையாமல் பெருகிக்கொண்டே இருக்கவேண்டும்; பெண்களுக்குச் சட்ட ரீதியாகச் சொத்துரிமை இருந்தாலும், அதைத் தன்னிச்சையாகப் பயன்படுத்தக்கூடிய உரிமையைப் பண்பாட்டுச் சூழல் இன்னும் அவர்களுக்கு வழங்கவில்லை; இந்நிலையில் பெண்களின் வேலை வாய்ப்புக் குறைந்தால், அவர்கள் விடுதலை அடைவதற்கு முக்கியமான ஒரு காரணி இல்லாமல் போய்விடும். மேலும் வேலைவாய்ப்புக் குறைவினால் வறுமை அதிகரிக்கும், வறுமையினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறவர்கள் பெண்களே! மேலும் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையினால், அரசு சமூக நலனுக்காகச் செலவிடும் தொகையின் அளவு குறைந்துகொண்டே வருகிறது. இதுவும் பெண்களைத்தான் அதிகமாகப் பாதிக்கும்.

மற்றொன்றையும் எண்ணிப் பார்க்க வேண்டும்; நகர்ப்புறங்களில் மேல்தட்டு மற்றும் நடுத்தர வர்க்கப் பெண்களின் பொருளாதார நிலையில்தான் சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் இன்றும் பெண்கள் குறைந்த பொருளாதார வாழ்வில் கிடந்து,

தொடர்ச்சியான சுரண்டலுக்கும் கொடுமைகளுக்கும் ஆட்பட்டுக் கொண்டுதான் வாழ்ந்து வருகின்றனர்.

### பெண்ணும் வீட்டு வேலையும்

இந்தியாவில் கணவன்-மனைவி இருவருக்கும் வெளியே வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் உள்ள 'குடும்ப வேலைகள்' பற்றியும் 'குடும்ப அதிகாரி அமைப்பு முறை' பற்றியும் நடந்த பல ஆராய்ச்சிகளின்படி, பெண்கள் ஆண்களுக்குச் சமமாக வெளியே வேலைக்குச் சென்று பொருள் திரட்டி வந்தாலும், தங்களுக்கான உரிமையைப் பெறுவதில் போதுமான அளவு வெற்றிபெறவில்லை என்றுதான் தெரியவருகிறது. இதற்கு முக்கியக் காரணம் ஆண்கள், தங்களின் அதிகாரங்களை, இது நாள்வரைத் தங்களுக்கு அடிமைப்பட்டிருந்த பெண்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. பழைய பண்பாட்டுச் சூழல் இடந்தரவில்லை (இராமு, ஜிஎன். 1989) பெண்களும் பாரம்பரியமாகக் காக்கப்பட்டுவரும் குடும்ப அமைப்புடன் ஒத்துப்போகவே விரும்புகின்றனர். மீறினால் குடும்பம் பிளவுபடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் பல பெண்கள் ஆணுக்குக் கட்டுப்பட்டே வாழப் பழகிக் கொள்கின்றனர். வேலைக்குப் போகும் பெண்களின் நிலையே இது என்றால், குடும்பத்தில் இருக்கும் வேலைகளை மட்டும் செய்து கொண்டு வரும் பெண்களின் நிலையைச் சொல்லவே தேவையில்லை.



ஆனால் அண்மைக் காலத்தில், பெண்கள் செய்யும் குடும்ப வேலைகளும் பொருளாதாரத்தைச் சார்ந்தவைதான் என்பதை நிரூபிக்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. உதாரணமாக சமையல், விறகு, தண்ணீர் முதலியவற்றைச் சேகரிப்பது ஆகிய வீட்டு வேலைகளுக்குப் பொருளாதார மதிப்புப் போட்டுப்பார்த்தால், பெண்களின் 'வேலைப் பங்கேற்பு விகிதம்' தற்போதைய நிலையை விடப் பன்மடங்கு அதிகமாகவே இருக்கும் என ஆராய்ந்து கூறுகின்றனர்.

இத்தகைய வீட்டு வேலைகள் மூலம், ஏற்படும் பொருளாதாரப் பங்களிப்பை மதிப்பிடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பெக்கர், ஷீல்ஸ் ஆகியோர் 'புதிய வீட்டுப் பொருளாதாரம்' என்ற பெயரில் ஒரு கோட்பாட்டை உருவாக்கியுள்ளனர். மரபான பழைய பொருளியலில் மனிதனின் நேரத்தை (செயலை) இரண்டு வகையாகப் பிரிப்பர். (1) உழைப்பு நேரம், (2) ஓய்வு நேரம், அதாவது நேரடியாக வருவாய் ஈட்டாத வேலைகள் யாவும் ஓய்வு நேரமாக எடுத்துக் கொள்ளப்படும். இப்பழைய கோட்பாட்டின்படி, வீட்டு வேலை செய்யும் பெண்களின் நேரம் யாவும் பொருளியல் ஓய்வு நேரமாக எடுத்துக்கொள்ளப்படும். ஆனால் புதிய வீட்டுப் பொருளாதாரக் கோட்பாட்டின்படி, ஓய்வு நேரம் (குறிப்பாகப் பெண்களின் ஓய்வு நேரம்) (1) வீட்டு உற்பத்தி வேலை, (2) ஓய்வு நேரம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். இக்கோட்பாட்டின்படி, பெண்களின் வீட்டு வேலைக்கான பொருளாதார மதிப்பைக் கணக்கிட முடியும். இந்தியாவிலும் ஆங்காங்கே இத்தகைய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இம்முயற்சிகளின் பயனாக, பாலின அடிப்படையில் குடும்ப வேலைப் பிரிவினை இருந்தாலும், ஆண்களுக்கு நிகராகக் குடும்பப் பெண்களும் குடும்பப் பொருளாதாரச் சேகரிப்பில் ஈடுபடுகின்றனர் என்ற புதிய மனநிலையை ஆண்களிடம் உருவாக்க முடியும். இதனால் ஆண்-பெண் சமத்துவத்திற்கு, ஆண்கள் செய்யும் அனைத்து வேலைகளையும் பெண்களும் செய்யவேண்டும் என்கிற பார்வையை மாற்றி அமைக்க முடியும்.

### முடிவுரை:

பொருளாதார மாற்றத்திற்கும் பண்பாட்டு மாற்றத்திற்கும் இடையே உள்ள உறவு நிலைகளும், இவைகள் இரண்டும் எப்படிப் பெண்களின் வாழ்வு நிலையைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதும் பல புள்ளி விவரங்களோடு இங்கே எடுத்துக்காட்டப்பட்டன. சுதந்திர இந்தியாவில் அரை நூற்றாண்டாகப் பெண் விடுதலைக்காக மேற்கொண்ட முயற்சிகள் யாவும் முழுமையான பயனை அளிக்கவில்லை. பெண்கள் மேல் இழைக்கப்படும் வன்முறைகளும் கொடுமைகளும் அதிகரித்துக்கொண்டே போவது மட்டுமல்லாமல், பலவிதமான வடிவங்களும் எடுத்துள்ளன. ஆனாலும் ஆணாதிக்கச் சமூக அமைப்பும், அதன் பண்பாட்டுக் குணமும், கல்வி மற்றும் பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் பெரிதும் விசாரணைக்கு உள்ளாகிக்கொண்டு வருகின்றன. எனவே இவற்றின் தொடர்ச்சியாக ஆண்-பெண் சமத்துவம் எதிர்காலத்தில் உலகமெங்கும் உருவாக வாய்ப்பு இருக்கிறது என நம்பலாம்.

---

1. இரா. சீனிவாசன், விரிவுரையாளர், பொருளாதாரத்துறை,
பாரதிதாசன் பெண்கள் கல்லூரி, புதுச்சேரி-3

2. டாக்டர் க.பஞ்சாங்கம், தமிழ்த்துறை,
காஞ்சி மாமுனிவர் உயர்கல்வி மையம், புதுச்சேரி-8.

★

# வாசகர் இதயம்

தாங்கள் வெளியிட்டிருந்த 'உலகம் இனியது' என்ற கட்டுரை இளைஞர்களுக்கு நல்ல வழிகட்டுவதாக அமைந்திருந்தது; மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பதை எடுத்துக்காட்டியது; இப்படித்தான் வாழவேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தியது.

- கே. பிரஷ்னேவ்
பாக்கம் கோட்டூர்

★ ★ ★

'பாரத ரத்னா' விருது பெற்ற அப்துல் கலாம் கட்டுரை வெறும் வாழ்க்கைக் குறிப்பாக மட்டும் இல்லாமல், அவருக்குப் பிடித்ததும் பிடிக்காததும் பற்றிய பல செய்திகளின் தொகுப்பாகவும் இருந்தது நன்றாக இருந்தது.

- பி.இராசலிங்கம்,
அரசம்பட்டு.

★ ★ ★

மருத்துவப் பகுதியில், காசநோய் எப்படி ஏற்படுகிறது? அதன் அறிகுறி என்ன? அந்நோய் வராமல் தடுப்பது எப்படி என்றெல்லாம் சிறப்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வளர்க தமிழரசு.

- மு. வேதபுரி,
கோட்டுப்பாக்கம்.

★ ★ ★

மூன்று பேருக்குப் பாரத ரத்னா விருது கிடைத்தது பற்றித் தாங்கள் வெளியிட்டிருந்த கட்டுரைகள் மூன்றுமே நன்றாயிருந்தது; அந்த மூவரின் முகவரிகளையும் வெளியிட்டிருந்தால், நாங்களும் தனிப்பட வாழ்த்துத் தெரிவிக்க வசதியாக இருந்திருக்குமே!

- அ. கந்தசுவாமி,
திருப்பூர்.

★ ★ ★

தாங்கள் போட்டிருந்த எம்.எஸ்.சுப்புலட்சுமி பற்றிய கட்டுரை மூலம்தான், அவர் வெறும் இசைமேதை மட்டு மல்ல; வேறு பல திறமைகளும் பெற்றவர் என அறிந்தோம். அவசியம் படித்துப் பயன்பெற வேண்டிய இதழ் தமிழரசு என்பதை இதழுக்கு இதழ் நிரூபித்து வருகிறீர்கள். நல்வாழ்த்து.

- எஸ்.பி. வேலுசாமி,
கே.பி.சத்திரம்.

★ ★ ★

மூன்று பாரத ரத்தினங்களையும் கொண்டிருந்த அட்டைப் படம் அற்புதம்.

- கா. இராஜசேகர்,
மங்களபுரம்.

★ ★ ★

டாக்டர் வரதராகலு அவர்கள் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் ஆற்றிய அருந்தொண்டு பற்றி அருமையான கட்டுரை வெளியிட்டிருந்தீர்கள். நன்றி.

- பி.ஏ.வதூத்,
மேட்டுப்பாளையம்.

★ ★ ★



ஒருநாள் ஆற்றிலே குளித்து விட்டு இராமானுஜர் வீதி வழியாக வரும்போது உறங்காவல்லி தாசருடைய கரங்களைப் பிடித்துக் கொண்டு வந்தார். அதைப் பார்த்த அந்தணர்கள் வெகுண்டெழுந் தார்கள். அவர்களைப் பார்த்த இராமனுஜர் சொன்னார். - ஒருவனுக்கு கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு, சாதிச் செருக்கு இந்த மூன்றும் கூடாது; உங்களிடத்திலே கல்விச் செருக்கு இல்லை; உங்களிடத்திலே செல்வச் செருக்கில்லை. ஆனால், சாதிச் செருக்கு இருக்கிறது என்று சுட்டிக்காட்டாமல், அவர் மிகுந்த சாதுர்யமாகச் சொன்னார் - "நான் அழைத்து வருகிறேனே, இந்த உறங்கவல்லிதாசன் - வேடன்தான்; சாதாரண குலத்தில் பிறந்தவன் தான். அவனிடத்திலே கல்விச் செருக்கு இல்லை; செல்வம் இல்லை. ஆகவே அந்த செல்வச் செருக்கும் இல்லை; அவனிடம் சாதிச் செருக்கும் இல்லை. காரணம் அவன் உயர்ந்த சாதிக்காரன் அல்ல; எனவே சாதிச் செருக்கும் இல்லை" என்று சொன்னார். சொன்னவுடனே அந்தணர்களுக்கெல்லாம் அது புரிந்தது. தங்களைத் திருத்திக் கொண்டார்கள் என்பது இராமனு சருடைய வாழ்க்கை வரலாற்றிலே ஒரு பகுதி. இதில் உள்ள உண்மையை நாம் உணர வேண்டும்.

- கலைஞர்
(திருமகள் நிலையம் வெளியிட்டுள்ள 'வழிமேல் விழி வைத்து' நூலிலிருந்து)

இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில்தான் நூலகச் சட்டம் இயற்றப்பட்டு, 1-4-1950 முதல் அமலுக்கு வந்தது. இது ஒரு பெருமைக்குரிய வரலாற்று நிகழ்ச்சியாகும். தற்போது 1,500க்கு மேலான நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் பல நூலகங்கள் திறக்கப்பட அரசு முடிவு செய்துள்ளது.

1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சுமார் 650 கிராமங்களில் நூலகங்கள் திறக்கப்பட வேண்டும் என்பது அப்போதைய மதிப்பீடு. 1991-ஆம் ஆண்டின் மக்கள் தொகை, கணக்கின்படி 650 என்ற எண்ணிக்கை 1,000-க்கு உயர்ந்திருக்க வேண்டும். 1998-இல் இன்னும் அதிகமான நூலகங்களைத் திறக்க வேண்டிய நிலை வளர்ந்துள்ளது.

எனவே, இந்த நூற்றாண்டு முடிவதற்குள் 5,000 மக்கள்தொகை கொண்ட எல்லாக் கிராமங்களிலும், நூலகங்கள் தோற்றுவிக்கவும், தமிழ்நாட்டில் பதிப்பிக்கப்படும் அனைத்துத் தமிழ் நூல்கள், நாளேடுகள், பருவ ஏடுகள் வளர்ச்சிகளுக்குத் தாராளமாக வழங்கப்படுகிறது. நூல்கள் வாங்குவது ஒன்றேமுக்கால் கோடிக்குத்தான் என்று கணக்கிடப்படுகிறது. இந்தத் தொகையை உயர்த்தினால் நூல்கள் அதிகமாக வாங்கலாம்.

மதிப்பிற்குரிய முதல்வர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபின், 1996 ஆம் ஆண்டு முதல் - 'கிரவுன் சைஸ்' புத்தகத்தின் 1 பாரத்திற்கு (16 பக்கம்) ரூ.1.90 என இருந்த தொகை அளவை ரூ.2.10 என்று உயர்த்தி யுள்ளது; அதேபோல் 'டெம்மி சைஸ்' புத்தக விலையும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

இதைவிட முக்கியமாகக் கழிவுத் தொகை தருவது அடியோடு தவிர்க்கப் பட்டுள்ளது. இதெல்லாம் பதிப்பகத் துறையினருக்குப் பெரிதும் பலம் சேர்த்திடக் கூடிய செய்திகளாகும்.

இந்திய நாட்டில் முதன்முதலாக நூலகங்களுக்கு 600 படிகள் மொத்தமாக வாங்கும் நூல்களை மட்டுமே வெளியிடும் நிலை உள்ளது. அதனால் எழுத்தாளர்கள் சொந்தமாகவே வெளியிட்டுப் பயன் அடைகிறார்கள். பல்துறையிலும் புதிய நூல்கள் வெளிவருகின்றன. புதிய எழுத்தாளர்களின் திறன்மிகு சாதனைகள் இதன்மூலம் பளிச்சிடுகின்றன.

அரசு பொது நூலகங்கள் மூலம் நூல்கள் வாங்குவதால், மக்கள் பெரிதும் நூலகங்களில் நிறையப் படிக்கிறார்கள். அறிவு வளர்ச்சி பெறுகிறார்கள். வீணே பொழுதைப் போக்காமல் கட்டுப்பாடான சமுதாயத்தை உருவாக்குகிறார்கள். குறிப்பாக, கிராமங்களில் பெண்கள் நன்றாகப் படிக்கிறார்கள்.

அரசு நூல்கள் வாங்குவதால், புத்தகம் வெளியிடும் தொழிலுக்குப் பின்னால் பல தொழில்கள் பயனடைகின்றன. ஏராளமானோர் வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள். இதன் மூலம் அரசு மறைமுகமான வேலைவாய்ப்புத் தருகிறது என்றுதான் சொல்லவேண்டும். அது உண்மையுங்கூட.

# நூலகமும் எழுத்துலகமும்

**மேவேந்தர் முத்து**



ஆகியவற்றை வாங்கி மக்கள் பயன் பெறவும் வழிவகை செய்யலாம்.

1950-ஆம் ஆண்டு முதல் வீட்டு வரியோடு நூலக வரி ரூபாய்க்கு 3 காசு வீதம் வசூலித்து வந்ததை, 1-4-1972 முதல் ரூபாய்க்கு 5 காசாக உயர்த்தியும், 1992 முதல் ரூபாய்க்கு 10 காசாக உயர்த்தியும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசு ஒவ்வோராண்டும் பலகோடி ரூபாய் கல்விக்காகச் செலவிட்டு வருகிறது. இதில் 2 சதவீதம் நூலக வளர்ச்சிக்காக நிதி ஒதுக்கி, அதிகபட்ச நூல்கள் வாங்கி, மக்கள் படித்துப் பயனடையச் செய்யலாம்.

## அரசின் பெருமை

தற்போது, ஆண்டு ஒன்றுக்கு, சுமார் பதின்மூன்று கோடி ரூபாய்க்கு மேல் நூலக திட்டம் தமிழ்நாட்டில்தான் ஏற்படுத்தப்பட்டது. இப்பெருமை தமிழக அரசையே சாரும். கல்கத்தா இராஜாராம் மோகன்ராய் நூலக ஆதரவுடன் மேலும் 200 படிகள் வாங்கிப் பெருமை சேர்த்ததும் நம் தமிழக அரசுதான். அது மட்டுமல்லாமல் 1985-இல் 25 சதவீதம் கழிவுத் தொகையை 15 சதவீதம் ஆகக் குறைத்து, எழுத்தாளர்களுக்கும், பதிப்பாளர்களுக்கும் பேருதவி புரிந்த பெருமையும் நம் அரசையே சாரும்.

இதனால், நூல்கள் அதிக அளவில் வெளிவரத் தொடங்கின. 1950 காலகட்டங்களில் ஆண்டு ஒன்றுக்கு 500 புத்தகங்களே வெளியிட்டார்கள். ஆனால் இப்போது ஆண்டுக்கு 3,000-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் வெளிவருகின்றன. அரசின் ஆதரவால் நிறைய எழுத்தாளர்கள் உருவாகி யுள்ளார்கள். பதிப்பகங்களின் எண்ணிக்கையும் கூடியுள்ளன. பதிப்பாளர்கள் சில ஆசிரியர்களின்

முதலில், எழுத்தாளர்கள் அதிகமாக உருவாகிறார்கள். சோர்வில்லாமல் எழுதுகிறார்கள். எழுதிய நூல்களை அவர்களே பதிப்பித்தும் பயன் பெறுகிறார்கள். நூல்கள் ஆயிரக்கணக்கில் வெளிவருகின்றன.

## பெண்களின் ஈடுபாடு

கையால் அச்சுக் கோக்கும் அச்சகங்களில் நாற்பது ஆண்டுக் காலமாகப் பெரும்பாலும் பெண்களே அந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். நடுத்தரக் குடும்பங்களில், மேலே படிக்க முடியாமலும், படித்துவிட்டு வேலைக்குப் போகமுடியாமலும், திருமணம் செய்ய முடியாத நிலையிலுமுள்ள பெண்களுக்கு இந்தத் தொழில் மிகவும் கைகொடுத்து, அவர்கள் வாழ்க்கையை ஒளிமிகுந்ததாகச் செய்தது. புள்ளி வைத்துக் கோலம் போடுவது போல் அச்சு எழுத்துக்களை

அடுக்கினார்கள். கட்டமைப்பு என்னும் பைண்டிங் வேலையிலும் பெண்கள் பயிற்சி பெற்றுத் தொழில் செய்தார்கள். இயந்திரம் உள்ள பகுதிகளில் முதலில் பெண்கள் வந்து பணியாற்றியதைப் பெரிதும் பாராட்டலாம். வீட்டில் அடைந்து கிடந்த பெண்கள், தனியாக ஒரு வருமானத்தையும் உருவாக்கிக் கொண்டு குடும்பத்தை இதன் மூலமான வருவாய் மூலம் செழிக்கச் செய்தார்கள். கண்ணியமான தொழில் என்று விரும்பிச் செய்தார்கள்.

தாள், புத்தகங்கள் அச்சிடுவதற்கு முக்கியமான பொருளாகும். தாள் வியாபாரம் இப்போது முன்னணியில் நிற்கிறது. தாள் தயாரிக்கும் ஆலைகள் (Paper Mills) நிறைய உள்ளன. தாள் வணிகத் தொழில் மூலம் ஆயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்பும் பெறுகிறார்கள்.

அச்சுவார்க்கும் டைப் பவுண்டரி, ஓவியர்கள், பிளாக் தயாரிப்பவர்கள், மை தயாரிப்பவர்கள், லாமினேஷன் போடுபவர்கள், பிழைதிருத்து பவர்கள் என்று நிறையத் தொழில்கள் பின்புலமாக இருக்கின்றன. புத்தகங்கள் அச்சிடுவதில் மேற்கண்ட தொழில்கள் அனைத்தும் பயன்பெறுகின்றன. அதிகமான அளவில் ஆண்களும் பெண்களும் வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள்.

இப்படிப்பட்ட அச்சுத் தொழிலின் வளர்ச்சியையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

அச்சு எழுத்துக்கள், முதன் முதலில் கி.பி.1041-ல் சீனாவில் களிமண்ணால் செய்து, சுட்டு, செப்பம் செய்து, பின்பு தகரத்தில் அச்சிட்டுப் பயன் படுத்தினர்.

ஜான் கூட்டன்பர்க் என்னும் ஜெர்மானியர் 1439-ல் புதுவிதமான முறையில் அச்சு எழுத்துக்களைத் தயாரித்தார். இவரே அச்சுக் கலையின் தந்தை எனலாம்.

அவரது ஆராய்ச்சியின் விளைவே இன்றைய அச்சுக் கலையின் வளர்ச்சி. அச்சு எழுத்துகளை மரத்தினால் தலைகீழாகச் செய்து பயன் படுத்தினார். பிறகு காரீயத்தில் எழுத்துக்களை வார்த்தனர்.

## தமிழில் முதல் நூல்

அச்சுத் தொழில் இந்தியாவில் 6-9-1556-ல்தான் அறிமுகமாகியது. அன்று தொடங்கிய அந்த முறை - இன்று வளர்ந்துள்ள நிலை வானளாவிய அறிவியல் உலகின் சாதனையாகும்.

ஆனாலும் மேல்நாட்டினருக்கு நாம் 60 ஆண்டுகள் பின்னாலேயே இருக்கிறோம்.

20.12.1557-ல் 'தம்பிரான் வணக்கம்' என்ற தமிழ் நூல் 16 பக்கத்தில் கொல்லத்தில் அச்சிடப்பட்டது. இதுவே தமிழில் - இந்தியாவில் அச்சிடப்பட்ட முதல் நூலாகும்.

இந்தியாவில் அச்சு வேலை தொடங்குவதற்கு முன்பே போர்ச்சுகலின் தலைநகரான லிஸ்பனில் 1554இல், 'தூசோ தமிழ்ச் சமய வினா-விடை' நூல். தமிழில் இரு வண்ணத்தில் அச்சிட்டுள்ளார்கள்.

**ஒருவன், தான் விரும்பும் நலன்கள் அனைத்தும், பிறருக்கும் உண்டாகச் செய்வதுதான் நாகரிகம்; அதற்கேற்ற வகையில் நமது உழைப்பு பயன்பட வேண்டும்.**

**- தந்தை பெரியார்**

1712-இல், தென் நாட்டில் தரங்கம் பாடியில், சீகன் பால்கு என்பவர் முதன் முதலில் அச்சகம் ஆரம்பித்தார். அப்போதெல்லாம் அச்சகம் 'அச்சுக்கூடம்' என்றே வழங்கப்பட்டது. அது முதல் நூல்கள் அச்சிடும் வேலையும் தொடங்கியது.

மேல்நாட்டிலிருந்து சமயத்தைப் பரப்ப அனுப்பப்பட்ட இவர், தமிழையும் கற்றார். அச்சுத் தொழிலை ஆரம்பித்தார். காகித ஆலையையும் நிறுவினார்.

அச்சுத் தொழில் அச்சுக் கலையாகியது. வண்ண வண்ண அச்சுக் கலைகள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. இன்று அக் கலை நமக்கு வாழ்வில் ஓர் அங்கமாக அமைந்துவிட்டது.

தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில் சிறந்த புத்தகங்களுக்குப் பரிசு அளித்துப் பெருமைப் படுத்துகிறார்கள். இப்போது முதற்பரிசு பெற்ற நூல்களும், இரண்டாம் பரிசு பெற்ற நூல்களும் பொது நூலகத் துறையின் மூலம் அதிகம் வாங்கப்படுகின்றன. முதற்பரிசு பெறும் நூல்களை இன்னும் அதிக அளவில் வாங்கி, எல்லா நூலகங்களிலும் இடம் பெறுமாறு செய்யலாம்.

வீட்டிற்கு ஒரு நூலகம் இருக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா வற்புறுத்தினார். கர்மவீரர் காமராஜர் அவர்களும் அறிஞர் அண்ணா அவர்களும் எல்லோரும் படிக்க வேண்டும் என்று பல சலுகைகளை அளித்தார்கள். கூட்டங்கள் வாயிலாக வேண்டுகோளும் விடுத்தார்கள். நம்மவர்களும் படிக்க ஆரம்பித்தார்கள்.

## படித்தால் போதுமா ?

ஆனால், படித்தவர்கள் அனைவரும் வேலைக்கு மட்டுமே படித்தார்கள் - படித்துவிட்டு வேலை கிடைக்கவில்லையே என்று வருத்தப் படுகிறார்கள். எல்லாருக்குமே அரசாங்க வேலை கிடைக்குமா? படித்து விவரம் அறிந்து தொழில், வியாபாரம் எதிலும் தாங்கள் படித்த படிப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று, எல்லோரும் எழுத்தாளர்களாக வரவேண்டு மென்று எழுதுகிறார்கள். வரவேற்க வேண்டியதுதான். எழுதுவது என்பது எல்லோருக்கும் வாய்த்து விடாது. அது ஒரு பிறவியின் பேறு (GIFT) என்றே கூறுவார்கள். அந்த எழுத்து நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுடையதாக இருக்க வேண்டும். அந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டு, சிந்தித்துப் பயன் பெறுவதாகவும், அறிவை வளர்த்துக் கொள்வதாகவும் இருக்க வேண்டும்.

முன்பெல்லாம், இவரால் எழுதப்பட்டு, இன்னாரால் சரிபார்க்கப்பட்டு, இந்தப் புலவரால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இந்த அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டு, இந்தப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது என்று நூலின் முதற்பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும். எழுதிய எழுத்தும், வெளிவந்த புத்தகங்களும் பாராட்டும்படி இருக்கும். படித்துவிட்டுப் பாதுகாத்து வைக்க வேண்டும் என்ற எண்ணமும் தோன்றும். ஆனால் இன்று?... எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

இப்போதெல்லாம் சில எழுத்தாளர்கள் எதை வேண்டுமனாலும் எழுதி அச்சுக்குக் கொடுத்து, வெளியிட்டு விடுகிறார்கள். பிழை நிறைந்தும், ஒற்று எழுத்து இல்லாமலும், சில இடங்களில் ஒற்று எழுத்து மிகுந்தும் தமிழைக் கொலை செய்கிறார்கள். பாரதி மட்டும் இன்றிருந்தால் வெகுண்டு எழுந்து கொக்கரித்துக் குரல் கொடுத்திருப்பார்.

1914ஆம் ஆண்டு 'சுதேசமித்திரன்' நாளிதழில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதைப் படிப்பதோடு நாம் மறந்து விடுகிறோம். "அச்சகத்துக்குக் கைப்பிரதி கொடுக்கும்போது, தெளிவான எழுத்துக்கள் எழுதவேண்டும். பிழையின்றி எழுத வேண்டும். ஒவ்வொரு சொல்லுக்கும் இடைவெளி விட்டு எழுத வேண்டும். நாம் புலவர்கள்; தமிழை நிறையப் படித்தவர்கள். ஆனால் அச்சுக் கோக்கும் பணியாளர்கள் புலமை பெற்றவர்கள் அல்ல" என்று அறிவுரை வழங்கியுள்ளார். ஆனால்

இன்றளவும் என்ன நிலை என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

நன்றாக எழுதி வெளியிடும் புத்தகங்கள் நல்ல வரவேற்பைப் பெறுகின்றன. இல்லாவிடில் மக்கள் மத்தியில் கண்டனத்துக்குரியனவாகவே தேங்கும். அச்சுக்குக் கொடுக்கும் முன்னரே விவரம் தெரிந்தவர்களிடம் காட்டி, பிழை திருத்தி, புத்தகம் அச்சிட வேண்டும். தவறுகள், பிழைகள் இருந்தாலும் அந்த நால்வர்க்குள்ளேயே சரிப்படுத்தப்படும். இல்லாவிடில் புத்தகமாக வெளியிட்டு எல்லோரும் படித்து, இந்த எழுத்தாளர் இப்படி எழுதியுள்ளாரே என்று எள்ளி நகையாடுவர். இப்படிப்பட்ட தவறுகள் அச்சிடும் அச்சகத்தாரையே சாரும். அதனால் எழுத்தாளரும் பிழைதிருத்துபவரும் கவனமாக இருக்கவேண்டும்.

## எப்படி அச்சிடுவது ?

*"டாக்டர்கள் தவறு சவக்குழிக்குள் புதைந்து விடுகிறது; வழக்குரைஞர்களின் தவறு தண்டனைக்குள் ஒளிந்து கொள்கிறது; ஆனால் அச்சகத்தாரின் தவறோ அம்பலத்துக்கு வந்துவிடுகிறது."* **"A Doctor's mistake is burried. A Lawyer's mistake is Jailed. But A Printer's mistake is Published."**

அதனால், அச்சகத்தில் எப்படி அச்சிட வேண்டும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். புத்தகத் தயாரிப்பு கூட்டு முயற்சி. எல்லோருக்கும் பயன்படும் வகையில் பணியாற்ற வேண்டும்.

நம் காலத்தில் வாழ்ந்தவர்கள், வாழ்ந்துவரும், சான்றோர்கள், அவர்கள் எழுதிய நூல்களை அவர்களே பிழை திருத்தம் செய்தார்கள் என்பதை நாம் அறியவேண்டும். தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார், முதல் தொடர்கதை நாவலாசிரியர் கல்கி, மே.வீ.வேணுகோபால் பிள்ளை, நா. பாண்டுரங்கன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், அவர் எழுதிய புத்தகங்கள் அனைத்தையும் அவரேதான் பிழைதிருத்துவார். தவறு வராமல் மிகவும் கண்டிப்பாக இருப்பார். ஒரு முறை 'நெடிய' என்பது 'கெடிய' என்று அச்சாகி இருந்ததைச் சொல்லி விளக்கம் கொடுத்தார். மாண்புமிகு கல்வி அமைச்சர் **பேராசிரியர் அன்பழகனார்** அவர்களும் பிழை திருத்துவதில் வல்லவர்.

வெளிநாட்டில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள் எழுதி வெளியிடும் தமிழ் நூல்களுக்கும் தமிழ்நாடு அரசு முன்னுரிமை வழங்குகிறது. அவர்களை ஊக்குவிக்கவும் அரசு முன்னுரிமை வழங்கி போற்றப் படுகின்றது. ஆனால், உள்நாட்டு முகவரி கொடுத்துப் பதிப்பிக்க வேண்டும். ஆசிரியருடைய வெளி நாட்டு முகவரி இரண்டாம் பக்கத்தில் இருக்கலாம்.

## சீர்திருத்த எழுத்து

ஓலைச்சுவடிகளில் எழுதும்போது 'ை' போட்டு னை, ணை, லை, ளை என எழுதினால், 'ன'கரமா, 'ண'கரமா, 'ல'கரமா, 'ள'கரமா என்று புரிந்துகொள்ள முடியாது என்பதால்தான், மேலே 'ஐ'காரத்தின் கொக்கியைப் போட்டு எழுதினார்கள். அதே போல் 'றா'வையும், 'ஆ'வைச் சுழிப்பது போல் 'ரு', 'ஞ', 'ண' என்று இழுத்துச் சுழித்தார்கள். அச்சு வடிவத்திலும் அதே நிலை நீடித்தது. அதைத்தான் தந்தை பெரியார் அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால், நம்மவர்கள் சாதாரணமான இந்த முறையைக்கூட ஏற்றுக் கொள்ளாமல் இன்றும் பழைய எழுத்திலேயே திருமண அழைப்பிதழ் முதல் புத்தகங்கள் வரை அச்சிட்டு வருகிறார்கள்.

நம் குழந்தைகள் கூடப் படிக்கும்போது, "ஏன், 'க'வுக்கு 'ை' போட்டு 'கை', 'நை', 'சை' என்று எழுதுகிறோம். ல, ள, ன, ண-வுக்கு மட்டும் ஏன் 'ை'காரம் போடாமல் மேலே சுழிக்கிறோம்? இது தப்பில்லையோ, வஞ்சனையில்லையா" என்று கேட்டிருக்கிறார்கள். அதே போல் எல்லா எழுத்துக்களுக்கும் 'ா' போட்டுவிட்டு ரு, ஞ, ண-வுக்கு மட்டும் ஏன் கால் போடவில்லை என்றும் கேட்டுச் சிரிப்பார்கள். ஆனால் நம்மவர்களில் விவரம் புரிந்தவர்கள் கூட, திருந்திய எழுத்துச் சீர்திருத்தம் வந்தபோது நடை முறைப்படுத்த விரும்பவில்லை. புத்தகங்கள் பெரும்பாலும் பழைய எழுத்திலேயே வந்தன. திருந்திய எழுத்தில் அச்சிடும், வெளியிடும் புத்தகங்கள் மட்டுமே நூலகங்களுக்கு வாங்கப்படும் என்று அறிவித்தவுடனே - அறிவிக்க வேண்டிய நிலை வந்தவுடனேயே நிலைமை மாறியது. இப்போது நூல்கள் அனைத்தும் திருத்திய தமிழ் எழுத்திலேயே வெளியிடப் படுகின்றன.

'பம்பாய்' என்பதை 'மும்பை' என்று மாற்றியதும் அம் மக்கள் அனைவரும் ஏகோபித்த வரவேற்போடு நடை முறைப்படுத்துகிறார்கள். இங்கே நம்மவர்கள் எழுத்துச் சீர்திருத்தம் சாதாரணமானதுதான். அதையும் செய்யத் தயங்குகிறோம். 'மெட்ராஸ்' என்பதை 'சென்னை' என்று மாற்றினாலும் தயங்குகிறோம். அதேபோல் 'அண்ணா சாலை'யை மவுண்ட் ரோடு என்றே எழுதுவார்கள். விளம்பரப் பலகைகளிலும் பெயர்ப் பலகைகளிலும் பழைய நடை முறையையே கையாள்கிறோம். பழைமையில்தான் நம தமிழர்களுக்கு எவ்வளவு ஈடுபாடு? இந்த நிலைமைகள் மாறியே ஆகவேண்டும்.

## வீரமாமுனிவர் பெருமை

வீரமாமுனிவர் காலத்தில்தான் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளி வைக்கும் முறை கொண்டுவரப் பட்டது. அதேபோல் ஈ, ஏ, ஓ போன்ற எழுத்துக்களும் கூட்டப்பட்டன. காரணம் ஓலைச்சுவடியில் எழுதும் போது புள்ளி வைத்தால், ஓலை பொத்தலாகிவிடும். கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, குறிகள் கூட அவர் காலத்தில்தான் கையாளப் பட்டன. தமிழுக்கு வாழ்வளித்த வீரமாமுனிவருக்குச் சிலை அமைத்தவர் **பேரறிஞர் அண்ணா** அவர்களே யாவார்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மெய்யெழுத்து அனைத்துக்கும் முறையாகப் புள்ளி வைக்கிறோம். ஆனால், 'ா' எழுத்துக்கு மேலே புள்ளிவைத்து 'ர்' என்று எழுதுகிறோம் - அச்சிடுகிறோம். ஆனால், முறையாக 'ர' என்னும் மெய்யெழுத்துக்கு மேலேதானே 'ர்' என்று புள்ளி வைக்க வேண்டும். புத்தகங்கள் அனைத்தும் தவறாகவே அச்சிட்டு வெளிவருகின்றன. எழுத்து தயாரிக்கும் டைப் பவுண்டரிகள் - வார்த்த எழுத்தை உபயோகித்தோமே அன்றி மாற்றம் செய்யவில்லை. அதேமுறை லேசர் முறையிலும், கணினியிலும் கையாளப்படுகிறது. ஒரு சிலரிடம் சொன்னால், லேசர் என்னும் ஒளி அச்சுக்கோர்வையாளர்கள் வியப்புறுகிறார்கள். இதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒற்று எழுத்தான 'ா' நெடிலாக இருப்பது போய் 'ா' 'ர்'ஆக மாறியது விந்தை தானே!

பயன்மிகு புத்தகங்கள் பல நல்ல முறையில் வெளியிட்டுப் பொது நூலகத் துறை மூலம் அதிகமான பலன் பெறலாம். நமது அரசு தமிழ் வளர்ச்சிக்கென்று தனித்துறை அமைத்துள்ளது வரலாற்றுப் பெருமை மிக்க நிகழ்ச்சியாகும். ★

*சமுதாயத்திற்கு வருகின்ற வேதனையைத் தனியொருவர் தாங்கிக் கொள்ளுகின்ற மனப்பக்குவத்தைப் பெற்றாக வேண்டும்; அதுதான் உண்மையான பொது வாழ்விற்குப் பொருள். அழகு!*

**- கலைஞர்**

# எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை :

ஈரோடு மாவட்டம் ஈரோடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாகப் பெரிய சேமூர் வீட்டு மனைத் திட்டத்தின் கீழ் எண். 6ன் படி லேக்வியூ ரிசார்ட் காலனியில் வீட்டுமனை எண்.167 கடந்த 11.8.95ல் எனக்கு ஒதுக்கப்பட்டது. அன்று சதுர அடி ரூ.65 வீதம் 1950 ச. அடி காலி மனையினை 1,26,750 செலுத்தி 22.3.96 அன்று பத்திரப்பதிவு செய்துகொண்டேன். அங்கத்தினர் எண்.11630 பத்திரம் எண். 635

2. எனக்குப் பதிவு செய்த தனி அலுவலர் திரு. பி.துரைசாமி அவர்களே 4.4.96 அன்று தீர்மானம் நிறைவேற்றி அதே வீட்டு மனைத் திட்டத்தில் ச.அடிக்கு 55 வீதம் (அதாவது சதுர அடிக்கு ரூ.10 குறைவாக) கீழ்க்கண்ட நபர்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்.

3. பார்வை எண். க.அ.ந.க. 06-1996-97 மனை எண் ஒதுக்கீடு விவரம்:

   1. திரு. ஏ.சி. ராஜீ க/பெ, திரு. ஏ.சி. ராஜீ அய்யம் பாளையம் பவரினி ம.எண். 161
   2. திருமதி. ஏ. ராஜேஸ்வரி க/பெ. திரு. எம் அய்யாமுத்து கோபிசெட்டிபாளையம் எண். 162
   3. திருமதி. எம். பத்மாவதி க/பெ. திரு. எட்டிமுருகன் கவுந்தப்பாடி பவானி ம.எண். 233

மேற்கண்ட செயலால் எனக்கு ரூ.49,500 நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பாதிப்பிற்குத் தமிழரசு மூலமாவது நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் தங்களுக்கு எழுதுகிறேன்.

- எல். விஸ்வநாதன்
*1132*, பேப்பர்மில் காலனி
ஈரோடு, நாமக்கல் மாவட்டம்.

தீர்வு :


*ஈரோடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் பெரிய சேமூர் மனைப்பிரிவில் மனை எண். 167 திரு. எல். விஸ்வநாதன் (உ.எண். 11630) என்பவருக்குத் தனி அலுவலரின் உத்திரவு நாள் 11/8/95ன் படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் சதுர அடி ஒன்றுக்கு ரூ.65 வீதம் விலை நிர்ணயம் செய்யப் பட்டு, 1950 சதுர அடிக்குக் கிரையத்தொகை ரூ.1,26,750 பெறப்பட்டுள்ளது.*

*மனுதாரர் குறிப்பிட்டுள்ளதுபோல் மனைத் திட்டத்தின் மூலம் மனை பெற்ற 3 உறுப்பினர்களுக்குச் சதுர அடிக்கு ரூ.10 குறைத்து வழங்கப்பட்டதாகச் சங்கத் தனி அலுவலரின் மீது எழுப்பப்பட்ட புகாரின் அடிப்படையில் அதனை அன்னாரிடமிருந்து வசூலிக்கவும், காரணமானவர்கள் மீது நடவடிக்கையும் துறை அளவில் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*எனவே, ஈரோடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் பெரியசேமூர் மனைப்பிரிவில் சதுர அடி ரூ.65 என்று நிர்ணயம் செய்யப்பட்ட விலையில்தான் உறுப்பினர் திரு. எல். விஸ்வநாதன் கிரையம் பெற்றுள்ளார்.*

*மற்றபடி சதுர அடி விலை குறைத்து மூன்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கிரயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதனால் இவ்வினத்தில் திரு.எல்.விஸ்வநாதனுக்கு இதன் மூலம் நட்டம் ஏற்பட்டது என்பதற்கு இடமில்லை என்பதால் அவருக்குத் தொகை திருப்பி வழங்க இயலாது. இவ்விவரம் திரு. எல். விஸ்வநாதனுக்கு, துணைப் பதிவாளர் (வீட்டுவசதி) சேலம் கடிதம் ந.க.1720/97/உ நாள் : 24.10.97ன் மூலம் நேரிடையாகத் தெரிவிக்கப் பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*- பதிவாளர் (வீட்டுவசதி)*
*79, 4-வது பிரதான சாலை, காந்தி நகர்*
*அடையாறு, சென்னை - 20.*



பிரச்சினை :

விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் ஒன்றியம் அனுமனந்தல் ஊராட்சிக்கு அனுமனந்தல் கிராமத்தில் ஊராட்சி மன்றக் கட்டட நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிக்குச் சொந்தமான இடத்தில் கட்டாமல் விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் அலுவலகக் கட்டிடம் கட்ட கடகால் எடுத்துள்ளார்கள். இந்த இடத்தில் அலுவலகக் கட்டிடம் கட்டினால், திருவிழாக் காலங்களில் பொது மக்களுக்கு


இடைஞ்சலாக இருக்கும். எனவே, ஊராட்சிக்குச் சொந்தமான தொலைக்காட்சிப் பெட்டி இருக்கும் கட்டிடத்திற்கு அருகில் அலுவலகம் கட்டினால் நன்றாக இருக்கும். எனவே, கோவிலுக்கு இடைஞ்சல் இல்லாமல் ஊராட்சிக்குச் சொந்தமான இடத்தில் கட்ட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்வு :**

*1997 - 98ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அனுமனந்தல் ஊராட்சியில் ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்றக் கட்டிடம் கட்டுவதற்குப் பார்வை 1-ல் காணும் திட்ட அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள் மூலம் நிர்வாக அனுமதி அளிக்கப் பட்டு மேற்படி கட்டிடத்தினை அனுமனந்தல் ஊராட்சியின் தலைமையிடத்தில் மட்டுமே கட்டப்பட வேண்டுமெனவும் அனுமனந்தல் ஊராட்சியின் மதுரா கிராமத்தில் கட்டக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டது.*

*மேற்படி திட்ட அலுவலர் அவர்களின் அறிவுரைக ளுக்கு இணங்க அனுமனந்தல் ஊராட்சியின் தலைமை யிடத்தில் தான் ஊராட்சி மன்றக் கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றது எனவும் புகார் மனுவில் தெரிவித்ததுபோல் விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப் படவில்லை என்பதனைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*திரு. அ. தங்கசாமி*
*கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்,*
*சின்னசேலம்.*



**பிரச்சினை :**

**வ**.உ.சி. நகர் என்.ஜி.ஓ. காலனி மேற்கில் குறைந்தது சுமார் 500 குடியிருப்புகளிலும் 2,000 மக்கள் தொகை உள்ளது. இருந்தும், கடந்த 10 ஆண்டுகளாகக் குடிநீர் இல்லாமல் மிகவும் துன்பப்பட்டு வருகின்றோம். எங்கள் பகுதியில் நிலத்தடி நீர் மிகவும் மோசமான நிலையில் (குடிக்க முடியாது) உள்ளது. குடிநீரை 3 கி.மீ. தூரத்திலுள்ள சத்திரரெட்டியாப்பட்டி பஞ்சாயத்துக்குட்பட்ட இடத்திற்குச் சென்று சில பெண்கள் தலையில் சுமந்துவருகிறார்கள். மற்ற உபயோகத்திற்கு மதுரைக்குப் போகும் தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து உள்ள என்.ஜி.ஓ. காலனி கிழக்குப் பகுதியில் நல்ல தண்ணீர் உள்ள ஒரு கைப் பம்பில் எடுத்து வருகிறார்கள். வெளியே சென்று குடிநீர் எடுத்துவர இயலாதவர்கள் வ.உ.சி. நகரில் கிடைக்கும் சொற்ப நீரை உபயோகப்படுத்துவதால் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை சிறுநீரகக் குழாயில் கல்லடைப்பும் மற்றும் பல வியாதிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிகாரிகளுக்குப் பல மனுக்கள் அனுப்பியதன் பலனாகத் தற்பொழுது மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சியில் வாரியத்தினால் குடிநீர்த் திட்டத்திற்கு அனுமதி தரப்பட்டு வேலையும் தொடங்கப்பட்டது.

தற்பொழுது குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் (என்.ஜி.ஓ. காலனி மேற்கு) எங்கள் பகுதியில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்கவும் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு கடந்த 15.5.97 அன்று வேலை தொடங்கப்பட்டது. 26.5.97 அன்று குடிநீர் ஆதாரம் அமைந்துள்ள இடத்தில் மோட்டார் பம்பு அறை கட்டுவதற்காக 5½ அடி குழி தோண்டப்பட்டது. இப்பகுதி மதுரை ரோட்டிலுள்ள உசிலம்பட்டி கிராமத்திற்கு வெளியே சுமார் 3 பர்லாங் தூரத்தில் (மயானத்திற்கு அருகில்) அமைந்துள்ளது.

உசிலம்பட்டியில் இருக்கும் மக்கள்தொகை 600 பேருக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத்தொட்டி 2 மோட்டார் பம்பு அறைகள், 4 கைப்பம்புகள் இருந்தும், ஒரு சிலரின் தூண்டுதலால் சில குழுவினர் 27.5.97 அன்று வ.உ.சி.நகர் என்.ஜி.ஓ. காலனி மக்களுக்குக் குடிநீர் தரமாட்டோம் என்று கூறி மோட்டார் பம்பு அறைக்குத் தோண்டிய குழியை மூடி மிகப் பெரிய பிரச்சினையை உருவாக்கிவிட்டார்கள். மேலும், எங்கள் என்.ஜி.ஓ. காலனி (மேற்கு) பகுதியில் மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்குரிய வேலைகள் பாதியில் நின்றுவிட்டது. இதைப் பற்றிப் பல மனுக்கள் அனுப்பியும் எவ்விதப் பலனுமில்லை. எங்கள் குடிநீர்ப் பிரச்சினை தீர, தாங்கள்தான் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- பொது மக்கள், வ.உ.சி. நகர்
என்.ஜி.ஓ. காலனி (மேற்கு)
விருதுநகர்

**தீர்வு :**

***வி**ருதுநகர் மாவட்டம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த என்.ஜி.ஓ. காலனி (மேற்கு)க்கு குடிநீர்த் திட்டப் பணி தற்போது 30,000 லிட்டர் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி முடிவடைந்துவிட்டது. பகிர்மானக்குழாய் பதிக்கும் பணி 700 மீட்டர் நீளத்திற்கு 150 மீட்டர் பதிக்கப்பட்டுள்ளது. மீதம் குழாய் பதிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் நீரேற்றுக் குழாய் பதிக்கும் பணி தேசிய நெடுஞ்சாலையைக் கடக்க வேண்டியிருப்பதால் கோட்டப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலைத் துறையின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.*

மேலும், மேற்கண்ட குடிநீர்த் திட்டத்தில் நீரேற்று நிலையம் (பம்பு ரூம்) கட்டும் பணி, கட்டுமிடத்தில் தேங்கியுள்ள நீர் வற்றியதும் விரைவில் பணி ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

- ச. கிருஷ்ணன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
விருதுநகர் மாவட்டம்.

பிரச்சினை :

**எ**ங்கள் மாவட்டமாகிய திருவண்ணாமலை மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாவட்டம். சமீபத்தில் அரசு இடைநிலை ஆசிரியர்களை சீனியாரிட்டி அடிப்படையில் நியமித்தது. அப்போது நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கேர் ஆப் அட்ரஸ் கொடுத்து, எங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தங்களின் பதிவை டிரான்ஸ்பர் செய்து கொண்டனர். அந்த 'கேர் ஆப் அட்ரஸில்' அவர்கள் உள்ளார்களா என அதிகாரிகள் சோதனை செய்தபோது இந்த விலாசங்கள் அனைத்தும் போலியானவை எனக் கண்டுபிடித்தனர். இவர்கள் அனைவருக்கும் அரசு வேலை கொடுத்துவிட்டது. இனி, 'நேடிவ் சர்டிபிகேட்' இல்லாமல் 'டிரான்ஸ்பர்' செய்ய முடியாது என அரசு உத்தரவு ஒன்று பிறப்பித்தது.

இதனால் எங்களின் பதிவு பின்னுக்குத் தள்ளப்பட்டது. வரும் 1998 - 99ம் கல்வி ஆண்டில், எங்களில் பலருக்கு வேலை கிடைக்காமல் போனால் அரசு நியமனம் செய்துள்ள வேலைக்கான நியமன வயது எங்களுக்குத் தாண்டிவிடுகிறது. ஆதலால் இதில் கல்வித்துறை தலையிட்டு, எங்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி தங்களைத் தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

- வேலையில்லா இடைநிலை ஆசிரியர்கள்,
திருவண்ணமாலை மாவட்டம்.

தீர்வு :

***1997***-ம் ஆண்டில் திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் இடைநிலை ஆசிரியர்கள் பணிக் காலியிடங்களுக்காகப் பரிந்துரைக்கப்பட்டவர்களில் பிற மாவட்டங்களிலிருந்து திருவண்ணாமலை மாவட்டத்திற்குப் பதிவு மாற்றங்கள் மேற்கொண்டிருந்த முப்பது மனுதாரர்களின் நேர்வுகளில், அவர்கள் அளித்துள்ள முகவரியில் வசிக்காமல் பாதுகாவலர் முகவரிகளில் பதிவு செய்திருந்ததாகக் காணப்பட்டது. இந்த முப்பது நபர்களில் இருபத்தியேழு நபர்கள் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் வசித்து வருவதை, உறுதி செய்வதன் பொருட்டு, வட்டாட்சியர்கள் அளவில் வழங்கப்பட்ட இருப்பிடச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தால், இதர விதிமுறைகளுக்குட்பட்டு அவர்களைப் பணி நியமனத்திற்குப் பரிசீலிக்கலாம் என இத்துறை, கல்வித் துறைக்கு ஆலாசனை வழங்கியது. எஞ்சிய மூன்று மனுதாரர்கள் இருப்பிடச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்காததால், அவர்களைப் பணி நியமனத்திற்குப் பரிசீலிக்க வேண்டாம் என இத்துறை கல்வித்துறையைக் கேட்டுக் கொண்டது.

தற்போது, பதிவு மாற்றம் கோரும் மனுதாரர்களிடம் வட்டாட்சியர்களால் வழங்கப்படும் இருப்பிடச் சான்றிதழ்களைப் பெற்ற பின்னரே, பதிவு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இவ்வாறான முறைகேடுகள் இனிமேல் எழ வாய்ப்பில்லை.

- இரா. சம்பத், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை.




பிரச்சினை :

**எ**ங்கள் ஊர் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், உள்ளிக்கோட்டை ஆகும். எங்கள் ஊரில் ஊர்ப்புற நூலகம் திறப்பதற்கு 1996 . ஆம் ஆண்டு மாவட்ட நூலக அலுவலர் மூலம் அரசு ஆணை பெறப்பட்டு உடன் எங்கள் ஊர் கிராமக் கமிட்டி மூலமாக 10 செண்ட் நிலம், 200 உறுப்பினர்கள், ரூ.20,000/- புரவலர்களுக்காகவும் செலுத்தப்பட்டு ரூ.10,000/- அளவில் தளவாடங்கள் நன்கொடையாகப் பெற்று வாடகை இல்லாது இலவசக் கட்டிடத்தில் ஓர் ஆண்டாகத் தளவாடப் பொருள் வீணாகிக் கொண்டு இருக்கிறது.

உடன் நூலகம் திறப்பதற்குச் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஆவன செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

- பொதுமக்கள் சார்பாக த. மோகன், எம்.ஏ..,
உள்ளிக்கோட்டை மற்றும் அஞ்சல்,
மன்னார்குடி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

தீர்வு :

***தி***ருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், உள்ளிக்கோட்டை கிராமத்தில் ஊர்ப்புற நூலகம் திறக்க விரைவு நடவடிக்கை மேற்கொள்ளும்படி திருவாரூர் மாவட்ட நூலக அலுவலருக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. ஊர்ப்புற நூலகம் விரைவில் திறக்க ஆவன செய்யப்படும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இரா. கண்ணன்,
பொது நூலக இயக்குநர், சென்னை.

# தொழுநோயற்ற உலகை உருவாக்குவோம்

கே.வி. புருஷோத்தமன்

அரசாங்கத்தின் திட்டங்களும், செயல்பாடுகளும் ஒரு குறிப்பிட்ட கால அளவீட்டில் செய்து முடிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்தத் திட்டங்களின் முக்கியத்துவம், செயல்பாடுகளின் வேகம் இரண்டும் மிகச் சரியாக மக்களைச் சென்றடையும். திட்டங்களின் முழுப்பலன்களும் மக்களுக்குக் கிடைக்கும்.

"தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்" என்பது ஒரு கால எல்லையை முன்னதாகவே நிர்ணயம் செய்துகொண்டு, அரசு செயல்படுத்திவரும் திட்டமாகும். கி.பி. 2000-மாவது ஆண்டுக்குள் தொழுநோய் முழுமையாக நமது நாட்டிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்ற இலக்கோடு, மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் இணைந்து பல வழிகளிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன.

முதலில் தொழுநோய் எதனால் வருகிறது என்ற உண்மையை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

தொழுநோய் சாபத்தால் வருவது என்ற அச்சமும் நீங்கிவிட்டது!

தொழுநோய் ஒரு கர்மவியாதி என்ற வேதாந்தமும் தவறு என மாற்றி எழுதப்பட்டுவிட்டது .

தொழுநோய் ஒரு பரம்பரை வியாதி என்ற மூட நம்பிக்கையும் ஒழிந்துவிட்டது.

**எப்படியெனில் :-**

தொழுநோய் "மைக்கோ பேக்டீரியம் லெப்ரே" என்ற நுண்கிருமியால்தான் உண்டாகிறது என்ற விஞ்ஞான உண்மை கண்டுபிடிக்கப்பட்டது,அதானல்.

தொழுநோயும் மற்ற வியாதிகளைப் போல முழுமையாகக் குணப்படுத்த முடிகிற வியாதிதான் என நிரூபிக்கப்பட்டதே அதனால்!

நார்வே நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஹேன்சன் என்பவர் 1873-ஆம் ஆண்டு தமது விஞ்ஞானக்கூட ஆய்வுகள் மூலம் தொழுநோய் "மைக்ரோ பேக்டீரியம் லெப்ரே" என்ற கிருமியால் உண்டாகிறது எனக் கண்டுபிடித்து உலகிற்குத் தெரியப்படுத்தினார்.

தொழுநோய் எப்படி இருக்கும்? தொழுநோயின் அறிகுறிகள் எவை? இந்த வினாக்களுக்கு முன்பெல்லாம் விடையாக உடல் ஊனமுற்ற தொழுநோயாளிகளையே சுட்டிக்காட்டி வந்தனர். ஆனால், அது மட்டுமே உண்மையல்ல.

ஒருவருடைய உடலில் தேமல் என்று சொல்லப்படும் படை,அதாவது **PATCHES** இருக்க வேண்டும். அந்தத் தேமல் மீது தொடும்போது உணர்ச்சியில்லாமல் இருந்தால், அவர் தொழுநோயாளி என்று கூறப்படுவார். அதாவது, அந்தத் தேமலை உடையவர் தொழுநோயின் அறிகுறி உடையவர் என்று மருத்துவர்களால் உறுதி செய்யப்படுகிறார்.

இந்த உணர்ச்சியற்ற தேமலில் அரிப்பும் இருக்காது. இந்தத் தேமல்கள் சிவந்த நிறத்தில் இருக்கும். சிலருக்கு வெளிறிய நிறத்தில் இருக்கும்.

தொழுநோய் ஆண், பெண் என்ற இருபாலருக்கும் வருகிறது. சுமார் இரண்டு வயதுடைய குழந்தைகள் முதல், எந்த வயதினருக்கும் இந்த வியாதி வருவது கண்டறியப்பட்டுள்ளது.

தொழுநோய்க் கிருமிகள் காற்றின் மூலம் பரவுவதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொழுநோய்க்குச் சிகிச்சை முறைகள் என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

தொழுநோயைக் குணப்படுத்த "டேப்சூன்" என்ற ஒரு மாத்திரை சிகிச்சை முறை **(MONO TREATMENT)** இருந்து வந்தது. இந்த ஒரு மருந்து சிகிச்சை நோயைக் குணப்படுத்தப் பல ஆண்டுகள் ஆனது. இதன் காரணமாக, நோயுற்றவர்கள் தொடர்ந்து மருந்து பெற்றுப் பயன்படுத்தச் சலிப்படைந்தனர்.

அப்போது நோயைக் குணப்படுத்த விரைவான சிகிச்சை முறையைக் கண்டறிய ஆராய்ச்சிகள்

மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆராய்ச்சிகளின் பயனாகக் கூட்டு மருந்து சிகிச்சை முறை கண்டறியப்பட்டது. கூட்டு மருந்து சிகிச்சை ஆறே மாதங்களில் தொழுநோயை முழுவதுமாகக் குணப்படுத்தியது. இந்தக் கூட்டு மருந்து சிகிச்சை முறை இந்தியாவில் 1980-ஆம் ஆண்டு முதல் தரப்பட்டு வருகிறது.

நோயைப் பரப்பும் தன்மை உடைய நோயாளிகளுக்கு - லேம்பரீன், ரிபாம்பிசின், டேப்சூன் என்ற மூன்று வகை மாத்திரைகளும் ஒரே நேரத்தில் பயன்படுத்தப்படும்.

நோயைப் பரப்ப இயலாத தன்மை உடைய நோயாளிகளுக்கு ரிபாம்பிசின், டேப்சூன் ஆகிய இரண்டு மாத்திரைகள் மட்டுமே தரப்படும்.

இந்த வகை சிகிச்சை முறையால் தமிழகத்தில் பல்லாயிரம் நோயாளிகள் மிக விரைவாகவும், **முழுமையாகவும் குணமடைந்து விட்டனர். அதனால் முன்பு ஆயிரம் பேருக்கு 12 நோயாளிகள் என்று இருந்த நோயாளிகள் கணக்கு, இப்போது ஆயிரம் பேருக்கு ஒரு** நோயாளி என்ற அளவில் நிலைமை மிக வெகுவாக முன்னேற்றம் கண்டுள்ளது.



தொழுநோய், மக்களில் யாருக்கு உள்ளது என எப்படி அரசாங்கம் கண்டுபிடிக்கிறது என்பவைகளை மக்கள் அறிந்துகொண்டு பயன்பெற முன்வரவேண்டும்.

குடிசைப் பகுதிகளிலும், நடுத்தர மக்கள் வாழும் இடங்களிலும், "தொழுநோய் கணக்கெடுப்புப் பணி" என்பதைச் சுகாதார ஆய்வாளர்கள் செய்துவருகிறார்கள்.

கல்வி நிலையங்களில் ஆண்டுக் கொருமுறை மாணவ, மாணவிகளுக்குத் தொழுநோய் அறியும் சோதனை என்று நடத்தப்பட்டு வருகிறது.

அடுக்கு மாடி வீடுகளிலும், உயர்ந்த வருவாயுள்ள குடியிருப்புப் பகுதிகளிலும் படக்காட்சி காண்பித்தல், நலக்கல்விப் பிரச்சாரம் செய்தல் என்ற பணிகள் மூலம் தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

மாணவர்கள் மூலம் விழிப்புணர்வு ஊர்வலங்கள், பொதுமக்கள், இளைஞர்கள் உதவியுடன் மிதிவண்டிப் பிரச்சார இயக்கங்கள், ஆங்காங்கு தோல்நோய் மற்றும் தொழுநோய் அறியும் சோதனை முகாம்கள் என்பன நடத்தப்படுகின்றன. இவைகள் மூலமாகத் தொழுநோய் பற்றிய அறிவியல் உண்மைகள் மக்களுக்குத் தெளிவாக்கப்படுகின்றன.

பள்ளி ஆசிரியர்களுக்குத் "தொழுநோய் ஒழிப்புக் கல்விப் பயிற்சி முகாம்கள்" நடத்தப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்களுக்குத் தேமல் ஏதும் இருப்பின் அந்தப் பகுதிக்குரிய சுகாதார ஆய்வாளருடன் தொடர்பு கொண்டு உடனடியாக மருத்துவம் பெற வழி கிடைக்கிறது.

பலவகையான வழிகளில் தொழுநோய் ஆய்வுகள் மூலம் அறியப்படும் தொழுநோய் உள்ளவர்களுக்கு உடனடியாகக் கூட்டுமருந்து சிகிச்சை தரப்படுகிறது. இந்த ஆய்வுகளும், மருத்துவமும் அரசாங்கத்தால் முழுஅளவில் இலவசமாகவே செய்யப்பட்டு வருகிறது.

தொழுநோய்க் கணக்கொடுப்புச் செல்லுகிறபோது - பெண்கள், விதவைத் தாய்மார்கள், பூப்படைந்த பெண்கள் ஆகியோர் கூச்சத்தின் காரணமாகவும், அச்சத்தின் காரணமாகவும் தங்களைப் பரிசோதித்துக் கொள்ள முன்வருவதில்லை. அவர்களும் தங்கள் நலனை முன்னிட்டும், சமூக நலனைக் கருத்தில் கொண்டும் தொழுநோய் ஆய்வுக்கு உட்படுத்திக் கொள்ளுதல் நன்மை தருவதாகும்.

தொழுநோய் ஒழிப்புத் திட்டம் என்பது முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நமது நாட்டில் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆறே மாதங்களில் தொழுநோய் குணமாகி விடுகிறது என்பதும் நிரூபணம் ஆகிவிட்டது. ஆனாலும் கூட, பொதுமக்களில் ஒரு பகுதியினர் தொழுநோய் பற்றிய அச்ச உணர்வை, அதாவது STIGMA என்று சொல்லப்படுகிற உணர்வை உடையவர்களாகவே இருக்கிறார்கள்.

நோயின் உண்மைக் காரணங்களை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார்கள். இதன் காரணமாக, முதலில் தங்களுக்குள்ள நோயை மறைத்துவிடுகிறார்கள்.

பின்பு நோய் முற்றி உடல் ஊனங்கள் வருகிறபோது துன்பப்படுகிறார்கள். இவைகளில் இருந்து மக்கள் விடுபட்டே ஆகவேண்டும். அதற்கு அவர்கள் தொழுநோய் பற்றிய விழிப்புணர்வைப் பெறவேண்டும். ஆனாலும், நல்ல மாற்றங்கள் வந்துகொண்டுதான இருக்கிறது.



தொழுநோய் வந்து திருமணமாகாத பெண்கள் நோயை மறைத்த காலம் அன்று; அதனால் திருமணமாகாத நிலையும் இருந்தது. ஆனால் மருந்து பெறுவதும், நோயும் குணமாகித் திருமணம் நடைபெறுவதும் இன்று.

ஒரு குடும்பத்தில் திருமணமானபின், கணவனுக்கு அல்லது மனைவிக்குத் தொழுநோய் இருந்தால், இருவரும் பிரிந்து வாழ்ந்த நிலை அன்று; ஆனால் தொழுநோய் பற்றிய உண்மைகளை அறிந்ததால் கணவனே தன் மனைவியை அழைத்துச் சென்று மருந்து பெறவைப்பதும், நோய் குணமாகி மகிழ்வதும் இன்று.

விதைவைப் பெண்கள் வெளியே வராத காலம் அன்று; அவர்களுக்கு நோய் இருந்தாலும் அறிய வாய்ப்பில்லை அன்று; அவர்கள் மருத்துவமும் பெற முடியாத சூழல் அன்று; ஆனால் அவர்களும் விழிப்புணர்வு பெற்று, அவர்கள் வீட்டிலுள்ளோரும் விழிப்புணர்வு பெற்று, அவர்கள் அனைவருமே தங்களைச் சோதித்துக் கொள்வதும், நோயிருந்தால் மருத்துவம் பெற்று முழுகுணமடைவதும் சாதாரணமாகிவிட்டது இன்று.

## இவைகள் எல்லாம் எவ்வாறு ஏற்பட்டன ?

தொழுநோய் பற்றிய உண்மைகளை வானொலி வளமாக வழங்கி மக்களைத் தெளிவு பெறவைத்தது; அதனால்!

தொழுநோய் பற்றிய விஞ்ஞானக் கருத்துக்களைத் தொலைக்காட்சித் தொகுப்பாகக் காண்பித்து மக்களின் விழிப்புணர்வை வளரச் செய்தது அதனால்!

மாத இதழ்களும், நாளிதழ்களும் பல்வேறு கட்டுரைகள், பேட்டிகள் மூலம் படிக்கின்ற வாசகர்கள் தொழுநோய் பற்றித் தெரிந்து கொள்ள வழி செய்தன என்பதால், என நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

தொழுநோய் வந்தவர்களிடையே உள்ள ஒரு முக்கியப் பிரச்சினை "உடல் ஊனம்" அவர்களுக்கு ஏற்படுவதுதான். சமூகத்தில் தொழுநோய் வந்தவர்கள் மீது அருவருப்பு ஏற்படவும் உடல் ஊனமே காரணமாகிறது. தொழுநோயாளிகளுக்கு உடல் ஊனம் எப்படி ஏற்படுகிறது ? அதைத் தடுப்பது எப்படி ? என்பனவற்றை முக்கியமாகப் புரியவைக்க வேண்டும்.

தொழுநோயாளிகளுக்கு ஊனங்கள் நோயின் காரணமாக நேரடியாக ஏற்படுவது குறைவே. ஆனால் அவர்களுக்கு உணர்ச்சி இல்லாத கை, கால், பகுதிகளைச் சரியாகப் பராமரித்துக் கொள்ளத் தெரியாததால்தான் நிறைய அளவில் ஊனம் ஏற்படுகிறது.

நெருப்பின் அருகில் இருக்கும்போது கை, கால்களைக் கவனமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். கடினமான வேலை செய்யும் போது கை, கால்களில் அடிபடாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். கால்களில் செருப்பு இல்லாமல் நடக்கக் கூடாது.

முகத்தில் மூக்கு, கண் ஆகிய இடங்களிலும் ஊனங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து, கூட்டு மருந்து சிகிச்சையைக் கொடுத்தால் ஊனம் உண்டாவதில்லை. இப்போது தமிழ்நாடு அரசு ஊனத் தடுப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, குழு அமைத்து, நோயாளிகளுக்கு ஊனங்கள் ஏற்படாவண்ணம் கவனித்து வருகிறது.

ஊனம் ஏற்பட்ட நோயாளிகளுக்கும் உரிய மருத்துவம் பெற்றதும் நோய் குணமடைகிறது. அவர்களில் முதல்நிலையில், ஊனங்கள் பயிற்சிகள் மூலம் சரி செய்யப்படுகிறது. இரண்டாவது நிலையில், ஸ்பிலின்ட்ஜப் பயன்படுத்தியும் ஊனம் தடுக்கப்படுகிறது. இந்த இரண்டு நிலைகளையும் தாண்டியவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து ஊனங்கள் முற்றிலும் சரிசெய்யப்படுகிறது.

தொழுநோய் உடையவர்களுடைய வீட்டில் வசிப்போரும் அவ்வப்போது சோதிக்கப்படுகிறார்கள். தொழுநோய்க்குத் தடுப்பூசி கண்டுபிடிக்கும் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

1997 பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதி முதல் 28 வரையிலான நாட்களில் தமிழ்நாடு முழுவதும் தொழுநோய் தீவிரக் கண்டுபிடிப்பு இயக்கம் நடைபெற்றது. இதில் பல லட்சம் மக்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இதன் மூலமாகத் தமிழ்நாட்டில் தொழுநோய் மிகவும் குறைவான அளவே மக்களிடையே இருக்கிறது என அறியப்பட்டது. எனவே, 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் தேதியில் இருந்து, தொழுநோய் ஒழிப்புத்துறையானது பொதுச்சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துகள் துறையோடு ஒருங்கிணைப்பு செய்யப்பட்டது.

தொழுநோய் ஆய்வாளர்கள் தற்போது சுகாதார ஆய்வாளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். தொழுநோய் ஆய்வுடன் காசநோய், மலேரியா போன்ற ஆய்வுகளையும் சேர்த்துச் செய்து வர பயிற்சிகள் தரப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் செயல்பாடும், மக்களின் ஒத்துழைப்பும் பணியாளர்களின் ஈடுபாடும் சேர்ந்து ஒன்றாகும் போது, எதிர்காலத்தில் தொழுநோயுள்ளவராக எவரும் இருக்க வாய்ப்பில்லை. அந்தத் தொழுநோயற்ற உலகைக் காண ஒன்றுபட்டு நாமெல்லாம் அரசின் ஒத்துழைப்போடு மேலும் உழைப்போம். ●

(3-ம் பக்க தொடர்ச்சி)

எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 14 கோடியே 36 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இவை, இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

### இலவச மின்சாரம்: கூடுதல் மான்யம்

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதற்காக அரசுக்குச் சேர வேண்டிய வழிவகை முன்பணம், வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையிலிருந்து ரூபாய் 228 கோடியே 21 இலட்சம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அளிக்க வேண்டிய கூடுதல் மானியமாகக் கருதப்படவேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. இத்தொகை, இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 20 - வேளாண்மை" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

"மானியக் கோரிக்கை 25 - கைத்தறியும் துணித் தொழிலும்" என்பதன் கீழ் இலவச சேலை, வேட்டிகள் வழங்கும் திட்டத்திற்கும், விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்திற்கும் கூடுதலாக ரூபாய் 7 கோடியே 79 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம், இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

### இந்திரா வீட்டுவசதித் திட்டம்

"மானியக் கோரிக்கை 26-கதர்-கிராமத் தொழில்கள்" என்பதன் கீழ் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்குக் கதர்த்துணி விற்பனை குறித்த நிலுவையாக உள்ள தள்ளுபடிக்காக (Rebate) ரூபாய் 9 கோடியே 42 இலட்சம் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

"மானியக் கோரிக்கை 27 - ஊரக வளர்ச்சி" என்பதன் கீழ் நடப்பாண்டிற்கு "இந்திரா வீட்டு வசதி"த் திட்டத்திற்கு ரூபாய் 45 கோடியே 40 இலட்சம் கூடுதலாக அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, இறுதித் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 2 கோடியே 21 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகள் மற்றும் பெரும் மழையினால் ஏற்பட்ட இழப்பீடுகள், சாலை பழுது பார்த்தல் போன்ற துயர் தணிப்புப் பணிகளுக்காகக் கூடுதல் ஒதுக்கீடு தேவைப்படுகிறது. இதற்காக, "மானியக் கோரிக்கை 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன் கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 97 கோடியே 86 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

"மானியக் கோரிக்கை 48-குடிநீர் வழங்கல்" என்பதன் கீழ் உவர்த்தன்மை நீக்கும் சிறு சாதனங்களை நிறுவுவதற்காகவும், சென்னை இரண்டாவது குடிநீர் வழங்கு திட்டத்திற்காகவும் ரூபாய் 19 கோடியே 10 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, இறுதித் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 7 கோடியே 71 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

### போக்குவரத்துக் கழகங்களின் நிதி இடர்ப்பாட்டைச் சமாளிக்க...

போக்குவரத்துக் கழகங்கள் தங்களது நிதி இடர்ப்பாட்டைச் சமாளிக்க இயலும் வகையில் மாநில அரசுக்குச் சேரவேண்டிய கடன்கள் மற்றும் வழிவகை முன்பணங்களாக இருந்த ரூபாய் 150 கோடியே 53 இலட்சத்தைப் போக்குவரத்துக் கழகங்களின் சமபங்கு மூலதனமாகக் கருதவேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இத்தொகை இறுதித் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 58 - சாலை போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துக் குறித்த மூலதனச் செலவு" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்வாரியத்திலிருந்து அரசுக்குச் சேரவேண்டிய கடனாக இருந்த ரூபாய் 87 கோடியே 34 இலட்சத்தை மாநில அரசின் சம்பங்கு மூலதனமாக மாற்றவேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூபாய் 4 கோடியே 75 இலட்சம் மானியக் கோரிக்கை "61 பல்வகை மூலதனச் செலவு" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

இத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப் பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து நான் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும் மற்றும் ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழு விவரங்கள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம்பெற்றுள்ளன.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இறுதித் துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்து உரையாற்றினார்.

★ ★ ★

## முதல்வர் கலைஞரை ஆசிரியர் சமுதாயம் என்றும் மறவாது!

இதுவரை சென்னை நகரை ஏ-1 நகரமாக வகைப்படுத்துமாறு மத்திய அரசிடம் நாம் வைத்த கோரிக்கையை இன்று கலைஞர் அரசு நம்பக்கம் நின்று நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசிடம் வற்புறுத்தியிருப்பது இந்த அரசு ஆசிரியர், அரசு ஊழியர், தொழிலாளர் நல அரசு என்பதை மெய்ப்பிப்பதாக உள்ளதல்லவா ?

மதிய உணவுத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் மாணவர், மாணவிகளுக்கு மட்டுமே இலவச பாடப் புத்தகம் என்ற நிலையை மாற்றி, 1 முதல் 5-ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ மாணவியர் அனைவர்க்கும் இலவச பாடப்புத்தகம் வழங்கப்படும் என்ற கலைஞரின் அறிவிப்பு-புரட்சியும், புதுமையும் பொதுமையுமான அறிவிப்பல்லவா ?

தந்தை பெரியார் வழியில், பேரறிஞர் அண்ணா வழியில் அயராமல் நடைபோடும் முதல்வர் கலைஞர் அறிவாலயமாம் பள்ளிகள் இல்லாத குக்கிராமங்களே இருக்கக்கூடாது எனத் திட்டமிட்டு 700 தொடக்கப்பள்ளிகளை ஆரம்பிக்க இருப்பதையும், மேலும் 200 நடுநிலைப் பள்ளிகள், 80 உயர்நிலைப் பள்ளிகள், 40 மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை உருவாக்க இருப்பதையும் நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளார்.

கேடில் விழுச் செல்வமாம் கல்விதான் மக்கட்கு வளமான - தரமான வாழ்க்கையைத் தரும் என உணர்ந்துள்ள கலைஞர் அவர்கள் இவ்வாண்டு கல்வித்துறைக்கு, சென்ற ஆண்டை விட ரூ.630 கோடியை கூடுதலாக்கி ரூ.3568 கோடியை ஒதுக்கி உள்ளார்.

பாரி வள்ளலாகி வாரி வழங்கியுள்ள முதல்வர் கலைஞரை ஆசிரியர், அரசு ஊழியர் சமுதாயம் காலகாலத்திற்கும் மறக்காது; நன்றி செய்யத் தவறாது என்பது உறுதி.

- க. மீனாட்சிசுந்தரம்
பொதுச்செயலாளர்,
தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

சிறுகதை:

# அமானுடன்...

**பிரபஞ்சன்**

“தாழி... காலைலேந்து, காலை மரிச்சு மரிச்சுக்கிட்டு வந்து நிக்கிறான். என்னன்னும் சொல்லித் தொலைய மாட்டேங்கறான். ரொம்ப குசும்பனாயிட்டான் அவன்...” என்று தனக்குள் சொல்லிக் கொண்டார் முத்துப்பாண்டி.

நேர்வகிடு மாதிரி இருந்தது வரப்பு. வரப்பு வழி அவர் களத்து மேட்டில் ஏறி, தெற்குப் புளிய மரத்துப் பக்கமாக வந்து நின்றார். அவர், மாலைக் கடன்கழிக்க, குளக்கரைக்கு வந்தவர் அப்படியே, குளத்தில் ஒரு முங்கல். துவட்டிக்கொண்டு நீண்டு வளர்ந்திருந்த தலைமுடியை உலர வைத்துக்கொண்டு நின்றவர்க்கு, வயிறு கிள்ளியது. பேச்சி கடைக்குப் போய் ரெண்டு வடைகளைப் பிட்டுப் போட்டுக்கொண்டு, ஒரு டீயைக் குடித்தால் தேவலை என்று இருந்தது. துவைத்த வேஷ்டியை அகல விரித்து முதுகுப்புறமாகப் பிடித்துக்கொண்டு கோவணத்துடன் நடந்து களத்துமேட்டுவழி தெருவுக்கு வந்தார். பகல் நேரத்திலும் கூட, இருண்டு கிடக்கும் புளியஞ்சாலை. தெற்கு மரத்தண்டை அவர் வந்தபோது, திடுமென உடம்பு மயிர்க்கூச்செறிந்தது. லேசான மயக்கம்கூட வந்துவிட்டது அவருக்கு. கால் பின்னிக்கொண்டு தடுமாறியது. ஆவேசம் வந்துவிட்டது என்பது அவருக்குப் புரிந்தது.

“த்தூ.... சமயா சமயம் தெரியாமே, இப்படிக் காலைச் சுத்திக்கொண்டு நின்னா, எப்படிடா, பெரிய கருப்பா ?” என்று மர உச்சியைப் பார்த்துக்கொண்டு சொன்னார், முத்துப்பாண்டி. அந்த இடத்தில்தான் அவன் குடி இருக்கிறான் என்பதை நிச்சயமாக அறிந்தவர் அவர். அந்த இடத்திலேயே நின்று, அரைஞாண் கயிற்றில் கட்டித்தொங்கவிட்ட விபூதிப் பையிலிருந்து ஒரு சிட்டிகை திருநீறை எடுத்து நெற்றியில் ‘சம்போ மகாதேவா’ என்றபடி பூசிக்கொண்டார்.

‘காத்து மாத்து அண்டாமே, காடன் மாடன் அணுகாமே காத்து ரட்சியும், கருப்பசாமி... காட்டுக் கரம்பு வேல்சாமி...” என்று முணுமுணுத்துக் கொண்டார். ஆவேசம் நீங்கியது மாதிரி இருந்தது. தன் இடப்பக்கமாகப் பார்த்தார். அவன் நின்று கொண்டிருந்தான். ஒரு பனைமரம் உயரத்துக்கு. அப்புறம் குள்ளக் கத்திரிக்காய் உருவம் எடுத்துக்கொண்டான் அவன்.

“தாழி.... வரியா.... வா.... பேச்சிப் பய கடைக்குத்தான் போறேன். வா பேசிட்டே போவோம். நீயும்தான் என்ன செய்வே...” என்றபடி மறுபடியும், தோளில் போட்ட வேஷ்டியைப் பிரித்துக் காயப்போட்டபடி நடந்தார். அவருடன் அவன் பேரக்குழந்தை, தாத்தாவோடு நடப்பது மாதிரி நடந்து வந்தான்.

மண், குளிர்ந்திருந்தது. இருட்டத் தொடங்கி இருந்தது. தெருவில் இருபுறமும் ஆங்காங்கே தென்னை ஓலை வேய்ந்த ஓடுகள். உரலில் கட்டின ஆடுகள், இவர்களைப் பார்த்ததும், ஆவேசமாகக் கத்தின. கயிறை அறுத்துக்கொண்டு போக முயல்வன மாதிரியாக அலைந்தன.

“பார்த்தியா... ஆட்டுக் கண்களுக்கு உன்னைத் தெரியுதுடா கருப்பா” என்றார்.

“மங்” என்று அவர் சொன்னதை ஒப்புக்கொண்டான், கருப்பு. தொடர்ந்து அவனே சொன்னான்.

“பாம்பும் ஆட்டுக் கிடாவும், நாயும் அறியும்; மனுசங்கத்தான் என்ன அறியமாட்டாங்க..”

என்று அவன் சொன்னதை ஒப்புக்கொண்டார் அவர்.

திடுமென, ஆள்அரவமற்ற அந்த இடத்தில் சுருட்டு வாசம் வீசியது. இடப்பக்கம் பார்த்தார். அவன், ஒரு அடி நீளத்துக்கு ஒரு சுருட்டைப் புகைத்துக்கொண்டு வருவது தெரிந்தது. கருப்பு சுருட்டுப் பிடிப்பான். கூடவே சாராயமும் குடிப்பான். அது அவன் வழக்கம். கொடை நடக்கிறது என்றால், சாராயம், தெருவை நனைக்குமே. தண்ணீர்பட்ட பாடாய் ஓடும். அது ஒரு காலம். தாழிகள் இப்போதெல்லாம் எவன் கொடை கொடுக்கிறான். பூசை வைக்கிறான்? எல்லாம் கலி காலம். சாமியாவது பூதமாவது என்று பேசத் தொடங்கிவிட்டார்கள். நகரத்துக்குப்போய் படித்துவிட்டு வருகிற தாழிகள் ஒருத்தருக்கும் கருப்பு, சின்னக் கருப்பு, மாடன், தலையன், மம்பட்டியான் என்று கொஞ்சமாவது பயம் இருந்தால்தானே? என்னப் படிப்பு படிக்கிறாங்களுங்க...

“அது சரிதான். எல்லாம் குறைஞ்சு போச்சு” என்றான் கருப்பன். அவர் நினைப்பதைப் புரிந்து கொண்டவனாக.

“அதுல பாரு கருப்பா... ஊர்க்கவுண்டர் வீட்டுல பொண்ணுக்கு, கல்யாணம் குதிர்ந்துச்சுதே... அவர் எப்படியாக்கொத்த மனுஷர். அவர் கொடை போடுவார். ஒரு ஆடாவது அடிப்பார்னு இருந்தேன். என் வாயிலே மண்ணைத்தான் போட்டார்...”

"ஆமா... நான்கூட எதிர்ப்பார்த்துகிட்டுதான் இருந்தேன். ஆசாமி ஏமாத்திபூட்டார்."

"கவுண்டர் நல்ல மாதிரிதான். சாமி, பூதம்னா பயந்துக்குவார்.. அவர் மகன் இருக்கானே, பிரசெண்டு, அந்தத் தாழிதான் வேண்டாம்னுட்டார். சிலை தெய்வம்லாம் வேணாமாம். என் முன்னாலேயே சொன்னான்னா பாரேன். எவ்ளோ கொழுப்பு இருக்குன்னு.... தி.... தாழி.... கொஞ்சமும் உன் 'பவரை' காட்டினாத்தானே ? ராத்திரியில, இந்தப் பக்கமாதானே வீடு திரும்பறான். பயலை, ஒரு அறை அறையேன். வழிக்கு வந்துருவானே... காலம் மாறிப்போச்சு, கருப்பா... உயிரோடதான் இருக்கோம்னு அடிக்கடி தாழிகளுக்கு நிருபிச்சுக்கிட்டே இருக்க்னும்... இல்லேன்னா, செத்துட்டாம்னு கொண்டு போயி புதைச்சுப்போடுவாங்கோ... நீ, என்னடான்னா... அநியாயத்துக்கு அடங்கிப் போயிட்டியே கருப்பா.. கிழவன் கைத்தடி மாதிரி. கொஞ்சம் விருட்டும் முரட்டும் வேணுமப்பா. நீயே ஒரு காலத்துல எப்படி இருந்தே... இந்த ஏரியாவிலே மனுஷன் நடக்க முடியுமா ? நடக்க விட்டியா! உறுமை வேளையிலே நடந்தான்னு புள்ளதாச்சியை அறைஞ்சி, தாய் வேற, புள்ளை வேறயா ஆக்கினேயே... எத்தனைப் பயல்களை அறஞ்சி ஒழுங்கு பண்ணி இருக்கே... எனக்கே கூட, எத்தினி பயம் உன் மேலே என்னயே அலமந்து பண்ணிட்டயே.. அப்படியாக் கொண்ட உனக்கு என்ன வந்துச்சு ? இப்படி, வாலாட்டுற நாய் ஆயிட்டயே. இப்பம், ஒன்னும் ஆயிடலை. ரெண்டு வாட்டி, உன் விசுவரூபத்தை எடுத்து நில்லு. நாலு பேரை ரத்தம் கக்க வையி.... கொஞ்சம் பேரை, வயிறு நோக வையி... அப்போதான் தாழிங்க மனசுல கொஞ்சமாவது பயம் வைக்குமப்பா.. இல்லேன்னா சோத்துக்குப் பறக்கிற நாய்கள்கூட, குண்டிக்குத் தண்ணி கொண்டு வரச் சொல்லுவாங்க... உன்னியே.... என்னமோ போ"...

மிகக் கவனமாக அவர் சொல்றதைக் கேட்டுக்கொண்டு நடந்து வந்தான் கருப்பன். "ஆமாம்", 'அவர் சொல்வதெல்லாம் உண்மை' என்கிறாற்போல, தலையை அசைத்துக்கொண்டான் அடிக்கடி.

டீக்கடை பெட்ரோமாக்ஸ் வெளிச்சம் தெரிந்தது.

"நான் டீக்குடிக்கப் போறேன். உனக்கும் ஒரு சிறட்டையில, வாங்கித்தரவா ? கடைக்குப் பின்னாலே வர்றியா !"

"வேணாம்".

முத்துப்பாண்டி யோசித்துக்கொண்டு நின்றார். அப்புறம் சொன்னார்.

"ஒரு கில்லாடித்தனம் பண்ணுவோமா ? நீ சரின்னா. நம்ம ரெண்டு பேருக்கும் நல்லது."

"சொல்லுமே ?"

"டீக்கடைக்காரன் இருக்கானே, அதான் பேச்சிப்பய கொஞ்சம் 'சல்லு புல்லுன்னு' நாலு காசு பண்ணி இருக்கான். ஆள், நம் வளைப்புக்கு வளைவான். அவன் மக ஒருத்தி இருக்கா... விடை குட்டி. நீ அவளைப் பிடியேன். பள்ளிக்கூடம் விட்டு, இந்த வழியாத்தானே வருவா.. பக்குன்னு பிடி. சேஷ்டை பண்ணு... ஆள் பேயோட்ட என்கிட்டதானே வரனும்".

"ஆனா, இங்க நான்பிடிச்சுடுவேன். ஆனா, அந்த இடம் மாடசாமிக்கு அதிகாரம் உள்ள இடம். அங்கனே வந்து, நான் திங்கவோ, குடிக்கவோ முடியாதே ..."

"அப்படியும் வேற இருக்கா?"

"ஆமாம்... சிவனார் எங்களுக்கு அதிகார எல்லை பிரிச்சுக் கொடுத்திருக்கிறார்."

"எனக்கு வேண்டியது காசு. உனக்குக் கோழியும் சாராயமும். இப்படி பண்ணினா என்ன ?".

"சொல்லும்."

"பூசை முடிச்சு கோழியையும் சாராயத்தையும் இங்க கொண்டு வந்துடறேன்".

"ரொம்ப சரி."

"எப்படி நம்ப டுபாக்கூர் வேலை ?"

"ஆங்.. என்ன வேலை ?"

"டூபாக்கூர் வேலை, அப்படின்னா, பேத்து மாத்து வேலை. என்ன கருப்பா, தமிழே தெரியலயே உனக்கு ? சரி பசிக்குது. நான் கிளம்பறேன்.. நாளைக்கே பிடிச்சுக் கிடனும், பேச்சி மவளை, சரியா ?"

"சரி நான் புறப்படறேன்."

"சரி புறப்படு. எங்கனே இப்போ..."

"மரத்துக்குதான்" என்று களைப்புடன் சொன்னான் கருப்பன்.

"சரி நானும் மேலும் நாலு இடத்துல முயற்சி பண்ணறேன். நாலு கொடை, ரெண்டு கடா வெட்டு, ரெண்டு பேய் விரட்டுன்னு நடந்தா தானே நமக்கும் நல்லது, ஊருக்கும் நல்லது."

டீக்கடை, கூத்து முடிந்த மைதானம் மாதிரி வெறுமையாகக் கிடந்தது. பேச்சி, தன் மனைவியுடன், சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்தான். ஆம்பிளையைக் கண்டதும் பேச்சியின் மனைவி எழுந்து, சாக்குப் படுதாவை விலக்கி, அந்தப்புரத்துக்குப் போனாள். வந்தவர், கோவணத்துடன் வேறு இருந்தாரே ?

"வாங்க, மந்திரக்காரரே. குளியல் ஆச்சாக்கும் ...."

"ஸ்நானம் ஆச்சி.." என்றார் முத்துப்பாண்டி. அப்படிச்



சொல்வதில், ஒரு மரியாதை, மேலான பண்பு மிளர்வதை அவர் உணர்ந்து இருந்தார். வேஷ்டியை உதறி, இடுப்பில் சுற்றிக்கொண்டார். மூதாட்டிகள் மார்பு மாதிரி நீண்டு தொங்கின விபூதிப்பையிலிருந்து, திருநீற்றை எடுத்துப் பூசிக்கொண்டார். அவர் நின்ற இடம், கல்லாவுக்கு எதிரே. அங்குதான் முருகன் தன் மனைவிமார்களுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தார். கண்ணை மூடிக் கொண்டு சில நிமிஷங்கள், மந்திரம் போல சில வார்த்தைகளை முணுமுணுத்தார்.

பேச்சி அவரைப் பார்த்துக்கொண்டிருந்தவன், அவனையும் அறியாமல் எழுந்து நின்றான். இயல்பாகவே தன் கைககளைக் கட்டிக் கொண்டான்.

"மூட்டு வினையெல்லாம் தீர்த்துவிடு முருகா...

ஏவல் பில்லி சூனியம் எடுத்துவிடு கருப்பா...

கண்ணேறு, கருப்பு, கழித்துவிடு பெரிய கருப்பா...

பெண்ணை விட்டுப் போயிடுவாய்... பிள்ளை மேல் வாராதே.... கண்ணைப்போல பாதுகாரு பச்சைமரக் கருப்பு தேவா..." என்று சொல்லிக்கொண்டே வந்தவர், பல்லை "நறநற"வெனக் கடித்துக் கொண்டு, "ம்".. 'சே'... 'தாழி' என்று ஒலிக்குறிப்புகளை எழுப்பிக்கொண்டு நின்றார். பேச்சிக்குப் பயம் பிடித்துக்கொண்டது.

"மந்திரக்காரரே... மந்திரக்காரரே..." என்றார் இரண்டு முறை பேச்சி.

முத்துப்பாண்டி கண்விழித்தார். தன் சுற்றுச்சூழலை ஆச்சர்யமுடன் ஏதோ அயல் கிரகத்தில் இருந்து வந்தவர் போன்று ஒரு முறை பார்த்துக்கொண்டார். உடம்மை உதறிக் கொண்டார்.

"ம் ! அப்படியா சங்கதி ?" என்று கூரையைப் பார்த்துச் சொன்னார். விசுப்பலகையில் அமர்ந்தார்.

"என்ன, மந்திரக்காரரே !" என்றார் பேச்சி...

"என்னவோ மாதிரி, உடம்பை முறிச்சுப் போடறாம்பா... அவன்"

"யாரு ?"

"வேற யாரு.... கருப்பன்தான்... பெரியவன்."

"யார் யாரு சொன்னிய ?"

"பெரிய கருப்பு. எத்தனைவாட்டி சொல்றது ? அவன்தானே என்கிட்டே ஒண்டிக்கிட்டு என்வாக்குல வர்றது ! நான் சொல்றது எல்லாம் பலிக்குன்னா, சங்கதி அதுவாம் இல்லை ? பய, என் கைப்பிடியில அடக்கம் வா ?"

"என்ன சாப்பிடறிய..." என்ற படி ஒரு காய்ந்த வாழை இலைத்துண்டை எடுத்து, அழுக்கு வேஷ்டியில் துடைத்து, அதில் இரண்டு வடையை வைத்து அவர் முன் வைத்தான் பேச்சி.

"எதுக்கு இந்த இழவு !"

"தின்னுங்க.." என்று வேண்டினான் பேச்சி.

வேண்டா வெறுப்பாக வடையைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டார் அவர். இஞ்சி, தட்டுப்பட வடை நன்றாகவே இருந்தது. பேச்சி, டீ போட்டுக்கொண்டு கேட்டார்.

"கூரையைப் பார்த்துட்டு என்னவோ சொன்னிய, என்னன்னு விளங்கலையே."

"அவன்தான் என்னமோ சொன்னான்... ஏதோ சொன்னதைச் செய்யாத சொங்கிப்பயன்னு, உன்னைத்தான். என்னமாவது வேண்டுதலை செய்துக்கிட்டு, அதை நிறைவேற்றலையோ ? வீட்டுல யாருக்காச்சும் சுகவீனமோ, எல்லாம் கருப்பன் வேலை".

டீயை ஆற்றிக் கொண்டு இருந்தவன் கை படக்கென்று நின்றது.

"ஆமாங்க.. இந்தப் பொம்பளை உடம்பு சுகவீனமா இருந்தப்போ கோழி போடறேன்னு சொன்னேன். எங்கே பண்றது ? சனி, சம்சாரத்தோடு வந்த மாதிரி, வந்து போனா ஒரு வில்லங்கம். என்ன பண்றச் சொல்றிய... அதை ஞாபகத்துல வச்சிக்கிட்டு கேக்குதாக்கும் ?"

"பொல்லாத பயன்னா அவன் ? ஒரு வார்த்தைய விட்டுட்டா, பிடுச்சுக்கிடுவானே ! இங்கனே சுத்திச் சுத்தித் திரிவான் வீட்டுல, யாருக்காச்சும் உடம்பு சுகவீனமா இருக்கனுமே".

"சரியாச் சொன்னிய... பொட்டைக் குட்டிக்கு நேத்திலேந்து சாயங்காலம் ஆனா அனல் காயுது. உடம்பு சுடுது ! என்னடான்னு பார்த்தேன். இதுதான் சங்கதியா ?"

"பின்னே வேற ! நான் வர்றச்சே பார்த்தேனே. அந்த தண்ணி அண்டாவுக்குப் பக்கத்துல குந்திக்கிட்டு இருந்தான்..."

"அதா ?"

"ஆமாம். வேற யாரு ? தாழி அவன்தான்."

பேச்சியின் முகம் வெளிறிப் போயிற்று. பித்தளை அண்டாவையே பார்த்துக்கொண்டு இருந்தான். அண்டாவுக்குப் பக்கத்தில் இடம் இருந்தது.

"மந்திரக்காரரே.. பூசை போட்டுருவம். என்ன ஆகும் ?"

டீயைக் குடித்துக்கொண்டு முத்துப்பாண்டி சொன்னார்.

"பொன்னு, அந்தி நேரத்துல யாரோ அறுத்துப் போட்ட கோழிக் காலை மிதிச்சு இருக்கா.."

"தாழி மவ செய்தாலும் செய்திருப்பா.. என்ன பண்றது. மந்திரக்காரரே ?..."

"பரிகாரம்தான். பயலுக்குப் பூசை போட்டுருவம். ஒரு இருநூறு ரூபாயாவது வேணும். இப்படியே விட்டா, பொண்ணுக்கு வயிறு வீங்கி வயித்தாலே போயி, அப்புறம்..."

"வேணாம். உங்க வாயாலே அதைச் சொல்ல வேணாம்..."

"பின்னே ? தாழி, கோழி கெட்ட கேடு, என்ன விலை விக்குது. யோசிச்சு பார்க்கனும். இதையே, ஐம்பது ரூபாயிலும் பண்ணலாம். ஆனா எதுக்குப் பண்ணறோம். கருப்பு சந்தோஷப்பட வேணாமா ? ஏதோ பண்ணோம்னு பண்ணா, என்ன பிரயோசனம். எனக்கென்ன போச்சு ? ஒத்தை ரூவா கொடு பண்ணி வைக்கிறேன்."

"வேணாம். வேணாம் மந்திரக்காரரே. சாமிக்குப் பண்றதுலே குறை வைக்கப்படாது. நூத்து அம்பது கொடுத்துடறேன். நிறைவா பண்ணி வையுங்கோ. வயசுப்

பொண்ணு படுத்துக்கிட்டா மனசு கேக்கவா செய்யுது... ?"

கல்லாவைத் திறந்து, பத்து, இருபது, அஞ்சு, இரண்டு, அழுக்கு ஒற்றை ரூபாய் நோட்டுகளையெல்லாம் சேர்த்து, ஒரு வழியாக நூற்று ஐம்பதைத் தயார் செய்து, அவரிடம் தந்தார் பேச்சி.

"அப்ப சரி... நாளை வெள்ளி, ராத்திரிக்குப் பூசை வச்சுக்குவோம். வடை, டீக்கு என்ன காசு ?"

"சும்மா இருக்கட்டும். போங்க.... இதெல்லாம் ஒரு சங்கதியாட்டும் ?"

கையில் சில்லறை புழங்கியது. வேலையும் ஒன்று வந்திருக்கிறது. மிகுந்த உற்சாகம் கொண்டவராக ஆனார் முத்துப்பாண்டி... தென்னஞ்சோலை சாராயக் கடைக்கு போய் குடித்தார். சாராயம் கூட இனிப்பாக இருப்பது மாதிரி தென்பட்டது. அவருக்கு.

"வியஞ்சனம் என்ன வேணும்யா ? ஊறுகாய் தரட்டுமா !" என்றான் கடைக்காரன்.

"தாழி... ஊறுகாயா ? என்ன இருக்கு உன் கடையில !"

"கறி இருக்கு. தலைக்கறி. நண்டுப்பொறியல், எறா எல்லாமும்தான் இருக்கு. உனக்கு என்னையா வேணும் ?..."

"உனக்கு எதுக்கடா இந்தச் சங்கதியெல்லாம்" என்கிற தொனி, அவன் வார்த்தையில் இருக்கிறதை அவர் உணர்ந்தார். சொன்னார்.

"நண்டும், எறாவும் கொண்டா"...


கடைக்காரன் அவரை ஆச்சர்யமுடன் பார்த்துச் சொன்னான்.

"உக்காருங்க அண்ணாச்சி..."

முத்துப்பாண்டி தனக்குள் சொல்லிக்கொண்டார்.
"காசில்லா ஆம்பிளையக் கட்டியவள் வேண்டாள்
வேசியும் விரும்பாள் உறவுகளும் விலகிடுமே..."

நிறையவே குடிக்க முடிந்தது அவரால். ஆனாலும் நிலை தடுமாறுவது என்பது அவர் அளவில் இல்லை. அவிழ்ந்து தோளில் புரளும் கூந்தலை அள்ளிக் கொண்டையாக முடிந்து கொண்டார். வேஷ்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு தோப்புக்கு அந்தப்புறமாக இருந்த வெள்ளச்சி வீட்டுப்பக்கம் நடந்தார். ஒரு கையில் பாட்டிலில், அவரின் பிரியமானவளான வெள்ளச்சி குடிக்க என்று சாராயம் வாங்கி இருந்தார். கடை திருப்பத்தில், வெற்றிலை பாக்குக் கடையில், நல்ல கைச் சுருட்டாக நாலு வாங்கி முடித்துக் கொண்டார். வெள்ளச்சிக்குச் சுருட்டு பிடிக்கும். தோப்புக்கு வடக்காக, வடகரை போகிற ரஸ்தாவில் அரைமைல் நடந்தால், வடக்கு வாசல் விழும். அங்குதான், சவுக்குத் தோப்புக்குள் குடிசை போட்டுக் குடி இருந்தாள் வெள்ளச்சி.

வெள்ளச்சியோடு அவருக்கு அண்மைக் காலத்துப் பழக்கம்தான். சுமார் நாலைஞ்சு வருஷத்து உறவு. வெள்ளச்சியின் பட்டியலில் அடிக்கடி சில பேர் ஏறும். சில பெயர்கள் வீழும். சமீப காலங்களில், மேலத்தெரு பால்கார பத்மநாபன், அவளைக் கொண்டிருந்தார். என்றாலும், முத்துப்பாண்டியையும் அவள் கைவிட விரும்பவில்லை. 'தாய்க்கு நாலு குழந்தைகள் இருந்தால், நாலையுமே அவள்



விரும்புவது இல்லையா' என்று கேட்பார். யாருக்குத்தான் தத்துவம், மெய்ஞானம் லயிக்காது ?

தோப்புக்கு வெளியே நின்று, ஜாக்கிரதையாக பால்காரன் வில் வண்டி நிற்கிறதா என்று கண்காணித்தார். இல்லை. ஆக அவர் தைரியமாகக் கதவைத் தட்டலாம். தட்டினார்.

"யாரு ?" உள்ளிருந்த குரல் கேட்டது.

"நான்தான் முத்துப்பாண்டி"

கொஞ்சம் அமைதி. எண்ணெய் காணாத கதவு, நரநரவென்று சப்தத்துடன் திறந்துகொண்டது.

வெள்ளச்சி, கசங்கிய புடவையுடனும், கலைந்த கூந்தலுடனும் நின்றிருந்தாள்.

"இப்பத்தான் வழி தெரிஞ்சதாக்கும் !" என்றாள் வெள்ளச்சி. கலைந்த கூந்தலை முடிந்துகொண்டாள். "என்ன பண்றது வெள்ளை. தாழி நம்ம பிழைப்பு நாறிப் போச்சே... இந்தா.."

"என்னது !"

"உனக்குப் பிடிச்சதுதான்..."

பாயில் அமர்ந்தார்கள் இருவரும். நகர்ந்து சுவரில் சாய்ந்து அமர்ந்துகொண்டார் அவர். இரண்டு அலுமினிய டம்ளர்களை எடுத்தாள் வெள்ளை.

"எனக்கு வேணாம்..."

"நிறைய போட்டுக்கினியோ ! பதார்த்தம் ஒன்னும் வாங்கியாரல்லையா ?"

"மறந்துட்டேன்".

அவள் சாராயத்தில் தண்ணீர் கலந்து ஒரே 'தம்'மில் குடித்தாள்.

"எங்க ஊருலதானே இருக்கீரு ?"

"ஊருலதான். எங்க போறது, வேறே ? மனுஷங்க தாழி, தெய்வபயம் அத்துப் போயிட்டாங்க. தாழி ஊருல ஒருத்தனும் விளங்கப் போறது இல்லை..."

அவள் சிரித்தாள்.

"என்ன சிரிப்பு ?"

அவள், ஊறுகாய் மட்டை தேடி எடுத்து வந்தாள். உட்கார்ந்து, மீதியையும் குடித்து முடித்தாள். ஊறுகாயை வழித்து நாக்கில் தடவிக்கொண்டாள்.

"வயிற்றாலே விடுற சாபம் எல்லாம் பலிக்குமா ?"

"வயிற்றாலேயா ?"

"பின்ன என்ன ? நீரு கொடை, பலின்னு ஊரை ஏமாத்திக்கிட்டு இருப்பீரு. ஜனங்க, ஏமாந்தா அவங்க நல்லவங்க. ஏமாறலைன்னா, நீரு சாபம் கொடுப்பீரு. என்னையா, நியாயம் பேசறீரு ! வயிறு காஞ்சி சாபம் விட்டா அது பலிக்குமா !"

"நான் ஊரை ஏமாத்தறதா சொல்றே ? கருப்புகூட பட்டினி கிடக்கிறான். அவனைத் திருப்திப்படுத்தினா, நாலு நல்லது நடக்குமா, நடக்காதா ? நீயே சொல்லு"!

"யார் பட்டினி கிடக்கிறான்னு சொன்னே ?"

"நம்ம பெரிய கருப்புதான்..."

வெற்றிலையைத் துப்பிவிட்டுச் சிரித்தாள் வெள்ளச்சி.

"இந்த 'கப்சா'ல்லாம் என்கிட்டே வேணாம். பேய்கிட்டே நீ பேசினியாக்கும். ஆச்சு எனக்கும் நாற்பத்தி ஏழு. இதுவரைக்கும் ஒரு மூதிகூட என் கண்முன்னாலே வரல்லையே.."

"தூஷணை பேசாதே... வெள்ளை, நேத்திக்குச் சாயங்காலம் கூட, கருப்பு என் கூட நடந்துவந்தான். பாவம், மெலிஞ்சு போய்க்கிடக்கான். சவரட்சண இல்லை. அந்தக் காலத்துல, ஆடு, கோழின்னு நிறைய கிடைச்சது. இப்ப, தாழி, எல்லாப்பயலும் இங்கிலீஷ் படிச்சுட்டு சாமி பூதம் இல்லைங்கறான். அவனுக்காகவே நான் ஒரு ஏற்பாடு பண்ணி இருக்கேன்..."

"ஊரை ஏச்சுப் பிழைக்கிற பொழைப்பு எதுக்கு பண்ணீரு ? ஒழுங்கா ஏதானும் வேலையைப் பாரும்யா. வேணும்னா சொல்லு. பால்காரர் கிட்டே சொல்லி உனக்கு ஒரு வேலை போட்டுத் தரச் சொல்றேன். என்ன சொல்றீரு ?"

"அவன் கிட்டயா !"

"ஏன் ?"

அவள் பாயை உதறிப் போட்டு, போர்வையை அதன் மேல விரித்தாள்.

"இந்தா சுருட்டு ?"

வெள்ளச்சி, சுருட்டைப் பற்ற வைத்து, புகையை விட்டாள். பெண் சுருட்டுப் பிடிப்பதை அதன் அழகை ரசித்தார் முத்துப்பாண்டி.

"ஏன் அவர்கிட்டே வேலை பார்க்கக்கூடாது ?"

"அவன் பிரியாணிப் பொட்டலம் வாங்கி என்கிட்டயே உனக்குக் கொடுத்து அனுப்புவான். இது நமக்குத் தேவையா ? நம்மாலே மாமா வேலை பார்க்க முடியாது. மந்திரவாதியா, மாமாவா ? நீயே சொல்லு."

"உன் இஷ்டம்".

அவள் காறி எச்சிலை உமிழ்ந்தாள்.

"பணம் ஏதாச்சும் இருக்கா ?"

"பேச்சி, தூது கொடுத்தான். கொடை போடனும் கோழி வாங்கனும்".

"ஏழு எட்டு ரூபாயை விட்டெறிஞ்சா கோழி கிடைக்குது நூறு ரூபாய் என்னத்துக்கு ? அம்பது கொடுத்துட்டுப் போம். விடிஞ்சா செலவு இருக்கு".

"அம்பது போதுமா ?" என்றபடி அதைக் கொடுத்தார்.

"பாவம் உமக்கும் வேணுமே வச்சிக்கிடும்..."

விநாயகா டாக்கிஸ், விளக்கு அணைந்து கிடந்தது. மணி, இரண்டுக்கும் மேலே என்று புரிந்தது. முத்துப்பாண்டிக்கு ஜனங்கள் ஒருத்தரும் நடைபாதையில் இல்லை. போதை சுத்தமாகப் போய் விட்டிருந்தது. அவருக்கு, 'வெள்ளச்சி.. வெள்ளச்சிதான்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டார். பேரன் பேத்தி எடுத்த இந்த வயசிலும், எப்படி ஒரு குதிரைத் தெம்பு ? இதுகள்ளாம் ஒருவன் வாய்ப்பு இது மாதிரி தொழில் பண்ணி வாழறதுக்கு, அதுக்குத் தக்க உடம்பு வேண்டும்தானே, இல்லையென்றால் பால்காரன் என்னத்துக்கு அவள்மேல், அள்ளிக் கொட்டுகிறான். எல்லாம் சுழிதான். அண்டமாமுனிவர் எல்லாம் அடக்க ஸ்தலம். ஜனன வாயில். என்ன முரண் ?

ஓடை சலசலத்தது. இறங்கிக் கால் கை முகம் கழுவிக் கொண்டார். முகத்தில் இருந்த வெற்றிலை எச்சிலைத் துடைத்துக் கழுவினார். புளியஞ் சாலையை கடந்து,தெற்கு புளிய மரத்தண்டை வந்து சேர்ந்தார்.

உடம்பு நெட்டி முறித்தது. மயிர் குத்திட்டது. உடம்பு ஆவேசம் வந்ததுபோல் ஆயிற்று. சுருட்டு வாசனை கம்மென்று கமழ்ந்தது.

கருப்பு, அவர் எதிரில் நின்றான்.

"வா.... கருப்பா. உனக்கு நூறு வயசு. இப்பத்தான் உன்னையே நினைச்சேன்."

"நூறா? நான் இந்த இடத்துக்கு வந்து ஐநூறு வருஷமாய்ட்டு" என்றான் கருப்பு.

"ம்.... மனுஷனுக்குச் சொல்றதை உனக்குச் சொல்லிட்டேன்". ஒரு விஷயமில்லாமல் அவர்கள் களத்து மேட்டுப் பக்கம் நடந்தார்கள்.

"பேச்சிப் பயலை அமுக்கிட்டேன். பய, பணம் கறந்திருக்கான். நாளை ராத்திரி பலி, ஷோக்கான கோழி. எல்லாம் உனக்காகத்தான் ராசா. பாவம். நீயும் தான் எத்தனை நாள் பசியா கிடப்பே. நீயும் வேலையைக் கச்சிதமாய் பண்ணி இருக்கியே."

முத்துப்பாண்டி கருப்பன் முகத்தைப் பார்த்தார். அது சந்தோஷத்தில் இருந்ததாக அவருக்குப் பட்டது.

"எங்கேந்து வர்றீரு. கவிச்சை வாசனை வீசுதே ?"

"சரியான தூர்வாசனைக்காரம்பா நீயி. வெள்ளச்சி வீட்டுல இருந்துதான்.. அதுக்கு உன்மேல நம்பிக்கையே இல்லைப்பா.."

"பயந்துக்கிறவனுக்குத்தான் நாங்க எல்லாம். அப்படித்தான் சிவனார் எங்களுக்கு வரம் கொடுத்திருக்கார். அவளே ஒரு பேய், நான் என்ன பண்ண முடியும், நீரே சொல்லும் ?"

"அது சரி, நம்பினவருக்குத்தானே நாராயணன். நாளை ராத்திரிக்கு சரியா இரண்டு மூன்று மணிக்குள்ளாற வந்துடறேன். கோழி ரத்தமும், சாராயமும், அவ்ளோதானே ?"

"அவ்ளோதான்".

"சுருட்டு ?"

கருப்பன், திடுமென புகை விட்டது. எத்தனை பெரிய சுருட்டு.

"இது மாதிரி எவன் இப்போல்லாம் பண்றான் ? எல்லாம் விரல் நீளம்". கருப்பன் சிரித்தார்.

களத்துமேடு வந்தது.

"இதுக்கு மேலே நான் வர முடியாது. அது மாடசாமி தங்கி இருக்கிற இடம். இப்படியே நின்னுக்கிறேன்.

"நல்லது,நாளைக்கு வர்றேன்"

"சரி. மறக்க மாட்டீரே ?"

கொஞ்ச தூரம் போய், திரும்பிப் பார்த்தார் முத்துப்பாண்டி. தென்னை மரத்துக்கும் மேலே உயரமாக நின்றான் கருப்பன்.

பேச்சியின் மகள் மிரள மிரள விழித்தாள். 'ஹி... ஹி...' என்று குதிரை கனைப்பது மாதிரி சிரித்தாள். அப்புறம் "எங்கேடா கோழி" என்றாள். முத்துப்பாண்டியைப் பார்த்து, "வாடா என் மவனே, பேமானி" என்றாள் அவள்.

பெற்றோர்கள் மட்டுமல்ல. முத்துப்பாண்டியே கொஞ்சம் அதிரத்தான் செய்தார்.

"தாழி கருப்பன்தான். ரொம்ப 'ஸ்டாங்கா' பிடிச்சிருக்கான். தாழி... இன்னிக்கு அவனா, நானான்னு பார்க்கலைன்னா, நான் முத்துசாமி மகன் இல்லேப்பா !"

"புடுங்கக்கூட முடியாது."

அம்மாக்காரியும் பேச்சியும் திடுக்கிட்டார்கள்.

"வண்ட வண்டயா பேசுது பாருங்க, இம்மாம் பொண்ணு".

"இவளா பேசறாள் ? அந்தத் தாழில்லே பேசறான் இன்னும் அரை 'அவர்லே' பாரு..."

முத்துப்பாண்டி கோலமாவு வாங்கி, சக்கரம் வரைந்தார். பதினாறு மூலை கொண்ட சக்கரம். அதன் மேல் மந்திர எழுத்துக்கள் எழுதினார். அதன் மேல் பலகை போட்டு, பெண்ணை அமர வைத்தார்கள்.பெண், தலையை விரித்துப் போட்டுக் கொண்டு பயங்கரியாக அமர்ந்திருந்தாள்.

வேப்பிலைக் கொத்தை எடுத்துக்கொண்டு, முத்துப்பாண்டி கேட்டார்.

"கோழி ரெடியா !"

"ரெடி சாமி."

"சாராயம் ?"

"ரெடி."

"சுருட்டு ?"

"வைக்கப்பட்டிருக்கு."

"என்ன சமையல் ?"

"நீங்க சொன்ன மாதிரிதான். கோழிக் குழம்பு, மீன் குழம்பு, கருவாட்டுக் குழம்பு."

"போட்டு பிசந்திட வேணாம். தனித்தனியாவே இருக்கட்டும்". அவருக்குத் தனித்தனியாகச் சாப்பிடத்தான் பிடிக்கும்.

"நான் சொன்ன மாதிரி மண் கலயங்கள் தயாரா ?"

"ஆகா."

முத்துப்பாண்டி, வர்ணிக்க ஆரம்பித்தார்.

"வாடா கருப்பா... வானத்தில் வாழ்வோனே...

தேடுவார்க்குத் தெம்பூட்டும் தென்னை மரக்கருப்பா...

கண்ணுக்குத் தெரியாமல் விசுவரூபில் வாழ்வோனே..

மனசுக்குத் தெரியாமல் மண் மேல வாழ்வோனே...

கோழி ரத்தம் குடிச்சுவிட்டு குலமகளைக் காத்திடுடா...

சாராயம் குடிச்சுப்போட்டு சரவிளக்கைக் காத்திடுடா...

சுருட்டைக் குடிச்சுக்கிட்டு சுந்தரியைக் காத்திடுடா...

இறைச்சிக்கறி தின்னு இளமகளைக் காத்திடுடா...

பூசைகளை ஏற்று புத்திரியைக் காத்திடுடா...

கொடையை ஏற்றி கொழுகொம்பைக் காத்திடுடா... "

- ஒரு வழியாக நள்ளிரவு தாண்டி கருப்பன் போகச் சம்மதித்தான்.

"போறியா ?"

"போறேன்."

"எந்த வழியா போறே ?"

"வந்த வழியே போறேன்."

"திரும்பி வருவியா ?"

"திரும்பி வரமாட்டேன்."

"மீண்டும் வருவியா ?"

"எல்லைத் தாண்டி வரமாட்டேன்."

"சிவன் மேல சத்தியமா ?"

"சிவனார் மேலே சத்தியமா ?"

"சரி.. போ..."

"போறேன்..."

முத்துப்பாண்டி சொன்னபடியே, கலயங்களில் சோறு, கறி குழம்பு என்று வைத்துக் கொடுத்ததை எடுத்துக்கொண்டார். பையில் சாராயமும், தோளில் கால்கட்டிய கோழி பாதி உயிரை வைத்துக் கொண்டு 'கீகீ' என்று குரல் எழுப்ப, முத்துப்பாண்டி, தட்சணைப் பணம் அம்பது ரூபாயுடன் நடந்தார். மனம், உற்சாகத்தில் குதி போட்டது. கருப்பன் காத்திருப்பான்.

புளியஞ்சாலைப் பக்கமாகத் திரும்ப இருந்தவர், ஒரு கணம் யோசித்தார். சவுக்குத்தோப்பு வழியாகத் திரும்பி நடந்தார். இன்றைக்கும் பால்காரன் வந்திருக்கக் கூடாது என்று கடவுளை வணங்கிக்கொண்டார். அவர் எதிர்பார்த்தபடி தான் நடந்தது. வெள்ளச்சி கதவைத் திறந்தாள்.

முத்துப்பாண்டிக்கு கருப்பன் நினைவு வரவே இல்லை. விடியும் வரை கருப்பன் மனிதனுக்காகக் காத்திருந்தது. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு. சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி



Licence No. N/MS(C)/PP-25
ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு
அரசு மேல்நிலைப்பள்ளி
நியாய விலைக் கடை
மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவி
'நமக்கு நாமே' திட்டம்
ஆரம்பப் பள்ளி
அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்
ஆரம்ப சுகாதார நிலையம்
கிராமப்பகுதிகளில் 20,000 தெருவிளக்குகள்

வளம் காண்போம் - தமிழக
நலம் காண்போம் !





# வளம் காண்போம் - தமிழக நலம் காண்போம்

**மேதகு ஆளுநர்** அவர்களின் உரையின் மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
சட்டமன்றப் பேரவையில் 23-3-1998 அன்று ஆற்றிய உரை.

*வெளியீடு :*
*இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை,*
*தமிழ்நாடு அரசு.*

சிறப்பு வெளியீடு எண்: 9

'தமிழரசு' இலவச வெளியீடு

11-4-1998

*வெளியிடுபவர்:*

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை-600 002.

## மேதகு ஆளுநர் அவர்களது உரை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்துச் சட்டமன்றப் பேரவையில் 23.3.98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை

ஆளுநர் உரையின் மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பல்வேறு கட்சித் தலைவர்களும் பேரவை உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துவைத்து, இறுதியாக அவர்கள் எடுத்துவைத்த கருத்துக்கள் எல்லாவற்றின் மீதும் என்னுடைய பதில்களைச் சொல்வதற்கு நேரம் இல்லாவிட்டாலும் கூட, அடுத்து; தொடர்ந்து வர இருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் நடைபெறுகின்ற பொது விவாதம், தனித் தனித் தலைப்புகளிலே வருகின்ற மானியங்களின் விவாதங்கள் இவைகளில் அதற்கான விளக்கங்களை, விடைகளை அளிக்கமுடியும் என்ற நிலையில் குறிப்பிட்ட சில உறுப்பினர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி மாத்திரம் எடுத்துக்கூறி சில பொதுவான செய்திகளை இந்த மாமன்றத்திலே பரிமாறிக் கொள்ளலாம் என்ற அளவோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன்.

நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுற்று, அந்தத் தேர்தல் முடிவுகளைப் பற்றி மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்.

''இது கவர்னருடைய உரையல்ல. கருணாநிதியினுடைய உரை'' என்றுகூட விமர்சிக்கப்பட்டு வெளியிலே பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. இந்த அவையிலும் கூறப்பட்டிருக்கின்றது.

## ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்

ஒரு உண்மையை - இதுவரையிலே உணராமல் இருக்கின்ற யாராவது சட்டமன்ற உறுப்பினர்கள் இருப்பார்களேயானால் அவர்கள் உணர்ந்து கொள்வதற்காகச் சொல்கிறேன் - எந்த ஒரு ஆளுநர் உரையாக இருந்தாலும் அது அரசாங்கத்தினுடைய உரைதானே தவிர, முதலமைச்சர் அவர்களுடைய உரையைத்தான் ஆளுநர், அரசின் சார்பாக அவைக்கு வழங்குகிறார் என்பதுதான் உண்மையே தவிர, முழுக்க முழுக்க அரசுக்குச் சம்பந்தம் இல்லாத உரை என்று யாரும் கருதிவிடக்கூடாது.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் இன்று ஆளுங்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய தோழமைக் கட்சிகள், அவையிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி மற்றும் அதனுடைய கூட்டணிக் கட்சிகள் எதிர்பார்த்த அளவுக்குப் பெரும்பாலான இடங்களிலே வெற்றி பெறவில்லை என்ற உண்மை உலகத்திற்கே தெரிந்தது.

எனவே, அதைப்பற்றி நான் விளக்க விரும்பவில்லை. ஆனால், இத்தகைய முடிவுகளின்போது இதற்கு முன்பு இந்த அவையிலே திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி நடந்துகொண்டது என்பதையும், குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், வேறு சில கட்சிகளும் தற்போது இங்கே எப்படி நடந்துகொண்டன என்றும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

1980-ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலகட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திராகாந்தி அவர்களுடைய தலைமையிலான காங்கிரஸ் கட்சியும் தேர்தல் உடன்பாடு கொண்டு, நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்ட போது, புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளில், 38 நாடாளுமன்றத் தொகுதிகளில் திராவிட

முன்னேற்றக் கழகம், இந்திரா காங்கிரஸ் அணி மகத்தான வெற்றியைப் பெற்றன. எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அந்தக் கூட்டணிக்குக் கிடைத்த இடங்கள் இரண்டே இரண்டு இடங்கள்தான். அப்போது நான் எதிர்க்கட்சியிலே இருந்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தது.

## மரபுக்கு விரோதமான மனப்பான்மை

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது நடந்துகொண்டதைப்போல, நடக்கின்ற, நடக்க வேண்டும் என்கின்ற நினைவே எங்கள் யாருக்கும் அப்போது வரவில்லை. அன்றைக்கு எனக்கு நேராக, இந்த அவையிலே நாங்கள் அமர்ந்திருக்கும்போது, ஆளுநர் உரையாற்றிய நேரத்தில் கருப்புக்கொடி காட்டப்பட்டது. இந்த அரசு பதவி விலக வேண்டும் என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பதாகை கூட அதி.மு.க. சார்பில் இங்கே காட்டப்பட்டது. இதுபோன்ற மரபுகள் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டு இடங்களைப் பெற்று, தோல்வியைத் தழுவிய நேரத்தில், இங்கே எந்தக் கட்சியாலும் கடைப்பிடிக்கப்படவில்லை.

அன்றைக்கு இந்த அவையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகமோ, இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களோ இந்த முறையைப் பின்பற்றுவது ஒன்றும் பெரிய காரியம் அல்ல; கஷ்டமான காரியம் அல்ல.

ஆனால், நாம் இந்த அவையிலே போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்கின்ற அந்த மரபுக்கு விரோதமாக நடக்கின்ற மனப்பான்மை கிஞ்சிற்றும் ஏற்படாத காரணத்தால் அன்று அந்தக் காட்சியை இந்த அவை கண்டது. அது எவ்வளவு பெரிய தவறு என்பதைத் தாங்கள், தங்களுடைய பெருந்தன்மையான தீர்ப்பின் மூலமாக இந்த அவைக்கு

விளக்கி நாட்டிற்கு உணர்த்தியிருக்கிறீர்கள், உறுப்பினர்களுக்கும் உணர்த்தி இருக்கிறீர்கள்.

தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியோ, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியோ கூட்டணி சேர்ந்து இந்த நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டுப் பெரும்பாலான இடங்களைப் பெறவில்லை என்பதற்கு, எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நண்பர் திருநாவுக்கரசு அவர்களும், மற்றும் பல உறுப்பினர்களும் தங்களுடைய விமர்சனங்களைச் சற்று வேகமாகவே செய்திருக்கிறார்கள்.

ஆனால், அதற்காக நான் வருத்தப்படவில்லை. சில நேரங்களிலே, அனுபவங்கள், அடுத்து நாம் எடுத்து வைக்க வேண்டிய அடிகளுக்கு உதவிடக்கூடும்; துணையாக இருக்கக்கூடும் என்ற அளவில் கடந்தகால அனுபவங்களை நாங்கள் இன்றைக்கு எங்களுக்குத் துணையாகக் கொள்கின்றோம்.

## முனைப்போடு பயணம் தொடர்வோம்

திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, "நீங்கள் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டுவிட்டீர்கள், எங்களை விட்டுவிட்டீர்கள், புதிய தமிழகம் கட்சியை விட்டுவிட்டீர்கள்" என்றெல்லாம் சொன்னார்.

நாங்கள் புதிய தமிழகத்தை என்றும் விடமாட்டோம். புதிய தமிழகமாகத், தமிழகத்தை ஆக்கவேண்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புகிறது. அதற்காகத்தான் தன்னுடைய பணியினை ஆற்றிக்கொண்டிருக்கிறது. நடந்து முடிந்ததற்குப் பிறகு, சில விஷயங்களை நாம் ஆராய்ந்து, யார் மீது குற்றம், எவர் மீது குற்றம் என்று ஒருவருக்கொருவர் குறை கூறிக் கொண்டிருப்பதைவிட, நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்கின்ற அந்த முனைப்போடு பயணத்தைத் தொடங்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

அந்த அடிப்படையிலேதான், நடைபெற்று முடிந்த தேர்தலில் ஏற்பட்ட முடிவை இருகூறாகப் பிரித்து, ஒரு முடிவு, தமிழகச் சட்டமன்றத்திற்காக நடைபெற்ற இடைத் தேர்தலில் இரண்டு தொகுதிகளிலும் இந்தக் கூட்டணி வெற்றி பெற மக்கள் ஆதரவு வழங்கியிருக்கின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்டி, நாடாளுமன்றத்திலே அளித்த வாக்கு, மத்தியிலே ஒரு நிலையான ஆட்சி அவர்களால் எதிர்பார்க்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதையும் கவர்னருடைய உரை விளக்கியிருக்கின்றது.

**யாரும் ஏமாறாதீர்**

இதனை எல்லோரும் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எதிராக மக்கள் இருக்கிறார்கள் என்று எண்ணி யாரும் ஏமாறத் தயாராக வேண்டாம் என்று நான் அவர்களுக்கெல்லாம் வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அவையில், பல பிரச்சினைகள், கொந்தளிப்பான பிரச்சினைகள், பரப்பரப்பான பிரச்சினைகள், இந்தப் பேச்சினால் என்ன விளைவு ஏற்படுமோ என்று நானே அஞ்சுகின்ற அளவிற்குப் பேசப்பட்ட பல பிரச்சினைகள் எல்லாம், பல்வேறு தலைவர்களாலும் உறுப்பினர்களாலும், இங்கே பேசப் பட்டிருக்கின்றன. அவைகளுக்குச் செல்வதற்கு முன்பு, நம்முடைய உறுப்பினர்கள் சிலர் தங்களுடைய தொகுதிகளைப் பற்றி எடுத்துச்சொன்ன அந்தச் செய்திகளுக்கு நான் முதலில் முக்கியத்துவம் கொடுக்க விரும்புகின்றேன்.

குறிப்பாக திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, அறந்தாங்கி சர்க்கரை ஆலை என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகின்றேன்; மத்தியிலே இருந்த ஐக்கிய முன்னணி அரசு, அதனுடைய தொழில்துறை அமைச்சர் முயற்சியால் நம்முடைய வேண்டுகோளுக்கு இணங்க, 21.3.97 அன்று ஈ.ஐ.டி பாரி நிறுவனத்திற்குச்

தினசரி 2500 டன் கரும்பு அரவை செய்யும் திறன் உள்ள சர்க்கரை ஆலை ஒன்றைப் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்திலே நிறுவ அனுமதி அளித்துள்ளது.

அந்த ஆலைக்குக் கரும்பு பயிரிட, கரும்புப் பகுதி ஒதுக்கீடு செய்யும் படி 25.6.97 அன்று ஈ.ஐ.டி. பாரி நிறுவனம், சர்க்கரைத் துறை ஆணையருக்கு விண்ணப்பித்துள்ளது. இந்த விண்ணப்பம் சம்பந்தமாக, அரசால் நியமிக்கப்பட்ட பகுதி ஒதுக்கீட்டுக் குழு, நிலப்பகுதிகளை ஒதுக்கீடு செய்கின்ற அந்தக்குழு பரிசீலித்தது; அரசுக்கு அதனுடைய பரிந்துரையை அனுப்பியுள்ளது. அதன் அடிப்படையில், அறந்தாங்கி ஆலைக்குப் பகுதி ஒதுக்கீடு ஆணை சர்க்கரைத் துறை ஆணையரால் 5.2.98 மற்றும் 17.2.98 அன்று வழங்கப்பட்டுள்ளது.

ஈ.ஐ.டி. பாரி நிறுவனம், அறந்தாங்கி வட்டத்திலே உள்ள குரும்பூர் என்ற கிராமத்தில் இந்த ஆலை அமைக்க ஏதுவாகத் தேவைப்படும் நிலத்தை வாங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்துள்ளது. மேலும் இந்த ஆலை நிறுவுவதற்கு நிதி நிறுவனங்களிடமிருந்து தேவைப்படும் கடனைப் பெறவும், இந்த நிறுவனம் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது. ஆலை நிறுவுவதற்குத் தேவையான நிலம் வாங்கப்பட்ட பின் ஆலைக்குத் தேவைப்படும் இயந்திரங்களைத் தருவித்து ஆலையை நிர்மாணம் செய்து முடித்து, இந்த ஆலை 1999 -ஆம் ஆண்டு இறுதியில் இயங்கத் தொடங்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தொடக்கத்திலே உரையாற்றிய நம்முடைய சுப்பராயன் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தமிழகத்திலே 8 விழுக்காடு மாத்திரமே நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவது மிகக் குறைவானது என்றும், வேறு சில மாநிலங்களைச் சுட்டிக்காட்டி அங்கெல்லாம் 40 விழுக்காடு, 30 விழுக்காடு

வழங்கப்படும்போது, இங்கே மாத்திரம் 8 விழுக்காடு என்ன நியாயம் என்றும் கேட்டார்கள்.

இந்த 8 விழுக்காடு என்பது 1997-98 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலே மொத்த வரி வருவாயிலே 8 விழுக்காடு என்பதாகும். அதன்படி உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வகையில் 662 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

இவை தவிர, கேளிக்கை வரியிலே 90 விழுக்காடு, 100.67 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. மேலும் முத்திரைத்தாள் மீதான மேல் வரி, நிலவரி வருவாயிலே தல வரி, தல மேல் வரி, பண்ணைக் காடுகள் வளர்ச்சி வருவாயிலிருந்து ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யும் தொகை, 10-வது நிதிநிலைக் குழுவின் பரிந்துரைகளின்படி உள்ளாட்சிமன்றங்களுக்கான மானியங்கள், குடிநீர் வழங்குவதற்கான கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற மானியம், பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான மானியங்கள், குறைந்த அளவு தேவைத் திட்டத்தின் கீழ் மானியங்கள் போன்ற பல்வேறு மானியங்களின் கணக்கில் 539.24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## உள்ளாட்சிகளுக்கு ரூ. 1,301.91 கோடி

இவ்வாறாக 1997 - 98ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 1301.91 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இது 9 அல்லது 10 சதவீதம்தான் இருக்கும். ஆனால், கர்நாடகத்திலே 36 விழுக்காடு இருக்கிறதே என்று சுப்பராயன் அவர்கள் வினவக்கூடும். அதற்கான விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இங்கே நம்முடைய மாநிலத்தில் எல்லாப் பொறுப்புகளையும் அரசு ஏற்றுக்கொண்டு, சில பொறுப்புக்களைத்தான் உள்ளாட்சி மன்றங்

களுக்குத் தந்து, அந்தப் பொறுப்புகளுக்கான தொகை ஒதுக்கும்போது 8 சதவீதம் அல்லது 9 சதவீதம் அல்லது 10 சதவீதம் என்கின்ற அளவிற்குத்தான் அது போய் நிற்கின்றது. உதாரணமாக, கர்நாடக மாநிலத்தில் 10ஆம் வகுப்புவரையிலே உள்ள ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கான சம்பளம், அவர்களைப் பற்றிய பொறுப்பு அத்தனையும் மாவட்ட பஞ்சாயத்துக்கள் மூலம்தான் நிர்வகிக்கப்படுகிறது. இங்கே ஆசிரியர்களைப் பஞ்சாயத்திலே ஒப்படைத்தால், நாளைக்கே போர்க்கொடி தூக்குவார்கள். அந்தப் போர்க்கொடிக்கு அடுத்த கொடியாக சுப்பராயனுடைய கொடி நிற்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏற்கெனவே அனுபவப்பட்டு இருக்கின்றோம்.

எம்.ஜி.ஆர் காலத்திலும் சரி, அதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி; ஆசிரியர்களுடைய ஒரு பெரும் கோரிக்கையே, எங்களை ஒன்றியத்திலோ அல்லது உள்ளாட்சி மன்றங்களிலோ ஒப்படைத்து விடாதீர்கள் என்பதுதான். எனவே, அவர்களை எல்லாம் ஒன்றியத்திலே, உள்ளாட்சி மன்றங்களிலே ஒப்படைத்தால், இன்னும்கூட அதிக சதவீதத்தை நிதி ஒதுக்கீடு நாம் அவர்களுக்குச் செய்யமுடியும். அது மாத்திரமல்ல; மருத்துவ மனையிலே கூட, 50 படுக்கைகள் குறைவாக உள்ள எல்லா மருத்துவச் செலவினத்தையும் அங்கெல்லாம் - கர்நாடகா போன்ற மாநிலங்களில், மாவட்டப் பஞ்சாயத்துக்களே ஏற்றுக்கொண்டு உள்ளன.

இதைச் சொல்லும்போது ஒரு கேள்வி எழும். ஏன் அப்படிப்பட்ட உரிமைகளை, ஆசிரியர் இல்லாவிட்டால் மற்ற உரிமைகளை ஏன் ஊராட்சிமன்றங்களுக்கு அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரக்கூடாது என்று கேட்கக் கூடும். இதற்காகத்தான் ஒரு குழுவையே நாம் இன்றைக்கு அமைத்து இருக்கின்றோம்.

இதற்கிடையில், மேற்கு வங்கத்தைப் பார்த்தால், அங்கே 16 சதவீதம்தான். அவர்கள் பேசிய பிறகு, அங்கெல்லாம் தொடர்புகொண்டு,

அதிகாரிகளைவிட்டு, தொலைபேசியில் தொடர்புகொண்டு, கேட்டபோது, மேற்கு வங்கத்திலே 16 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட்டு வருகிறது. அங்கே மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மேற்கு வங்கத்தில் உள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக பட்ச பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன என்ற உண்மையை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

## அதிக அதிகாரம் வழங்கிடக் குழு

அதுமாத்திரமல்ல; அரசியலமைப்புச் சட்டத்திலே 73, 74-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பெரும்பாலான இனங்கள், உதாரணமாகக் கல்வி, சுகாதாரம் ஆகிய இனங்கள் எல்லாம் உள்ளாட்சி அமைப்புகளிலேதான் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இங்கே மேற்கு வங்கத்தை ஆதரிக்கின்ற கம்யூனிஸ்ட்டுகள் இருந்தாலும் கூட, உள்ளாட்சி மன்றங்களிடத்தில் ஆசிரியர்களை ஒப்படைத்தால், அதை நிச்சயமாக ஏற்கமாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இவைகளை எல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையை நாம் அணுக வேண்டும்.

எனவேதான், இன்னும் என்னென்ன அதிகாரங்களை அவர்களுக்குத் தரலாம் வழங்கலாம் என்பதற்கான குழு, உள்ளாட்சித் துறை அமைச்சரை அமைப்பாளராகக் கொண்டு அமைக்கப்பட்டு இருக்கின்றது. அந்தக் குழுவினுடைய பணிகள் எப்பொழுதோ நடைபெற்று முடிந்து இருக்கவேண்டும். ஆனால், குழு அமைப்பதற்காக ஒவ்வொரு கட்சியினுடைய தலைவருக்கும் கடிதம் எழுதி, உங்கள் கட்சியின் சார்பாக ஒரு உறுப்பினரை வழங்குங்கள் என்று கேட்டபோது, பல கட்சிகளிடமிருந்து பதில் உடனடியாக வரவில்லை; மிகத் தாமதமாகத்தான் வந்தது. எந்தக் கட்சிகள் என்று பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை; யாரும் என்னை ஆவலோடு, அதிர்ச்சியோடு பார்க்கத் தேவையில்லை. எந்தக் கட்சியினுடைய பெயரையும் நான் குறிப்பிடமாட்டேன்.

ஆனால் அப்படி தாமதமாக வந்த காரணத்தால் அந்தக் குழுவினுடைய பணி தொடங்கவும் தாமதம் ஆயிற்று. ஒரு கூட்டமோ அல்லது இரண்டு கூட்டங்களோதான் அந்தக் குழுவினுடைய கூட்டம் நடைபெற்றிருக்கின்றது. அதற்கிடையில் நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிட்டது. ஆகவே அந்தக் குழுக் கூட்டத்திற்கு நேரமில்லாமல் போய்விட்டது. இனி, அந்தக் குழு நம்முடைய சட்டமன்றப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே கூட இடைப்படுகின்ற நேரத்தில் அந்தக்குழுவை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நான்கைந்து தடவையாவது கூட்டி, இன்னும் என்னென்ன அதிகாரங்களை உள்ளாட்சிகளுக்குத் தரலாம் என்பதை நிர்ணயித்து, அரசுக்கு அறிக்கையாக அளிப்பார்கள் என்று நான் நம்புகின்றேன்.

இங்கே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் மணி அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் - தொழிற்சாலை அமைய வேண்டும் என்பதற்காக, அவர்களும் சரி, குமாரதாஸ் அவர்களும் சரி, நீண்ட நாட்களாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ரப்பரைப் போலவே அந்த ரப்பர் தொழிற்சாலையும் நீண்டுகொண்டே போகின்றது. இருந்தாலும் 1994-ஆம் ஆண்டில் செண்பகராமன்புதூர் என்ற கிராமத்திலே வாகன டயர் திட்டம் ஒன்றை அமைக்க 70 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த முன்பிருந்த அரசு நடவடிக்கை எடுத்தது. நிலச் சொந்தக்காரர்கள் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து, இடைக்காலத் தடையாணையை 1995 -ஆம் ஆண்டு பெற்றுவிட்டார்கள்.

ஆனால், அந்தத் தடையாணையை விலக்குவதற்குக் கடந்த கால அரசு விரைவான நடவடிக்கை எடுக்காத காரணத்தால், நிலத்தைக் கையகப்படுத்துவதிலே ஏற்பட்ட தாமதத்திற்காக வேதனைப்பட்டு அங்கே ரப்பர் தொழிலைத் தொடங்க முனைந்த அந்தத் தொழில் முனைவர், இந்தத் திட்டமே தேவையில்லை என்று அதைக் கைவிட்டுவிட்டுச் சென்றுவிட்டார்.

அவர் அந்தத் திட்டத்தைக் கைவிட்டபிறகு, 'டிட்கோ' நிறுவனம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. 'டிட்கோ' நிறுவனம் அந்த நிலங்களுக்கான தொகையை அளித்து, நிலத்தைக் கையகப் படுத்தும் அலுவலரிடம் அந்தப் பொறுப்பை இன்றைக்கு வழங்கியிருக்கின்றது. அதே நேரத்தில், நீதிமன்றத் தடை ஆணையை விலக்குவதற்கும் பெருமுயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

## ரூ.50 கோடியில் தொழில் பூங்கா

அதேநேரத்தில், ரப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழில் பூங்கா (இன்டஸ்ட்டிரியல் பார்க்) ஒன்றை அமைக்க இந்த அரசு கருதியுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதற்காக, ஏற்கெனவே கையகப்படுத்தப்படும் நிலத்திற்கு, அருகில் இன்னொரு 15 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, அவற்றையும் கையகப்படுத்த விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தத் தொழில் பூங்கா - ரப்பர் பூங்கா, சிறிய மற்றும் நடுத்தர ரப்பர் தொழில்கள் அமைக்க முன்வருகின்ற தொழில் முனைவோருக்கு உதவும்.

அமைக்கப்படவுள்ள ரப்பர் தொழில் பூங்கா தடையில்லாத மின்சாரம், நீர்வளங்கள், உற்பத்தியாகும் ரப்பர் தரங்களைப் பிரித்தெடுத்து ஒரே இடத்தில் சோதனை மற்றும் சான்றிதழ் வழங்குகின்ற வசதிகள், பொது நீர் வெளியேற்றம், கழிவு நீர்ச் சுத்திகரிப்பு வசதிகள், தகவல் தொடர்பு வசதிகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டதாக அமையும் என்பதையும், இப்பூங்காவுக்கான பூர்வாங்கமான திட்ட மதிப்பீடு ரூ.50 கோடியாகும் என நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் எடுத்துக் கூறி இதை விரைந்து முடிக்க 'டிட்கோ' நிறுவனம் எல்லாவிதமான முனைப்பான நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## இரண்டே வண்ணங்களில் குடும்ப அட்டை

பொதுப்பிரச்சினையாக - தொகுதிப் பிரச்சினைகளாக இல்லாமல், மாநிலம் தழுவிய பொதுப் பிரச்சினையாக, பொதுவாக பொது விநியோகம் பற்றி இங்கே பேசப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கடசித் தலைவர் அவர்களும் இங்கே அதைப்பற்றி விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள்.

பேசிய எல்லா உறுப்பினர்களுமே இந்தக் குடும்ப அட்டை, நியாய விலைக்கடைகள், பொது விநியோகம் இவைகள் பற்றி இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இதில் தாமதம் ஆனது உண்மைதான். ஆனால் திட்டமிடுகின்ற நேரத்தில், மூன்று வண்ணங்களில் அட்டைகள் என்று எண்ணித் திட்டமிட்டபோது, அந்த அட்டைகளை அச்சிடுகின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வந்தவர்கள், இதற்குக் காலதாமதம் ஆகும் என்று தெரிவித்த நேரத்திலே, விரைந்து முடித்துக் கொடுக்கவேண்டுமென்று நானும் உணவு அமைச்சரும் மற்றும் அதிகாரிகளும் ஒரு ஐந்தாறு தடவையாவது அவர்களிடத்திலே விவாதித்திருக்கின்றோம். இருந்தாலும் கூட, அதை அச்சேற்றுகின்ற பணி விரைந்து முடிக்கப்படவில்லை. அந்த நேரத்திலேதான், இந்த ஆளுநர் உரைக்கு முன்பு எனக்குத் தோன்றிய யோசனையாக, இந்த மூன்று வண்ண அட்டைகள் தேவையா, பச்சை அட்டை, மஞ்சள் அட்டை, இளம்சிவப்பு அட்டை என்று மூன்று அட்டை தேவையா? அவரவர்கள் இஷ்டத்திற்கு, அதாவது 'ஆப்ஷனிலே' ஒரு அட்டை, மற்றவர்களுக்கு அரிசி மற்ற அத்தியாவசியப் பொருள்களைத் தருவதற்கு ஒரு அட்டை என்று இருக்கின்றது போதாதா? ஒருவருக்கு இல்லவே இல்லை என்று சொல்வதற்கு ஒரு அட்டை தேவையா- என்று யோசித்தபோதுதான் வேண்டாம் என்று சொல்கிறவர்களுக்கு இல்லவே இல்லை என்ற நிலையில் அந்த அட்டை வழங்கப்படலாம்.

எனவே, இரண்டு அட்டைகள் போதுமானது என்று அந்த அட்டைகளைக் கணக்கிடும்போது நம்முடைய தாமரைக்கனி குறிப்பிட்டதைப்போல பச்சை மீது வந்துள்ள வெறுப்பால் - வெறுப்பு ஒன்றும்

வரவில்லை, என்றைக்கும் வராது. ஏனென்றால் பச்சைப் பசேல் என்றுள்ள இயற்கையைப் பார்ப்பதிலேதான் எல்லோருக்கும் மகிழ்ச்சி. இந்த எண்ணத்தில் அந்த நிறத்தை விலக்கிடவில்லை. இந்தத் திட்டத்தை நாங்கள் மாற்றி, அமைக்க எண்ணியபோது, அச்சடிக்கப்பட்டிருக்கிற அட்டைகளை எத்தனை என்று கணக்கிட்டபோது, எந்த நிறத்தைக் குறைத்தால் இழப்பு குறைவாக இருக்கும் என்று எண்ணியபோது, பச்சை நிற அட்டைகள்தான் குறைவாக அச்சடிக்கப்படும். ஏனென்றால், இல்லை என்று சொல்கிற கார்டுகள்தான் குறைவாக இருக்கும். ஆகவே அதை விலக்கிவிட்டு, மற்ற நிறங்களை அச்சிடலாம் என்றவொரு முடிவுக்கு வந்து, மஞ்சள், இளம் சிவப்பு என்ற அந்த இரண்டு வண்ண அட்டைகளை வெளியிடுவது என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது.

இதிலே வருமான அடிப்படை பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இன்றைக்குப் பத்திரிக்கையிலே பார்த்தேன். நம்முடைய நண்பர் ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் எம்.ஜி.ஆர் மன்றத்தினுடைய தலைவர், அவருடைய கட்சி சார்பாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி வெளியிட்டிருக்கிறார்கள். இந்த வருமான அடிப்படையே கூடாது. எல்லோருக்கும் கார்டுகள் வழங்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இங்கே உணவு அமைச்சர் எடுத்துக் காட்டியதுபோல், மத்திய அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குக் குறைந்த விலையில் உணவு வழங்கவேண்டும். உணவு தானியங்கள் வழங்க வேண்டும், அது அரிசி ஆனாலும், கோதுமை ஆனாலும் - என்கிற முடிவை ஐக்கிய முன்னணி அரசு எடுத்தபோது, அந்த முடிவு எடுக்கிற கூட்டத்தில் நானும் கலந்துகொண்டேன் என்ற நிலையில் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் என்கிற முறையில் மாத்திரமல்ல; நம்முடைய மாநிலத்தினுடைய முதலமைச்சர் என்கிற முறையிலும் நான் எடுத்துவைத்த கருத்து, 'ஏற்கெனவே நீங்கள் சொல்கின்ற விலையைவிடக் குறைவான

விலைக்குத்தான் தமிழ்நாட்டிலே நாங்கள் அரிசி விற்பனையை நியாய விலைக்கடைகளிலே நடத்திக் கொண்டிருக்கிறோம்' என்பதை எடுத்துக்காட்டி, நீங்கள் கொண்டு வருகின்ற இந்த முறையின் காரணமாக எங்களுக்கு மத்திய அரசு வழங்குகின்ற அரிசியைக் குறைத்து விடக்கூடாது என்ற உத்திரவாதத்தைப் பெற்றுக்கொண்ட பிறகுதான் - நான் அவர்கள் எடுத்த அந்த முடிவுக்கே ஒப்புதல் அளித்தேன்.

## மஞ்சள் அட்டை வைத்திருப்பவர்கள் விரும்பினால் அரிசி

அந்த உத்திரவாதத்தை, அன்றையப் பிரதமரும், உணவு அமைச்சரும் கூட அந்தக் கூட்டத்திலே எனக்கு வழங்கினார்கள். அந்த உத்திரவாதத்தின்படி நமக்கு அவர்கள் அரிசி வழங்கிவருகிறார்கள் என்பதை ஆளுநர் உரையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருப்பதை உறுப்பினர்கள் எல்லோரும் மிக நன்றாக அறிவீர்கள். இந்த வருமான வரம்பு, வறுமைக்கோடு எது என்பதை நிர்ணயிப்பதற்காக மத்திய அரசால் வெளியிடப்பட்ட ஒன்றாகும். இந்த வருமான வரம்பு இருக்கின்ற காரணத்தினால், 1250 ரூபாய் இருப்பவர்களுக்கு மாத்திரம்தான், இந்த 'சிகப்பு அட்டை' அரிசி மற்ற அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படும் என்று இல்லை. அதற்கு மேலாக மஞ்சள் அட்டை வைத்திருப்பவர்கள் கூட அவர்கள் விரும்பினால் - 'ஆப்ஷன்' அவர்களுக்கு அரிசிதான் வேண்டும் என்றால் வாங்கிக் கொள்ளலாம்.

எனவே, அப்போது எனக்கு அரிசிதான் வேண்டும் என்று மஞ்சள் அட்டைக்காரர் சொல்வாரேயானால், மஞ்சள் அட்டையும், இளம் சிகப்பு அட்டையும் ஒரே தரம்தான். அப்போது - 'இல்லை, இல்லை எனக்கு வேண்டாம். எனக்குத் தேவையில்லை' என்று அவர்களாக முன்வந்து வேண்டாம் என்று சொன்னால் தவிர, அவர்களுக்கு அரிசி வழங்குவது நிறுத்தப்பட மாட்டாது. மஞ்சள் அட்டைக்கும் அரிசி உண்டு என்பதை நான் மிகத் தெளிவாக இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

வருமான அடிப்படையிலே இருக்கின்ற இந்த முறை தீது. இதனால் கெடுதி ஏற்படும் என்ற விமர்சனத்திற்கு எள்ளளவு இடமுமில்லை. அப்படி யாரும் அதற்காக வருத்தப்படத் தேவையில்லை. அதற்காக அதிர்ச்சி அடையத் தேவையில்லை என்பதையும் இந்த விளக்கத்தின் மூலமாக அவர்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரத்திலே இந்த அட்டை வழங்கத் தொடங்கப்பட்டு, விரைவிலே முடிவுறும் என்று மாதக்கணக்கிலே, முதலிலே சொல்லப்பட்டது உண்மைதான்.

## பழைய அட்டைகளுக்கும் ரேஷன் பொருட்கள்

ஆனால், எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்ட காலதாமதத்தால் சற்று அந்த நாட்களை நீட்டிக்க வேண்டிய இன்றியமையாமை இந்த அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்காக இங்கே நம்முடைய நண்பர் அழகிரி அவர்கள் இன்றைக்குக் குறிப்பிட்டதைப்போல, இந்த இடைக்காலத்திலே யாரும் குடும்ப அட்டை - இல்லாமல் அவதிப்படுகின்ற நிலை நிச்சயமாக வராது. ஏன்என்றால், ஏற்கெனவே இருக்கின்ற அட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் நியாயவிலைக் கடைகளிலே அவர்களுக்குத் தேவையான பொருட்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இன்றைக்கும் இருக்கின்றது. நாம் அவர்களுக்கு மேலும் உதவிகரமாகவும், அதே நேரத்திலே அரசாங்கத்தினுடைய பொருளாதார இழப்பின் சுமையைக் குறைப்பதற்காகப் போலி அட்டையைக் கண்டுபிடிப்பதற்காகவும்தான் இந்த முறையை நாம் கொண்டுவந்திருக்கின்றோம் என்பதை நீங்கள் உணரவேண்டும் .

சென்னை மாநகரத்தில், ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதைப்போல மே முதல் தேதி முதல் இந்த அட்டைகள் வழங்கப்படும். அது, ஜுன் மாதம் முதல் தேதி முதல் நடைமுறைக்கு வரும். அந்தப் பொருட்களை வாங்கிக் கொள்ளக் கூடிய அளவுக்கு நடைமுறைக்கு வரும். அதேபோல் சென்னை மாநகரத்திலே மே முதல் தேதி வழங்கப்படும் அதே காலகட்டத்தில், மதுரை,

கோவை, திருச்சி, சேலம் ஆகிய மாநகரப் பகுதிகளிலும் அதே முதல் தேதி குடும்ப அட்டைகள் வழங்கப்படும். திருநெல்வேலி, மாநகரப் பகுதியில் மே மாதம் 16ஆம் தேதி முதல் இந்தக் குடும்ப அட்டை வழங்கப்படும்.

மாவட்டங்களில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் புதிய குடும்ப அட்டைகள், இந்த வண்ண அட்டைகள், 1.6.98 முதல் வழங்கப்படும். கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய 8 மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம்கூட 1.6.98ல் இந்த அட்டைகள் வழங்கப்பட்டுவிடும்.

நான் குறிப்பிட்ட இந்த 8 மாவட்டங்களில் மாத்திரம் 1.7.98 முதல் இந்தக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

## அனைவருக்கும் ஜூலை மாதத்திற்குள் குடும்ப அட்டைகள்

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல, தற்போதுள்ள குடும்ப அட்டைகளை அதுவரையிலே நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உத்தரவாதத்தினையும் நான் தருகின்றேன். எனவே, மாநிலம் முழுவதும் இந்தப் புதிய இரு வண்ணக் குடும்ப அட்டைகள் வழங்கும் பணி, மே மாதம் முதல் தேதி தொடங்கப்பட்டு, ஜூலை மாதத்திற்குள் முடிக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய நண்பர் அழகிரியும், மற்றும் சில சட்டமன்ற உறுப்பினர்களும் இன்னும் சில குடும்பங்கள், குடும்ப அட்டைகள் இல்லாமலே இருக்கின்றார்கள் என்ற குறையை இங்கே எடுத்து காட்டியிருக்கின்றார்கள். கடந்த சில ஆண்டுகளாகப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் உள்ளன என்ற கருத்தும் ஆளும் கட்சி சார்பிலும், எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள உறுப்பினர்கள் சார்பிலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அப்படி, இதுவரையில் குடும்ப

அட்டைகளைப் பெறாமல் விட்டுப் போன குடும்பங்களுக்கு, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் ஏப்ரல் மாதத்திலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவர்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் ஜூலை மாதத்திற்குள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதற்கான அறிவிப்புகளும் விரைவிலே வரும் என்பதையும் மாநகராட்சிப் பகுதிகளில் விடுபட்டுப் போன குடும்பங்களிலிருந்து புதிய குடும்ப அட்டைகள் வழங்க ஏற்கெனவே மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தக் குடும்ப அட்டை பிரச்சினைக்கு அடுத்து, ஏன் அடுத்து என்று கூட சொல்லமுடியாது, இதைவிட சற்று மேலாகவே கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைகள் பற்றி இங்கே பேசப்பட்டு இருக்கின்றது. நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் சுப்பராயன் அவர்களும், பெரியசாமி அவர்களும் - ஏன் எல்லோரும் நம்முடைய திருநாவுக்கரசு போன்றவர்கள், அத்தனை எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்களும், இந்தப் பிரச்சினையைப் பற்றி மிகுந்த உருக்கத்தோடு, கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்களே கழகத்திற்கும், கைத்தறி நெசவளர்களுக்கும் உள்ள ஈடுபாட்டைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

**1955 - 56**ம் ஆண்டில், அறிஞர் அண்ணா அவர்களும், நானும், மற்றும் நம்முடைய பேராசிரியர் போன்ற கழகத்தினுடைய தலைவர்களும், கைத்தறித் துணிகளைத் தலையிலும், முதுகிலும் சுமந்து, 'கைத்தறி வாங்கலையோ கைத்தறி' என்று அன்றைக்கு உடுமலை நாராயண கவிராயர் எழுதிய பாடல் 'செந்தமிழ் நாட்டுக் கைத்தறிச் சேலை வேட்டிகள் வாங்கிடுவீர், நம் கைத்தறியாளர் சேமமுறவே வாங்கிடுவீர்' என்ற பாடலைப் பாடிக்கொண்டு, அண்ணா அவர்கள் திருச்சியிலும், நான் சென்னையிலும், கைத்தறித் துணிகளை விற்றோம். அன்றைக்கு ஒருநாள் விற்பனை **1** இலட்சம் ரூபாய். அன்றைக்கு **1** இலட்சம் ரூபாய் என்றால் இன்றைக்கு

எவ்வளவு என்று எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். 1 இலட்சம் ரூபாய்க்கு அன்றைக்கு கைத்தறித் துணிகளை விற்று, தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளுக்கு ஒரு 'மவுஸ்', ஒரு மகத்துவத்தை ஏற்படுத்துகின்ற நிலையை அன்றைக்கு நாங்கள் உருவாக்கினோம்.

அப்படி விற்றபோதுதான், அதுவரையிலே கதர் ஆடையிலேயிருந்த என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்கள், சென்னையிலே நான்விற்ற கைத்தறி ஆடைகளை அன்றைக்கு அவருடைய இல்லத்திலே 5 ஆயிரம் ரூபாய் அளவிற்கு வாங்கி, அதற்குப் பிறகு, கைத்தறி கட்ட ஆரம்பித்தார் என்ற ஒரு வரலாற்றுச் செய்தியையும் உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்றைய நிலையில் உலகம் முழுவதும் இந்தத் துணித் தொழிலில் ஒரு முடக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். கைத்தறியாளர்களுடைய குறைகளைத் தமிழகத்திலே போக்குவதற்கு இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளில் ஒன்றிரண்டை நினைவுபடுத்துவது என்னுடைய கடமையாகும்.

## கைத்தறியாளர் குறைகளைப் போக்கிட அரசு எடுத்த நடவடிக்கை.

89 - ஆம் ஆண்டிலேதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை எளியவர்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்குவது என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, விரிவாக அது நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தத் திட்டத்தின் கீழ் 97 - 98ல் ரூ.92.60 கோடி மதிப்புடைய சேலைகளும், வேட்டிகளும் தமிழகத்திலே உள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை செய்யப்பட்டு, எந்தவிதமான புகாருக்கும் இடமில்லாமல் நல்ல தரமான வேட்டிகள், சேலைகள் வழங்கப்பட்டது. சில பேருக்கு வழங்கப்பட

விட்டுப் போயிருக்கலாம். ஆங்காங்கே உள்ள குறைகளின் காரணமாகத் தரமான வேட்டி, சேலைகள் நடுத்தர வர்க்கத்தினர் கூட எங்களுக்குத் தரக்கூடாதா என்று கேட்கின்ற அளவிற்கு அவ்வளவு தரமான வேட்டிகளும், சேலைகளும், ரூ.92 கோடிக்கு அத்தனையும் நெசவாளர் சங்கங்கள், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலேதான் உற்பத்தி செய்து தரப்பட வேண்டுமென்று கூறப்பட்டு, ரூ.92 கோடி அவர்களுக்குப் போய்ச்சேர்ந்திருக்கிறது.

அதேபோல் 98 - 99 ஆம் ஆண்டு திட்டப்படி, வேட்டி சேலை இலவசமாக வழங்கப்படும் திட்டப்படி இந்தச் சங்கங்களுக்கே அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. ஒரு மீட்டர் துணி கூட வெளி மாநிலங்களிலிருந்தோ, தனியாரிடமிருந்தோ கொள்முதல் செய்யப் படவில்லை என்பது இந்த அரசு கைத்தறி நெசவாளர்கள் மீது கொண்டுள்ள அக்கறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதை நான் இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் இலவசச் சீருடைகளுக்காக ரூ.56.74 கோடி மதிப்புடைய 188 இலட்சம் மீட்டர் துணிகள் தமிழக நெசவாளர்களால்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் ஆகிய துறைகள் நடத்துகின்ற பள்ளி மாணவ மாணவிகளுக்குச் சீருடை வழங்குகின்ற திட்டத்திற்கு ரூ.6.83 கோடி வழங்கப்பட்டு, 22 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் தமிழக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமேதான் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

இவைகள் எல்லாம் துணிகள் தேங்கிக் கிடக்கக் கூடாது என்பதற்காக, நெசவாளர் களுக்கே போய்ச் சேரவேணடும் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே போய்ச் சேரவேண்டுமென்பதற்காக, ஒரு மீட்டர் துணி

கூட வெளியிலே வாங்காமல் அவர்களுக்கே போய்ச் சேர இந்த அரசு வகுத்த வழிகள் ஆகும்.

## ஆண்டு முழுவதும் 20 சதவிகிதத் தள்ளுபடி

அது மாத்திரமல்லாமல் கைத்தறித் துணிகளுடைய விற்பனையை மேம்படுத்த இந்த அரசு உச்சவரம்பு இல்லாமல் ஆண்டு முழுவதும் 'ரிபேட்' 20 பர்சென்ட் - 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கி ஆணை பிறப்பித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இதன் விளைவாக 97-98 ஆம் நிதியாண்டில் முதல் 5 மாதங்களில், அதாவது 1.4.97 முதல் 31.8.97 முடிய ரூ.147 கோடியாக இருந்த விற்பனை அடுத்த 6 மாதங்களில் 1.9.97 முதல் 28.2.98 முடிய ரூ.235 கோடியாக உயர்ந்துள்ளது என்பதை நான் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதாவது இந்த 20 விழுக்காடு ஆண்டு முழுவதும் என்று ஆக்கிய காரணத்தால் அதிக விற்பனை ரூ.88 கோடிக்கு ஆகியிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அது மாத்திரமல்ல, கூட்டுறவுச்சங்க நெசவாளர்களுக்கு 1.4.97 முதல் 10 விழுக்காடு அகவிலைப்படியும், 1.10.97 முதல் அடிப்படை கூலியிலே 10 விழுக்காடு உயர்வும் அளிக்கப் பட்டுள்ளது. கூட்டுறவு நெசவாளர் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்து, ஓய்வுபெறும் நெசவாளர்களுக்கு மாதம் ரூ.150 ஓய்வூதியம் வழங்கி வருகின்றது. அதை - அந்த ஓய்வுபெறும் வயதை 58-லிருந்து 60-ஆக இந்த அரசு உயர்த்தியுள்ளது 16.6.96 முதல்.

நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத்தொகை 15,000 ரூபாய் என்பது 18.9.96 முதல் இந்த அரசினால் 25,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு உதவிகைளச் செய்தும்கூட, இந்த அளவிற்குப் பக்கபலமாக இருந்தும் கூட அவர்களுக்கு இன்னமும் முழுமையாகத் துன்பம்

தீர்ந்தபாடில்லை என்பதை உறுப்பினர்களைப் போலவே நானும் உணர்ந்து வருத்தப் படுகின்றேன்.

## நெசவாளர்கள் வளம்பெறக் குழு

எனவே, இவைகளை நல்லமுறையில் ஆராய்ந்து அவர்களுடைய வாழ்விலே வளம் சேர்க்கவும், நலம் சேர்க்கவும் அவர்களுக்கு எளிதாக நியாய விலையிலே நூல் கிடைக்கவும், அவர்களிடம் தேங்கிக் கிடக்கும் துணியைக் கொள்முதல் செய்வதற்கும், அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைக்கவும், அவர்களுக்கு தேவையான கடன் வசதி எளிதில் பெறவும் என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றிப் பரிசீலித்து, இந்த அரசுக்கு ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் வழங்குவதற்காக, நெசவாளர்களுடைய பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றினை அமைத்து, அந்தக் குழு மிக மிக விரைவில் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே அரசுக்கு அறிக்கை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படும்.

அந்தக் குழு உறுப்பினர்கள் யார், யார் என்பதை அடுத்த நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிடுகிறேன். அதற்குள்ளாக அவர்களை யெல்லாம் கலந்துபேசி, அந்த உறுப்பினர்களுடைய பெயர்கள் குறிப்பிடப்படும். அந்தக் குழுவின் பரிந்துரைகளைக் கொண்டு, நெசவாளர் துயர் நீங்க நல்ல முடிவுகளை நாம் எல்லோரும் சேர்ந்து எடுப்போம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையில் (நேஷனல் அஜெண்டா) பற்றி விவாதிக்கப் பட்டிருக்கின்றது. இதுபற்றி நேற்றைக்கு முன் தினம் நடைபெற்ற விவாதத்தில் சில விளக்கங்களை நான் தந்திருக்கின்றேன். இந்த நேஷனல் அஜெண்டா 17 கட்சியினுடைய தலைவர்கள் கையெழுத்திட்டு, வெளியிட்டுள்ள ஒன்றாகும். வாஜ்பாய் அவர்கள், அத்வானி அவர்கள்,

செல்வி ஜெயலலிதா அவர்கள், வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள், வை.கோ. அவர்கள், டாக்டர் ராமதாஸ் அவர்கள் என்று, 17பேர் கையெழுத்திட்டுள்ள அறிக்கை ஆகும்.

## தமிழக நலனுக்கு விரோதமாக 'நேஷனல் அஜெண்டா'

இந்த நேஷனல் அஜெண்டாவில் இன்னென்ன திட்டங்களைச் சேர்க்கவேண்டும் என்ற நிபந்தனை விதித்து, அது சேர்க்கப்படாத சூழ்நிலையைப் பார்க்கும்போது, சேர்க்கப்பட்டதும் தமிழக நலன்களுக்கு, சமுதாய நலன்களுக்கு, விவசாய நலன்களுக்கு விரோதமாக ஆக்கப்பட்டிருப்பதைக் காணும்போது, இந்தக் கோரிக்கைகளை வைக்காமலேயே இருந்திருக்கலாமே என்று எண்ணத்தோன்றுகிறது.

ஏதோ முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சொன்னார் என்பதற்காக நான் போட்டி போட்டுக்கொண்டு அதை எதிர்க்கவேண்டுமென்று கருதுகின்றவன் அல்ல. உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்னைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மாற்றம் ஏற்பட்டு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, காவிரிப் பிரச்சினையிலே அவருக்குக் கை கொடுக்கின்ற வகையிலே நடந்து கொண்டதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். அதுபோல அவரும், இதே அவையில், இதே இடத்தில் பேசிய பேச்சு காவிரிப் பிரச்சினையானாலும், வேறு பல பொதுப் பிரச்சினைகளிலானாலும், அ.தி.மு.க.வும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருக்கும் என்று சொன்ன சொல் இன்னமும் என்னுடைய செவிகளில் ரீங்காரம் செய்து கொண்டுதான் இருக்கிறது.

அந்த அளவிற்குக் காவிரிப் பிரச்சினையிலே ஒருமித்த கருத்து இருந்தது. எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்து, இதைப்பற்றி விவாதத்திற்கு அழைத்தபோதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பிரதிநிதிகள் சென்றிருக்கிறார்கள். பேசியிருக்கிறார்கள். ஆனால்,

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சர்வ கட்சிக் கூட்டங்கள் கூட்டப்பட்டு, அதற்கு அழைப்பு அனுப்பியபோதெல்லாம் 'நீ காவிரிப் பிரச்சினைக்குத் துரோகம் செய்து விட்டவன்; ஆகவே, அந்தச் சர்வ கட்சி கூட்டத்திலே கலந்துகொள்ள முடியாது' என்று அறிவித்து, அப்படி எழுதப்பட்ட கடிதங்களை வெளிப்படையாகவே பத்திரிகைகளுக்குக் கொடுத்து, அந்தக் கூட்டங்களிலே கலந்துகொள்ள மறுத்தவர் செல்வி ஜெயலலிதா அவர்கள்.

இங்கேயேகூட, ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி **1989-90-ல்**, வி.பி.சிங் அவர்கள் அங்கே பிரதமராக இருந்தபோது, நடுவர் மன்றம் அமைக்கப்பட வேண்டு மென்பதற்காக, பொதுப்பணித்துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழு நம்முடைய தீர்மானத்தை எடுத்துக்கொண்டு டெல்லிக்குச் சென்ற நேரத்தில், வருவதாக ஒப்புதல் அளித்த எஸ்.ஆர்.இராதா-அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.

முதலில் கொஞ்சநாள் தம்பி திருநாவுக்கரசு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அதற்குப் பிறகு எஸ்.ஆர்.இராதா அவர்கள் என்று நினைவு, அவரும் வருவதாகச் சொல்லி எல்லோருக்கும் சேர்த்து - டெல்லிக்குச் செல்ல விமானத்திற்கான பயணச்சீட்டு பெறப்பட்டு, கடைசி நேரத்திலே தாங்கள் வர இயலாது என்று கூறியது மாத்திரம் அல்ல; எங்களோடு வர இருந்த காங்கிரஸ் நண்பர்களையும் வரவிடாமல் அன்றைக்குத் தடுத்துவிட்டார்கள்.

### பொதுவான பிரச்சினைகளைப் புறக்கணித்தது இல்லை

அன்றைக்கு ஒரே ஒரு காங்கிரஸ் எம்.பி. வைஜயந்தி மாலா அவர்கள்தான், துரைமுருகனுடைய தலைமையில் சென்ற அந்த தூதுக் குழுவினுடைய சந்திப்பிற்கு வி.பி.சிங் அவர்களுடைய அலுவலகத்திற்கு வந்தார்கள். மற்றவர்கள் யாரும் அன்றைக்கு வரவில்லை. அப்படிப் புறக்கணிக்கப்பட்டது. ஒரு பெரிய பிரச்சினை, பொதுவான பிரச்சினை;

அரசியல் கண்ணோட்டத்தோடு அன்றைக்கு அணுகப்பட்ட காரணத்தால் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் என்றைக்கும் நாங்கள் அப்படிப் புறக்கணித்தது இல்லை.

இந்தப் பொதுவான பிரச்சினைகளில் எங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூற அரசோடு சேர்ந்து ஒத்துழைக்க எதிர்க்கட்சியாக இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் புறக்கணித்ததும் இல்லை; ஒதுங்கியிருந்ததும் இல்லை. எங்களுடைய கருத்துக்களை வேகமாக எடுத்துக் கூறியிருக்கலாம். ஆனால் ஒன்றாகச் சேர்ந்து செய்ய வேண்டிய முயற்சிகளில் நாங்கள் என்றைக்கும் விட்டுக் கொடுத்தது இல்லை. அந்த வகையிலே இன்றைக்கு இந்தக் காவிரிப் பிரச்சினையில் அதிகம் நான் பேச விரும்பவில்லை. நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையொட்டி நேற்றைய முன்தினம் எழுந்த சர்ச்சையிலும் நீண்ட விளக்கத்தை நான் வழங்கியிருக்கிறேன். ஆனால் கேட்டது என்ன? கிடைத்தது என்ன? - என்பதைத்தான் எண்ணிப்பார்க்க வேண்டும்.

காவிரிப் பிரச்சினையில் நீதி வழங்கப்பட வேண்டும். அது இந்த அஜெண்டாவிலே வரவேண்டும். இந்த தேசியத் திட்டத்திலே வரவேண்டும் என்று செல்வி ஜெயலலிதா அவர்கள் வாதாடினார்கள்; போராடினார்கள்; பத்திரிகையிலே செய்தி வந்தது. தனிப்பட்ட சில பேருடைய மந்திரி பதவிகளுக்காக அல்ல; தமிழ்நாட்டினுடைய பொதுப் பிரச்சினைக்காக வாதாடுகிறேன் என்று சொன்னபோது அதைக் கேட்க இனிப்பாக இருந்தது.

**"காவிரி" என்ற ஒரு சொல்லையே தேசிய திட்டத்திலே காணவில்லை!**

ஆனால் நடைபெற்றிருப்பது என்னவென்றால் காவிரி என்ற ஒரு சொல்லையே தேசிய திட்டத்திலே காணவில்லை. குடகிலேயிருந்து

பூம்புகார் வரையிலே நீண்டு பரந்து வந்துகொண்டிருக்கின்ற அந்தக் காவிரி இந்தச் சிறிய ஏட்டில் ஒரு இடத்திலேகூட **காவிரி** என்கின்ற 3 எழுத்துத் தமிழையோ அல்லது ஆங்கிலத்திலே **Cauvery** என்ற சொல்லையோ இதிலே காண முடியவில்லை. இரண்டு நாளைக்கு முன்பு தினமணி பத்திரிகையிலே பார்த்தேன். அதிலேகூட கர்நாடகத்திலே முதலமைச்சர் என்ன சொல்கிறாரோ அதைத்தான் இந்தத் தேசியத் திட்டத்திலே அவர்கள் ஏற்றியிருக்கிறார்கள் என்று தினமணிகூட தீட்டியிருக்கிறது. படித்துப் பார்த்தேன்;

அது மாத்திரம் அல்ல; கர்நாடகத்தினுடைய குரல் இன்றைக்கு ஹெக்டே மூலமாக அங்கே ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த ஹெக்டேவினுடைய குரல்தான் இந்தத் திட்டத்திலே இருப்பதாக என்னால் உணர முடிகிறது. உணர முடிகிறது. என்ன, உண்மையும் அதுதான். என்ன இருக்கிறது?

"We will not adopt in a National Water Policy which provides for effective and prompt settlement of disputes" என்றுதான் இருக்கிறது. அந்தத் தேசிய நதிநீர்க் கொள்கை என்பது Water Policy என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று தான். அதை யாரும் மறுக்கவில்லை; தேசிய நதிநீர்க் கொள்கையை யாரும் மறுக்கவில்லை; வெறுக்கவில்லை; அதை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்.

ஆனால் அதை வைத்து அந்தத் தீபத்தை வைத்து இந்த வீட்டைக் கொளுத்திவிடக்கூடாது. பார்ப்பதற்குத் தீபம்தான். ஆனால் தீபம் என்னுடைய வீட்டிடைக் கொளுத்தப் பயன்பட்டால் தடுத்தேதான் தீருவேன் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட்டாக வேண்டும். தீபம் என்பதற்காக வீட்டைக் கொளுத்த முடியுமா?

பட்டேல் என்ன சொல்கிறார் கர்நாடகத்தின் முதலமைச்சர் என்ன சொல்கிறார்; கர்நாடக மாநில அரசு என்ன சொல்கிறது? இப்போது ஒன்றும் இந்தப் பிரச்சினையை எடுக்கவேண்டாம்; 'பேச்சு வார்த்தைக்கு வா நான்

சொல்வதைக் கேள் ஏற்றுக்கொள்' என்றது. பேச்சு வார்த்தைக்கு நாம் மறுத்தபோது கூட உச்சநீதிமன்றம்தான் தாக்கீது தந்தது, பேசுங்கள் என்று. பேசாவிட்டால் உச்சநீதிமன்றம் தவறாகக் கருதிக்கொள்ளும் என்று பேசிப் பார்த்தோம். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை. உச்சநீதிமன்றத்திற்குச் சென்று சொன்னோம். பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை. உங்கள் தீர்ப்பை வழங்குங்கள் என்று சொன்னோம். உச்சநீதிமன்றம் மத்திய சர்க்காரைப் பார்த்துக் கேட்டது. ஐக்கிய முன்னணி அரசைப் பார்த்துக் கேட்டது.

ஐக்கிய முன்னணி அரசில் கர்நாடகத்தைச் சேர்ந்த ஜனதாதளத் தலைவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தேவகவுடா - ஐக்கிய முன்னணி கட்சியினுடைய தலைவர் அவர்தான். அவர் பிரதமர் பதவியிலிருந்து விலக்கப் பட்டபோது நானும், மூப்பனார் அவர்களும்தான் அவரை முன்மொழிந்து, வழிமொழிந்து ஐக்கிய முன்னணியினுடைய சேர்மெனாக, இந்தக் குழுவினுடைய தலைவராக அவர் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு - அவர் இருக்கிறார்.

அவர் இருந்தபோது கூட மத்திய அரசு அவருக்காக வளைந்துகொடுக்காமல் - தேவகவுடாவுக்காக வளைந்து கொடுக்காமல் ஐக்கிய முன்னணி அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்து சுப்ரீம் கோர்ட்டில் கொடுத்திருக்கிறது. என்ன திட்டம்? ஒரு அத்தாரிட்டி - Cauvery Valley Authority. அது என்ன சொல்கிறது? அத்தாரிட்டியினுடைய வேலை என்ன? நடுவர்மன்றம் கொடுத்திருக்கின்ற இடைக்கால அவார்டு இருக்கிறதே; அந்தத் தீர்ப்பு இருக்கிறதே; அதை எப்படி நிறைவேற்றுவது - நிறைவேற்றுவதா; இல்லையா; என்பதல்ல. எப்படி நிறைவேற்றுவது என்பதற்காகத்தான் அந்தத் திட்டத்தை மத்திய அரசு கொடுத்தது.

இதைப்பற்றி உங்களுடைய கருத்து என்ன என்று மத்திய அரசு நம்முடைய மாநிலத்தைக் கேட்டது. நாம் அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தாக இருந்ததால் நாம்

ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதைப்போலவே புதுவை மாநிலம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. கேரள மாநிலம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கர்நாடக மாநிலம் ஏற்றுக்கொள்ளாமல் இழுத்தடித்தார்கள். இழுத்தடிக்கும்போது அது சொல்லுவது எல்லாம் அத்தாரிட்டி வேண்டாம், கமிட்டி போதும். அது மாத்திரம் அல்ல; இந்தப் பிரச்சினையை தேசிய நதிநீர்க் கொள்கை வகுக்கப்பட்ட பிறகு பேசிக் கொள்ளலாம் என்பதுதான். இது இப்போது ஹெக்டே அவர்கள் வாயிலாக இந்த நேஷனல் அஜெண்டாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அன்றைக்கு முழங்கிய அந்த முழக்கம் இதில் இடம்பெறவில்லை என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து இந்தப் பிரச்சினைக்கு அவர் பாடுபடவேண்டும்; போராட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறனே தவிர, அவரை இழித்தும், பழித்தும் பேசுவதற்காகச் சொல்லவில்லை. ஏன் என்றால் தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்கள் அக்கறையோடு செய்ய வேண்டும் எனக்குள்ள சந்தேகம் எல்லாம் நடுவர் மன்றம் நாம் கேட்டபோது அம்மையார் ஒரு முறை சொன்னார்கள். அப்படியே நடுவர் மன்றம் கொடுத்தாலும்கூட அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு ஒன்றுக்கு விதியில்லை என்று ஒருமுறை அம்மையார் சொன்னார்கள். அதையெல்லாம் நினைத்தால் பயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட உணர்வோடு இதை அணுகினால் நம்முடைய பிரச்சினை நல்ல முறையில் தீருமா என்ற அச்சமே தவிர வேறு அல்ல.

அடுத்து பி.சி. மற்றும் எம்.பி.சிக்கு இந்த இட ஒதுக்கீடு இந்த இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலே 69 சதவீதத்திற்கான சட்டம் கூட நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தினுடைய 9வது அட்டவணையில்கூட சேர்க்கப்பட்டது. இப்படி சேர்க்கப்பட்ட பிறகும் கூட உச்சநீதிமன்றத்திலே நமக்குக் கிடைத்த முடிவு என்ன ? இந்த முடிவுக்கு யார் காரணம் ? 17.11.94 அன்று

உச்சநீதிமன்றத்திலே இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது உச்சநீதிமன்றம் தன்னுடைய ஆணையில் என்ன குறிப்பிட்டிருக்கிறது என்றால் -

It is significant to notice that after the order dated 18th August 1994 was passed the state itself moved for modification of that order in circumstances stated in its application. That application was filed on 23rd September 1994. In that application no plea was raised based upon the inclusion of the said Act in the 9th Schedule and Orders were obtained on 3rd October 1994.

இப்படி ஒரு சட்டம் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இருப்பதையே இவர்கள் யாரும் உச்சநீதிமன்றத்திலே சுட்டிக்ககாட்டவில்லை என்று உச்சநீதிமன்றம் சொல்கிறது. சுட்டிக்காட்டாத காரணத்தால் நாம் இந்த 69 சதவிகிதத்தைப் பெற முடியாதவர்களாக ஆகிவிட்டோம் என்று நான் மட்டுமல்ல; நானும், அருமை நண்பர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் நம்முடைய தோழமைக் கட்சித் தலைவர்கள் அத்தனைப் பேரும் ஒரே குரலிலே முழங்கியிருக்கிறோம். இதை யாரும் மறந்து இருக்கமுடியாது. அதற்காகப் போராட்டம் கூட நடத்தியிருக்கிறோம். இதைச் சுட்டிக்காட்டவில்லை என்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். "உச்சநீதிமன்ற ஆணை என்னவென்றால் 18.8.94 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டதற்குப் பின்னர் மாநில அரசே அந்த ஆணையை மாற்றம் செய்வதற்கான சூழ்நிலைகளைக் குறிப்பிட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்தது கவனத்திற்குரியது. அந்த மனு 23.9.94 அன்று தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பிடப்பட்ட சட்டம் இந்த 69 சதவீத சட்டம் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளதையொட்டி எந்தவிதக் கோரிக்கையும் அந்த மனுவிலே எழுப்பப் படவில்லை."

**உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டுகிற அளவுக்கு**

இப்படி உச்சநீதிமன்றமே சுட்டிக்காட்டுகின்ற அளவுக்கு, கடந்த கால அரசு பிழை புரிந்துவிட்டது என்பதை யாரும் மறுக்கவும் முடியாது,

மறைக்கவும் முடியாது. ஆனால் அதை இடம்பெறச் செய்வோம், அது எங்களுடைய நிபந்தனைகளில் ஒன்று; இல்லாவிட்டால் பதவியேற்பு விழாவிற்கே வரமாட்டோம் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அஜண்டாவைப் பார்க்கும்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், என்ன இருக்கிறது என்றால், அன்றைக்குத் தீரன் குறிப்பிட்டதைப் போல -

`We will provide legal protection to existing percentages of reservation in educational insitutions at the state level"

- என்றுதான் இருக்கிறது. ஏற்கெனவே, கல்வி, வேலை வாய்ப்பு இரண்டிலேயும் இருந்தது. இந்த அஜண்டாவைப் படித்த பிறகு, எனக்கு வருகிற பயம் என்னவென்றால், அவர் கேட்ட உறுதிமொழியின் காரணமாக, நிபந்தனையின் காரணமாக இதில் வேலை வாய்ப்பும் போய்விட்டதோ; அதிலே உள்ள ரிசர்வேஷன், இடஒதுக்கீடும் போய்விட்டதோ என்கின்ற அச்சம் என்னைப் பிடித்துவாட்டுகின்றது. பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெல்லாம் ஒரு பீதி இதன் காரணமாக இன்றைக்குத் தோன்றியிருக்கின்றது.

``We will provide legal protection to existing percentages of reservation in educational institutions at the state level"

- என்றுதான் இருக்கின்றது. கல்விக் கூடங்களில் இந்த இட ஒதுக்கீட்டிற்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்கப்படும் என்று இருக்கின்றது. எவ்வளவு இட ஒதுக்கீடு? அந்தப் புள்ளி விவரம் இதிலே காட்டப்படவில்லை. எவ்வளவு காலத்திற்கு? அது காட்டப்படவில்லை. யாருக்கு என்பது எல்லாம் காட்டப்படவில்லை, எனவே, ஆங்கிலத்தில் சொல்வார்களே "வேக்" (Vague) என்று. அது மாத்திரம் அல்ல; Vague ஆக மாத்திரமல்ல; பேக்காகவும் இது அமைந்திருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதைப்போல, பெண்களுக்கு 33 சதவீதம் கேட்டபொழுது, அம்மையார் சொன்னது, பெண்களுக்கு என்று மாத்திரம் இருந்தால் போதாது. அந்தப் பெண்களிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தபபட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு சதவீதம் வேண்டும்; அதோடு கூடிய சதவீதம்தான், ஒதுக்கீடுதான் தேவை என்று சொன்னார்கள். இதிலே பார்த்தால் அப்படி எதுவும் இல்லை.

``33% of the seats in Parliament andState Assemblies for Women"

- என்று இருக்கிறதே அல்லாமல், அதிலே பி.சி. உண்டா? எஸ்.சி. உண்டா? எம்.பி.சி உண்டா என்பதெல்லாம் அதிலே காணப்படவில்லை.

பிறகு, இந்த மொழிப் பிரச்சினை. இந்த மொழியைப் பொறுத்தவரையில் எல்லா மொழிகளும் மத்தியிலே உள்ள இந்தி, ஆங்கிலம் ஆகிய இந்த இரண்டு மொழிகளோடு சேர்ந்து மத்திய ஆட்சி மொழிகளாக ஆகவேண்டும்; எல்லா மொழிகளும் ஆகவேண்டும்; அதுவரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நீண்ட காலமாக எடுத்துவைக்கப்பட்டு வருகின்ற ஒரு கொள்கை முடிவு,மொழியைப் பொறுத்தது.

அதிலே மேலும் ஒரு திருத்தத்தோடு 96ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் முரசொலிமாறன் முன்மொழிந்து, நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் வழிமொழிந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம்; மத்தியிலே ஆட்சி மொழியாக அரசியல் சட்டத்திலே அட்டவணையிலே உள்ள எல்லா மொழிகளும், குறிப்பாக எல்லா மாநிலத்திலும் உள்ள ஆட்சி மொழிகளும் இடம் பெற வேண்டும்; அதற்குக் காலக்கெடு வேண்டுமென்றால் முதல் கட்டமாக எல்லா வகையிலும் வளம் பெற்ற, இலக்கிய வளம், இலக்கண வளம், தொன்மை அத்தனை சீரும் நிறைந்த தகுதி வாய்ந்த எங்கள் தமிழ் மொழியை முதல் கட்டமாக மத்திய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும்" என்பது தீர்மான வாசகம் ஆகும்.

அதை யார் எடுத்துக்கொண்டாலும், எனக்கு மகிழ்ச்சிதான். அதை ஜெயலலிதா அவர்கள் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய கட்சி மாநாடுகளிலும் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ம.தி.மு.க .மாநாட்டிலே போட்டிருக்கிறார்கள். மகிழ்ச்சிதான் இந்தக் கொள்கை எல்லோருக்கும் சொந்தமாக வேண்டுமென்பதுதானே நம்முடைய கொள்கை.

அப்படி வந்ததில், இதிலே தமிழை ஆட்சி மொழியாக, இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற நிலை, இந்த நேஷனல் அஜண்டாவிலே இருக்கிறதா என்றால் இல்லை.

அன்றைக்கு ஒரு பெரியவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீகினுடைய தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் அரசியல் நிர்ணய சபையிலே இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக எந்த மொழி இருக்கலாம் என்று பிரச்சினை வந்தபொழுது தமிழகத்திலேயிருந்து ஒலித்த குரல் காயிதே மில்லத் அவர்களுடைய குரல், " எல்லா வளமும் நிறைந்த, எல்லா இலக்கிய இன்பமும் வாய்ந்த, எல்லா இலக்கணச்செறிவும் மிக்க தமிழ் மொழியைத்தான் இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும்." என்று அன்றைக்கு உரத்த குரல் கொடுத்தார்கள். ஆனால் அந்தக் குரல் அன்றைக்கு வெற்றி பெறவில்லை.

அதே நிலையிலேயிருந்து தமிழ் மொழி ஆட்சி மொழியாக ஆகவேண்டும், அது ஒரு நிபந்தனை என்று விதிக்கப்பட்டு, பின்னர் தயாரிக்கப்பட்டு, அவர்களும் கையெழுத்திட்டுள்ள அஜண்டாவிலே என்ன இருக்கிறது என்றால்,

"A committee will be set up to study the feasibility of treating all 19 languages included in schedule - VIII of the constitution as Official Languages."

இதற்கு ஒரு கமிட்டி போடப்பட்டு, இது சாத்தியமா என்று ஆராயும். சாத்தியமா என்று ஆராயும்போது, ஒவ்வொரு மொழியாக எடுத்துக்கொள்ள வேண்டும். 19 மொழிகளும் சாத்தியமா என்று ஆராய்ந்தால் சாத்தியமில்லை என்றுதான் முடிவு வரும். தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி உண்டா என்று ஆராயத் தொடங்கினால், எல்லோரும் சேர்ந்து 'உண்டு' என்ற அந்த முடிவைத்தான் தெரிவிப்பார்கள். எனவே, தமிழ்மொழி அங்கே ஆட்சி மொழியாக, மத்திய ஆட்சி மொழியாக ஆவதற்கான அந்தச் சூழல் இந்த அஜண்டாவிலே இடம் பெறவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இப்படிச் சுட்டிக்காட்டுவது குறை கூற அல்ல; மேலும் இதற்கான முயற்சிகளை இன்றைக்கு அங்கே பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர்கள் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கின்றேனேயல்லாமல் குறை கூறுவதற்காக நான் சொல்லவில்லை. இவையெல்லாம் நிறைவேற வேண்டும் என்கின்ற ஆசை காரணமாகக் கூறுகின்றேன். அதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட்டால். ஏதோ சில நிர்ப்பந்தங்கள், ஏதோ சில பதவிகளுக்காகத்தான் செய்யப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு விரோதமான சில காரியங்கள் செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் இந்த நிபந்தனைகள் எல்லாம் விதிக்கப்பட்டன என்ற ஒரு எண்ணத்தை உறுதிப்படுத்தக்கூடிய அளவுக்கு ஆகிவிடும் என்பதற்காக இதிலே மேல் நின்று முயற்சிகளை முனைப்போடு செய்யவேண்டும் அவர்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமாக இங்கே பேசப்பட்ட வெடி குண்டு சம்பவங்கள். இதிலே நான் நீண்ட நேரம் பேச விரும்பவில்லை யென்றாலும், ஒரு தகவலை - இந்த அரசுக்குக் கிடைத்த இந்தத் தகவல் எப்படியெல்லாம் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு எங்கே இதிலே சோடை ஏற்பட்டது என்பதை உங்களுக்கு விளக்குவதற்காகச் சொல்கின்றேன். ஏற்கெனவே, செய்தியாளர்களிடத்திலே ஒரு சிலவற்றைச்

சொல்லியிருக்கின்றேன். முழுமையாக இந்த மாமன்றத்திலே சொல்ல வேண்டும் என்பதற்காக இவைகளை நான் நினைவூட்டுகின்றேன். கோவை குண்டு வெடிப்பு சம்பவம் நடப்பதற்கு முன்பே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்றல்லாம் இங்கே உறுப்பினர்கள் பலரும் கேட்டிருக்கின்றார்கள். நான் அவர்களுக்குச் சொல்கின்ற பதிலை ஒரு அறிக்கை போல இங்கே வைக்க விரும்புகின்றேன்.

## காவல்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அறிவுரைகள்

கோவை மாநகரக் காவல்நிலையத்தையும், காவல்துறை வாகனங்களையும் வெடிகுண்டு வைத்துத் தகர்ப்பதற்காக இஸ்லாமிய தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை, தமிழ்நாடு காவல்துறையின் புலனாய்வுத் துறை, 11.12.97 அன்று அரசுக்குத் தெரிவித்தது. மத்திய புலனாய்வுத் துறையல்ல; கவனமாகக் கேட்கவேண்டும். தமிழ்நாடு காவல் துறையினுடைய புலனாய்வுத் துறை - டி.ஐ.ஜி - 11.12.97 அன்று அரசுக்குத் தெரிவித்தது. உடனடியாக அரசின் சார்பில் இந்தத் தகவல் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாநகரக் காவல் ஆணையருக்கும் அனுப்பப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை அரசாங்கத்தால் வழங்கப்பட்டது.

கோவை மாநகரக் காவல் நிலையம், காவல், துறை வாகனங்கள் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்படும். தீவிரவாதிகள், அதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற செய்தி, 11.12.97 அன்று கிடைத்த செய்தி உடனடியாகக் கோவை மாநகர காவல் துறை ஆணையருக்கு அனுப்பப்பட்டது.

பிறகு 21.12.97ல் சென்னையிலே உள்ள மத்திய புலனாய்வுத் துறை இணை இயக்குநர், ஐ.பி.யினுடைய இணை இயக்குநர், தமிழ்நாடு காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு 21.12.97ல் ஒரு தகவல் அனுப்பினார். அதில் “1997 நவம்பர், டிசம்பர் மாதங்களில் கோவை நகரில்

நடந்த மதக்கலவரங்களில் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்குப் பதில் அடி கொடுக்கும் வகையில் கோவை நகர் வெளிப்புறத்தில் சில வன்முறைகளில் அல் - உம்மா இயக்கத்தினர் ஈடுபடக்கூடும். காவல் நிலையங்கள், கோவை காவல் ஆணையர் அலுவலகம், எரிவாய்வு ஏற்றிச்செல்லும் லாரிகள் போன்றவை பாதிக்கப்படலாம்'' - என்று அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த தகவலும் புறக்கணிக்கப்படவில்லை.

உடனடி நடிவடிக்கைக்காகக் கோவை மாநகரக் காவல்துறை அதிகாரிகளுக்கு மாநிலக் காவல்துறை அதிகாரிகளால் அனுப்பி வைக்கப்பட்டது. பிறகு, **24.12.97** அன்று அரசின் தலைமைச் செயலாளருக்கு ஒரு தகவல் தரப்பட்டது. இந்தத் தகவலும் நான் முதலிலே குறிப்பிட்ட அதே தகவல்தான், என்னென்ன நடைபெறும் என்ற தகவல்தான் தெரிவிக்கப் பட்டது. உடனடியாக, தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், பொதுத் துறைச் செயலாளர், காவல்துறை இயக்குநர், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் ஒழுங்கு) காவல்துறை கூடுதல் இயக்குநர் (உளவுத்துறை) ஆகியோரைக் கொண்ட உயர்மட்ட அலுவலர்களுடைய கூட்டம் கோட்டையிலே நடந்தது.

இந்தக் கூட்டத்தில் வெடிகுண்டு அச்சுறுத்தல் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டது. ஏற்கெனவே அடையாளங் காணப்பட்ட மதத் தீவிரவாதிகளுடைய செயல்பாடுகளை உன்னிப்பாகத் தொடர்ந்து கண்காணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள, அதற்கான திட்டம் -(Contingency Plan) - ஒன்றைத் தயாரித்து உடனடியாக அமல்படுத்த வேண்டும் எனக் காவல்துறை அதிகாரிகளுக்கு அந்தக் கூட்டத்தில் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அதேபோல், அல் - உம்மா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பால்கேன் போன்று தோற்றம் அளிக்கக்கூடிய பொருட்களில் வெடிபொருட்களை மறைத்துவைத்து, எரிவாயு ஏற்றிச் செல்லும் லாரிகளையும், காவல் நிலையங்களையும் தாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாக - ஒரு

தகவலைத் தமிழ்நாடு அரசின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு எஸ்.பி.சிஐ.டி. 27.12.97 அன்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தது. அதையொட்டி தலைமைச் செயலாளர், காவல்துறைத் தலைவர் டி.ஜி.பி. காவல்துறை கூடுதல் தலைவர் (புலனாய்வு) ஏ.டி.ஜி.பி., (இண்டெலிஜென்ஸ்) ஆகிய உயர் மட்ட அலுவலர்களைக் கொண்ட கூட்டத்தைக் கூட்டி அதுபற்றி விவாதித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மத்திய அரசின் உள்துறையிடமிருந்து 24.1.98 அன்று ஒரு எச்சரிக்கைச் செய்தி வந்தது. அதிலே, ரம்ஜான் பண்டிகையையொட்டி அல்-உம்மா இயக்கம் கோவை நகரில் குண்டுவெடிப்பிற்குத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தகவலும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், கோவை காவல்துறை ஆணையர் அவர்களுக்கும், காவல்துறை இயக்குநருக்கும் தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் 24.12.97 அன்று கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீவிர அறிவுரைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

மத்தியப் புலனாய்வுத் துறையின் இணை இயக்குநர் 21.12.97 கடிதத்தில் என்ன தெரிவித்திருந்தாரோ அதே எச்சரிக்கைச் செய்தியை மத்தியப் புலனாய்வுத் துறை இயக்குநர் 2.1.98 அன்று மாநிலக் காவல்துறைத் தலைவருக்கு அனுப்பியிருந்தார். இக்கடிதம் 5.1.98 அன்று காவல்துறைத் தலைவரால் பெறப்பட்டது.

மத்தியப் புலனாய்வுத் துறை இணை இயக்குநர் தமிழக அரசின் காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு 19.1.98 அன்று எழுதிய கடிதத்தில் ரம்ஜான் பண்டிகையைத் தொடர்ந்து ஒரு வார காலத்திற்குள் வன்முறை செயல்களில் அல்-உம்மா இயக்கத்தினர் ஈடுபடக்கூடும் என்றும் தெரிவித்திருந்தார். இதுவும், உடனடியாகக் கோவை காவல்துறை

அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டது. தெரிவிக்கப்பட்டு, கண்காணிப்போடு செயல்படுங்கள் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

## முறையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட இடங்கள்

இவ்வாறு 14-ஆம் தேதி கோவையிலே வெடிகுண்டு சம்பவம் நடப்பதற்கு முன்பு இதேபோல் பல எச்சரிக்கைகள் செய்யப்பட்டு, அந்த எச்சரிக்கையின்பேரில் திருநெல்வேலி மாவட்டம் - கூடங்குளம், விழுப்புரம் மாவட்டம் - சின்னசேலம், தர்மபுரி மாவட்டம் - பாப்பாரப்பட்டி, அஞ்சட்டி, பெண்ணாகரம், கடலூர் மாவட்டம் - சிதம்பரம், செங்கற்பட்டு கிழக்கு காவல் மாவட்டத்தில் தாம்பரம், மாங்காடு, மதுரை மாவட்டம் - பேரையூர், சென்னையில் வேப்பேரி, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, தஞ்சாவூர் மாவட்டத்தில் அம்மாப்பேட்டை, சேலம் மாவட்டத்தில் தலைவாசல், ஆத்தூர், மகுடஞ்சாவடி, மேச்சேரி, கருமலைக்கடல், தாரமங்கலம், வீரகனூர், கொண்டலாம்பட்டி, சங்ககிரி, தீவட்டிப்பட்டி, சூரமங்கலம், தம்மம்பட்டி, ஓமலூர், சேந்தமங்கலம், விருதுநகர் மாவட்டத்தில் திருத்தங்கல், காரியாப்பட்டி, மாரனெரி, வச்சகாரப்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், முரப்பநாடு, ஆத்தூர், குமரி மாவட்டத்தில் இரணியல், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம், கோவை மாவட்டத்தில் மடத்துக்குளம் ஆகிய இடங்களில் முறையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிப்ரவரி 1-ஆம் தேதி முதல் 13-ஆம் தேதி வரையில் கோவை ஒன்றைத் தவிர எல்லா இடங்களிலும் முறையாக அரசு தாக்கீதை ஏற்று டி.ஜி.பி.யினுடைய தாக்கீதை ஏற்று ஆங்காங்குள்ள காவல்துறை ஆணையாளர்கள், டி.ஐ.ஜி.கள் எஸ்.பி.கள் இவர்கள் முறையாகச் சோதனையை அங்கே நடத்தினார்கள். 1.2.98 முதல் 13.2.98 வரை கண்டுபிடிக்கப்பட்டவை, 13 நாட்களில், நாட்டு வெடிகுண்டு 2019, ஜெலட்டின் குச்சிகள் 586, டெட்டனேட்டர்கள் 1595, பட்டாசுகள் 2675 மற்றும் 11 பண்டல்கள், பியூஸ் வயர் 362 மீட்டர்.

இதர வெடிமருந்துப் பொருட்கள் 207 கிலோ, துப்பாக்கிகள் 6, கைத்துப்பாக்கிகள் 2, எஸ்.பி.எம்.எல்.2, கேட்ரிட்ஜிகள் 5, பிப்ரவரி 1ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களையொட்டி தொடரப்பட்ட வழக்குகள் 49. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் 95. இவர்களில் கைது செய்யப்பட்டவர்கள் 81 பேர்.

ஆனால், கோவையிலிருந்து வந்த பதில் என்னவென்றால், 'நீங்கள் என்ன செய்தீர்கள்' என்று கேட்டதற்கு வந்த பதில் என்னவென்றால், கோவையிலும் பல்வேறு சோதனைகள் செய்யப்பட்டதாகவும், சில இடங்களில் மத்திய காவல் படை (சி.ஆர்.பி.எப்) துணையோடு சோதனைகள் செய்யப்பட்டதாகவும், ஆனால் அந்தச் சோதனைகளில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கோவை மாநகர அதிகாரி அறிக்கை அனுப்பினார்.

ஏன் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை, என்ன செய்தாய் என்றால், இதற்கெல்லாம் முதலமைச்சரா போய்ப் பார்க்க முடியும்? அதிகாரியைத்தான் நம்பினோம். கோவை மாநகரக் காவல்துறை அதிகாரி தெளிவாகச் சொல்கிறார். கோவையிலே பல இடங்களில் சோதனைகள் செய்யப்பட்டன. சில இடங்களில் மத்திய காவல்படை (சி.ஆர்.பி.எப்) துணையோடு சோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் சோதனைகளில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கிடைக்வில்லை என்று கோவை மாநகர அதிகாரி, அரசு கேட்ட விளக்கத்திற்குப் பதில் அனுப்பினார்.

## தீவிரவாத இயக்கங்களைத் தடை செய்து ஆணை

அதற்குப் பிறகுதான் 14-ஆம் தேதி சம்பவம் நடைபெற்றது. சம்பவம் நடைபெற்ற நாளில் சிந்தாதிரிப்பேட்டையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தினுடைய இறுதிக்கூட்டம். நானும், மூப்பனாரும், நல்லக்கண்ணு அவர்களும், சங்கரய்யா, வடிவேலு போன்றவர்களும் அதற்குப் பிறகு

அந்தச் சம்பவத்தைப் பற்றிக் கலந்து பேசிக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு பேசினோம். உடனடியாக அதே நாளில் இரண்டு மணி நேரத்திற்குள்ளாக இரண்டு தீவிரவாத இயக்கங்களைத் தடை செய்து அரசு, ஆணை பிறப்பித்தது.

அந்த நேரத்தில் கோவைக்குப் பிரச்சாரத்திற்கு வந்திருந்த அத்வானி அவர்களைப் பத்திரமாகத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று, 10 நிமிடங்களுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சியரோடு தொடர்புகொண்டு பேசினேன். இன்னும் சொல்லப்போனால், 14ஆம் தேதி காலையில், திரு.அத்வானி அங்கே வருகிறார் என்ற செய்தியைப் பத்திரிகையிலே பார்த்துவிட்டு, உடனடியாக நான் போலீஸ் கமிஷனர், கோவை அவர்களை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, 'அத்வானி வருகிறார், பாதுகாப்பு சரியாக இருக்கட்டும், பல கடிதங்கள் ஏற்கெனவே வந்து போயிருக்கின்றன. அந்தக் கடிதங்களில் குறிப்பிட்டபடி கண்காணியுங்கள்' என்று சொன்னபோது, சரி என்றுதான் சொன்னார், ஆனால் நிலைமை இப்படி ஆகிவிட்டது.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, திரு.அத்வானி பேசவிருந்த அந்தக் கூட்டத்திற்கும், வெடிகுண்டு வெடித்த இடத்திற்கும் கிட்டத்தட்ட 820 மீட்டர் தொலைவு. 820 மீட்டர் தொலைவிலே வெடிகுண்டு வெடித்து, அத்வானி அவர்களை அந்தக்கூட்டத்திலே கொன்றிருக்க முடியுமா என்பதை நான் உறுதியாக அறுதியிட்டுச் சொல்ல விரும்பவில்லை. இதற்கெல்லாம் கோகுலகிருஷ்ணன் அவர்களுடைய விசாரணைக் குழு ஆராய்ந்து பதில் சொல்லவிருக்கிறது.

### பிரதமருக்கு இணையாக அத்வானிக்குப் பாதுகாப்பு

ஆனால் எங்களுக்கு இருந்த கவலை, நானும் மூப்பனாரும் உட்கார்ந்துகொண்டு 10 நிமிடங்களுக்கு ஒருமுறை கலெக்டருக்குப்

ஃபோன் செய்து, திரு.அத்வானி அவர்களைப் பத்திரமாகத் திருப்பி அனுப்பவேண்டும் என்று சொன்னபோது, அவர் கேட்கமாட்டேன் என்கிறார். மருத்துவமனைக்குப் போகவேண்டுமென்று சொல்கிறார் என்று சொன்னபோது, சரி பலத்த பந்தோபஸ்தோடு, ஒரு பிரதமருக்குப் போடுகின்ற பந்தோபஸ்தைவிட அதிகமாக திரு.அத்வானி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர் மருத்துவமனைக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தார்.

பிறகு, திருச்சியிலும், அதைவிட அதிகமான பந்தோபஸ்தோடு அந்தக் கூட்டம் அங்கே நடைபெற்று திரு.அத்வானி அவர்கள் பத்திரமாகத் திரும்பிச் செல்வதற்கான வழிவகை ஏற்பட்ட பிறகுதான் நான் பெருமூச்சே விட முடிந்தது. அந்த அளவிற்கு அந்த நாள் அமைந்தது என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

வெடிகுண்டு சம்பவத்திற்கான காரணங்களைக் கண்டறியவும், காவல்துறைத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட எச்சரிக்கைச் செய்தி மீது இன்னும் தீவிரமான நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காகவும், கோவை மாநகரக் காவல்துறை அதிகாரி செயல்பாட்டில் குறைகள் இருப்பின் அவைகள் பற்றிய உண்மை நிலையை அறியவும், நஷ்டஈடு எவ்வளவு தரவேண்டுமென்பதை அறியவும், இதற்கெல்லாம் மூலகாரணம் என்ன என்பதை அறியவும்தான், நீதிபதி பி.ஆர்.கோகுலகிருஷ்ணன் அவர்களுடைய குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

உங்களுடைய அனுமதியோடு சொல்லிக் கொள்கிறேன். இப்படி பொறுப்பற்ற ஒரு காவல்துறை அதிகாரி மீது - உங்களுடைய அனுமதியோடு - இந்த அரசு விளக்கம் கேட்டு கடுமையான நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## மிகத் திறமையாக நடந்துவரும் விசாரணை

தொடர்ந்து இங்கே எதிர்க்கட்சித் தலைவர்கூட சி.பி.ஐ.விசாரணை வேண்டுமென்று குறிப்பிட்டார். மாநிலக் காவல்துறை உயர் அதிகாரிகள்

மற்றவர்களுடைய விளக்கங்கள் கோரப்பட்ட அந்தச் சூழ்நிலையில், விரிவான புலனாய்வு ஒன்றை நடத்த பரம்வீர் சிங் என்கிற ஐ.பி.எஸ்.அலுவலர் தலைமையில் - ஐ.ஜி. அந்தஸ்தில் உள்ளவர் - 15.2.98 முதல் மறுநாளே விசாரணை ஆரம்பமாகிவிட்டது. இந்த விசாரணை மிகத் திறமையாக நடைபெற்று வருகிறது. நான் சி.பி.ஐ. வேண்டாம் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. மிகத் திறமையாக இவர்கள் இந்த விசாரணையை நடத்திவருகிறார்கள்.

கேரளத்திலே விட்டுவிட்டார்களே என்று தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். கேரளத்திலே யாரையும் விடவில்லை. அங்கே 8 பேர் பிடிபட்டதாகச் செய்தி வந்தது. அவர்களுக்கும் கோவையில் நடைபெற்ற சம்பவங்களுக்கும் சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகத்தின் பேரிலே பிடிக்கப்பட்டார்கள். இவர்களும் படபடப்போடு அங்கே ஓடிச்சென்று பார்த்தார்கள். இந்தச் சம்பவத்திற்கும், இவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பதால் அவர்கள் விடப்பட்டார்களே அல்லாமல், குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டவர்கள் யாரும் விடப்படவில்லை.

இதுவரையில் 104 பேர் குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டு, 42 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து தமிழகத்திலே, மாநிலத்திலே இந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரம் எப்படி காப்பாற்றப் பட்டிருக்கிறது என்பதையெல்லாம் உறுப்பினர்கள் மிக நன்றாக, தெளிவாக அறிவீர்கள். இதற்கெல்லாம் மூல காரணங்களை ஆராய்ந்து, அதைப்பற்றி நாம் இங்கே பேசும்போது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிக அருமையாக எரிகிற 'நெருப்பிலே எண்ணெய் வார்ப்பதாக நம்முடைய பேச்சுவார்த்தைகள், எழுத்துக்கள் அமைந்துவிடக்கூடாது' என்று சொன்னார்கள். ஆனால் சில நேரங்களில் மூண்டெழுகிற உணர்ச்சிகளை அடக்க முடியாமல் சிலர் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. நம்முடைய அன்பிற்குரிய இந்திய

தேசிய லீக் கட்சியினுடைய தலைவர், அருமைமிகு நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் பல செய்திகளை இங்கே சொன்னார்கள். அதற்குப் பதிலாக மற்றொன்று நடைபெற்றது; நவம்பர் கடைசி நாளும் டிசம்பர் முதல் நாளும், கோவையில் நடைபெற்ற சம்பவங்களுக்கு மாறாக இந்தச் சம்பவம் பதிலடியாக நடந்தது என்ற நிலையிருந்தாலும்கூட அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

## வன்முறைக்கு இன்னொரு வன்முறை தீர்வல்ல

ஏனென்றால் வன்முறைக்கு இன்னொரு வன்முறை தீர்வல்ல. சட்டத்தை நாமே கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது. இதை அப்துல் லத்தீப் அவர்களும் மறுப்பவர்கள் அல்ல, ஏற்றுக்கொள்ளக் கூடியவர்தான். அத்தகைய பண்பு வாய்ந்தவர்தான் அவர்கள். இதைப் போலவே எல்லோரும்.

நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் மிகுந்த வேகத்தோடும், கொந்தளிப்போடும், குமுறல்களோடும் இங்கே தன்னுடைய ஆத்திரத்தையெல்லாம் வெளிக்காட்டினார்கள். நான் அந்த அடிப்படைகளையெல்லாம் மறக்கவில்லை. மறைக்கவும் விரும்பவில்லை. அந்த அடிப்படைகளை எல்லாம் உணர்ந்தவன்தான் நான். அந்த அடிப்படைகள் சரிசெய்யப்பட வேண்டும் என்கிற பேரியக்கத்தில் தந்தை பெரியார் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களால் வழி நடத்தப்பட்டு இன்றைக்கு உங்களோடு இருப்பவன்தான் நான் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

எனவே, அந்த அடிப்படைகளைப் பற்றி லத்தீப் அவர்களோ, கிருஷ்ணசாமி அவர்களோ, மற்றவர்களோ எடுத்துச் சொல்கிற அந்தக் கருத்துக்கள் முரண்பாடானவை அல்ல. இருந்தாலும்கூட வன்முறைக்கு வன்முறை பரிகாரம் ஆகாது.

சென்னையிலே பிடிபட்டிருக்கின்ற 4, 5 இளைஞர்களுடைய படங்களைப் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். எவ்வளவு இளைஞர்கள் அவர்கள். அழகானவர்களாக இருக்கிறார்கள். அதேபோன்று இஸ்லாமியத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி. அவர்களைப் பார்க்கும்போது நமக்குப் பரிதாபமாக இருக்கிறது. அவர்களிடம் இந்த உணர்வைத் தட்டி எழுப்பக்கூடிய அளவிற்கு, மூளைச் சலவை என்பார்களே, அதேபோன்று சலவை செய்யப்பட்டு அவர்கள் இன்றைக்கு முடுக்கிவிடப்பட்டு இருக்கிறார்கள்.

நபிகள் நாயகம் என்ன சொன்னார்? இவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரிக் காரியங்களைச் செய்து விட்டு, செத்துப்போனால்கூட, மோட்சத்திலே நமக்கு மகிமை உண்டு என்று அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். பிடிபட்ட சில இளைஞர்களில் ஒருவர் தன்னுடைய மனைவிக்கு எழுதிய கடிதத்தில் இதைக் குறிப்பிட்டு இருக்கிறார். 'நாம் இதுபோன்ற காரியங்கள் செய்து மரணம் அடைந்தால், மரணலோகத்திலே நமக்கு எல்லா விதமான சுகமும் உண்டு. நம்முடைய லட்சியத்திற்காகப் பெறுகின்ற வெற்றி அது' என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்படி ஒரு மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறது.

நபிகள் நாயகம் அழகாகச் சொல்லியிருக்கிறார். 'மதமாச்சரியத்திற்காகப் போரிடுவதும் நல்லதல்ல. அதற்காக மரணம் அடைவதும் நல்லதல்ல. அவர்கள் எல்லாம் நம்மவர்களும் அல்ல' என்று கூறியிருக்கிறார். இதை அந்த இளைஞர்கள் உணரவேண்டும். ஏதோ ஒரு காரியத்திற்காகப் பழிக்குப் பழிவாங்குதல் என்ற காரியத்திற்காக, மொத்த சமுதாயத்தையும் அழித்துவிடக் கூடாது. அப்படியே வாதத்திற்காகச் சொல்கிறேன். பழிவாங்குவது, பகை தீர்த்துக் கொள்வது என்றால் குறிப்பிட்ட ஒரு நபரையா பழி தீர்க்கிறோம் - பலி வாங்குகிறோம்? அல்ல. யாரையோ பழிவாங்குவதாக எண்ணிக்கொண்டு, அப்பாவி மக்கள், இதைப் பற்றியே தெரியாத மக்கள், இன்னும் சொல்லப்போனால் பாபர் மசூதி என்றால் என்னவென்று தெரியாதவர்கள் - அங்கே என்ன பிரச்சினை என்று பல

பேருக்குத் தெரியாது. அப்படிப்பட்ட மக்கள் - தெருவிலே வியாபாரம் செய்து கொண்டு போகிறவர்கள், பால் விற்றுக்கொண்டு போகிறவர்கள், காய்கறி விற்றுக்கொண்டு போகிறவர்கள், தன்னுடைய அண்ணனையோ, தம்பியையோ பார்க்கச் செல்கின்றவர்கள், தாயைக் காணச் செல்கின்றவர்கள், சகோதரனைப் பார்க்கச் செல்கின்றவர்கள், குழந்தையை பள்ளிக்கு அனுப்புகின்ற தாயார், இப்படிப்பட்ட ஏழையெளிய மக்கள், சாதாரண அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்படுகிறார்களே, அந்த நேரத்தில் அது நம்முடைய தாயாக இருந்தால், அப்படி இறந்தவர் நம்முடைய தந்தையாக இருந்தால், கொல்லப்பட்டது நம்முடைய குழந்தையாக இருந்தால் நம்முடைய மனம் எப்படித் துடிக்கும் என்று ஒரு கணம் எண்ணினால், இப்படிப்பட்ட தீய சிந்தனையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியும்.

**தீவிரவாதம் பற்றி மார்க்ரெட் தாட்சர்**

இந்த வெடிகுண்டுப் பிரச்சினையில் ஒரு அரசு எப்படி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதில் உறுப்பினர்கள் அத்தனைப் பேரோடும் சேர்ந்து நானும் இணைந்துகொள்ள விரும்புகிறேன். இதில் மாறுபட்ட கருத்து உடையவன் அல்ல நான். நான் ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறேன். மார்க்ரெட் தாட்சர், இங்கிலாந்து நாட்டினுடைய பிரதமராக இருந்தவர். இந்தத் தீவிரவாதத்தைப் பற்றி ஒன்று சொல்லியிருக்கிறார்.

"If the terrorists succeed once, it is a great victory for them. But, we have to succeed everytime against their activities".

தீவிரவாதிகளை அடக்க முனையும் அரசு 100 தடவை முயன்றாலும், அந்த 100 தடவையும் வெற்றி பெற்றாக வேண்டும். அதாவது 100 தடவை முயன்றாலும் 100 தடவையும் வெற்றிபெற்றாக வேண்டும். ஆனால், தீவிரவாதிகளோ அவர்களது முயற்சியில் ஒரு முறை வெற்றி பெற்றாலும் அதைப் பெரும் வெற்றியாகக் கருதுவார்கள். அதையும் மனதிலே வைத்து

இந்த அரசு நிச்சயமாகச் செயல்படும் என்பதை உறுப்பினர்கள் அனைவருக்கும் மிகுந்த பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற பல தலைவர்கள் குறிப்பிட்டுள்ள பல்வேறு கோரிக்கைகளுக்கெல்லாம் அடுத்து வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே அதற்கான விளக்கங்களைத் தருவேன். எவை எவை ஏற்றுக் கொள்ளப்பட்டவை; எவை எவை ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதையும் அதில் நீங்கள் காணலாம்.

ஆதிதிராவிடர்களுக்கு மொத்த வருவாயிலே 25 சதவிகிதம் தரப்பட வேண்டும் என்று, நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னார்கள். 25 சதவிகிதம் என்பது, பார்ப்பதற்கு; அவ்வளவுதானே கேட்கிறார்; குறைவாகத்தானே கேட்கிறார்; கொடுத்தால் என்ன; என்று கேட்கத் தோன்றும். ஆனால் நான் சொல்ல விரும்புகிறேன்; வருவாயிலே 50 சதவிகிதம் எங்கே போகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நாளைக்கு அவர்களுக்காகப் பேச இருக்கிறார்கள் உறுப்பினர்கள். அரசு அலுவலர்களுக்கு நம்முடைய வருவாயிலிருந்து 50 சதவிகிதம் ஊதியமாகச் செல்கிறது. 25 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கு என்று ஒதுக்கிவிட்டால், மிச்சம் 25 சதவிகிதம்தான் மற்றவர்களுக்கு என்றால், அதை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். 25 சதவிகிதமோ அல்லது அதற்குக் குறைவானதோ ஆதிதிராவிடர்களுக்கு நாம் ஒதுக்குகிறோம் என்றால், மிச்சம் இருக்கின்ற எல்லாத் தொகையும் ஆதிதிராவிடர் அல்லாதவர்களுக்குப் போய்ச்சேருவதாக எண்ணிக்கொள்ளக் கூடாது. மிச்சத்தொகையும் ஆதிதிராவிடர்களுக்கும் சேர்த்துத்தான். சாலை போட்டால் அதில் ஆதிதிராவிடர்களும் நடக்கிறார்கள். அல்லாதவர்களும் நடக்கிறார்கள். குளம் வெட்டினால், அதில் ஆதிதிராவிடர்களுக்கும் உரிமை இருக்கிறது. சில இடங்களில் உரிமை இல்லாமல் இருக்கலாம். அந்த உரிமையைப் பெற்றுத் தரவேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

அதைப்போல எல்லாவிதமான நன்மைகளிலும், அவர்களும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில், எல்லா வகைகளிலும் ஆதிதிராவிடர்களுக்குப் பங்கு இருக்கிறது. எனவே, தனியாக அவர்களை மேலும் உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான், பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட மக்களுக்கு என்று, சில சலுகைகளுக்காக, அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக இந்த ஒதுக்கீடே தவிர, இதுவேதான் அவர்களுக்கு, இதிலிருந்து மேலே ஏதும் அவர்களுக்குத் தர முடியாது என்று நூல் கட்டி உச்ச வரம்பு வைத்து இந்த நிதி ஒதுக்கப்படவில்லை.

## பேருந்துக் கட்டணம் குறைப்பு

இறுதியாக, இந்த அவையிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கண்டிப்பாகக் கூடப் பேசினார். இந்தப் பேருந்துக் கட்டணத்தைப் பற்றி எல்லோரும் பேசியிருக்கின்றார்கள். இது பற்றிப் பல விளக்கங்கள் நான் அளித்திருக்கின்றேன். ஏற்கெனவே 14 காசு என்று இருந்ததை 22 காசு என்று உயர்த்தப்பட்டது. பொதுமக்கள், அரசியல் கட்சிகளின் கோரிக்கைக்கு ஏற்ப 22 காசு என்பது 20 காசாகக் குறைக்கப்பட்டது. அப்படி 20 காசாகக் குறைக்கப்பட்ட நிலையிலும்கூட நமக்கு ஏற்பட்ட நஷ்டம், போக்குவரத்துத் துறைக்கு, சுமார் ரூ.280 கோடி. அவர்களுக்கா நஷ்டம்? அரசுக்கு நஷ்டம். அரசு கொடுக்க வேண்டும் அவர்களுக்கு. நாம்தானே கொடுக்க வேண்டும்.

20 காசு என்று நம் மாநிலத்திலே நிர்ணயித்தபோது, ஆந்திராவிலே, நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொல்வார்கள், அங்கே 36% கொடுக்கிறார்களே, இங்கே கொடுத்தீர்களா என்று, அதற்கு மாத்திரம் அதை Campare (ஒப்பீடு) செய்வார்கள். பழனிசாமி, சுப்பராயன் எல்லோரும் அதை 'கம்பேர்' செய்வார்கள். அதை இங்கே கொடுப்பீர்களா என்று கேட்பார்கள்.

ஆந்திராவிலே, கேரளாவிலே, கர்னாடகாவிலே, ஒரு கிலோ மீட்டருக்கு 22 காசுகள், அதைவிட இங்கே 2 காசுகள் குறைவு. இராஜஸ்தானிலே கிலோ மீட்டருக்கு 24 காசு. உ.பி.பெரிய மாநிலம் - அதிலே 27.80 காசு. அதைவிட நாம் 7.80 காசு குறைவாக இருக்கிறோம். இருந்தாலும்கூட, தொடர்ந்து ஆளுநர் உரையின் விவாதத்திலே அத்தனைப் பேரும் பேசி, ஆளுங்கட்சி உறுப்பினர்களும் என்னை அரித்தெடுத்த காரணத்தினால், பேருந்துக் கட்டணம் கிலோ மீட்டருக்கு மேலும் 2 காசு குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


இதைப்பற்றி எல்லோரும் பேசியாகிவிட்டது. கணேசன் உட்பட எல்லோரும் பேசியாகிவிட்டது. எல்லாக் கட்சிக்காரர்களும் பேசியிருக்கிறார்கள். ஆகையினால் பொதுமக்களுடைய நன்றி, எனக்கு மாத்திரம் அல்ல; உங்கள் எல்லோருக்கும் சாரும் என்று கூறி, கி.மீட்டருக்கு கட்டணம் 18 காசாக ஆக்கப்படும்; அதற்கேற்றபடி, மற்ற நிலைகள் எல்லாம் ஆக்கப்பட்டு, அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, நல்ல கருத்துக்களைக் கூறிய உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள், பேரவை உறுப்பினர்களின் விவாதங்களுக்குப் பதில் அளித்து உரையாற்றினார்.

தமிழரசு

படித்துப்

பயன் பெறுவீர்


வழிகாட்டும் திட்டங்களா
வளம் கொழிக்கும் தமிழக
K.C. Industries

# வழிகாட்டும் திட்டங்களால்
# வளம் கொழிக்கும் தமிழகம்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
1998-99ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான
விவாதங்களுக்குப் பதிலளித்து, சட்டமன்றப் பேரவையில்
6-4-1998 அன்று ஆற்றிய உரை.

*வெளியீடு :*
*இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை,*
*தமிழ்நாடு அரசு.*

சிறப்பு வெளியீடு எண்: 10

'தமிழரசு' இலவச வெளியீடு

11-4-1998

*வெளியிடுபவர்:*

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
**சென்னை.**

**தமிழரசு அச்சகம்,**
**சென்னை-600 002.**

# 1998-99ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்துச் சட்டமன்றப் பேரவையில் 6-4-98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை

இந்த ஆண்டு அவைமுன் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையின் மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துவைத்து அரிய உரைகளை நிகழ்த்தியிருக்கின்றார்கள். அவர்கள் பாராட்டிய அந்த உரைகளை, மேலும் ஊக்கத்தோடு பணியாற்றுவதற்குத் தரப்பட்ட **வலுவேற்றக்கூடிய மாத்திரைகள்** என்று எண்ணிக்கொண்டும், கேலியோ அல்லது கிண்டலோ செய்து **எதிர்த்து ஆற்றிய உரைகளைத் திருத்திக்கொள்வதற்குத் தரப்பட்ட வாய்ப்பு** என்றும் எடுத்துக்கொண்டு என்னுடைய கருத்துக்களை இந்த நிதிநிலை அறிக்கையின் மீது இந்த மாமன்றத்திலே எடுத்துவைக்க விரும்புகிறேன்.

முதலில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய இரண்டு ஐயப்பாடுகளுக்கு நான் விடையளிக்க விரும்புகிறேன். வெளிநாட்டுக் கடன்களை அரசு பெறுவதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். வெளிநாட்டுக் கடன்களைப் பொறுத்தவரையில் அது மத்திய அரசு பெற்று மாநிலங்களுக்குக் கூடுதல் மத்திய திட்ட உதவியாக 70 சதவிகிதம் கடன், 30 சதவிகிதம் மானியம் என்ற விகிதத்திலே அளிக்கப்படுகிறது.

• இந்தக் கடன்களின் மீது Commitment Charges இவைகளை மத்திய அரசுதான் செலுத்திவருகிறது என்ற விளக்கத்தை நான் அவருக்கு அளிக்க விரும்புகிறேன்.

இன்னொன்று கூறினார்கள். வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்கக் குழு போடுவதாகச் சென்ற நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டீர்கள். அந்தக் குழு

என்னவாயிற்று? ஏன் இன்னும் நியமிக்கவில்லை? என்று கேட்டார்கள். கடந்த ஆண்டிலே நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவித்தது, வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்கக் குழு அமைக்கப்படும் என்று அல்ல; ஒரு செல் (Cell) அமைக்கப்படும் என்றுதான் கூறியிருந்தேன்; ஒரு பிரிவு அமைக்கப்படும் என்றுதான் கூறியிருந்தேன். அது அமைக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சருடைய அலுவலகத்திலேயே மூத்த ஐ.ஏ.எஸ் ஓய்வு பெற்ற அதிகாரி, Officer on Special Duty என்று அந்தப் பொறுப்பில் வெங்கட சுப்ரமணியம், ரிடையர்டு ஐ.ஏ.எஸ். அவர்கள் அந்தப் பணியை இப்போது ஆற்றிவருகின்றார் என்ற விளக்கத்தை அவருக்குத் தர விரும்புகிறேன்.

இன்னொன்று, கடந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட ``Right to Information Act" - தகவல் தெரிந்துகொள்ளுகின்ற அந்தச் சட்டம் என்னவாயிற்று என்று கேட்டார்கள். சட்ட அமைச்சர் அதற்கான பதிலைச் சொன்னார். விதிமுறைகளை உருவாக்குவதற்கு ஏன் இவ்வளவு தாமதம்? என்று அடுத்த வினா எழுப்பினார். இந்த ``Right to Information Act" இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக இயற்றப்பட்டிருக்கின்றது. அதனால் இந்தச் சட்டத்திற்கான விதிமுறைகளை உருவாக்குவதற்கு எந்த முன் மாதிரிகளும் நமக்குக் கிடைக்கவில்லை. எனவேதான், அந்த விதிமுறைகளை உருவாக்குவதற்குக் காலதாமதம் ஆயிற்று. இப்போது அந்த விதிமுறைகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு, இறுதி வடிவம் பெறுகின்ற சூழ்நிலை அமைந்துவிட்டது. எனவே, அந்த விதிமுறைகள் விரைவிலே வெளியிடப்படும் என்பதையும் நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள சிறப்பு அம்சங்களை இங்கே உரையாற்றிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி, தோழமைக் கட்சியினுடைய உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அவற்றை ஒருமுறை நானும் தொகுத்து வழங்கினால் நினைவிலே பதிவதற்கு ஏற்றதாக அமையும் என்பதற்காக அதனை உங்கள் முன்னிலையிலே வைக்க விரும்புகின்றேன்.

**அரசு அலுவலகங்களில் தகவல் மையங்கள்**

அரசு அலுவலகங்களில் பொதுமக்களுக்கு உதவி செய்யும் தகவல் வழங்குகின்ற மையங்கள், 10 புதிய வட்டங்கள் இந்த ஆண்டில் ஏற்படுத்தப்படும் என்ற செய்தி; இது மேலும் கோரிக்கைகள் வந்துள்ள செய்தியாக அமைந்திருக்கிறது. அவைகளும் உரிய நேரத்திலே உரிய முறையிலே கவனிக்கப்படும் என்ற அறிவிப்போடு இதைத் தெரிவிக்கின்றேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு இந்த ஆண்டு 75 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கீடு - நமக்கு நாமே திட்டத்திற்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.25 இலட்சம் என்பது ரூ.30 இலட்சமாக உயர்வு அதையும் உயர்த்திக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். பேசப் பேசத்தான், முடியுமா, முடியாதா என்பதைச் சிந்தித்துச் சொல்ல இயலும்.

வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் 385 வளர்ச்சி வட்டாரங்களுக்கு விரிவாக்கம். குடிநீர்த் திட்டங்கள் பல கோடி ரூபாய் செலவிலே, பல இடங்களிலே நிறைவேற்றப்படுகின்ற நிலையையொட்டி, குறிப்பாக சிறப்பாக, தாமிரபரணி ஆற்றிலிருந்து கடையநல்லூர் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்; அவிநாசி, அத்திக்கடவு குடிநீர்த் திட்டம்; நரியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவை இந்த ஆண்டு உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற செய்தி.

கோவை,மதுரை,திருநெல்வேலி மாநகராட்சிகளிலும், ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம், அம்பத்தூர், ஈரோடு, கரூர் நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடை வசதிகளை அளிக்கும் திட்டம் 269 கோடி ரூபாய் செலவிலே - வரும்ஆண்டிலே தொடங்கப்படும் என்ற செய்தி;

பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் நதி, அடையாறு ஆகிய நீர் வழிகளை மேம்படுத்தும் திட்டம்; 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் வெள்ளத் தடுப்பு மற்றும் வடிகால் பணிகள்.

## நியாய விலைக்கடைகளை மக்கள் பிரதிநிதிகள் கண்காணிக்க ஆணை

நியாயவிலைக் கடைகள் ஒழுங்காகச் செயல்படுகின்றனவா என்று கண்காணிக்க மக்கள் பிரதிநிதிகள் சென்று பார்க்க ஆணை.

20 கோடி ரூபாய் செலவில் காவிரிப் பாசன வாய்க்கால்கள் தூர் வாரும் திட்டம்.

100 மீனவர்களுக்கு 50 ஆயிரம் மதிப்புள்ள கண்ணாடி இழை கட்டுமரங்கள் மானிய விலையிலே வழங்கப்படும் திட்டம்.

538 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப்படும் என்ற அறிவிப்பு

சென்னையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக மற்றும் நிதி மையம்.

அக்டோபரில் தொடங்கும், ஒரு இலட்சத்து இருபதாயிரம் கார்கள் தயாரித்து வழங்கும் 'ஹுண்டாய்' தொழிற்சாலையினுடைய பணியின் முன்னேற்றம்.

தமிழ்நாட்டிலே கணினி மென்பொருட்கள், கணினி இயந்திரங்கள், தொழில்வளர்ச்சி ஊக்குவிக்கும் திட்டங்கள், மேலும் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தொழிற்சாலைகள்.

## தமிழகத்தில் பள்ளிகளே இல்லாத கிராமங்களே இல்லை என்னும் நிலையை உருவாக்கத் திட்டம்

அடுத்த ஆண்டுக்குள் தொடக்கப் பள்ளிகளே இல்லாத குக்கிராமங்களே தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை உருவாக்கும் திட்டம்.

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் இலவசப் பாடப்புத்தகம்.

வரும் ஆண்டிலேயிலிருந்து தொழில்நுட்பப் பயிலகங்களிலும் 'ஒற்றைச் சாளர முறை'.

திரு.வி.க., பேராசிரியர் கல்கி நூல்கள் அரசுடைமை. வசனகர்த்தா இளங்கோவன் குடும்ப நல நிதி 2 இலட்சம் ரூபாய். தியாகச் செம்மல் ஜமதக்னி நூலுக்கு - பொதுவுடைமை நூலுக்கு 5 இலட்சம் ரூபாய் நிதி.

வரும் ஆண்டுக்குள் 1408 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம்.

சத்துணவுச் சிறார்களுக்கு வாரம் ஒருமுறை முட்டை வழங்குகின்ற திட்டம்.

மூவலூர் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் 60 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

கேளம்பாக்கம் அருகில் பெண் தொழில்முனைவோர்களுக்கு உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் 250 ரூபாயிலிருந்து 4, 5 மாதங்களுக்கு முன்புதான் 300 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இப்போது 400 ரூபாயாக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ள செய்தி; ஆதிதிராவிடர்கள் தொழில் நடத்தக் கடன் வழங்க 'தாட்கோ' மூலம் வங்கிக்கு நிகராக ஓர் ஏற்பாடு.

## நெசவளார் பிரச்சினையைத் தீர்க்கக் குழு அமைப்பு

நெசவாளர் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து ஒரு நல்ல முடிவு காண குழு அமைப்பு

அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களுக்கு நல வாரியம்.

நெசவாளர், மீனவர், நிலமற்ற விவசாயத் தொழிலாளர், விதவைகள் ஆதரவற்ற பெண்கள் உடல் ஊனமுற்றோர் போன்ற நலிந்த பிரிவினருக்கான ஓய்வூதியம் 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்வு

ஆஸ்பெஸ்டாஸ் தகடு - முதல் கட்டமாக சென்னை, கோவை, சேலம், மதுரை, திருச்சி மற்றும் நெல்லையில் ஓலைக் குடிசைகளுக்கு மாற்றாக ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த வீடுகள்.

சமத்துவபுரத்திற்கு 17.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு; சுதந்திரப் பொன்விழாவையொட்டி, 20 சதவிகித இட ஒதுக்கீடு; போராட்டத்தில் உயிர் நீத்த சமூக நீதிக் காவலர்களுடைய குடும்பங்களுக்கு உதவித்தொகை எவ்வளவு என்பதை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறேன். 30 இலட்ச ரூபாய் செலவிலே தியாகிகள் மணி மண்டபம்; 50 இலட்சம் ரூபாய் செலவிலே தியாகி விஸ்வநாததாஸ் இல்லம்; 50 இலட்சம் ரூபாய் செலவிலே பூலித்தேவன் நினைவுச் சின்னம்; 1 கோடியே 5 இலட்சம் செலவிலே வீரன் சுந்தரலிங்கம் நினைவு கிராமம். 15.50 இலட்சம் ரூபாய் செலவில் ஜீவா நினைவிடம்; 7.40 இலட்சம் ரூபாய் செலவில் நேதாஜிக்குச் சிலை; அம்பேத்கர் மணிமண்டபம் தொடக்கம்; 84.94 இலட்சம் ரூபாய் செலவில், 5 ஆண்டுகளாகப் பாழடைந்து கிடந்த வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பிப்பது.

அரசு அலுவலர்களுக்கு 1.1.1996-லிருந்து மத்திய அரசின் திருத்திய ஊதிய விகிதம், நகர ஈட்டுப் படி, இரட்டிப்பு வாடகைப் படி, மாநில அரசு ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 40 விழுக்காடு ஊதிய உயர்வு; அலுவலர் - ஆசிரியர் ஊதிய மாற்றத்திற்கு முரண்பாடுகள் இருப்பின் அதைத் தீர்க்க ஒரு நபர் கமிஷன்; சென்னை மாநகரத்தை ஏ1 நகரமாக மாற்ற மத்திய அரசுக்குக் கோரிக்கை; உயிருக்குத் துணிந்து பணியாற்றும் காவலர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு விருது, பதவி உயர்வு, பொற்கிழி.

தேங்காய், கொப்பரை, பேக்கரிகளில் தயாரிக்கப்படும் வணிகச்சின்னம் இல்லாத உணவுப் பொருட்கள் - மசாலாப் பொடி, ஐஸ்கிரீம், பட்டாணி மாவு

போன்றவைகளுக்கு வரி குறைப்பு; காசினிக் கீரை, கணினி மென்பொருள், மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகம் போன்றவைகளுக்கு முழுக்க வரி விலக்கு; இன்னும் சிலவற்றைச் சேர்க்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இவைகளையும், இவற்றிற்கும் மேலாக வேறுபல நல்வாழ்வுத் திட்டங்களையும் தொலைநோக்குத் திட்டங்களையும் உள்ளடக்கித்தான் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

## பொட்டு வைப்பதற்கும் அரசுக்குத் துட்டு வேண்டியிருக்கிறது

நம்முடைய சுப்பராயன் அவர்கள் பேசும்போது - பெண்ணுக்கு எல்லா அலங்காரமும் செய்து பொட்டு வைக்க மறந்துவிட்டார்; விட்டு விட்டார் முதல்வர் என்று சொன்னார். ஒருவேளை அது முஸ்லிம் பெண்ணாக இருக்குமோ என்று அப்துல் லத்தீப் அவர்கள் எண்ணக்கூடும். பொட்டு எவ்வளவு வைக்கப்பட்டது? பொட்டு ஒரு சீராகத்தான் வைக்கப்பட வேண்டும், நெற்றி முழுவதும் பொட்டு வைத்துவிட முடியாது, அப்படி வைத்தால் அது பொட்டாக இருக்காது. பொட்டு வைப்பதற்கும் துட்டு வேண்டியிருக்கிறது, இப்போது இந்த அரசுக்கு என்பதை உணரவேண்டும் . அதுபற்றியும் என் பேச்சின் இறுதியில் கூற நான் இருக்கின்றேன்.

திருநாவுக்கரசு அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கை பற்றி ஆற்றிய உரையில், அதிலே குறிப்பிட்டுச் சொல்லிய செய்திகளைப் பற்றி விளக்கம் அளிக்க விரும்புகின்றேன். அவர்களும் - பல கட்சித் தலைவர்களும், உறுப்பினர்கள் கூட ஐயப்பாடுகளை எழுப்பி, பற்றாக்குறையை எப்படிச் சீர்செய்யப் போகிறீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். அதிக அளவிற்குப் பற்றாக்குறை வந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

நான் ஒரு புள்ளி விவரத்தைச் சொல்ல விரும்புகின்றேன். 1989 - 90 ஆம் ஆண்டு இந்தப் பற்றாக்குறை மதிப்பீட்டுக் கணக்கில் 147.67 கோடி ரூபாயாக இருந்தது. பிறகு இறுதியில் கணக்கில், அந்த ஆண்டு முடிந்து அடுத்த ஆண்டு கணக்கில் உபரி 9.39 கோடி. 1990 - 91 ஆம் ஆண்டு இந்தப் பற்றாக்குறை

மதிப்பீடு, நிகரப் பற்றாக்குறை 349.36 கோடியாக இருந்தது. பிறகு அது கணக்கில் ஒரு கோடி ரூபாய் உபரி என்று ஆயிற்று. 1991 - 92ல் இந்த நிகரப் பற்றாக்குறையினுடைய மதிப்பீடு 577.41 கோடி ரூபாயாக இருந்தது. பிறகு கணக்கில் அதிகமாகாமல் குறைந்து, பற்றாக்குறை 239.75 கோடி என்று ஆயிற்று. 1992 - 93ல் 217.62 கோடி என்று நிகரப் பற்றாக்குறையாக மதிப்பீடு இருந்து; பிறகு கணக்கிலே அது குறைந்து 34.23 கோடி என்று ஆயிற்று.

1993 - 94 மதிப்பீட்டில் நிகரப் பற்றாக்குறை 359.95 கோடி என்று இருந்து, பிறகு கணக்கில் பற்றாக்குறை 125.45 கோடி என ஆயிற்று. 1995 - 96ல் நிகரப் பற்றாக்குறை ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீட்டிலே இருந்து, பிறகு கணக்கிலே கூட உபரி 116.45 கோடி என ஆயிற்று. 1996 - 97ல், இந்த ஆட்சி பொறுப்பேற்ற காலகட்டத்தில் நிகரப் பற்றாக்குறை 334.89 கோடி என்று இருந்து, பிறகு கணக்கில் உபரி 15.91 கோடி என ஆயிற்று.

1997 - 98ல், கடந்த நிதிநிலை அறிக்கையில் நிகரப் பற்றாக்குறை 498.38 கோடி என்று இருந்து திருத்த மதிப்பீட்டில் அது உபரி 3.31 கோடி என்ற அளவிற்குக் குறைந்தது. இப்பொழுது, 1998 - 99ல், நிகரப் பற்றாக்குறை 876.67 கோடி என்று இருக்கிறது இந்த நிகரப் பற்றாக்குறை நாம் விதிக்க இருக்கின்ற வரிகளின் காரணமாக 340 கோடி ரூபாய் குறைந்து, இறுதிப் பற்றாக்குறையாக 536 கோடி இருக்கும் என்று நான் சுட்டிக்காட்டி இருக்கின்றேன் இந்த அறிக்கையில்.

இந்த அறிக்கை பற்றி நம்முடைய சொக்கர் அவர்கள் நிதிநிலை அறிக்கை எப்படி அமைய வேண்டும்என்ற அரிச்சுவடியிலே ஆரம்பித்து, நேரம் இல்லாத காரணத்தால் எம்.ஏ., வரையிலே செல்லாமல், ஓர் அரிய உரையை ஆற்றி இருக்கின்றார். அவர் உரையாற்றும்போது, நான் நினைத்துக்கொண்டேன். சுப்பராயன் சொன்னதைப் போல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் நிதிநிலை அறிக்கையைப் பற்றி - யாரும் தவறாகக் கருதிக் கொள்ளக்கூடாது. அவ்வளவு முழுமையாகத் தெரிவதற்கு நியாயமில்லை.

ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசுகிற நேரத்திலே, அவர்களுடைய கவலை எல்லாம், ஊருக்குத் திரும்பியதும் - 'தொகுதியைப் பற்றிப் பேசினாயா, பாலத்தைப் பற்றி பேசினாயா, வாய்க்காலைப் பற்றிப் பேசினாயா' என்ற இந்தக் கேள்விகளுக்குத் தான் பதில் சொல்லவேண்டும் என்பதற்காக அதைப்பற்றிப் பேசுகிறார்கள். இருந்தாலும் பொதுவாகப் பேசுகின்ற ஒரு நிலை இல்லை.

நம்முடைய ஜனநாயகத்திலே ஏற்பட்டுள்ள கோளாறு என்னவென்றால், நாடாளுமன்றம் எதற்காக இருக்கிறது; சட்டமன்றம் எதற்காக இருக்கிறது என்பதைத் தேர்ந்தெடுக்கப்படுகிற நாமும் உணர்ந்துகொள்வது இல்லை; நம்மைத் தேர்தெடுக்கின்ற மக்களும் உணர்ந்துகொள்வது இல்லை. சட்டமன்றம் என்பது மக்களுடைய நல்வாழ்வுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, பணத்தை ஒதுக்குவதற்காக அனுமதி கொடுக்கின்ற, அதற்கான சட்டங்களை இயற்றக்கூடிய மன்றம்தான் சட்டமன்றம்.

அதைப்போலவே, அகில இந்திய அளவிலே, இதைப்போன்ற சட்டங்களை நிறைவேற்றவும், திட்டங்களை உருவாக்குவதற்கும் இருக்கின்ற மன்றம்தான் நாடாளுமன்றம். ஆங்காங்குள்ள மக்களுடைய குறைகளை அறியவும், அவைகளை நிறைவேற்றி வைக்கவும், திட்டங்களை நிறைவேற்றவும் பஞ்சாயத்துக்கள் - உள்ளாட்சி மன்றங்கள், உள்ளாட்சித் துறையிலே உள்ளவர்கள், மக்களுடைய பிரதிநிதிகள் - பாடுபட வேண்டும்.

ஆனால், இப்பொழுது நிலைமை எப்படி ஆகி இருக்கிறது என்றால், உள்ளாட்சி மன்றத் தலைவர் செய்கிற தவறு எல்லாம் எம்.எல்.ஏ. மீதுதான்; எம்.எல்.ஏ. செய்கிற தவறு எல்லாம் நாடாளுமன்றத்தில் இருக்கிறார்களே, அவர்கள் மீதுதான் என்கின்ற அளவிற்கு மக்கள் ஒவ்வொரு காரியத்தையும், ஒவ்வொரு செயலையும் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எம்.பி.யாக இருந்தால் என்ன, எம்.எல்.ஏ.வாக இருந்தால் என்ன, பஞ்சாயத்துத் தலைவராக இருந்தால் என்ன, உறுப்பினராக இருந்தால் என்ன, ஒன்றியத் தலைவராக இருந்தால் என்ன என்ற

பாகுபாடு செய்து பார்க்காமல், எல்லோரையும் சமமாகக் கருதிடும், அந்தப் பக்குவம் வந்து இருக்கிறது நம்முடைய மக்களுக்கு; எல்லோரையும் சமமாகக் கருதுகின்ற பக்குவம் வந்து இருக்கின்ற காரணத்தால், இந்தக் கேள்விகளையே கேட்கிறார்கள்.

எனவே, அதிலேதான் நாம் அதிகம் கவனம் செலுத்தி, இந்த மன்றத்திலே பேசும்போதெல்லாம் எங்கள் ஊருக்கு ஒரு காவல் நிலையம் கொடுங்கள்; எங்கள் ஊருக்கு ஒரு தீயணைப்பு நிலையம் கொடுங்கள்; அந்த வட்டத்தை மட்டும் பிரித்தீர்களே, எங்கள் வட்டத்தைப் பிரித்துக் கொடுங்கள் என்பது போன்ற இந்தக் கோரிக்கைகளை முன் வைத்துப் பேசுகின்ற அளவுக்குத்தான் நிலைமை இந்த மன்றத்திலே இருக்கிறது.

நான் யாரையும் தவறாகச் சொல்லவில்லை. என்னையும் சேர்த்துத் தான் சொல்கின்றேன். நிதிநிலையப்பற்றி, வேறு பல துறைகளைப் பற்றி, நம்முடைய உறுப்பினர்கள் பலர் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள், என்னையும் சேர்த்து அமைச்சர்களையும் சேர்த்து, நிறைய இருக்கின்றன.

## துறையில் ஆர்வம் மிக்கவர்களுக்குத் தனியே வகுப்புகள் நடத்த நடவடிக்கை

எனவே, ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள், அறிவாற்றல் மிக்கவர்கள், அதை உணர்ந்தவர்கள் அவ்வப்போது அதுபற்றி யார் யார் ஆர்வத்தோடு விரும்புகிறார்களோ அவர்களுக்கென்று தனியே வகுப்புகளை நடத்தலாம். அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்படி நடத்துகின்ற நேரத்திலே அதற்கான ஆசிரியர்களாக முன் வரிசையிலே சில பேர் - நீங்கள் இருக்கின்றீர்கள் என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

நான் ஒருவரை இங்கே சொல்லி, ஒருவரைச் சொல்லாவிட்டால், நம்மை ஆசிரியர் பதவிக்கு உயர்த்தமாட்டாரா என்று யாரும் கருதிக்கொள்ளக் கூடாது. எனவே, அவர்களெல்லாம் அந்தப் பணியைச் செய்கின்ற வகையிலே, சொக்கர்

அவர்கள் பேசுகின்ற நேரத்திலே நான் அப்படித்தான் எண்ணிக் கொண்டேன். ஏற்கெனவே இந்தத் திட்டம் இருக்கிறது. இருந்தாலும், அதைச் செயல்படுத்துவதற்கான ஊக்கத்தை அவர்களுடைய பேச்சு இன்றைக்கு ஏற்படுத்தியது என்று நான் கூற விரும்புகின்றேன்.

இந்தப் பற்றாக்குறையை எப்படியெல்லாம் நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்கின்ற ஆதங்கத்தோடு, ஒரு எதிர்ப்பு உணர்வோடு அல்ல; தம்பி திருநாவுக்கரசு அவர்கள் இங்கே கேட்டார்கள் - அவரே கூட இன்னின்ன வழிகளில் நீங்கள் நிறைவு செய்யலாம் என்று இங்கே குறிப்பிட்டார்கள். பல வரவேண்டிய நிலுவைகளையெல்லாம் நாம் வசூலிக்க வேண்டியிருக்கிறது. விற்பனை வரியிலே மாத்திரம், தடையுத்திரவுக்கு உட்படாத, வசூலிக்கத்தக்க விற்பனை வரித்தொகை 331 கோடி ரூபாய் நிலுவையிலுள்ளது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், ஐ.எம்.எப்.எல். இருக்கிறதே, இந்தியாவிலே தயாரிக்கின்ற வெளிநாட்டு மது, 1981 ஆம் ஆண்டிலேயிருந்து அந்த அதிபர்கள் 12.2.1989 முடிய செலுத்தவேண்டிய ஆயத்தீர்வை மீதான விற்பனை வரி 57.46 கோடி ரூபாய். ஐ.எம்.எப்.எல். அதிபர்கள் இருக்கிறார்களே, உற்பத்தியாளர்கள்- அவர்கள் செலுத்த வேண்டிய ஆயத்தீர்வை மீதான விற்பனை வரி 57.46 கோடி ரூபாய்.

இந்த வரியை வசூலிக்க 1989லே ஆட்சியிலே இருந்தபோது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் அந்த நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அரசுக்குச் சாதகமாக அமைந்தது. எனவே, அவர்கள் அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்து, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள்.

## ஜெ. ஆட்சியில் விற்பனை வரி 57 கோடி வசூல் ஆகாத நிலை

அங்கேயும், உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றதே தவிர, அதற்கு இடைக்காலத் தடையாணை பெறப்படவில்லை; எல்லோருக்கும் தெரியும்.

இடைக்காலத் தடையாணை பெறப்படாவிட்டால் அந்த நடவடிக்கையை எடுத்து இருக்கலாம்.

ஆனால் - அன்றைக்கு ஆட்சி கலைக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டு கவர்னருடைய ஆட்சி அமைந்த நேரத்தில் பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் ஆளுநராக இருந்தார். அவர்கள் அந்த வரியை வசூல் செய்வதைத் தள்ளிப்போட்டார்கள். அதற்கு அவர்கள் கோப்பிலே எழுதிய காரணம், 'உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. ஆகவே இப்போது வசூலிக்க வேண்டாம்' என்று பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் எழுதிவிட்டார்கள். அவர்களுக்கு அந்த சப்ஜெக்ட் மட்டும்தான் தெரியும் - அப்படி எழுதிவிட்டார்கள். பிறகு தடை கொடுக்கப்படவில்லையே என்று எடுத்துச்சொல்லியும் கூட அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படாமல், எப்படியோ வழக்கு இருக்கிறது. வழக்கு முடியட்டும் என்று அவர்கள் எழுதிவிட்டார்கள்.

அதன் பிறகு, 1991 ஆம் ஆண்டு அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய தலைமையிலே புதிய ஆட்சி அமைந்தது. அப்படி அமைந்தபோது கவர்னர் அவர்களால் இதை வசூலிக்க வேண்டாம் என்று குறிப்பிடப்பட்ட அந்தக் கோப்பு உடனடியாக முதலமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், நிதியமைச்சராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் 31.7.1991-ல் கையெழுத்திட்டு அந்தக் கோப்பினை முதலமைச்சருக்கு அனுப்பி வைத்தார்கள். முதலமைச்சர் அந்தக் கோப்பைப் பார்த்துவிட்டு ஒரு வருடம், 4 மாதங்கள் 19 நாட்கள் கழித்து அதிலே கையெழுத்திட்டார்கள். 57 கோடி ரூபாய் வசூல் ஆகவேண்டிய ஒரு கோப்பில், நாவலர் நெடுஞ்செழியன் நிதியமைச்சர் அவர்கள் உடனடியாகக் கையெழுத்திட்டு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு அனுப்பியதற்குக் காரணம், கவர்னர் இப்படி சொல்லியிருக்கிறார். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று ஒரு Information அவருக்கு அனுப்புகிறார்.

ஆனால், முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் ஒரு வருடம், 4 மாதம், 19 நாள் கழித்து, எந்தவிதமான ஆணையும் பிறப்பிக்காமல், அந்தக் கோப்பிலே

கையெழுத்துப் போடுகிறார். ஆணை பிறப்பிக்கப்படாத காரணத்தால், அந்த விற்பனை வரி 57 கோடி ரூபாய் வசூல் ஆகாமலே இருந்துவிடுகிறது. இப்போது மீண்டும் 1996 -ல் நாம் ஆட்சிக்கு வந்தவுடன், அந்தக் கோப்பு எங்கெங்கோ சுற்றி, கடைசியாக வேறு வழியில்லாமல் என்னிடத்தில் வந்து சேர்ந்தது.

நான் உடனடியாக அந்த நிலுவை வரியை வசூலிக்க வேண்டுமென்று ஆணையிட்டேன். ஏனென்றால் உச்சநீதிமன்றத்தினுடைய தடையில்லை. வசூலிப்பதற்குத் தடை இல்லாத போது வசூலித்தால் என்ன என்று ஆணை பிறப்பித்தேன். ஆணை பிறப்பித்த பிறகு, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்து விட்டது. அந்த வரியை வசூலிக்கலாம், உற்பத்தியாளர்களிடமிருந்து வசூலிக்கலாம் என்று வந்துவிட்டது.

ஆனால் உற்பத்தியாளர்கள் City Civil Court - ல் ஒரு தடையாணையை இப்போது பெற்று இருக்கிறார்கள். அதை எதிர்த்து நாம் வழக்காடிக் கொண்டிருக்கின்றோம். திருநாவுக்கரசு சொன்னதற்காகச் சொல்கிறேன். எப்படி 57 கோடி ரூபாய் எவ்வளவு காலமாக வசூலிக்கப்படாமலேயே கிடப்பிலே போடப்பட்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

## பொதுவான பணிகளுக்குச் செலவினம்
## மொத்த வருவாய் செலவில் 38.44 சதம்தான்

ஆனால் இந்த அரசு அவைகளை எல்லாம் தள்ளிப்போடாமல், அந்த நிலுவைகளையெல்லாம் நிச்சயமாக வசூலித்து, இந்தப் பற்றாக்குறையை நிச்சயமாகச் சரிக்கட்டும் என்ற உறுதியை நான் இந்த மாமன்றத்திற்கு அளிக்கின்றேன்.

இன்னொன்றைத் திருநாவுக்கரசு தன்னுடைய உரையிலே குறிப்பிட்டார். 95 - 96ல் 35 சதவிகிதமாக இருந்த பொதுவான பணிகளின் செலவு இந்த 98 - 99ல் 46 சதவிகிதமாக உயர்ந்துவிட்டது என்று கூறினார். சொல்லும்போதே அவர்கள்,'செலவு' என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் அவர் சதவிகிதத்தை

வருவாய்க் கணக்கில் மொத்த வருவாயில் பார்க்கக்கூடாது. எப்போதும் வருவாய்க் கணக்கிலே மொத்த செலவினத்திலேதான் இந்த சதவிகிதம் பார்க்கப்பட வேண்டும்.

ஆனால், அவர்கள் வருவாய்க் கணக்கில், மொத்த வருவாயிலிருந்து 15 ஆயிரம் கோடியிலே பார்த்துவிட்டார்கள். செலவான 18 ஆயிரம் கோடியிலேதான் சதவிகிதம், எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதுதான். யார் யாருக்கு எவ்வளவு சதவிகிதம் செலவு செய்கிறோம் என்று பிரித்துப் பார்க்க முடியும். அப்படிப் பார்க்காமல் திருநாவுக்கரசு அவர்கள், வருவாய்க் கணக்கிலே மொத்த வருவாயிலிருந்து சதவிகிதக் கணக்கை பார்த்திருக்கிறார்கள்.

அதனால்தான் இந்த அளவிற்கு அவ்வளவு அதிகமாக அவருக்குத் தெரிந்திருக்கிறது. உண்மையிலே பார்க்கவேண்டுமென்றால், 95 - 96ல் பொதுவான பணிகளுக்கு ஒதுக்கீடு 31.24 சதவிகிதம், 97 - 98ல் ஒதுக்கீடு 4686.64 கோடி ரூபாய், 31.46 சதவிகிதம், 98 - 99ல் ஒதுக்கீடு 6937.9 கோடி ரூபாய். 38.44 சதவிகிதம். எனவே பொதுவான பணிகளில் செலவினம் மொத்த வருவாய் செலவில் 38.44 சதவிகிதம்தான். அவர் கூறியதுபோல், 46 சதவிகிதம் அல்ல. இருந்தாலும்கூட அதிகரித்து இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன்; அதை மறுக்கவில்லை.

இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கான ஓய்வூதியத் தொகைக்கு மாத்திரம் 1153 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மத்திய அரசு, வங்கி இவைகளுக்கான கடன்களுக்கு வட்டி கொடுப்பதற்குத் தொகை 722 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. மேலும், அரசு அலுவலர்களுடைய ஊதிய விகிதத்தை 1.1.96ல் என்று கணக்கிட்டு மாற்றி அமைப்பதால் ஏற்படும் நிலுவைத் தொகைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கூடுதல் தொகையும் இந்தக் கணக்கின் கீழ் செலவு அதிகரிப்பதற்கான காரணம் ஆகும் என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார். வெளியிலே அந்தக் குற்றச்சாட்டு ஏடுகளில் வந்திருக்கிறது. அதற்கு நான் பதில்

சொல்லியே ஆகவேண்டும். இல்லாவிட்டால் ஒரு தவறான கருத்து இந்த அரசைப் பற்றி வந்துவிடும். தவறான கருத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக, டாக்டர். கிருஷ்ணசாமி அதைச் சொல்லியிருக்கமாட்டார். ஒரு ஆர்வத்தின் காரணமாக ஆதிதிராவிட மக்களுக்கு மேலும் செய்யவேண்டும் என்ற உணர்வின் காரணமாக அவர் சொன்ன அந்தப் புள்ளி விவரம், இந்த நிதிநிலை அறிக்கையில் 2.9 சதவிகிதம் மாத்திரமே ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. குறைந்தபட்சம் அவர்களுக்கு 3 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்படவேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதற்கு நான் அவர்களுக்குத் தருகின்ற விளக்கம், ஆதிதிராவிட மக்களுக்குத் தருகின்ற விளக்கம், நம் வரவு - செலவுத் திட்டத்திலே, செலவினங்களில் அதிகமான செலவுகள் அரசு அலுவலர்கள், அவர்களுடைய சம்பளம் மற்றும் பணியாளர்களுடைய தொடர்பாக ஏற்படும் ஏனைய செலவுகள் என்பதை மறந்துவிடக்கூடாது. அரசு அலுவலர்கள் என்று கூறும்போது, அரசாங்கத்திலே பணியாற்றுகின்ற ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த அலுவலர்களும் அதிலே இருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த வரவு செலவு திட்டத்திலே அரசு அலுவலர்களுடைய ஊதியத்திற்கு ஒதுக்கீடு 10,300 கோடி ரூபாயாகும். மேலும் நிதிநிலை அறிக்கையிலே வட்டி, கடன் போன்ற செலவினங்களுக்காக சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. உணவு மானியம், மற்றும் ஏனைய மானியங்களுக்கு சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்படுகின்றது. இந்த மானியங்களால், ஆதி திராவிடர்களும் மற்றும் பழங்குடி மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களும் பயன்பெறுகின்றார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

எனவே, தனியாக 2.9 தான் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்படுகிறது என்று இல்லாமல், பொதுவாக ஒதுக்கப்படுகிற நிதி எல்லாம் செலவிடப்படுகிற நிதி எல்லாம் அவர்களுக்கும் சேர்த்துத்தான் செலவழிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதைக் குறிப்பிட்டேன்.

இதைத் தவிர, மின்சாரம், நீர்ப்பாசனம், சாலை, போக்குவரத்து போன்ற பல துறைகளில் செலவிடப்படும் செலவினங்களை ஆதிதிராவிடர்களுக்கு என்று பிரித்துக்காட்ட இயலாது. அதையும் சேர்த்துத்தான் செலவு செய்கின்றோம்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானாலும், நமக்கு நாமே திட்டமானாலும், சமத்துவபுரம் திட்டம், இந்திரா வீட்டு வசதித் திட்டம், வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம், போன்ற பல ஊரக வளர்ச்சித் திட்டங்கள், குடிநீர்த் திட்டங்கள் போன்றைவகளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறுகிறார்கள்.

ஆதிதிராவிடர்களுக்கு மாத்திரமே பயன் அளிக்கும் வகையில், செயல்படுத்துகிற திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மாத்திரம்தான், நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. மொத்தத்திலே செலவழிக்கப்படுகிற தொகையில், ஆதி திராவிட சமுதாய மக்களுக்கும், அவைகள் நிச்சயமாகப் போய்ச் சேருகிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கடந்த ஆளுநர் உரையில் பேசும்போது ஒரு குற்றச்சாட்டைக் குறிப்பிட்டார்கள். இப்போது எனக்குள்ள ஒரு சிறிய சங்கடம் என்னவென்றால் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிரதானக்கட்சித் தலைவர்கள் எல்லாம் நான் பதில் உரையாற்றுகின்ற நாளிலேயே பேசுவதால், அதற்குரிய பதில்களை, விளக்கங்களை உடனடியாகப் பெற்று அவையிலே அறிவிக்க முடியவில்லை.

எனவே, அடுத்த தடவையாவது, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் போன்ற தலைவர்கள் எல்லாம் ஆற்றுகின்ற உரைகளை முதல் நாளே அமைத்து, நான் பதில் சொல்லுகின்ற நாள் என்று தனியாக விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இல்லாவிட்டால், அவர்களுடைய கேள்விகளுக்கு, அவர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு, எடுத்துக்காட்டுகிற குறைகளுக்கு உடனடியாக

அவையிலே விளக்கம் அளிக்க முடியாமல் போய்விடும் என்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேனே அல்லாமல் வேறு அல்ல. இவர்கள் சென்னார்கள்; ஒரு காசோலையினுடைய பட்டியலை, ஒரு தாளிலே ஒட்டப்பட்ட காசோலைகளையெல்லாம் எடுத்துக்காட்டிச் சொன்னார்கள். நானே அதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். மேல்மலையனூர் ஒன்றியம் வெள்ள நிவாரணம் வழங்கியதில், காசோலைகள் திருத்தப்பட்டமை குறித்த குற்றச்சாட்டு. விழுப்புரம் மாவட்டம், செஞ்சிவட்டம், மேல் மலையனூர் ஊராட்சி ஒன்றியத்திலே உள்ள பெருவளூர் கிராம விவாசயிகளுக்கு வெள்ள நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்ட காசோலைகள், வங்கியிலே போதிய பணம் இல்லாத காரணத்தால், திருப்பப்பட்டது என்றும், அதனால் விவசாயிகள் சிரமப்பட்டதாகவும் எதிர்க்ட்சித் தலைவர் இன்றைக்குக் குறிப்பிட்டார்.

## முறைகேடுகளைக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை

இதில் உண்மை என்னவென்றால், 1996 -லே ஏற்பட்ட வெள்ளச் சேதங்களுக்கு நிவாரணங்கள் வழங்க விழுப்புரம் மாவட்டத்திற்கு 8.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 8.49 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு - மொத்தம் 1,86,136 விவசாயிகள் பயன் அடைந்து இருக்கிறார்கள். மேல்மலையனூர் ஒன்றிய வேளாண் வளர்ச்சி அலுவலர் எஸ். ராமச்சந்திரன் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கு மிகையாக, நிலம் இல்லாதவர்களுக்கும், தகுதி இல்லாதவர்களுக்கும், பட்டா புத்தகத்தில் பெயர் இல்லாதவர்களுக்கும் காசோலைகள் வழங்கி, முறைகேடுகள் செய்துள்ளதாக, புகார்கள் வந்ததைத் தொடர்ந்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், 54,20,907 ரூபாய் மதிப்புள்ள 6,508 காசோலைகள் நிவாரணம் பெறுவதற்குத் தகுதியே இல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டவை எனக் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த முறைகேடுகளுக்குக் காரணமான வேளாண்மை வளர்ச்சி அலுவலர் ராமச்சந்திரன், 31.3.97 அன்றைக்கே தற்காலிக வேலை நீக்கம்

செய்யப்பட்டிருக்கிறார். சென்ற ஆண்டிலேயே அவர் வேலைநீக்கம் செய்யப்பட்டுவிட்டார். அதற்குப் பிறகு இந்தக் குற்றச்சாட்டு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அவர்கள் அதை இங்கே வெளியிட்டதற்கு நன்றி. அதன்காரணமாக நடைபெற்ற ஒரு குற்றத்தை உணர்ந்து அதற்கு எடுக்கப்பட்ட தண்டனையையும் புரிந்துகொள்ள முடிந்தது.

அங்கேயே பல பிரச்சினைகள். ரூ.3,000 அங்கே வழங்கப்படாத காரணத்தால் அவர்கள் ஹைகோர்ட்டிற்குப் போயிருக்கிறார்கள். அந்த ஹைகோர்ட்டினுடைய உத்தரவை அரசு செயல்படுத்துவதாகவும் வாக்குறுதி வழங்கியிருக்கிற விவரத்தை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த மோசடி நிதி நிறுவனங்களைப் பற்றி இங்கே பேசப்பட்டது. பொதுமக்களால் வைப்பீடு - டெபாசிட் செய்யப்படும் தொகைக்கு மிக அதிகமான அளவிலான வட்டி விகிதம் அளிப்பதாகவும், கவர்ச்சிகரமான பரிசுகளை அளிப்பதாகவும் விளம்பரம் செய்து அதன் மூலம் பெரும் தொகை வைப்பீடாகப் பெற்றுக்கொண்டு விளம்பரப்படுத்தியவாறு வைப்பீட்டாளர்களின் முதலீட்டையும், அதற்கான வட்டித் தொகையையும் அவர்களுக்குத் திருப்பித் தராமல் நிதி நிறுவனங்களை மூடிவிட்டு அந்த அதிபர்கள் தலைமறைவாகிவிட்டார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் - அந்தத் தகவல்களையெல்லாம் முற்றாக அறிந்து உடனடியாகச் செயல்படத் தொடங்கி அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு, அந்த நிறுவனங்கள் எல்லாம் மூடப்பட்டு, உடனடியாக இழந்தவர்களுக்கு அவர்கள் இழந்த சொத்துக்களைத் திருப்பித் தரவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு சிறப்பு நீதிமன்றம் 19.1.98 முதல் செயல்படத் தொடங்கியிருக்கின்றது.

மேற்சொன்ன சட்டம் தொடர்பான பிற மாவட்டங்களிலுள்ள எல்லா வழக்குகளையும் சென்னையிலே இயங்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்ய 14.2.1998 அன்று அனைத்து மாவட்ட நீதிபதிகளையும் உயர்நீதிமன்றம் கேட்டுக்கொண்டிருக்கிறது. எனவே வழக்குகள் மாற்றப்பட்டு உடனடியாக இந்த

நீதிமன்றம் தன்னுடைய விசாரணையைத் தொடங்கும் என்றும், தவறு செய்தவர்கள் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் இந்த மாமன்றத்திற்கு நான் உறுதி கூறுகின்றேன்.

## ஆயிஷா குடும்பத்துக்கு வங்கிக் கணக்கு இல்லை

போகிற போக்கில், சில விஷயங்களை வேடிக்கையாகவும்; அதே நேரத்தில் இப்படியும் இருக்குமா என்று வியப்படையக்கூடிய வகையிலே நம்முடைய தாமரைக்கனி அவர்கள் சில குற்றச்சாட்டுக்களைச் சொல்வது உண்டு. இந்தக் குண்டுவெடிப்பு சம்பந்தமாக அன்றைக்கு விவாதம் வந்தபோது அவர்கள் சொன்னார்கள். 'ஆயிஷா' என்ற அந்தப் பெண் ரூ.10 இலட்சத்தை அவருடைய தாயாரிடத்திலே கொடுத்து வங்கியிலே போட்டிருப்பதாகச் சொன்னார்கள். பத்திரிகைகளில் எல்லாம் கொட்டை எழுத்துக்களில் அந்தச் செய்தி வந்திருக்கிறது. நானும் உடனடியாக அதுபற்றி விசாரிக்கப்படும் என்று சொன்னேன். உடனடியாகக் காவல்துறைக்கு ஆணையிட்டு அதை விசாரிக்கச் சொன்னேன்.

அவர்கள் தந்துள்ள தகவலின்படி மம்சாபுரத்திலேயுள்ள யூ.கோ. வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை வங்கி ஆகியவற்றில் விசாரிக்கப்பட்டபோது சங்கீதா பேரில் கணக்கு எதுவும் இல்லை. என்றும், அவர்கள் பெற்றோர் பேரிலும் பணம் எதுவும் போடப்படவில்லை என்றும் தெரிய வந்துள்ளது. மேலும் திருவில்லிபுத்தூரிலுள்ள 4 வங்கிகளிலும், சிவகாசிப் பகுதியிலே உள்ள 14 வங்கிகளிலும் இதுபற்றி விசாரணை நடத்தப்பட்ட போதிலும், விசாரிக்கப்பட்ட அந்தத் தகவல் சரியானதல்ல என்று தெரியவந்தள்ளது. சங்கீதாவினுடைய பாட்டனார், தந்தை, பெரியப்பா ஆகியோர் வங்கிகளில் பல்வேறு தேதிகளில் விவசாயத்திற்காகக் கடன் வாங்கியிருக்கிறார்கள் என்று மாத்திரம்தான் தெரிய வந்திருக்கின்றது. தாமரைக்கனி அவர்கள்- (சிரிப்பு) இதிலே சிரிப்பதற்கு ஒன்றுமில்லை. அவருக்குத் தெரியாமல் தகவல் வந்திருக்கலாம். தாமரைக்கனி இதற்கு மேலும் விவரம் தெரிவித்து, எந்த வங்கியிலே போட்டிருக்கிறார்கள் என்ற

குறிப்பையும் சுட்டிக்காட்டுவாரேயானால், நிச்சயமாக நடவடிக்கை எடுத்து, அந்தத் தொகையும் மீட்கப்படும் என்ற விவரத்தை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்னொன்றையும் சொன்னார்கள். செண்பகத் தோப்பிலே கோவிந்தசாமி நாடாருக்குச் சொந்தமான ஒரு கிணற்றிலே வெடிபொருட்கள் போடப்பட்டுள்ளன என்ற ஒரு தகவல் இங்கே கூறப்பட்டது. அதையும் காவல்துறையை விட்டு விசாரணை நடத்தச் சொன்னேன். அந்தக் கிணற்றில் வெடிபொருட்கள் எதுவும் இல்லை என்றும், அந்தக் கிணற்றின் சுற்றுப்புறங்கள் எல்லாம் சோதனை செய்யப்பட்டதில் வெடிபொருட்கள் எதுவும் இல்லை என்றும், சுற்றுச்சுவர் வலுவற்றதாக இருந்ததால் சுவர் இடிந்து கிணற்றுக்குள்ளே விழுந்ததாகத் தெரிவதாகவும் போலீசார் எனக்கு விவரம் கூறினார்கள். அதனாலே கிணற்றுக்குள்ளே வெடிகுண்டு இல்லையென்று சொல்லமாட்டேன். எத்தனையோ கிணறுகளில் வெடிகுண்டு இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அவைகளையெல்லாம் கண்டுபிடிப்பதற்காகத்தான் போலீசார் இன்றைக்கு அயராத முயற்சிகளிலே ஒய்வு இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எனவே, வெடிகுண்டு கண்டுபிடிப்பதே இன்றைக்கு ஒரு பெரிய குற்றம் என்று அரசியல்வாதிகளால் நாட்டிலே பேசப்படுகிறது. வெடிகுண்டுகளைப் போலீசார் கண்டுபிடித்தார்கள். கேரளா வரையிலும் சென்று அங்கே உள்ளவர்களை எல்லாம் கைது செய்தார்கள். இந்த வெடிகுண்டுத் தீவிரவாதத்திற்குப் யார் யார் காரணமோ, அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று பின்னப்படுகின்ற சதி வலையை நல்ல முறையிலே ஆராய்ந்து அறிவித்துக் கொண்டிருக்கிற போலீசாரைப் பாராட்டுவதற்குப் பதிலாக அவர்கள் மீது குறை சொல்லப்படுகிறது.

எங்குப் பார்த்தாலும் குண்டுகள் என்று பேசுகிறார்கள். எடுக்காவிட்டாலும் குற்றம், எடுத்தாலும் குற்றம், என்ற நிலையிலே இன்றைக்கு அரசியல்

போய்க்கொண்டிருக்கிறது. நான் அதைப்பற்றியெல்லாம் விரிவாகப் பேச விரும்பவில்லை. இந்த அவையிலே அதைப்பற்றி விரிவாகப் பேசியிருக்கின்றோம். ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் அப்துல் லத்தீப் அவர்கள் பேசினார்கள்; அதேபோல நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் பேசினார்கள். அப்பாவி முஸ்லீம்கள் எல்லாம் இந்த விவகாரத்திலே கைது செய்யப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி வருகின்ற புகார்கள், குற்றச்சாட்டுகள் உடனடியாகக் கவனிக்கப்பட்டு, அவர்கள் விடுவிக்கப்படுகின்றார்கள்.

நம்முடைய நண்பர் அப்துல் சமது அவர்கள்கூட ஒரு உருக்கமான, கடிதத்தை எனக்கு எழுதியிருக்கிறார்கள். அதிலே - இப்படி அப்பாவிகள் கைது செய்யப்படுகிறார்கள் என்ற செய்தியை அவர் குறிப்பிட்டிருக்கின்றார். வேறு சில இஸ்லாமியப் பெரியவர்களும் எனக்குத் தொலைபேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் அதைத் தெரிவித்திருக்கின்றார்கள். அன்று மிகுந்த உணர்ச்சியுடனும், உருக்கத்தோடும் லத்தீப் அவர்கள் இங்கே பேசினார்கள்.

அதே உணர்ச்சியும், உருக்கமும் எனக்கு உண்டு என்பது அவர்களுக்கும் தெரியும். இந்த அவையிலே உள்ள அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். இதுபோன்ற குற்றவாளிகளை, தீவிரவாதிகளைக் கண்டுபிடிப்பதற்காக காவல்துறையினர் ஈடுபடுகிற நேரத்தில் சில நேரங்களில் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டதைப் போல நல்லவர்கள் கூட சிக்கிவிடுவதுண்டு. விவரம் தெரிவிக்கப்பட்டால், உண்மை உணர்ந்தால், அவர்கள் உடனடியாக விடுவிக்கப்படுவார்கள்.

## சிறுபான்மையினரை அரவணைத்துச் செல்லவேண்டும் என்பதை உணர்ந்தவர்கள்

திருச்சி, சிறையிலே கூட அறந்தாங்கி பகுதியைச் சேர்ந்த 5, 6 இளைஞர்கள் அங்கே வைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அன்று மாலையே உடனடியாக திருச்சி சிறைச்சாலைக்குத் தொடர்புகொண்டு, காவல்துறைக்குத் தொடர்பு

கொண்டு, அவர்களை விடுவிக்கச் சொல்லி ஆணை பிறப்பித்திருக்கின்றேன் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எனவே, அப்பாவிகளைத் துன்புறுத்த வேண்டுமென்பதில்லை. எங்களுக்கு அல்ல, திராவிட இயக்கத்திற்கு இந்த இயக்கத்தை உருவாக்கிய தந்தை பெரியார் அவர்களுக்கு, பெரியார் வழிவந்த இந்த இயக்கத்தை வழி நட்த்திய தலைவர் பேரறிஞர்அண்ணா அவர்களுக்கு, அவர் வழிநின்று இந்த இயக்கத்தை நடத்திக்கொண்டு இருக்கின்ற எங்களுக்கெல்லாம், சிறுபான்மை சமுதாயத்தின் மீது - இஸ்லாமியர் என்றாலும், கிறித்துவர் என்றாலும், இத்தகைய சிறுபான்மை சமுதாயத்தினர் மீது உள்ள அக்கறையும், அவர்களை அரவணைத்துச் செல்லவேண்டும் என்கின்ற ஆர்வமும் யாரும் உணராதவைகள் அல்ல.

என்னைப் பொறுத்தவரையிலே, இளமைக் காலத்திலேயே, திருவாரூரில் நடைபெற்ற முஸ்லீம் மகாநாட்டிற்குத் தொண்டர் படை துணைத்தலைவனாக இருந்தவன் நான். தாருல் இஸ்லாம் பத்திரிகையை அன்றைக்குத் தவறாமல் வாங்கிப் படிக்கக் கூடியவன் நான். அறிஞர் அண்ணா அவர்களையும், நம்முடைய பேராசிரியர் அன்பழகன் அவர்களையும் நான் முதன்முதலாகத் திருவாரூர் விஜயபுரத்தில் நடைபெற்ற சிக்கந்தர் விழாவிலேதான், ஒரு முஸ்லீம் பெருமகனாருடைய விழாவிலேதான் சந்தித்தேன். பேராசிரியரை அழைத்து வந்து - அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மாணவனாக இருந்த பேராசிரியரை அண்ணா அவர்கள் அங்கே அறிமுகப்படுத்தி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயிருந்து ஒரு மாணவனை அழைத்து வந்திருக்கிறேன், எனக்கு முன்பு அவர் பேசுவார் என்று சொல்லி, அவரைப் பேசச் சொன்னார். அந்த சிக்கந்தர் விழாவிலேதான் நான் அண்ணாவைச் சந்தித்தேன். பேராசிரியரைச் சந்தித்தேன்.

இப்படி இளமைக்காலம் தொட்டு, இந்தத் திராவிட இயக்கத்திலே உள்ளவர்களுக்கு, இஸ்லாமிய சமுதாயமானலும், கிறித்துவ சமுதாயமானாலும், சிறுபான்மை சமுதாயத்தினிடத்திலே ஒரு அன்பு, அனுதாபம், ஆதரவு மனப்பான்மை என்றைக்கும் உண்டு. அதற்காகப் பெரும்பான்மை சமுதாயமாக

இருக்கின்ற இந்து என்று சொல்லப்பட்டாலும், சைவர் என்று சொல்லப்பட்டாலும், வைணவர் என்று சொல்லப்பட்டாலும், முஸ்லீம் அல்லாத மக்களிடத்திலே எங்களுக்குப் பற்று இல்லாமல் போய்விட முடியுமா? முஸ்லீம் அல்லாதவர்களுக்கு எப்படி முஸ்லீம் அல்லாதவர்கள் மீது வெறுப்பு ஏற்பட முடியும்? சிலர் கூட கேட்டார்கள். 'அங்கே போய் கஞ்சி குடிக்கிறியே நாங்கள் கூப்பிட்டால் - கணபதி விழாவிற்கு கூப்பிட்டால் கொழுக்கட்டை சாப்பிட வருவாயா?' என்று கேட்டார்கள்.

நான் பலமுறை சொல்லியிருக்கின்றேன். நல்ல கொழுக்கட்டையாக இருந்தால் சாப்பிட ஏன் மறுக்கப்போகிறோம்? கூப்பிடுவதில்லை. கூப்பிட்டால் 'வருவாயோ, வரமாட்டாயோ' என்று எங்களை ஒருபக்கம் தள்ளிவிடுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமானாலும், திராவிட இயக்கமானாலும், திராவிடர் கழகமானாலும், நாங்கள் சிறுபான்மை சமுதாயப் பிரச்சினைகளையெல்லாம் - இன்றைக்கு மதச்சார்பற்ற அரசு வேண்டும்; மதச்சார்பற்ற கொள்கை வேண்டும் என்று சொல்கின்ற யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களானாலும், என்ன சொல்கிறோம்? சிறுபான்மையினர் பெரும்பான்மை சமுதாயத்தை மதித்து நடக்க வேண்டும். அதேபோல் பெரும்பான்மை சமுதாயத்தினர் சிறுபான்மை சமுதாயத்தை அரவணைத்து, ஆதரித்து அனுதாபம் காட்டி நடக்க வேண்டும். இப்படி இருவருமே நடந்துகொண்டால் பிரச்சினையே கிடையாதே!

எனவேதான், இந்தக் குண்டு வெடிப்புகள் ஏற்பட்டதற்கான காரணங்களையெல்லாம் இன்றைக்கு நான் ஆராய்ந்து கொண்டிருக்க விரும்பவில்லை. அதைப்பற்றி ஒரு திறமையான ஐ.ஜி. தலைமையிலே வெகு தீவிரமாகப் புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. பல குற்றவாளிகள் பிடிபட்டிருக்கின்றார்கள். நாற்பதுக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதை ஏன் முதலிலேயே செய்யவில்லை என்று கேட்கிறார்கள். எத்தனையோ காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதே இடத்திலேதான் அண்ணா அவர்கள் நின்றுகொண்டு சொன்னார்கள் - 'சில காரியங்கள் மின்னல் வேகத்திலே

நாட்டிலே நடைபெற்று விடுகின்றன. மின்னல் எப்போது தோன்றும் என்பதை எதிர்பார்க்க முடியாது. அப்படித் தோன்றிய நிகழ்ச்சிகளை அவைகள் நடைபெற்ற பிறகு இனித் தோன்றாமல் இருப்பதற்காக நாங்கள் சென்று நடவடிக்கை எடுக்கிறோம்' என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

கோவையிலே இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடைபெற்றதைப் பற்றி இந்த அவையிலே விளக்கியிருக்கின்றேன். மத்திய புலன் ஆய்வுக் குழுவினர் சார்பாக எங்களுக்குத் தகவல் வந்தது. அதற்கு முன்பே மாநிலப் புலன் ஆய்வுக் குழு இந்தத் தகவலை எங்களுக்குத் தெரிவித்திருக்கிறது. இப்படி வரிசையாக வந்த தகவல்களை எல்லாம் நாங்கள் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பியிருக்கின்றோம். கோவை மாவட்டத்திற்கும், கோவை மாநகரத்திற்கும் அனுப்பியிருக்கிறோம். தமிழ்நாடு முழுவதிலுமிருந்து எல்லா மாவட்டங்களில் உள்ள போலீஸ் அதிகாரிகள் ஆங்காங்குள்ள குண்டுகளை எல்லாம் சோதித்து, சேகரித்து அதனுடைய கணக்கு விவரங்களை எல்லாம் அனுப்பி வைத்திருந்தவர்களை எல்லாம் கைது செய்து அவர்கள் மீதெல்லாம் வழக்கு போட்டிருக்கிறார்கள். ஆனால் கோவைக்குப் பல கடிதங்கள் எழுதியும்கூட, பல தாக்கீதுகள் அனுப்பியும் கூட, தொலைபேசியிலே நாமே நேரிலே பேசியும் கூட கோவையிலே உள்ள அதிகாரி தவறிப்போய் அப்படி குண்டு எதுவும் இல்லை என்கின்ற செய்தியை எழுத்துப்பூர்வமாகத் தருகிறார் என்றால் - அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமா, வேண்டாமா? அங்கேயும் முதலமைச்சரே போய் ஏன் குண்டைத் தேடிப் பார்க்கவில்லை. முதலிலேயே உங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது என்று கேட்டால், அது வேண்டும் என்றே அரசியல் நடத்துகின்ற பாங்கே தவிர வேறு அல்ல.

## தீவிரவாதி ஆயிஷாவைப் பிடிக்கத் தீவிர நடவடிக்கை

இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவேதான், நம்முடைய நண்பர் தாமரைக்கனி அவர்கள் இங்கே குறிப்பிட்ட அந்த ஆயிஷா பற்றிய தகவல், மேலும் விவரங்கள் இருந்தால் அவர் அதைக் குறிப்பிட வேண்டும் என்று

கேட்டுக்கொள்கிறேன். குறிப்பிட்டால் ஏற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், ஆயிஷாவை விரைவிலே பிடிப்பதற்கான எல்லாவிதமான முயற்சிகளிலும் நம்முடைய காவல்துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசு அலுவலர்களுக்கு ஊதிய விகிதங்களை மாற்றியது பற்றிய முடிவுகளை ஒருசில விளக்கங்களை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட காரணத்தால் அளிக்க விரும்புகின்றேன். நான் அரசு அலுவலர்கள், ஆசிரியப் பெருமக்கள் அவர்களுடைய பிரதிநிதிகளை எல்லாம் தனித்தனியாகவும் ஒன்றாகவும் அழைத்து வைத்து 2 நாள் கிட்டத்தட்ட 8 மணி நேரம் அவர்களோடு பேசி அவர்கள் ஏற்றுக்கொண்ட வகையிலேதான் இந்த அவையில் நான் அந்த அறிவிப்பை நிதிநிலை அறிக்கையிலே செய்திருக்கிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் கணேசன் அவர்கள் இங்கே பேசும்போது வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களுடைய வேதனைகளையும், இந்த நேரத்திலே இவர்களுக்கெல்லாம் இவ்வளவு ஊதிய உயர்வு தருகிறோமே என்கின்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினார்கள். வெளிப்படுத்திவிட்டு இன்னொன்றைச் சொன்னார்கள். இவ்வளவு ஊதியத்தைப் பெறுகின்ற அரசு அலுவலர்கள் ஒழுங்காகச் செம்மையாகப் பணியாற்ற வேண்டாமா, தவறு செய்கிறார்களே என்று கேட்டுவிட்டு மிக ஜாக்கிரதையாக நான் எல்லோரையும் சொல்லவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் அந்தக் கருத்தோடு ஒத்துப் போகிறேன். ஆனால் ஒன்று. திட்டங்களுக்குச் செலவு குறைவு அரசு ஊழியர்களுக்கு ஊதியம் அதிகம் என்று யாரும் எண்ணிக்கெள்ளக்கூடாது. திட்டங்களும், அரசு ஊழியர்களும் சேர்ந்துதான் இருக்கிறார்கள்.

என்னுடைய வீட்டுக் கொல்லைப்புறத்திலே ஒரு கிணறு வெட்டுகிறேன் என்றால், அதற்காக நான் 10,000 ரூபாயைச் செலவழிக்கிறேன் என்றால், அந்த 10,000-த்தைத் தூக்கிக் கொண்டுபோய் கொல்லையிலே போட்டால் கிணறு

வந்துவிடாது. அந்தக் கிணறு தோண்டுவதற்கு ஆள், செங்கல்லை அடுக்குவதற்கு ஆள், அந்தச் செங்கல் அடுக்கப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டு கிணற்றிலே சகடை போடுவதற்கு ஆள், கயிறு வாங்க ஆள், அதிலே குடத்தைத் தொங்கவிட்டுத் தண்ணீர் எடுக்க ஆள் என்று இத்தனை ஆள்வேண்டும். அவ்வளவு பேர்களுக்கும் சம்பளம் கொடுத்தால்தான் கிணற்றுக்குள்ளே இருக்கிற தண்ணீர் வெளியே வரும்.

## ஊதியக்குழு பரிந்துரையில் மாநில அரசு மத்திய அரசைப் பின்பற்றுகிறது

எனவே இந்த அரசு ஊழியர்கள், அவர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியம் என்பது ஒரு கிணறு தோண்டுவதற்கு நம்முடைய கொல்லையிலே நாம் முயற்சி எடுக்கும்போது கிணறு எப்படி பணத்தைப் போட்டால் வந்துவிடாதோ, பணத்தை யார் யாருக்குப் பங்கிட்டுக் கொடுத்தால் கிணறு உருவாகுமோ அதைப்போல அரசு ஊழியர்களுக்குத் தொகையைத் தருகிறோம். அதை அவர்கள் சில நேரங்களிலே கொஞ்சம் அதிகமாகக் கேட்கிறார்கள். அது அவர்களுடைய உரிமை, மத்தியிலே உள்ள அரசு கொடுப்பதைப்போல எங்களுக்கு கொடு என்று ஒரு கோரிக்கையை வைத்து நீண்ட நாள் போராடினார்கள்.

**1989** - ஆம் ஆண்டிலே இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, மத்திய அரசைப்போல மாநில அரசு ஊழியர்களுக்கும் ஊதியம் வழங்கப்படத் தொடங்கியது. இந்த அரசுதான் தமிழகத்திலே முதன் முதலாக அந்தப் பணியைச் செய்தது என்பதை எல்லோரும் நன்றாக அறிவீர்கள். அதற்குப் பிறகு இப்பொழுது இந்த ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகளைச் செயல்படுத்துவதிலே மாநில அரசு மத்திய அரசைப் பின்பற்றும் என்ற உறுதிமொழியை இந்த அவையிலே நான் அறிவித்திருந்தேன்.

அதற்கு ஏற்ப, மத்திய அரசின் ஊதிய விகிதங்களை மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்கும்போது ஒரு சில பிரிவுகளில் பணியாற்றுகின்ற வர்களுக்குத் தமிழகத்தில் தற்போது வழங்கப்படும் ஊதியம் மத்திய அரசு

அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை விட அதிகம் என்பதை மறந்துவிடக்கூடாது. அது அவர்களுக்குத் தெரியும்.

சில ஊதியங்கள் மத்திய அரசு வழங்குகின்ற ஊதியத்தைவிட மாநில அரசு ஊழியர்களுக்கு அதிகமாக இருக்கிறது. எனவே, மத்திய அரசு அலுவலர் ஊதிய விகிதத்தை அப்படியே நாமும் கடைப்பிடித்தால் அவர்கள் தற்போது பெற்றுக்கொண்டிருக்கிற ஊதியத்தை விட குறைவாகப் பெறக்கூடிய நிலைமை ஏற்படும். மத்திய அரசு ஊதியத்தைத் தருகிறோம் என்று சொன்னால், இப்போது அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய ஊதியத்தை விட குறைவாகத்தான் பெறுவார்கள்.

இன்னும் ஒன்று, மத்திய அரசு ஊதியங்களை மாற்றி அமைக்கும் போது ஒரு சிலபதவிகளுக்கு உயர் அளவு ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது மத்திய அரசில். அதை இங்கே பின்பற்றினால் இங்கே ஏற்கெனவே இருக்கின்ற சமன்பாடு குந்தகப்படும். அதற்கு ஒரு குறை ஏற்பட்டுவிட்டதாக மற்ற அரசு அலுவலர்கள் போர்க்கொடி தூக்குவார்கள்.

எனவேதான், இவைகளை எல்லாம் குறித்து அலுவலர்களிடமும், ஆசிரியர்களிடமும் அந்தப் பிரதிநிதிகளிடம் விளக்கமாகத் தெளிவுபடுத்தப்பட்டது. இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் ஊதிய விகிதங்களை மாற்றி அமைக்கும்போது Pay Scale to Pay Scale என்ற அடிப்படையில் இவைகள் திருத்தியமைக்கப்பட்டன.

ஒன்றை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இப்படி மத்திய அரசின் இந்த ஊதிய விகிதங்களை இந்தியாவிலேயே நிறைவேற்றியுள்ள மாநிலங்கள் குஜராத், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம் மூன்றும்தான். அடுத்து நம்முடைய மாநிலம். இந்தியாவிலுள்ள வேறு எந்த மாநிலமும் இந்த ஊதிய விகிதங்களை இப்போது மத்திய அரசைப் போல வழங்கப்படவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அது மாத்திரமல்ல; தமிழ்நாட்டில்தான் - ஊதிய விகிதங்களில்கூட தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை திட்டமும் இங்கேதான் இருக்கிறது. அதுவும் தொடர்ந்து செயற்படுத்தப்படும் என்ற உறுதியை நான் அந்தப் பிரதிநிதிகளிடம் வழங்கியிருக்கிறேன். எனவே, இதன் காரணமாக அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் இந்த ஊதிய உயர்வு ஆண்டு ஒன்றுக்கு 1,230 கோடி ரூபாய் செலவாகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, 1.6.88 முதல் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் முன்பு வழங்கினோம். அதைப்போல இப்போதும் 98-லிருந்து வழங்குகிறேன் என்று சொல்லிப் பார்த்தேன். 88-லிருந்து 98, 10 ஆண்டுகள். இதையெல்லாம் சொல்லி வாய் ஜாலம் பேசி ஏமாற்ற வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுடைய உறுதியான பிடிவாதத்தை ஏற்றுக்கொண்டு அவர்களுடைய கோரிக்கையின்படி, 1.1.96 முதல், தேதி நிர்ணயிக்கப்பட்டு அந்த ஊதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே அரியர்ஸ் - பழைய பாக்கி, அதனால் ஏற்படுகின்ற பாக்கித் தொகை 1996 என்றால், இந்த 2 ஆண்டுகளில் ஏற்படுகின்ற பாக்கித் தொகை இருக்கிறதே அது சுமார் 2,400 கோடி ரூபாய் ஆகும்.

அதை உடனடியாகத் தர முடியாது என்று அவர்களிடத்தில் நீண்ட நேரம் பேசி அவர்களும், நிலைமையை உணர்ந்து பிஎஃப்வைப்பு நிதியில் 60 சதவீதம், 1,440 கோடி ரூபாய் வைப்பு நிதியில் வைப்பது என்றும் 40 சதவீதம் 960 கோடி ரூபாய், 40 சதவீதம் அவர்களுக்குக் கொடுப்பது - அதைக் கூட 2 தவணையாக இந்த ஆண்டு 20 சதவீதம் 480 கோடி ரூபாய் - அடுத்த ஆண்டு 20 சதவீதம் 480 கோடி ரூபாய் என்று கொடுப்பது, எவ்வளவு சாமர்த்தியமாக இந்த நிதிநிலையைக் கையாண்டிருக்கிறார்கள் என்று உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்களே இதுதான் சாமர்த்தியம் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படித்தான் செய்ய முடிந்தது. இது எப்படி அந்த ஊதியத்தைப் பெறுகிறார்கள் என்பதற்கான விளக்கத்தை ஒரு சில உதாரணங்கள் மூலம் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அலுவலக உதவியாளர்கள் - அவர்களுடைய அடிப்படை ஊதியம் இதுவரை ரூ.750 முதல் 945 என்ற அளவில் இருந்தது. இனிமேல் அந்த அடிப்படை ஊதியம் ரூ.2550 முதல் 3200 என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. அதாவது ஒரு அலுவலக உதவியாளர் இதுவரை துவக்கத்திலே 2,580 ரூபாய் ஒட்டுமொத்தமாக அகவிலைப்படியும் சேர்த்து ஒட்டுமொத்த ஊதியமாக வாங்கிக் கொண்டிருந்ததற்கு மாறாக இனி ரூ.3,222 ரூபாய் ஊதியமாக - அதாவது 642 ரூபாய் அதிகமாகப் பெறலாம். ஆயிரம் என்று சொன்ன உடனே எல்லோரும் 'ஆஹா' என்றார்கள். 642 ரூபாய் அதிகமாகப் பெறலாம். இதுவே அதிகத் தொகைதான்.

நம்மைப் பொறுத்தவரையில், அவர்களுக்குச் சிறிய தொகையாக இருக்கலாம். கொடுப்பவர்களுக்கு இது பெரிய தொகை. அந்த அலுவலக ஊழியரே உச்சநிலையில் இதுவரையிலே 3,160 ரூபாய் ஒட்டுமொத்தமாக ஊதியம் பெற்று வந்ததற்கு மாறாக, இனி 4021 ரூபாய் அதாவது 861 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள்.

ஃபர்ஸ்ட் கிரேடு கான்ஸ்டபிள் - முதல்நிலைக் காவலருடைய அடிப்படை ஊதியம் இதுவரை இருந்தது 950லேயிருந்து ரூ,1,500 வரையில், இவர்களுக்குத் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் - அகவிலைப்படியெல்லாம் சேர்த்துத் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் ரூ.3050லிருந்து 4590. முதல் நிலைக் காவலர் ஒருவர் ஆரம்ப நிலையில் இதுவரை அனைத்துப் படிகளையும் சேர்த்துப் பெற்றுவந்த 3174 ரூபாய் என்பதற்கு மாறாக இனி 3852 ரூபாய் ஊதியமாக - அதாவது 678 ரூபாய் அதிகமாகப் பெறுவார்.

முதல் நிலைக் காவலரே உச்ச நிலையிலே இதுவரையில் 4915 ரூபாய் பெற்று வந்ததற்கு மாறாக இனி 5712 ரூபாய், அதாவது 797 ரூபாய் அதிகமாகப் பெறுவார்.

இளநிலை உதவியாளர், தட்டச்சர், தொலைபேசி இயக்குபவர், ஓட்டுனர், மகப்பேறு உதவியாளர் போன்றவர்களுக்கு இதுவரை இருந்துவந்த அடிப்படை

ஊதியம் ரூ.975-லேயிருந்து 1660, இவர்களுடைய திருத்திய ஊதிய விகிதம் ரூ.3200 முதல் 4900 வரையில். இதுவரை இவர்கள் ஒட்டுமொத்தமாகப் பெற்றுவந்தது 3245. இனி அவர்கள் பெற இருப்பது 4021 ரூபாய். அதிகமாக 776 ரூபாய் பெறுவார்கள்.

தலைமைச் செயலக உதவியாளர் தன்னுடைய அடிப்படை ஊதியம் இதுவரை ரூ.1100 முதல் 1660 வரை. தற்போது திருத்திய ஊதிய விகிதம் ரூ.3625 முதல் 4900 - மொத்தமாக இவர்கள் இதுவரை பெற்றுவந்த 3617 ரூபாய் என்பதற்குப் பதிலாக இனி 4501 ரூபாய், அதாவது 884 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள்.

உச்சகட்டம் என்று சொன்னால், அதற்கு என்ன பொருள் என்றால் - அவர்கள் அதிக சர்வீஸ் - அதிக சர்வீஸ் எடுத்தவர்கள் உச்சகட்ட ஊதியம் பெறுவார்கள். அதைத்தான் இங்கே நான் குறிப்பிட்டேன்.

அமைச்சுப் பணி உதவியாளர், இடைநிலை ஆசிரியர், வருவாய் ஆய்வாளர், உதவி வேளாண்மை அலுவலர், தலைமைக் காவலர் போன்றவர்களுக்கு இதுவரை இருந்துவந்த ஊதியம் ரூ.1200 முதல் 2040 வரை. திருத்தப்பட இருக்கும் ஊதிய விகிதம் ரூ.4000லிருந்து 6000 வரை.

அதாவது, இவர்களெல்லாம் ஆரம்ப நிலையில் இதுவரையில் மொத்தமாக மாதம் 1-க்கு 3964 ரூபாய் பெற்றுவந்ததற்கு மாறாக, இனி 4985 ரூபாய் பெறுவார்கள். முன்பு பெற்றதைவிட 1021 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள்.

## கிராம உதவியாளர்களுக்கு ஊதிய விகிதம் 40 சதம் உயர்வு

இதே பதவியிலே இருப்பவர்களுக்கு உச்சக் கட்டத்தில் இதுவரை 6676 ரூபாய் பெற்றதற்கு மாறாக 7680 ரூபாய், அதாவது 1004 ரூபாய் மாதம் ஒன்றுக்கு அதிகமாகப் பெறுவார்கள்.

பட்டதாரி ஆசிரியர், ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர், தலைமைச் செயலக முதுநிலை தட்டச்சர் போன்றவர்கள் இதுவரை இருந்துவந்த ஊதிய விகிதம்

ரூ.1400-லேயிருந்து 2600. தற்போது திருத்தப்பட்ட ஊதிய விகிதம் ரூ.5000-லிருந்து 7800. மொத்த ஊதியமாக இவர்கள் மாதம் ஒன்றுக்கு 4613 ரூபாய் பெற்று வந்ததற்கு மாறாக 6350 ரூபாய். அதாவது 1737 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள்.

கிராம உதவியாளர்கள் போன்றவர்கள் ஊதியம் குறைந்தபட்சம் 40 சதவீதம் ஊதிய உயர்வு என்றவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

உதாரணமாக, கிராம உதவியாளர்கள் ஊதிய விகிதம் தற்போது ரூ.600-லேயிருந்து 750 என்பதிலேயிருந்து ரூ.1800 முதல் ரூ.2240 என்று மாற்றியமைக்கப்படும். அதாவது, கிராம உதவியாளர்கள் மாநகரத்திலே பணிபுரிபவர்களுக்குக் கூடுதலாக மாதம் ரூபாய் 397-ம், கிராமத்திலே பணியாற்றுபவர்களுக்குக் கூடுதலாக மாதம் 252-ம் பெறுவார்கள்.

பகுதிநேர நிரந்தரப் பணியாளர்களான சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தைநல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், தற்போது ரூபாய் 200 முதல் 400 என்ற ஊதிய விகிதத்தில் இருக்கின்றார்கள். இவர்களுக்குத் திருத்திய ஊதிய விகிதமாக ரூபாய் 600 முதல் 1100 வரை வழங்கப்படும்.

இதிலேயிருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் - ஏதாவது இருக்குமேயானால், முரண்பாடுகள், குறைபாடுகள் இருக்குமேயானால் அதற்காக ஒன்மேன் கமிஷன் என்ற ஒன்று அமைக்கப்படுகிறது. அந்த கமிஷன் மூலமாகக் குறைபாடுகளைச் சொல்லி மேலும் திருத்தங்களைச் செய்துகொள்ளலாம் என்ற உறுதியையும் இந்த அவைக்கும் அரசு ஊழியர்களுக்கும் நான் வழங்குகின்றேன்.

## சில புதிய அறிவிப்புகள்

சமூகநீதி - இந்த ஆண்டு சுதந்திரப் பொன்விழா ஆண்டு என்ற காரணத்தினாலும் மொழிக் காவலர்கள் - தேசத் தியாகிகள் இவர்களையெல்லாம் கௌரவிப்பதற்காக அவர்களுக்கு ஒய்வூதியத் தொகையை ரூ.3,000 என்றும் அவர்களுடைய வாரிசுகளுக்கு ரூ.1,500 என்றும் ஆக்கியுள்ளதையொட்டி - சமூக

நீதிக்காகப் போராடியவர்களுக்கும் அவர்களுக்குரிய மரியாதையை சமூகநீதி அரசான திராவிட முன்னேற்றக் கழக அரசு தரும் என்பதற்கு அடையாளமாகத்தான் அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தேன்.

## சமூகநீதிக் காவலர்களுக்கான தொகை ரூ.3 இலட்சமாக உயர்வு

1987ஆம் ஆண்டு அவர்கள் இந்தப் போராட்டத்திலே தங்களுடைய உயிரைத் தந்தார்கள். அதற்குப்பிறகு அவர்களுக்கு அந்தத் தொகை கிடைக்காத காரணத்தால் அந்தத் தொகை வரவேண்டும் என்பதற்காக ஒரு சிலர் வழக்குப் போட்டிருக்கிறார்கள். நான் இதை இங்கே அறிவிக்கும்போது எனக்கே அந்தத் தகவல் தெரியாது. அந்த வழக்கு நீதிமன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது வேறு விவகாரம். இருந்தாலும் நான் அறிவித்தபிறகு அதிகாரிகளைக் கூப்பிட்டு உடனடியாக ஆணை பிறப்பித்து அந்தத் தொகையை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது ஒரு கோப்பு வந்தது.

அந்தக் கோப்பில், அந்த வழக்கு விவரங்கள் எல்லாம் இருந்தன. "அவர்கள் வழக்குப் போட்டுத்தானா பணம் பெறவேண்டும்? அந்த வழக்கை எதிர்த்து இன்னொரு வழக்காடுவதா?" என்றெல்லாம் கேட்டுவிட்டு, அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் என்று இருப்பதை - இதுவரையில் எனக்குக் கிடைத்த பட்டியலில் ஒரு இருபது பேர்களுடைய பெயர்கள்தான் வந்திருக்கிறது. மற்ற பெயர்களையெல்லாம் நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய எம்.எல்.ஏக்கள் - I, II இரு எம்.எல்.ஏ.க்களும் இதில் ஒன்றாக இருந்து - இரண்டும் ஒன்றாக இருந்து அந்தப் பெயர்களையெல்லாம் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனவே மொழிக் காவலர்கள் - தேசத் தியாகிகள் என்ற பட்டியலில் இந்த சமூகநீதிக் காவலர்களும் சேர்க்கப்பட்டு அவர்களுடைய குடும்பத்திற்குத் தலா 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துக்கொள்கிறேன்.

### உயிர்நீத்த சமூகநீதிக் காவலர்களின் வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியம் ரூ.1500

அது மாத்திரமல்ல; இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு இன்னுயிர் ஈந்த தியாகிகளின் வாரிசுதாரர்களுக்குச் சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போலவும், மொழிப்போர்த் தியாகிகளைப் போலவும், சமநிலையிலே கருதி குடும்ப ஓய்வு நிதியாக மாதம் ரூ.1,500 வழங்குவதென்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகை - 98-99ஆம் ஆண்டில் முதன்முதல் இந்தத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காகச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளுக்கு ரூ.25 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்ட தொகை 58.75 கோடி ரூபாயாகும். நிதிநிலை அறிக்கையின்பொழுது இத்தொகையினைப் பல உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க தொகுதிக்கு 25 இலட்சம் என்பதை 30 இலட்ச ரூபாயாக உயர்த்தி அறிவித்தேன். ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே 526 கோடி ரூபாய் இறுதிப் பற்றாக்குறையாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

### சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுக்கான நிதி ரூ.35 இலட்சமாக உயர்வு

“இவ்வளவு பற்றாக்குறை; இவ்வளவு பற்றாக்குறை” என்று திருநாவுக்கரசிலிருந்து, சுப்பராயனிலிருந்து, பழனிச்சாமியிலிருந்து, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரிலிருந்து அவ்வளவு பேரும் பற்றாக்குறை; பற்றாக்குறை என்று தங்களுடைய கவலையைத் தெரிவித்திருக்கின்றீர்கள். ஆனால் உங்களுக்கு வேண்டுமென்கிறபோது மாத்திரம் எல்லோரும் சேர்ந்து கைதட்டுகிறீர்கள்.

இதிலே, “சென்னையிலே தொகுதிக்கு நான் 36 இலட்சம் ரூபாய் கொடுக்கிறேன். நான் 36 இலட்சம் கொடுத்தால் முதலமைச்சர் எவ்வளவு கொடுக்க வேண்டும்?” என்று மேயர் ஸ்டாலின் கேட்டார்.

ஏற்கெனவே நாடாளுமன்றத்திற்கு 1 கோடி ரூபாய் தரப்படுகிறது. அஃதன்னியில், சட்டமன்றம் சார்பாக நாம் தருகிறோம். இரண்டையும் நீங்கள் கூட்டிப் பார்க்கவேண்டும். சென்னைக்கு இவ்வளவு கொடுப்பதால் சென்னைக்கு நாம் தொகையை ஒதுக்கலாமா - வேண்டாமா? என்கிற எண்ணம்கூட எனக்கு ஏற்பட்டிருக்கிறது, சென்னைக்குத் தாராளமாக வழங்கப்படுகிற காரணத்தால்!

இருந்தாலும்கூட அதை மன்னித்து வேறு வழியில்லாத காரணத்தால் - நீங்களும் கேட்டுவிட்ட காரணத்தால் - 30 இலட்ச ரூபாய் என்பதை 35 இலட்ச ரூபாய் என்று வழங்குகிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

என் நிலைக்கு இறங்கி - கருணாநிதி நிலைக்கு இறங்கி அல்ல; நிதிநிலைக்காக இறங்கி இதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

வரிகள் குறைக்கப்பட்டிருப்பது பற்றியும் - வரிகள் விலக்கப்பட்டதைப் பற்றியும் அனைவரும் பேசியிருக்கிறீர்கள். நம்முடைய சி.பி.எம்.கட்சியினுடைய உறுப்பினர் மணி அவர்கள் அதைப் பெரிதும் பாராட்டிவிட்டு - ஏழை எளிய மக்களுக்காகச் செய்த நல்ல காரியங்களையெல்லாம் பாராட்டிவிட்டு ஆக்கபூர்வமான பல கருத்துக்களை எடுத்துவைத்தார். அவரைப்போலவே இங்கு உரையாற்றிய அத்தனைப் பேரும் - தங்களுடைய தொகுதிகளின் குறைகளை அக்காள் (உறுப்பினர் ஏ.எஸ்.பொன்னம்மாள்) போன்றவர்கள் எடுத்துக்காட்டினாலும்கூட, அதே நேரத்தில் அவ்வளவு பேரும் இன்னும் சில வரிகளைக் குறைக்க வேண்டும் என்ற கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

## செயற்கை இழை நூலுக்கான விற்பனை வரி 8 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைப்பு

அதிலும் குறிப்பாக, நிதிநிலை அறிக்கையிலே செயற்கை இழை நூலுக்கும் மற்றும் செயற்கை இழைக்கும் (Manmade fibre and yarn) விற்பனை வரி எட்டு சதவிகிதத்திலிருந்து இரண்டு சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது என்றும், ஆனால் கடந்த ஆண்டு எதிர்பார்த்ததற்கு மாறாக வரி வசூல் குறைந்துவிட்ட

காரணத்தால் - விற்பனை வரி மீண்டும் 8 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது என்றும் அறிவித்தேன்.

இதை அறிவித்த உடனேயே நம்முடைய சொக்கர் அவர்கள் அவை முடிந்து வெளியே செல்லும் நேரத்திலேயே - நீங்கள் சரியாகக் கணக்குப் பார்க்கவில்லை என்று தெரிகிறது. சரியாகப் பேசுங்கள் என்றார். தொடர்ந்து சுதர்சனம் எம்.எல்.ஏ. பேசும்போதும் - ஜி.பழனிச்சாமி பேசும்போதும் . ஐ.கணேசன் பேசும்போதும் - சுப்புலட்சுமி ஜெகதீசன் ஒரு கடிதம் மூலமாகவும் இந்த விவரங்களை எனக்குத் தெரிவித்து அதனடிப்படையில் இதை ஆராய்ந்த வகையில் இந்த விளக்கத்தைத் தர விரும்புகின்றேன்.

1997-98ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம் ஆகிய இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது - இதில் முந்தைய ஆண்டைவிட, ஐம்பது இலட்சம் ரூபாய் குறைவாக இருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

ஆனால் - மாநிலங்களுக்கிடையேயான விற்பனைத் தொகை கணிசமாக உயர்ந்துள்ளது.

இந்தப் பிரிவிலே அதிகமாக வரி செலுத்தும் நிறுவனமாகிய - சவுத் இந்தியா விஸ்கோஸ் - 97-98ஆம் ஆண்டில் பெரும்பகுதி உற்பத்தி மேற்கொள்ளாத காரணத்தால் - விற்பனை வரியில் முழு அளவு எய்தவில்லை என்றும் அறியப்படுகிறது.

மேலும் இந்த ஆண்டு உற்பத்தி தொடர்பாக உச்சநீதி மன்றம் அனுமதி அளித்துள்ள காரணத்தினால், இந்தப் பிரிவில் கூடுதல் வரி வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே, முன்னர் இருந்த வருவாய் நிலையை எட்ட இந்த ஆண்டு வாய்ப்பு இருப்பதால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இரண்டு சதவிகித வரியையே மேலும் ஒரு ஆண்டிற்குத் தொடர்ந்து அமல் செய்ய இந்த அரசு முடிவு எடுத்துள்ளது.

## கொப்பரையுடன் தேங்காய்க்கும் உண்டு வரிக்குறைப்பு!

தேங்காய் - கொப்பரை இதிலே ஒரு குழப்பம். தேங்காய்க்கும், கொப்பரைக்கும் இரண்டுக்குமா? அல்லது கொப்பரைக்கு மாத்திரமா என்று. ஆங்கிலத்திலே கொப்பரை என்று மாத்திரம் அச்சடித்துவிட்டார்கள். ஆனால் தேங்காய் இல்லையா என்று ஒரு சந்தேகம் வந்தது. எனவே தேங்காய்க்கும் உண்டு - கொப்பரைக்கும் உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே தேங்காய் என்பதற்கு பக்கத்திலே 'கமா' இல்லாததாலும் நான் சொன்னதுபோலவே ஆங்கிலத்திலேயே கொப்பரை என்று மாத்திரம் இருந்ததாலும் இந்த வரிக் குறைப்பு கொப்பரைக்கு மட்டுமா? தேங்காய்க்கும் பொருந்துமா? என்ற சந்தேகத்தைப் போக்கும் வகையில், இந்த வரிக்குறைப்பு கொப்பரைக்கு மட்டுமல்லாமல், தேங்காய்க்கும் உண்டு என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

மேலும் நிதிநிலை அறிக்கையிலே - நம் மாநிலத்திலேயே விற்பனை செய்யும் தேங்காய் மற்றும் கொப்பரைக்குத்தான் வணிக வரி 1 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து - தேங்காய் வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் வெளிமாநிலங்களுக்கு விற்கப்படும் தேங்காய் கொப்பரை வரி விகிதமும் 2 சதவிகிதத்திலிருந்து ஒரு சதவிகிதமாகக் குறைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவரும் மற்றவர்களும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கும் எண்ணெயோடு பருத்தி எண்ணெயும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.சம்பத், சொக்கர், ராஜ்குமார் மன்றாடியார் போன்றவர்களெல்லாம் இதை வலியுறுத்தி எனக்குக் கடிதங்கள்கூடக் கொடுத்திருக்கிறார்கள்.

## பாமாயிலுக்கும் வரிவிலக்கு

சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் இதோடு பாமாயிலும் சேர்த்துக்

கொள்ளப்பட வேண்டும். இதை அரசாணையில் விட்டுவிட்டதாக எனக்குத் தகவல். பாமாயிலும் சேர்த்துக் கொள்ளப்படலாம்; மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் அனைத்திற்கும் வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருந்தேன்.

இந்த வரி விலக்கானது இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இதுவரை அளிக்கப்படாத சலுகையாகும்.

இதைக் கண்டித்துத்தான் தாமரைக்கனி போன்றவர்கள் பட்ஜெட் கண்டனக் கூட்டம் நடத்தப்போகிறார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் - சமையல் எண்ணெய்க்குக் கர்நாடகாவில் 5 சதவிகித வரியும், கேரளாவிலும் ஆந்திராவிலும் 9 சதவிகித வரியும் தற்போது வசூலிக்கப்படுகிறது.

பருத்திக் கொட்டையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய், அரிசி தவிட்டிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் ஆகியவைகளுக்கும் வரி விலக்கு அளிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, அந்த இரண்டு எண்ணெய்களுக்கும் முழுவிலக்கு அளிக்கப்படுகிறது.

நிதிநிலை அறிக்கையில் - வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு வரி 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும் - முத்திரைச் சின்னம் இடப்பட்ட பிற மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதத்திலிருந்து 11 சதவிகிதமாகவும் வரி குறைக்கப்படும் என்று அறிவித்திருந்தேன்.

மசாலாப் பொடிகள் சிறு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் வெளியிட்ட விளம்பரத்தில் - சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலே 91ஆம் ஆண்டிலிருந்து தாங்கள் வரி கட்டவில்லை என்று குறிப்பிட்டு இருக்கின்றார்கள்.

இதற்குப் பரிந்துரை செய்தவர்கள் - டி.சுதர்சனம், ஆர்.ஆர்.சேகரன், எஸ்.என்.பாலசுப்பிரமணியம், ஞானசேகரன், ராஜ்குமார் மன்றாடியார், ஈஸ்வரன்

மற்றும் பேராசிரியர் தீரன் ஆகியோர்களெல்லாம் பரிந்துரை செய்து பேசியிருக்கிறார்கள்.

ஆனால் கடந்த 97ஆம் ஆண்டு உயர்நீதி மன்றம் பிறப்பித்திருக்கின்ற ஆணையில் முத்திரைச் சின்னம் உள்ள மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதம் வரி செலுத்த வேண்டுமென்று தெரிவித்து இருக்கின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த 16 சதவிகித வரியைத்தான் நிதிநிலை அறிக்கையிலே 11 சதவிகிதமாகக் குறைத்து நான் அறிவித்திருந்தேன்.

## மசாலாப் பொடிகளுக்கு மேலும் வரிக்குறைப்பு

எனினும், இந்த மசாலாப் பொடிகளுக்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் பலரும், அதன் உற்பத்தியாளர்களும், பொதுமக்களும் வைத்த கோரிக்கையை ஏற்று - வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடிகளுக்கு 4 சதவிகிதம் என்றும் - வணிகச் சின்னம் இல்லா மசாலாப் பொடிகளுக்கு 2 சதவிகிதம் என்றும் வரிக் குறைப்பு செய்யப்படுகின்றது.

## சொட்டு நீலம் - சலவை வெளுப்பான்:
## 4 சதவிகிதமாக வரிக்குறைப்பு

சலவைக்குப் பயன்படுத்தப்படும் - கையினால் செய்யப்படும் சொட்டு நீலத்திற்கும், வணிகச் சின்னம் கொண்டுள்ள பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சொட்டு நீலத்திற்கும் ஒரே விற்பனை வரி விதிக்கப்படுகிறது.

இதுகுறித்து பேராசிரியர் தீரன், செங்கை சிவம் ஆகியோர் இந்த அவையிலே கோரிக்கை எழுப்பினார்கள். கோரிக்கையை ஏற்று சலவைத் தொழிலாளர்கள் பயன்படுத்தும், கையினால் செய்யப்படும் சொட்டு நீலம் உட்பட சலவை வெளுப்பானுக்கு (Handmade Laundry Brightner) வரி 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பொட்டு விஷயம் -

நிதிநிலை அறிக்கை வெளியிட்ட பிறகு பொதுவாக விமர்சித்த கட்சிகளின் தலைவர்கள் சிலரும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும் விவசாயிகள் பிரச்சினை பற்றி சொல்லவேயில்லை என்றார்கள். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. இந்த 49 பக்க நிதிநிலை அறிக்கையில் ஏறத்தாழ 25 பக்கங்களாவது விவசாயிகளை அடிப்படையாகக் கொண்டுதான் பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

## விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிய ஆட்சி கழக ஆட்சி

இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே முதன்முதலாக இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்குகின்ற ஒரேயொரு ஆட்சி - அதை அறிமுகம் செய்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அதையெல்லாம் சொல்லிவிட்டு - இதையெல்லாம் செய்யவில்லையே என்று சொல்லியிருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு - விவசாயிகளுக்கு ஒன்றுமே இல்லை. விவசாயிகளைக் கைவிட்டுவிட்டீர்கள் என்று சிலர் பேசியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. வேதனையாகவும் இருந்தது.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள நெல்விலைக்கு மேல் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35 இடைநிகழ் செலவுத் தொகையாக விவசாயிகளுக்குத் தமிழகத்திலே வழங்கப்படுகின்றது. அந்தக் காலத்தில் இதைப் போனசாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள் - அப்போது ஜெகஜீவன்ராம் மத்திய உணவு அமைச்சராக இருந்தபோது - நான் அவரிடம் சென்று கேட்டேன் - “அதிக விலை கொடுக்க வேண்டும்” என்று, அதற்கு அவர் ‘‘அப்படிக் கொடுக்க இடமில்லை’’ என்று கண்டிப்பாகத் தெரிவித்தார். பிறகு நான் அவரிடம் கட்டாயமாகத் தமிழகத்திற்கு தந்துதான் ஆகவேண்டும் என்று வலியுறுத்தியபோதுதான், அவர் எனக்கு வழிசொல்லிக் கொடுத்தார். அந்த வழிதான் இது. “நீ போனஸ் என்று கொடுக்காதே; வண்டிச்

சத்தம், வாடகை என்று சொல்லிக் கொஞ்சம் அதிகத் தொகையை உயர்த்திக் கொடு பிரச்சினை வராது" என்று சொன்னார். அப்போது ஆரம்பித்ததுதான் இது - தி.மு.க.ஆட்சியில்.

அந்த அடிப்படையில் இன்றைக்கு குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் வழங்கப்படுகிறது.

விவசாயிகளின் நலன் கருதி நெல்லைக் கொள்முதல் செய்யும்போது தரக்கட்டுப்பாடு 15 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக - குவிண்டால் ஒன்றுக்கு குறைக்கப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

## நெல் கொள்முதலிலும் சிறப்புச் சலுகை

நெல்லைக் கொள்முதல் செய்யும்போது இதுவரை 18 சதவிகிதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லை மட்டுமே கொள்முதல் செய்யலாம் என்று இருந்தது. விவசாயிகளின் நெல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு 20 சதவிகிதம் ஈரப்பதம் இருந்தாலும் அதனைக் கொள்முதல் செய்யலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

விவசாயிகள் விளைபொருளை விற்பனை செய்வதில் பாதிப்புக்கு ஆளாகாமல் இருக்க வேண்டுமென்பதற்காக 926 நேரடி கொள்முதல் நிலையங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தினோம். எந்த ஆண்டுமே இவ்வளவு கிடையாது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

உலக வங்கி நிதிஉதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு வரும் ஆண்டில் ரூ.82 கோடியும், வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.9.85 கோடியும் வரும் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

டிசம்பர் 96-இல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது 10,05,166 விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, 47 கோடியே 98 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்

விளைபொருள் இழப்பீட்டுத் தொகையாகத் தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

நவம்பர் 1997-இல் ஏற்பட்ட வெள்ளச் சேதாரங்களுக்கான நிவாரண நிதியாக 58.95 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

இரண்டரை இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடையும் வகையில், குறைந்தபட்ச விலையாக ஒரு டன் கரும்பிற்கு ரூ.660 எனவும், சர்க்கரை ஆலைகளால் வழங்கப்படும் ரகமானியம், வாகன வாடகை மானியம் ரூபாய் 35யையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்குக் குறைந்தபட்சம் ரூ.695-ம், அதிகப்பட்சம் ரூ.881-ம் ஆக சராசரியாக ரூ.765-ம் கிடைத்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

ஆயிரம் ரூபாய் என்று சொன்னீர்களே என்று கேட்டால், ஐந்து ஆண்டுகள் இன்னும் முடியவில்லையே! தி.மு.க.ஆட்சியில் கரும்புக்கு விலை ஆயிரம் ரூபாய் தருவோம் என்று சொன்னோம். ஆயிரம் ரூபாய் வேண்டுமென்றால் ஐந்து ஆண்டுகள் முடியட்டும். முடிய விடுங்கள்.

காவிரி டெல்டா பகுதிகளில் - குறிப்பாக தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் பாசன வாய்க்கால்களில் நீர்ப்போக்கிற்கு இடையூறாக உள்ள காட்டாமணிச் செடியினை அகற்ற 2,384 ஹெக்டேர் பரப்பில் களைக்கொல்லி தெளித்து காய்ந்த இலைகளை அகற்றி எரிக்கப்பட்டது. இதற்காக ரூ.102.13 இலட்சம் செலவிடப்பட்டது.

## காவிரிப் பாசன வாய்க்கால்களைத் தூர்வார 20 கோடி ரூபாய்

நீண்ட காலமாகக் கிடப்பிலே போடப்பட்டிருந்த காவிரி பாசன வாய்க்கால்கள் தூர் வாரும் பணிகள் நடப்பாண்டில் பத்து கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவில்

மிக நேர்த்தியாக நடைபெற்றுள்ளன. வரும் ஆண்டிலும் அதற்காக இருபது கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்துவிடப்படுவதற்கு முன்னர் பணிகள் முடிக்கப்படவுள்ளன. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

சென்னை, மதுரை, பொள்ளாச்சி மற்றும் திருச்சி ஆகிய நான்கு மண்டலங்களிலுள்ள 200 ஏரிகளில் தூர்வார 19.91 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் ஆண்டாண்டுச ாக வறண்டு கிடந்த 22 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற ரூ.7யீ கோடி நிதி ஒதுக்கி ஆணையிடப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

## விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலி அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஒய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவும் விவசாயிகளுக்காகத்தான்.

சரி - போதாது பழனிச்சாமி அவர்களுக்கு - இன்னும் என்ன என்று கேட்கிறார்கள். அது தெரிந்துதான் இதைச் சொல்ல விரும்புகிறேன், இருக்கின்ற கஷ்டங்களுக்கிடையே!

கடந்த பருவகாலத்தில் பெருமழை பெய்ததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனைக் கருத்திலே கொண்டு - அவர்களுக்கு நிவாரணமாக இந்த ஆண்டுக்கான நிலவரி முழுவதும் ரத்து செய்யப்படுகின்றது. இது தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்குப் பொருந்தும்.

இதனால் இந்த ஆண்டு அரசுக்கு இழப்பு 43 கோடியே 33 இலட்சம் ரூபாய். சிலபேர் ஏமாந்துபோய் நிலவரியைச் செலுத்தியிருக்கிறார்கள்.

அப்படி ஏற்கெனவே இந்த ஆண்டுக்குரிய நிலவரியைச் செலுத்தியவர்களுக்கு - அவர்கள் செலுத்திய தொகை பற்றுவைக்கப்பட்டு, அவர்கள் அடுத்த ஆண்டு செலுத்த வேண்டிய நிலவரிக்காக ஈடுசெய்யப்படும்.

## நபார்டு வங்கியுடன் அ.தி.மு.க.அரசு 94ஆம் ஆண்டு செய்த ஒப்பந்தம்

இதைத்தவிர, கூட்டுறவு வங்கிக்கடன் - (எதிர்பார்க்க வேண்டாம். இயலாமையைச் சொல்லப்போகிறேன்) விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் தாங்கள் பெற்றுள்ள கடன்களின் மீதான இந்த ஆண்டுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதனை அரசு பரிசீலித்தது.

1994-ஆம் ஆண்டு - கடந்த ஆட்சியிலே மாநில அரசு நபார்டு வங்கியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி இத்தகைய வட்டியைத் தள்ளுபடி செய்ய வழியில்லை. அப்படி 94-ல் நபார்டு வங்கியுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அப்படி நபார்டு வங்கியின் ஒப்பந்தத்தை மீறி வட்டியை நாம் தள்ளுபடி செய்தால், நபார்டு வங்கி வரும் ஆண்டிலிருந்து எந்த நிதி உதவியையும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் அளிக்காது. இதுதான் ஒப்பந்த ஷரத்து.

நான் நேற்று முன்தினம் இங்கே முதலமைச்சர் அறையிலே உட்கார்ந்து கொண்டு இங்கிருந்து நபார்டு நிறுவனத்திற்குப் பலமுறை அதிகாரிகள் மூலமாக போன் செய்து தொடர்பு கொண்டோம். அமைச்சர்கள் எல்லாம் உட்கார்ந்து - நான், தலைமைச் செயலாளர், உணவுத்துறைச் செயலாளர், வேளாண்மைத்துறை அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர், உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் இவ்வளவு பேரும் உட்கார்ந்துகொண்டு பலமுறை போன்செய்து அவர்களிடம் தொடர்பு கொண்டபோது நிச்சயமாக முடியாது என்று அவர்கள் மறுத்துவிட்டார்கள். அதை மீறி வட்டியைத் தள்ளுபடி செய்தால் நபார்டு வங்கி

வரும் ஆண்டிலே எந்த நிதி உதவியும் மாநில கூட்டுறவு வங்கிகளுக்குத் தராது. இது 94ஆம் ஆண்டு போட்ட ஒப்பந்தத்தின் ஷரத்து.

## குறுகியகாலக் கடன்கள் மத்தியகாலக் கடன்களாகிறது

இந்த ஆண்டு வட்டியை மாத்திரம் தள்ளுபடி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று வங்கித் தலைவருடன் தமிழக அரசின் மூத்த அதிகாரிகளை விட்டுப் பேசச் செய்தேன். எனினும் அவர்கள் ஏற்கவில்லை. எனவே வேறுவழியின்றி - தமிழக அரசின் சக்திக்கேற்ற வகையில் விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றி அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

நீண்டகாலக் கடன்களுக்கும் இதுபோன்ற கால நீட்டிப்பு வழங்கப்படும். இதனால் விவசாயிகள் அபராத வட்டி சுமார் ஐம்பது கோடி ரூபாய் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்படாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று - அன்றைக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.திருவேங்கடம் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்; சர்க்கரை ஆலைகள் விவசாயிகளிடம் இருந்து கரும்பை எடுக்காத காலகட்டத்தில் - விவசாயிகளே தாங்கள் விளைவித்த கரும்பினை அரவை செய்வதற்கு - தங்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பினைப் பயன்படுத்துகிறார்கள். இதற்காக மின் இணைப்பு வைப்புத் தொகையாக ரூபாய் ஐந்தாயிரமும் - ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஐந்து ரூபாய் என்றும், கரும்பு விவசாயிகளிடம் தற்போது வசூலிக்கப்பட்டு வருவதாக அவையிலே உறுப்பினர் கலசப்பாக்கம் பெ.சு.திருவேங்கடம் தெரிவித்தார். இந்தக் கோரிக்கை மேலும் பல விவசாயிகளிடம் இருந்து அரசுக்கு வந்துள்ளது.

## மின் இணைப்பு வைப்புத்தொகை குறைப்பு

இந்தக் கோரிக்கையினை ஏற்று - கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, இனி இதற்கான மின் இணைப்பு வைப்புத் தொகையை ரூபாய் ஐந்தாயிரத்தில் இருந்து

ஐநூறு ரூபாயாகக் குறைத்து - ஒரு யூனிட் மின்சாரத்திற்குத் தற்போது வசூலிக்கப்படும் ஐந்து ரூபாய் என்பதை - 1.25 ரூபாய் என்றும் குறைத்து வசூலிக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாதவரம் தொழிலாளர் பிரச்சினைபற்றி சுப்பராயன் இங்கே கேட்கிறார். அதைப்பற்றிப் பேசிவிட்டால் தொழிலாளர் மானியத்திலே பேச பிரச்சினை எதுவும் இல்லாமல் போய்விடும். எனவே, அப்போது இதைப்பற்றி அனைவரும் மகிழத்தக்க முடிவை அறிவிப்பேன் என்று கூறி, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

- இவ்வாறு, **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளித்துச் சட்டமன்றப் பேரவையில் உரை நிகழ்த்தினார்.

HHH

தமிழரசு

படித்துப்

பயன்பெறுவீர்